# நல்லைக்குமரன் மலர்

இதழ் - 27




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
17 OCT 2019
மாநகர சபை
யாழ்ப்பாணம்



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

வைரவர் உற்சவம் 27ஆம் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பொதுசன நூலகம்
17 OCT 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# நல்லைக்குமரன் மலர் - 27
# 2019

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

9441(P)
PL

## சைவசமய விவகாரக் குழு
## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2019

| | | |
|---|---|---|
| **போசகர்** | : | **கௌரவ இம்மானுவல் ஆனல்ட்**<br>முதல்வர், யாழ்ப்பாண மாநகரசபை |
| **தலைவர்** | : | **திரு இ.த.ஜெயசீலன்**<br>மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| **செயலாளர்** | : | **திரு பு. ஆறுமுகதாசன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| **பொருளாளர்** | : | **செல்வி பொ. புஸ்பலதா**<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை |
| **நிர்வாகசபை உறுப்பினர்கள்** | : | **திரு அ.சீராளன்**<br>செயலாளர், யா.மா.சபை |
| | | **திரு க.ஜெயானந்தன்**<br>நிர்வாக உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | **திரு சோ.கணேசநாதன்**<br>மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | **திரு கு. விஜயகுமார்**<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | **திரு செ. பன்னீர்ச்செல்வம்**<br>றோணியோ இயந்திர இயக்குநர், யா.மா.சபை |
| | | **திரு க. கேதீஸ்வரன்**<br>நீர்வேலைப்பகுதி, யா.மா.சபை |
| | | **திரு ச.சற்குணமூர்த்தி**<br>வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | **திருமதி சு.சதாசிவமூர்த்தி**<br>பிரதம நூலகர், யா.மா.சபை |
| | | **திருமதி தி.சக்தி**<br>அபிவிருத்தி உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | **திரு முகுந்தன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| **விளம்பர முகவர்** | : | **திரு த.கனகசபை**<br>இளைப்பாறிய பிரதம காசாளர், யாழ். மாநகர சபை. |
| **கௌரவ பதிப்பாசிரியர்** | : | **திரு ந. விஜயசுந்தரம்**<br>அதிபர், யா/ கலட்டி மெ.மி.த.க பாடசாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்

ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவனாக நல்லூர்த்திருப்பதியில் வீற்றிருந்து நடையாளும் நல்லூர்க்கந்தப் பெருமானுக்கு இது 27 ஆவது மலர்.

27 ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்லைக்குமரன் மலர் வெளிவருகிறதெனில் அதற்கு நல்லூர் வேற்பெருமானின் திவ்ய கருணையே மூலகாரணமாகும்.

ஈழத்தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எனினும் நல்லூரில் வீற்றிருக்கும் ஆறுமுகப்பெருமானைத் தஞ்ச மெனக் கொண்ட எம்மக்கள் துன்பதுயரங்களைக் கடந்து தங்களின் வாழ்வியலைச் செழுமை குன்றாமல் நடத்திவருவது வேறெங்கனும் காணமுடியாத அற்புதம்.

நல்லூர்க்கந்தப் பெருமானின் ஆலயம் ஈழத்தமிழர்களின் அடையாளம். இந்த மண்ணில் தமிழர்களின் ஆட்சி கோலோச்சியதன் வரலாற்றுச் சான்றாதாரம். காலசூழ்நிலைகள் எங்கள் தமிழராட்சியை ஒத்திவைத்ததாயினும் கடைசி மன்னன் சங்கிலியன் ஆண்ட நல்லூர் இராசதானியில் இன்றும் நல்லூர்க்கந்தனின் அர சாட்சியே நடைபெறுகிறது. இதனாலேயே அங்கு இன, மத, பேதம் கடந்து உலக மக்கள் வந்து போகின்றனர்.

நாட்டின் தலைவர்கள், இராணுவத் தளபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரமுகர்கள் ஆட்சிப் பீடங்களுக்கு வந்து போகின்ற வழமை இம்மியும் பிசகாமல் இங்கும் நடக்கிறது.

தமிழர்களின் ஆட்சி இன்னும் நடந்து கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவன் நல்லூர் முருகன் என்பதும் எங்கள் இனத்தின் விடியலுக்கு அவனின் வேலாயுதம் வித்திடும் என்பதும் சர்வநிச்சயம்.

அதேநேரம் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்களும் மாறுதல்களும் சிக்கல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அதிலும் பிறவாயாக்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோனாகிய சிவப்பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட ஆதிச்சமய மாகிய சைவசமயம் அன்று தொடக்கம் இன்றுவரை பல்வேறு சவால்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றது.

எனினும் நம் சமயகுரவர்கள் பக்தி இயக்கம் நடத்தி சைவத்தைப் பாதுகாத்தனர். அன்றைய காலகட்டத்தில் எவ்வாறு பக்தி இயக்கங்கள் தோன்றினவோ அதே தேவை இன்று எங்கள் ஈழத்திருநாட்டில் ஏற்பட்டுள்ளது.

இன்றைய சமகால சூழ்நிலையில் இலங்கையில் சைவசமயம் பிற சமயங்களின் ஆக்கிரமிப்புக்கும் அடாவடித்தனங்களுக்கும் ஆளாகியுள்ளது. இதன் உச்ச கட்டங்களாக சைவசமயத்தின் தொன்மைச் சான்றுகளை அபகரிக்கத் திட்டமிட்ட செயல்கள் அரங்கேறியுள்ளன.

இவை தவிர, சைவம் சார்ந்த மடங்களும் நிலங்களும் கபளீகரம் செய்யப்படுகின்றன. இத்தகைய அபாயகரமான சூழ்நிலையில் சைவசமயத்தைப் பாதுகாக்கின்ற தலையாய பொறுப்பு எங்கள் சைவ இளைஞர்களைச் சார்ந்தது.

சுவாமி விவேகானந்தர் கூறியது போல வீர இளைஞர்கள் சைவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இதற்கு மேலாக சைவசமயத்திற்குத் தலைமைப்பீடம் இல்லை என்ற மிகப்பெரிய குறைபாட்டை நீக்கி தலைமைப்பீடத்தை உருவாக்குவது இன்றியமையாதது.

சைவ நிந்தனையும் ஆக்கிரமிப்பும் மதமாற்றங்களும் எங்கள் வீட்டு வாசலைத் தட்டுகின்றபோது, நாம் உறக்கத்தில் இருப்பது எங்கள் ஆதிச்சமயத்தை அழிக்க நினைப்பவர்களுக்குச் சாதகமாகிவிடும்.

ஆகையால் துறவற சபை என்ற அமைப்பை உருவாக்கி, அதனூடு சைவ சமயத்திற்கான தலைமைப்பீடம் ஒன்றை ஏற்படுத்துவது எங்கள் அனைவரதும் முதற்பணி என்ற கருத்தை நல்லைக் குமரன் 27 ஆவது மலரின் கருப்பொருளாகத் தந்து, இம்மலரினை நல்லைக் கந்தப்பெருமானின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சரவணபவ

**சைவசமய விவகாரக்குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| சமர்ப்பணம் | | |
| ஆசிச்செய்திகள் | | |
| வாழ்த்துச் செய்திகள் | | |
| நம் விழா | த.ஜெயசீலன் | 01-02 |
| "நல்லூர் முருகா எம்குறை தீராயோ" | கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம் | 03 |
| வரமெலாம் தரவே வலம் வருக | திருமதி சுபாஷினி பிரணவன் | 04 |
| 'உன்னருகில் இருப்பேனே...' | வதிரி கண. எதிர்வீரசிங்கம் | 05 |
| நல்லையூரானே போற்றி போற்றி | தங்கராசா தமயந்தி | 06 |
| தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி | தமிழானந்த பாரதி | 07 |
| நல்லூர்க் குமரனின் அருளாட்சி பாமாலை | கலைவாரிதி இ.சரவணபவன் | 08 |
| தெய்வீக மணம் எங்கும் கமழுது! | கீழ்கரவை.கி.குலசேகரன் | 09 |
| சந்தக் கவியில், நல்லைக் குமரன்! | சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால் | 10-13 |
| துன்பத்தில் இருந்து மீட்க மயிலேறி வா...! | சின்னையா சிவபாலன் | 14 |
| முருகனிடம் பொதுநல வேண்டுகையும் தன்னல வேண்டுகையும் | பேராசிரியர் அ. சண்முகதாஸ் | 17-20 |
| வழிபாடு ஒரு வாழ்வியல் | மனோன்மணி சண்முகதாஸ் | 21-27 |
| சோழர்காலத்தில் சமஸ்கிருத நூல்களில் சைவசித்தாந்தம் | பேராசிரியை (திருமதி)கலைவாணி இராமநாதன் | 28-36 |
| சிவாகமங்கள் காட்டும் தீட்சை முறைகளும் வகைகளும் - குறிப்புக்கள் | கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா | 37-39 |
| சிவாகம மரபில் சுப்ரம்மண்யரது படைக்கலம் வேல் - ஓர் ஆய்வு | ச.பத்மநாபன் | 40-43 |
| நல்லைக்கந்தனின் வேல்வடிவம் | வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் | 44-49 |
| நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை | சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம் | 50-53 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளால் மீண்டும் துலங்கியது சைவம்

சைவச்செம்மல் மதிவாணர் செ.மதுசூதனன் 54-59

சைவமும் வாழ்வும் தேவராசா விஜிதா 60-62

யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள்

சமகால அவதானிப்புகள் திரு.சி.ரமணராஜா 63-71

யாழ்ப்பாணத்து முருகத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத்

தமிழ்ப் பிரபந்தங்கள் - ஒரு சிறப்புப்பார்வை சண்முகலிங்கம் சஜீலன் 72-82

திருக்கோவையார் பொ.சிவப்பிரகாசம் 83-88

அபிராமி அந்தாதியில் சக்தியின் பெருமை ஆறுமுகம் சசிநாத் 89-94

தேவாரங்களின் அகப்பொருளியல் மரபு தி.செல்வமனோகரன் 95-103

அருணகிரிநாதரும் திருப்புகழும் சைவப்புலவர் செ.பரமநாதன் 104-108

"இடுக்கண் நீக்கும் மந்திரத் திருப்புகழ்" கீர்த்தனா ஆறுமுகதாசன் 109-112

ஆன்மிக நல்வாழ்வும் சித்தர்களும் மருத்துவர் தி.சுதர்மன் 113-116

குழந்தைவேல் சுவாமிகள் ஆரணி விஜயகுமார் 117-119

பிடி அரிசித் தொண்டினால் பெருங்கோயில் அமைத்த

இணுவில் சாத்திரம்மா கலாபூஷணம் மூ.சிவலிங்கம் 120-124

புலனடக்கம் கு.சிவபாலராஜா 125-128

ஆன்மாவின் எதிரியை விரட்ட மனதை ஒரு நிலைப்படுத்துவோம்

மலர் சின்னையா 129-137

மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக்கலை

உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள் ஸ்ரீ.நதிபரன் 138-141

ஆலய வழிபாட்டில் கிடைக்கும் உளவளத்துணை

சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் 142-144

சைவ பரிபாலனசபை - சைவ நூலகம் வை.இரகுநாதமுதலியார் 145-147

ஆயிரம் பேரைக் காத்த திருமுருகாற்றுப்படை காரை.எம்.பி.அருளானந்தம் 148-149

2019இல் யாழ்.விருது பெறும் வாழ்நாள்

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை பு.ஆறுமுகதாசன் 150-152


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

# 2019

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- **நல்லை ஆதீன முதல்வர்**

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
- **இராமகிருஷ்ண மிஷன்**

  சுவாமி சர்வருபானந்த
- **சின்மயாமிஷன் சுவாமி**

  சுவாமி சிதாகாசானந்தா
- **வீணாகான குருபீடதிபதி**

  வித்யாஸாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
- **ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
- **அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்**

  மா.தவயோகராஜா
- **யாழ் மாநகர முதல்வர்**

  இம்மானுவல் ஆனல்ட்
- **யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்**

  நா.வேதநாயகன்
- **யாழ் மாநகர ஆணையாளர்**

  இ.த.ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

# நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி

முருகன் அடியார்களுக்கு, உலக நாயகனாம் நல்லூர் முருகப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதை வழங்கி வாழ வைப்பவன். நல்லையம்பதியில் எழுந்தருளியிருந்து அனைத்தையும் நெறிப்படுத்துகின்ற, அழகே வடிவானவன். அவனுடைய சிறப்பை யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு சிறப்புறச் செய்வது மகிழ்ச்சியைத் தருகின்றது.

27வது ஆண்டு மலராக இவ்வருடம் வெளியிட இருப்பது விவகாரக் குழுவினுடைய பெருமையை சிறப்பித்து நிற்கின்றது. இம் மலருக்கான தகவல்களை வழங்கும் அனைவருக்கும், நகர பிதாவிற்கும், ஆணையாளருக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் நன்றியோடு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு".**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின்

## ஆசிச்செய்தி

நல்லூர் என்றதும் ஞாபகம் வருவது கந்தசாமி கோவிலும் யோகர் சுவாமிகளும் இலங்கையிலுள்ள சைவர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வந்துள்ளது இந்தக் கந்தசாமி கோவில். இலங்கையில் எங்கு வேலை செய்தாலும் நல்லைக் கந்தன் கொடியேற்றம் என்றதும் தங்கள் வேலைகளிலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு விழாவைத் தரிசிப்பதற்காக யாழ் நகர் வரும் மக்கள் எத்தனையோ பேர்கள்.

அப்படிப்பட்ட பிரபலமான கோவில் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு 'நல்லைக்குமரன்' என்ற பெயரில் மலர் ஒன்றைத் தொடர்ந்து 27 ஆண்டுகளாக வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரிய விஷயம். மலர் வெளியிடுவது என்பது மிகவும் கடினமான ஒரு வேலையாக இருக்கும் நேரத்தில், இந்த நல்ல காரியத்தை விடாது செய்து வருவது அவர்களின் தன்னலன் கருதாத மேலான எண்ணத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

பள்ளியில் படிக்கும் பாடப் புத்தகங்களுடன் இந்த மாதிரியான விழா மலர்களின் மூலமாகவும் அறிவைப் பெருக்கலாம். அதற்கேற்ப இந்தமலர் அமைவது ஒரு சிறப்பு. இந்த மலரிலிருந்து பல விஷயங்களை மாணவர்கள் அறியலாம். மாணவர்களின் சமய அறிவையும் இறை பக்தியையும் ஒருங்கே வளர்க்க இம்மலர் உதவியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

பல்வேறு வர்ணப் படங்களுடன் கூடிய இம்மலர், இளைய தலைமுறையினரிடையில் மிகுந்த நல்விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் எண்ணுகிறேன். நல்லைக்குமரன் மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் அருள் புரிவாராக!

**இராமகிருஷ்ணமிஷன்**
**கொழும்பு.**

என்றும் இறைபணியில்,
சுவாமி சர்வரூபானந்த
(சுவாமி சர்வரூபானந்த)
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# சின்மயா மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

"ஊர்கூடி தேர் இழுப்போம்" என்பது முதுமொழி. ஊரில் ஒர் ஆலயத்தில் இரதோற்சவம் என்றால் ஊரில் உள்ள அனைத்து மக்களும் கூடி தேர் இழுத்து வழிபாடு செய்வது வழக்கம். ஆனால் உலக மக்களெல்லாம் கூடித் தேர் இழுக்கும் அற்புதக் கோவிலாக அமைந்துள்ளது. எமது நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்கள் எல்லோரும் நல்லூர் மஹோற்சவ காலம் என்றால் யாழ்ப்பாணம் நல்லூருக்கு வந்து கந்தப் பெருமானைத் தரிசிப்பதில் மனநிறைவடைகின்றனர்.

இவ்வாறாக மக்கள் மனதில் இடம்பிடித்துள்ள நல்லூர் முருகப் பெருமானின் கீர்த்தி சொல்லில் அடங்காது "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது" என்பதற்கிணங்க ஒரு சிறிய வேற்பெருமானை மூலவிக்கிரகமாகக் கொண்ட நல்லைக்கந்தப் பெருமானின் அருள் வெள்ளம் அனைத்துலகிலும் பரவியுள்ளது. இதற்கு நேர முகாமைத்துவம் ஒரு காரணமாக அமைகின்றது. இதன் மூலம் முருகப்பெருமானே எமக்கு நேர முகாமைத்துவத்தைக் கற்றுத்தரும் ஆசானாகவும் அமைகின்றார்.

ஆலயம் அமைந்திருக்கும் புனித பூமி பல சித்தர்கள், ஞானிகள் உலாவந்த தற்பொழுதும் ஜீவன்முத்தர்களாக சிலர் இலை மறை காயாக உலா வரும் பூமி, இவற்றினால் ஆன்மிக அருட்சக்தி நிறைந்த ஆலயமாகத் திகழ்கின்றது.

இம் மகிமை மிகுந்த ஆலயத்தின் மஹோற்சவ காலத்தில் கந்தப் பெருமானுக்கு சமர்ப்பணமாக 1993ஆம் ஆண்டு முதல் 27 வருடகாலமாக "நல்லைக் குமரன் மலர்" என்னும் பெயரில் பல்வகை ஆக்கங்களைத் தாங்கிய மலரை யாழ் மாநகரசபை சைவ சமய விவகாரக்குழு வெளியிட்டு வருவது போற்றுதற் குரியது. நல்லைக்குமரன் மலரானது நாம் பல்வேறு நூல்களில் இருந்து தேடிப் படிக்கவேண்டிய விடயங்களைத் தாங்கி வெளிவந்து நமக்கெல்லாம் பயன்தருவது நல்லூரானின் அருட்சிறப்பாகும். 27ஆவது நட்சத்திரமாகப் பிரகாசிக்க உள்ள நல்லைக்குமரன் மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

இறைபணியில்
**சுவாமி சிதாகாசானந்தா**
**வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயாமிஷன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வீணாகான குருபீடம்
# VEENAGANA GURUPEEDAM

இந்து கலாசார வேத, ஆகம சாஸ்திர சடங்கு சம்பிரதாய ஆலோசனைக்கானதும்,
சமய சமூக நற்பணிகளுக்குமான குருமார் சந்நிதானம்

வண.சந்நிதாச்சாரியார்,
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,
அமைப்பாளர்,
குருமார் சந்நிதானம்,
சித்தன்கேணி,
யாழ்ப்பாணம்.

Mobile : 0777397926

Rev.Sannithachariyar
Sivasri.Saba.Vasudevakkurukkal
Organizer,
Veenakana Gurupeedam,
Gurumar Sannithanam,
Sithankerney, Jaffna.

# வீணாகான குருபீடாதிபதியின்
# ஆசிச்செய்தி

தமிழினத்தின் அடையாளமாகவும் தமிழினத்தின் தலைவனாகவும் அருளாட்சிபுரியும் நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் இந்தவருடமும் மிகச்சிறந்த முறையில் வெளிவருவதையிட்டு மிக மகிழ்வடைகின்றேன்.

ஆலயங்கள் தான் எமது கலை, கலாசார நல்லொழுக்க விழுமியங்களை பேணிக்காத்து வளர்க்கின்ற இடங்களாகும். இந்தவகையில் யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு மிகச்சிறந்த சமயப்பணிகளை ஆற்றிவருகின்றது. இவர்களது சமயப்பணிகளுக்குச் சிகரம் வைத்தால்போல் அமைவுறுவது மலர் வெளியீடாகும். நல்லைக் கந்தன் எப்படி அழகும் யௌவனமும் வசீகரமும் கொண்டு திருக்காட்சி தருகின்றாரோ அதேபோன்று நல்லைக்குமரன் மலரும் வயது அதிகரிக்க அதிகரிக்க அதனுள் இருக்கும் கருத்துக்களும் கருத்தாளம் கொண்டதாகவும் பல சான்றோர்களது அனுபவங்களாலும் நிரப்பப்பட்டு வருகின்றது.

போர் முடிவுற்ற காலமாக இருந்தாலும் ஓர் இக்கட்டான நெருக்கடி மிகுந்த காலமாக காணப்படும் இன்றைய காலத்தில் சைவத்தினையும் தமிழினையும் பாதுகாப்பதற்கு ஒரு வரலாற்றுச் சுவடி அவசியமாகும். அந்தப்பணியினை மாநகரசபை முதல்வர், ஆணையாளர் மற்றும் சைவசமயவிவகாரக்குழுவினர் செய்ய வேண்டுமென குருமார்கள் சார்பில் கேட்டு, அனைவரையும் வாழ்த்தி ஆசிர்வதித்து நன்றிகளையும் தெரிவித்துக் காலத்தின் வெளியீடாக மலரும் நல்லைக்குமரனுக்கு ஆசிகள் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

**குரு முதல்வர்**
**வீணாகானகுருபீடம்**
**(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் திருக்கோவில், சண்டிலிப்பாய்)**

**சந்நிதாச்சாரியார்**
**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com

திகதி: 02/06/2018

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com  Hot Line:- 0776258511

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆசிச் செய்தி

யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் வெளியிடும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். கடந்த 27 ஆண்டு காலமாக ஆன்மிக வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிய ஆவணமாக வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலர் மிகவும் பெறுமதி வாய்ந்தது. மிகச் சிறந்த கட்டுரைகள் மற்றும் ஆன்மிகச் செய்திகள் இம்மலரில் தொடர்ந்து வருவது பலருக்குப் பயனளித்து வருகிறது. இந்துசமய விடயங்களை ஆராய்ச்சி செய்யும் ஆய்வாளர்களுக்கு நல்லைக்குமரன் மலர்கள் பெரிதும் துணை செய்வதை யாம் அறிவோம்.

சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் சிறந்த சேவையாளருக்கான யாழ் விருதையும் வழங்கி வருவது பாராட்டுக்குரியது. இப்பணிகளை 27 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்து வைத்தவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். ஆண்டுதோறும் இப்பணியை தொடர்ந்து செய்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எமது சைவசமயம் ஆதிச் சமயம் ஆகும். ஈழத்திருநாட்டின் புராதன சமயமாக சைவம் விளங்குகின்றது. சைவ சமயத்தின் மகத்துவத்தை ஒவ்வொரு நிறுவனங்களிலும் மாநகரசபை விவகாரக் குழு போல் பேண வேண்டியது காலத் தின் கட்டாய கடமையாகும். எங்கள் சமய விவகாரங்களில் நாம் அக்கறை செலுத்தத் தவறினால் எம் சமூகம் பல்வேறு ஆபத்துக்களை சந்திக்க நேரிடும். எனவே சைவசமய விவகாரக்குழுவின் செயற்திறன் மிக்க இப்பணியை இதய பூர்வமாக வாழ்த்துவ தோடு இப்பணிக்காக அயராது உழைத்துவரும் அனைவரையும் நன்றியோடு வாழ்த்துகின்றேன். நல்லூர்க் கந்தனின் திருவருளாலும் துர்க்கையம்மனின் நல்லருளாலும் நல்லைக்குமரன் மலர் சூரிய சந்திரர் உள்ளவரை தொடர்ந்து வெளிவர வேண்டி அமைகின்றேன்.

**தலைவர்**
**சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

தலைவர்
President:
மாணிக்கம் தவயோகராஜா
*Manikkam Thavayogarajah*
*Phone: 2695120 (Res)*
*Mobile: 0777786686*
*mthavam@gmail.com*

பொதுச் செயலாளர்
Hony. General Secretary:
வேலுப்பிள்ளை கந்தசாமி
*Velupillai Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
Hony. Treasurer:
அ.கயிலாசபிள்ளை
*Abirami Kailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*

# அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இளம் தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறைபக்தியையும், ஆன்மிக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் நன்நோக்கோடு, இரண்டு தசாப் தங்களுக்கு மேலாக நல்லூர்க் கந்தசுவாமியின் வருடாந்தப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு, யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினரால் வருடந்தோறும் வெளியிட்டு வைக்கப்படும் இருபத்தேழாவது 'நல்லைக்குமரன்' மலருக்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை இந்துமன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக் களினதும் ஒன்றியமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம், தனது குறிக் கோள்களில் ஒன்றாக "இந்து தர்ம அறிவினையும் சாதனையையும் விருத்தி செய்வதுடன் சமயக் கல்வியையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்தல்" என்பதைக் கொண்டுள்ளது.

அவ்வாறான எமது நோக்கங்களுக்கு, யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் 'நல்லைக்குமரன் மலர்' வெளியீடு உந்து சக்தியாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

கந்தபுராண கலாசாரத்தைக் கொண்டதெனப் போற்றப்படும் யாழ்.மண்ணில் இந்து சமயமும் தமிழும் சில புறக்காரணிகளால் மெதுவாக வலுவிழக்கச் செய்யப் பட்டு வருகின்றது. இவ் ஆபத்தான நிலைமையினை இம் மண்ணில் வாழும் ஒவ் வொருவரும் புரிந்துகொண்டு விழிப்படைந்து 'வேற்றுமை களைந்து ஒன்றுபட்டு" செயற்படவேண்டிய காலம் உருவாகியுள்ளது. தொடர்ச்சியாக 200 ஆண்டுகளுக்கு மேல் அந்நிய ஆக்கிரமிப்பிலும் அந்நிய மத திணிப்பாலும் புரையோடிச் சிதைந்து போயுள்ள நமது யாழ் மண்ணின் பாரம்பரியம் மீட்டெடுக்கப்பட்டு அதன் தனித்துவ மும் பழமையும் காக்கப்படவேண்டும். தனித்தனியே ஆளுக்கொரு சங்கம் அமைத்து தனித்தனியே செயலாற்றுவதைக்காட்டிலும், "அடம்பன் கொடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டால் மிடுக்கு" என்ற முதுமொழிக்கமைய, அனைவரும் ஒன்றுபட்டு, 'தற்புகழ் விரும்பாத ஒரு தலைமைத்துவத்தின்கீழ்" சமயத்தொண்டு ஆற்றுவது வலிமையான தாக இருக்கும்.

அதேவேளை, இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் - வெறுமனே கட்டடங்களை மட்டும் வளர்த்துக்கொண்டிருக்காது, சமூகப் பொறுப்புணர்வுடன், தேவையுடைய மாணவர்களை, குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களின் தேவை களை நிறைவேற்றுவதனூடாக எமது சமயத்தின் உண்மைப்பொருள்களான "அன்பே சிவம்", மக்கள் தொண்டே மகேசன் தொண்டு", "ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காணலாம்" என்ற முதுமொழிகளையும் மனதிலமுத்திச் செயலாற்ற வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்.

நாடளாவிய ரீதியில் அகில இலங்கை இந்து மாமன்றம் காலத்திற்குக் காலம் பல்வேறு சமயக் கருத்தரங்குகளையும் நிகழ்வுகளையும் ஒழுங்குசெய்து வருவது யாவரும் அறிந்ததே. எமது ஆன்மீகவாதிகளான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், தவத்திரு யோகர் சுவாமிகள், தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரின் வாழ்க்கை வரலாறு, உபதேசங்களை நூல் வடிவில் தயாரித்து மக்களிடையே விநியோகித்து வருகின்றோம். அத்துடன் பாடசாலை மட்டத்தில் சிவதொண்டர் அணிகளை அமைத்து அவர்கள் மூலம் சமு தாயத்தில் சமய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி எமது இளம் சந்ததியினருக்கு ஆன் மிக எழுச்சியினை ஏற்படுத்தி வருகின்றோம். அதேவேளை சிவதொண்டர் அணிகளில் இணைந்துள்ள - கல்வியைத் தொடர வசதியற்ற மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கான கல்வி உதவித் திட்டமான புலமைப்பரிசில் திட்டத்தினையும் செயற்படுத்தி வருகின்றோம்.

அவ்வழியில் யாழ்.மாநகர மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் வருடந் தோறும் வெளியிடப்படும் 'நல்லைக் குமரன்' மலரும் இளம் தலைமுறையின ரிடையே சமய அறிவினையும் இறைபக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் என்பதே எமது உறுதியான நம்பிக்கையாகும்.

இவ்வாண்டு வெளிவருகின்ற மலர் சிறப்புறவும், அதன் மூலம் தங்கள் குறிக் கோள் நிறைவுறவும் அகில இலங்கை இந்து மாமன்றம் உறுதுணையாக இருக்கு மென்பதுடன் தங்களின் இந் நற்பணி மேலோங்க கலியுகவரதனாம் கந்தப் பெருமானின் பாதங்கள் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**இல 91/1 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர்மாவத்தை.**
**கொழும்பு 02.**

**மா. தவயோகராஜா**
**தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
පේදුරුතුඩුව පාර, යාපනය.
Point-Pedro Road, Jaffna.
அலுவலகம் / කාර්යාලය / Office } 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 222 2334
இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet } www.jaffna.mc.gov.lk

# யாழ்ப்பாண மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

"அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய"

என திரு அவதார படலத்தில் கூறியுள்ளார் கச்சியப்ப சிவாச்சாரியார். கந்த புராணத்தில் முருகனின் அவதாரத்தை, அதன் தத்துவ மகிமையை எடுத்து இயம்பி யுள்ளார். சரவணப் பொய்கையில் குழந்தையாக அவதரித்த முருகன், ஆறுபடை வீடுகளில் எழுந்தருளிய முருகன், பூவுலகு எங்கும் குன்றுதோறும் குடியிருக்கும் குமர வடிவேலனாக அமர்ந்து அருள் ஆட்சி புரிந்து வருவதை நாம் கண்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இது மட்டுமல்லாது உலகெங்கெல்லாம் தமிழர்கள் வாழுமிடங்களில் முருகனுக்குக் கோவில் இல்லாத ஊரே கிடையாதெனலாம்.

இதுபோல் இலங்கையின் வடபகுதியில் அமைந்த முருகன் கோவில்களில் யாழ்ப்பாணம் நல்லூர் நகரில் அமைந்த நல்லூர்க் கந்தனின் ஆலயம் உலகில் உள்ள சைவ மக்களைத் தன்பக்கம் வருடாவருடம் கவர்ந்திழுப்பது நல்லூர் முருகனின் பெருமையை சான்றுப்படுத்தும். நல்லூர் கந்தனின் மகோற்சவம் சைவ மக்களின் மனதில் வருடா வருடம் பக்திப் பெருக்கத்தை உண்டு பண்ணும் ஓர் அதி முக்கிய நிகழ்வாகும் இந்நிகழ்வில் யாழ் மாநகர சபையினராகிய நாமும் பக்தி சிரத்தையுடன் எமது பணியை ஆலய சூழலில் நிறைவேற்றும் போது மனத் திருப்தியை அடைகின்றோம். இதுவெல்லாம் அவன் செயலினாலே இடம்பெறுகின் றது என்பதையிட்டு நாம் அகமகிழ்கின்றோம்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினர் இம்முறை 27ஆவது நல்லைக்குமரன் மலரை வெளியிட எடுத்த முயற்சியைப் போல் என்றென்றும் மேற்கொள்ள வேண்டும் என வாழ்த்துகிறேன். இவர்களின் இவ் அரும் பெரும் முயற்சி என்றும் மேலோங்க வேண்டும் என உலகம் உய்ய வந்த ஒரு திருமுருகனை வேண்டுவதுடன் அனைவருக்கும் அவன் அருள்பாலிக்க வேண்டும் என்று எனது வாழ்த்தினை வெளிப்படுத்துகின்றேன்.

**மாநகராட்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்**

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone } 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No. } Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No. }

දිනය / திகதி / Date }

## யாழ்ப்பாண அரசாங்க அதிபரின்
## வாழ்த்துச் செய்தி

யாழப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் வெளியீடு செய்யப்படும் "நல்லைக்குமரன் மலருக்கு" வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இன்றைய தலைமுறையினரிடையே சைவசமய அறிவினையும் இறைபக்தியையும் ஆன்மிக நாட்டத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் வெளிவரும் சிறப்பு மலராகிய நல்லைக்குமரன் மலர் காணப்படுவது அற்புதமானது.

நல்லூர் உற்சவம் தொடங்குகின்றது என்றால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையும் பக்திமயமாகிவிடும். ஊர்தோறும் பக்தர்கள் அதிகாலையில் அங்கப் பிரதட்சணம் செய்யவும் ஆலயம் தேடிவரும் காட்சியும் மாலை வேளையில் அடியவர்கள் கூடிநின்று சுவாமி தரிசனம் செய்யும் காட்சியும் மனதைக் கொள்ளை யிடும். இவ் அற்புத காட்சி கந்தப் பெருமானின் அருள் வெளிப்பாட்டினை எடுத்துக் கூறுவதாக அமையும். குறிப்பாக தேர், தீர்த்த தினங்களில் சிறுவர்கள் பெரியவர்கள் என மக்கள் வெள்ளம் அலைமோதுவதும் அற்புத பஜனை, ஆன்மிக சொற்பொழிவு கள் என அனைத்தும் கண்கொள்ளாக் காட்சியளிப்பவையாகும்.

சைவத்தின் அருமை பெருமைகளை உலகறியச் செய்யும் பெருவிருப்போடு பல்வேறு ஆன்மிக தகவல்களைத் தன்னகத்தே தாங்கிவரும் "நல்லைக்குமரன் மலர்" 1993ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வெளிவருவது பாராட்டிற்குரிய தொன்றாகும். இவ் வருடம் வெளிவரும் 27 ஆவது நல்லைக்குமரன் மலர் சிறப்புற அமையவும் இப் பணியை முன்னெடுக்கும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகார குழுவினரையும் பாராட்டி மலரும் நல்லைக் குமரன் மலர் சிறப்புற அமையவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

அலங்காரக் கந்தனாய் வீற்றிருந்து ஈழத்தமிழ் மக்களின் அடையாளக் கந்தனாய் அருள்பாலிக்கும் நல்லைக் கந்தப் பெருமானின் மகோற்சவ காலத்தில் அடியவர்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகளையும் காலகாலமாக வழங்கி வரும் பணிக்கு மேலாக யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு வானது நல்லைக்குமரன் மலரினை கடந்த 1993ம் ஆண்டு முதல் வெளியிட்டு வரு கின்றது.

அந்த வரிசையில் இவ்வருடமும் முருகப் பெருமானின் பெருந்திருவிழாக் காலத்தில் 27ஆவது மலரினை வெளியிட்டிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடை கின்றேன். 1994ஆம் ஆண்டிலிருந்து இடையறாது இம்மலரிற்கான ஆக்கங்களை எழுதி வழங்கிவரும் எனக்கு இரண்டாம் தடவையாக இம்மலரிற்கான வாழ்த்துச் செய்தி வழங்கும் பேறினை நல்லூரான் இம்முறையும் வழங்கியதையிட்டு மேலும் பேருவகை அடைகின்றேன்.

சைவசமய மக்களாகிய எமக்கென்று தனித்துவமான விழுமியங்களும் பழக்க வழக்கங்களும் இருந்து வருகின்றது. எமது பாரம்பரியங்களைத் தொடர்வதே இன்றைய சூழலில் எமது அடையாளங்களைக் காப்பதற்கான ஒரேயொரு வழியாக வும் உள்ளது. அத்தோடு எமது பெருமைகளையும் சிறப்புக்களையும் அடுத்த சந்ததிக் குக் கையளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் எங்களுக்குரியதாகின்றது. இப்படி யான ஒரு சூழலில் நல்லைக்குமரன் மலரானது வருடாவருடம் காலத்தின் கோலத் திற்கேற்ப படைப்புக்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது கண்கூடு. இளையவர்கள் பழையவர்கள் என்று அனைவரையும் ஒரு சமய எழுத்துத் தளத்தில் இணைக்கின்ற இந்நூலாக்க முயற்சியானது மிகமிக அவசியமானதும் முக்கியத்துவ மானதுமாகும்.

அத்துடன் பெருந்திருவிழாக் காலத்தில் வருடா வருடம் நடாத்தப்படும் மாண வர்களுக்கான போட்டிகள் வரிசையிலே இவ்வருடமும் கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 13வரையான மாணவர்களிடையே பேச்சுப்போட்டிகளை நடாத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் 1994ஆம் ஆண்டு சைவசமய விவகாரக்குழு நடாத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்று அப்போதைய ஆணையாளர் திரு.வே.பொ.பாலசிங்கம் ஐயா அவர்களிடம் தங்கப்பதக்கம் ஒன்றை பெற்றமையையும் அதனை இன்னும் கட்டி காத்துவருவதையும் இத்தருணத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாக அமையும் என எண்ணுகின்றேன்.

மேலும் இம்மண்ணில் இருந்து கொண்டு சமய மற்றும் சமூகப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றுபவர்களுக்கு "யாழ்" விருது வழங்கிக் கொளரவிக்கும் பாரம்பரியம் தொடர்வதும் இம்முறை புகழ்பூத்த பேரறிஞரும் இன்றும் எம்மண்ணில் வாழ்ந்து சமூக சமயப் பணிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு வழங்கப்படுவதும் மிகப் பொருத்த மானதும் பெருமையானதும் என்று கருதுகின்றேன்.

இவ்வாண்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் சிறக்க வாழ்த்து வதுடன் சைவசமய விவகாரக்குழுவின் பணிகள் மேலும் விரிந்து உயர்ந்தோங்க நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்துப் பணிகின்றேன்.

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேர வாசல் இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

# 2019

## கவிதைகள்


- நம் விழா
- “நல்லூர் முருகா எம்குறை தீராயோ”
- வரமெலாம் தரவே வலம் வருக
- ‘உன்னருகில் இருப்பேனே...’
- நல்லையூரானே போற்றி போற்றி
- தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி
- நல்லூர்க் குமரனின் அருளாட்சி பாமாலை
- தெய்வீக மணம் எங்கும் கமழுது!
- சந்தக் கவியில், நல்லைக் குமரன்!
- துன்பத்தில் இருந்து மீட்க மயிலேறி வா...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் விழா

த.ஜெயசீலன்

எல்லையற்ற நல்லருள் சுரப்பவா!
ஈடில்லாப் பெரும் அன்பு கொண்டவா!
தொல்லை சூழ்ந்திடும் போதரூபமாய்
தோன்றி அன்னதின் சென்னி கொய்பவா!
செல்லம் தாறவா! செல்வம் தாறவா!
செந்தமிழ்க் ககலாத காவலா!
நல்லை வாழ்ந்திடும் நாயகா... உனை
நம்பி நிற்கிறோம் உய்ய வையடா!

ஓர் கலங்கரை யாயுன் கோபுரம்
ஊர்ச்சனக்கடல் துயரலை யிடை
நீந்தையில்... கரை சேர்த்தணைத்திடும்!
நீழல் வீதிகள் நிம்மதி தரும்!
தீர்த்தக் கேணியோ நோய்கள் தீர்த்திடும்!
தெய்வ ஞானவேல் மாயை போக்கும்... நம்
வேரைக் காக்கும் நின் கோவில்... நல்லையில்
வீழ்ந்தெ ழும்பிடின் முக்தி நிச்சயம்!

ஞானிமார், பல சித்தர், யோகிகள்,
நாட ஆன்ம அதிர்வெழுந் தின்றும்
ஊறுஞ் சூழலும், உள்ளம் யாவையும்
உள்ளுருக்கி மெய் காட்டும்... வேல் உறை
மூலஸ் தானமும், மூர்த்தி தீர்த்தமும்,
மோனமாய் நிகழ்கின்ற அற்புதம்
நூறும், நேர்த்தியும், கீர்த்தியும், நிதம்
நொந்த மானுடர் தம்மைத் தேற்றுமாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழின் பண்விழா, யௌவனவிழா,
யாவரும் அருள் அள்ளும் பொன் விழா,
ஈழச் சைவத் தமிழுக் குயிர்ப்பூட்டும்
எழிற் திருவிழா, எவ்விடர் தீண்டிய
வேளையும் விழா மேன்மை கொள்விழா!
வெல்லும் இந்த முறையும் வேல் உலா!
சூழும் நல்லையின் சொர்க்கச் சீர்விழா
சொல்லும் நல்வழி ஊர்க்கு... நம்விழா!

# பத மலர் வாசம் தருவாயே

**பல்லவி**

| | | |
|---|---|---|
| துதிபாடி | உனைவேண்டி | நின்றேனையா - நல்லைப் |
| பதியாளும் | அலங்கார | கந்தையனே |

துதிபாடி ...

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| விதியாளும் | வினைமேவ | வெந்தேனையா - வந்து |
| கதியாளு | எனையாளும் | கதிர்வேலனே |

துதிபாடி ...

**சரணம்**

| | | |
|---|---|---|
| சித்தர்கள் | தேரடி | மண்ணமர்ந்தே - ஞான |
| சித்திகள் | பெற்றதும் | உன்னருளாலே |
| நித்தமும் | பாடியுனை | அழைக்கின்றேன் - நல்லைப் |
| பதியழகா | பதமலர் | வாசந்தருவாயே |

துதிபாடி ...

| | | |
|---|---|---|
| பாதகங்கள் | பெருகுது | பாரினிலே - மத |
| போதனைகள் | மேவாத | மனிதரிங்கே |
| சோதனைதான் | ஏனையா | தினந்தினமே - சூழும் |
| வேதனைகள் | விலகாதோ | வடிவேலவனே |

துதிபாடி ...

**அரியாலையூர் கலாபூஷணம் சிவ சிவனேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நல்லூர் முருகா எம்குறை தீராயோ"

கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம்
புலோலி

நல்லை நகர் பதியுறையும் வேல் முருகையா
நாளுமுமை நாம் வணங்க அருள்புரிஐயா
இல்லா திங்கு தீவினையை நீ விரட்டையா
இருள் களைந்து அருள் சுரக்கக் கைவேலை ஏவையா
(நல்லை)

ஆண்டு ஆண்டு காலம் நாங்கள் அழுகிறோம் ஐயா
ஆவணியுன் திருவிழாவில் தானே மகிழ்கிறோம் ஐயா
வேண்டும் எங்கள் வாழ்வுயர நல் அருளைத் தா ஐயா - நாம்
வேதனையைத் தினம் சுமப்பதுதான் அழகோ ஐயா
(நல்லை)

வேலை ஏவிச் சூரவீரன் உடல் பிளந்து வென்றாய்
வெற்றிக் கொடி சேவலாக, மயில் அமர்ந்து கொண்டாய்
காலை மாலை மதிய ஆறு பூசை கண்டு இருந்தாய்
கணப் பொழுதும் விலகிடாத நேர பூசை ஏற்று மகிழ்வாய்
(நல்லை)

அன்னை தந்தை அண்ணன் மாமன் உறவிருக்கு உனக்கு
அகதி போல உறவிழந்து நாங்கள் தவிப்பது தான் எதற்கு
முன்னை வினைப் பாவம் சூழ்ந்து கொண்டதுவோ நமக்கு
முழு நினைவினோடு நல்லூர்பதி நினைவிருக்கே எமக்கு
(நல்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரமெலாம் தரவே வலம் வருக

**திருமதி சுபாஷினி பிரணவன்**
கொழும்பு - 06

ஒளிறுவாள் உருகெழு முருகா - நல்லூர்
ஒண் செய் அருள் பல அனுதினம் தருவாய்
பிணி பல போக்கிடும் தமிழ் வீர மறவா - உயர்
மயிலேறி நின்றாய் வரமெலாம் தரவே

வெறியாடு மகளிரொடு செறியதாய் விளையாடி
முழவதிர முரசியம்ப குழல் யாழும் முரவ
மலை நிலக் கடவுளாய் மகிழ்ந்த செவ்வேளே
நல்லூரில் குடிகொண்டாய் நாளுமருள் செயவே

தண்டமிழ் சேயோன் செந்தில் குமரேசன்
செஞ்சுடர் வேலழகுச் சேந்தன் - நல்லை
மன்றிலே குன்றுருவ வேல் முகத்தைக் காட்டி
கூறுமடியார் மிடிகள் போக்கிடவலம் வருவாய்

மாயிருள் ஞாலம் மறு இன்றி விளங்க
கீரர் ஆற்றுப் படை கண்ட முருகா - பாச
இருள் துரந்து பல் கதிரில் சோதி விடு வதனம்
குருபரர் கூறெழில் காணவே வருக உலா தினம் தருகவே.

ஆறெழுத்தால் அன்பூரக் கூறுபொருளாகி
கூறுபவர் சிந்தை குடி கொள்வோனே
தொண்டாகக் கொண்டு நல்லூர் வீடு தொழுவோரை
திண்டாட வையாது நீ காப்பது தான் உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உன்னருகில் இருப்பேனே...'

கலாபூஷணம்
வதிரி கண. எதிர்வீரசிங்கம்

**பல்லவி**

என்நாமம் மறந்தாலும் உன்நாமம் மறவேனே! - நல்லை
நன்நகர் ஆளுகின்ற நாயகனே! சிவபாலனே!

என்நாமம்...

**அநுபல்லவி**

பொன்னென்றும் பொருளென்றும் என்னோடு இருந்தாலென்ன! உன்னை
எண்ணாத போதெல்லாம் நான்பரம ஏழைதானே!

என்நாமம்...

**சரணம்**

காற்றாகி வந்துனது கழலடிகள் தொழுவேனே! - கதி
ஊற்றாகி நீராயுந்தன் மேனிதனை நனைப்பேனே!
சேற்றிலறு தாமரையாய் அறுமுகங்கள் சுமப்பேனே! - தமிழ்
போற்றுமுயர் பாவாகி உன்புகழை பாடுவேனே!

என் நாமம்...

நீலமயில் ஆகியுன்னைத் தாங்கியே பறப்பேனே! - எழில்
கோலமுறும் மாதிருவர் அழகினையே (இ) ரசிப்பேனே!
வேலழகு ஒளிதரவே வினையகன்று வாழ்வேனே! - இன்பம்
ஞாலமதில் பெருகிடவே உன்னருகில் இருப்பேனே!

என்நாமம்...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையூரானே போற்றி போற்றி

**தங்கராசா தமயந்தி**
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

நல்லையூரானே போற்றி போற்றி
நலம் பல ஈந்தாய் போற்றி போற்றி
குன்றத்து குமரனே போற்றி போற்றி
கூறுமடியவர் வினை தீர்த்தாய் போற்றி போற்றி
ஆறுபடையானே போற்றி போற்றி
அகதிகளுக்கு அடைக்கலமானாய் போற்றி போற்றி
தந்தைக்குபதேசம் செய்தவா போற்றி போற்றி
தாயுமாய்த் தேற்றினாய் போற்றி போற்றி
மயிலேறும் மன்னவா போற்றி போற்றி
மனித மாண்பு காத்தாய் போற்றி போற்றி
பொற்சேவல் கொடியோனே போற்றி போற்றி
பஞ்சம், பசி, பிணி நீக்கினாய் போற்றி போற்றி
கந்தவேலா போற்றி போற்றி
கருணையுடன் துணை நின்றாய் போற்றி போற்றி
குறத்தி மணளா போற்றி போற்றி
குறை களைந்து துயர் தீர்த்தாய் போற்றி போற்றி
அழகுக் குமரா போற்றி போற்றி
அருளாசியில் நிறைத்தாய் போற்றி போற்றி
நலந்தரும் நாயகனே போற்றி போற்றி
நல்லையூரானே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி

தமிழானந்த பாரதி

தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகக் கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப் பொருளனைத்தும் உளத்தில் கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கும் அழகாக முருகனென அவதரித்தாய்
தமை நத்தும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்து தாமரையில் தமிழாய்ப் பூத்தாய்

தமிழ்வடிவாய் வந்த தலைவா முருகா போற்றி
தமிழ்க் குடியை காக்கின்ற இறைவா போற்றி
உளம் மறவா உயிரே குமரா போற்றி
ஓமென்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடுமுன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மயிலில் பறந்துவரும் இளையோய் போற்றி
தமிழ் கவிதை தனிற் பிறந்த தலைவா போற்றி
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் குமரனின் அருளாட்சி பாமாலை

சிவசூரபி கலைவாரிதி இ.சரவணபவன்

ஆறுதலையாக ஆறுதல் அளித்த புதல்வன்
ஆறு தலை கொண்ட அன்புருவன் - கூறு நல்லைக்
கோமளஞ் சேர் கந்தனடி கைதொழுது கும்பிட்டாற்
போமத் துயர் நிலையப் போது

ஞானவொளி காலும் நல்லைப்பதிமேவும்
ஞானவொளிகாலும் நற்குகனைத் தேனவிழும்
வள்ளி தெய்வானையொடு வாயார வாழ்த்துவர்கே
அள்ளிப் பொழிவானருள்.

வேட்டவரமளிக்கும் வேலாயுத நின்மேற்
பாட்டியற்றிப்பாடிப் பணியவே - ஓட்டமாய்
வந்தருள் செய் நல்லூரில் வாகுபெறவீற்றிருக்கும்
கந்தவேள் அருள்வாய் சரணம்.

ஆறுமுகசீலா! அன்பர்க்கனுகூலா
வீறு மயிலேறும் வேல்முருகா' கூறுமுயர்
நல்லைப்பதிமேவும் நாரியருள் நல்வேளே;
ஒல்லைதனில் உன்னடியே சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக மணம் எங்கும் கமழுது!

**கலாபூஷணம் கீழ்கரவை.கி.குலசேகரன்**
(ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி)

### பல்லவி

எண்ணமெலாம் நிறைந்திட்ட எங்கள் குருநாதனவன்
வண்ணப் பொற் தேரேறி வருகிறான்!...
(எண்ண)

### அநுபல்லவி

மண்ணை உண்ட கண்ணனின், மருகன் திருமுருகன்
கண்ணொதிரில் வந்து காட்சி தருகிறான்!... (எண்ண)

### சரணம்

தேரின் வடம் பிடிப்போர், தேவனவன் மனதினிலே
தெய்வீக - அருளாலே இடம் பிடிப்பார்!
பாரிலுள்ள பக்தரெல்லாம், பைந்தமிழ்க் கடவுளவன்
பாதங்கள் தொழுது திருப்புகழ் படிப்பார்! (எண்ண)

வெள்ளமெனப் பக்தர்களும், வீதியெங்கும் பரந்திருக்க,
வள்ளலவன் தேரேறி வருகிறான்!
உள்ளங்கள் உவகை கொண்டு உமை மைந்தன் புகழ் பாட,
அள்ளி அருளை அவனும் சொரிகிறான்! (எண்ண)

காவடிகளோடு, அங்கு கரகங்கள் ஆடிவர,
கந்தனவன் தேர் பவனி வருகுது! அன்று
தேவர்கள் குறைதீர்த்த திருக் குமரன் வரவாலே,
தெய்வீக மணம் எங்கும் கமழுது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தக் கவியில், நல்லைக் குமரன்!

கலாபூஷணம்
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

01. ஆடும் பரி யேறும் விரி
அயில் வேலவன் நல்லூர்
கூடு மடி யார்கள் தொழக்
கொடி யேறிடும் போழ்தில்
வாடும் வினை யறுப்பான், மனை
வசந்த மிசைந் திருப்பான்
நாடு மெழி லாடும் பொழில்
நல்லைக் கும ரோனே!

02. தங்கு மவன் பொங்கும் புவித்
தரு வாகிய நல்லூர்
எங்கும் நிறை வோனே மறை
எல்லா மறி வானே
பங்க மறி யாதார் நெறி
பற்றும் துய ரற்றும்
நங்கை யிரு புறமு முறை
நல்லைக் கும ரோனே!

03. யாமும் நகர் நல் லூர்ப்பதி
யாளும் குக வேளும்
மூளும் பட ரூழுந் தொட
முடியா தெமைச் சூழும்
ஆளும் பல கோளு மவன்
அடி போற்றிட வீழும்
நாளு முல கேழும் நிறை
நல்லைக் கும ரோனே!

04. சடைமே லுறை பிறையா னிறை
தரம் மேவிய புதல்வன்
விடைமேல் நிறை சிவனார் மறை
வியந் தேற்றிய முதல்வன்
படைவேல் விழி மடவா ளுமை
பகர்வான் மொழி மழலை
நடைபோட் டெமை நனியா ளமை
நல்லைக் கும ரோனே!

05. சிந்தைச் சிமிழ் சந்தத் தமிழ்
சிந்தும் வடி வேலன்
விந்தை பல தந்துங் கலை
வேட னுமை பாலன்
அந்த மிலை யாதி யிலை
அவனே தனி மூலன்
நொந் தாருளம் வந்தா ளிளம்
நல்லைக் கும ரோனே!

06. பூவார் மலர் சூடும் புலப்
பொழிலே வுய ரெழிலே
மூவா முத லோனே பதி
மூலா முரு கோனே
நோவா தெமைக் காவாய், உமை
நோக்கு மிறை யோனே
நாவால் தமிழ்ப் பாவாற் கமழ்
நல்லைக் கும ரோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. ஐயா! வுனை யடி போற்றிடும்
அடியா ரிடர் பொடியாய்
வெய்யோன் வடி வாகே யடி
விளைக்கும் வடி வேலே
மெய்யே விதிர் விதிர்த்தே யெதிர்
மெய்யாய்த் தொழு நைவோர்
நொய் யாமலே உய்வாக் கிடும்
நல்லைக் கும ரோனே!

08. கந்தா! சிவ மைந்தா! வுனைக்
கருத்தா யழைத் திட்டால்
வந்தே னென விழைவாய் குக
வரதா விடர் களைவாய்
விந்தை பல சிந்தும் நல
வேலின் துணை முந்தும்
நந்தா விளக் கானாய் யொளி
நல்லைக் கும ரோனே!

09. விண்ணில் விழிக் கதிரு மொளி
விளங்கும் பல கோளும்
எண்ணில் அடங் காத விடம்
எல்லா முமே யாகிக்
கண்ணில் தெரி கின்றா யணுக்
கருவில் விரி கின்றாய்
நண்ணு முயிர் யாவு முயர்
நல்லைக் கும ரோனே!

10. சேலும் விழி, பாலும் மொழி
சேர்க்கும் வள்ளி மானை
நூலும் இடை போலும், பிறை
நுதலாள் தெய்வ யானை
மேலு மிரு புறமு முற
மயிலும் நடம் பயிலும்
நாலும் மறை வேலும் உறை
நல்லைக் கும ரோனே!

11. பல்லாற் றலும் பெற்றார் குகன்
பாதம் பணிந் திட்டார்
சொல்லாற் றலு முற்றார் கரந்
தொழு தேற்றிய கற்றார்
எல்லா முறை யெங்கும் நிறை
ஏற்றுங் கவி சாற்றும்
நல்லோ னரு வல்லோன் பெரு
நல்லைக் கும ரோனே!

12. மாசும் மறு வில்லா நறு
மனமே குகன் கோயில்
பேசு மடி யார்கள் மிடி
போக்கு மவன் வாயில்
காசும் பணத் தேசு, மிவை
காட்டிப் பெற மாட்டா
நேசன் முரு கேசன் திரு
நல்லைக் கும ரோனே!

13. தந்தை வியந் தேற்றும் நயந்
தந்தாய் பெருஞ் சிந்தாய்
சிந்தை மிகு 'ஓம்'இன் பொருள்
சமைத்தாய் புக ழுமைத்தாய்
விந்தை மிகு குருவென் றுனை
விழைந்தார் சிவ னளைந்தார்
நந்தன் மரு கோனே யரு
நல்லைக் கும ரோனே!

14. அவ்வை யறி வாற்றல் நெறி
அவனிக் குணர் வித்தாய்
செவ்வை மிகு செய்யுட் தொகு
செப்பும் அமு தொப்பும்
அவ்வா றுன தருளீ லைகள்
அறிவா ரறி வாரே
நவ்விக் கவி நயக்குஞ் செவி
நல்லைக் கும ரோனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பேசத் தெரி யாத சிறு
பையன் குரு பரனார்
பாசத் தொடு வந்துன் னடி
பற்றிப் பிடித் ததனால்
வாசத் தொடு சந்தக் கவி
வழங்கும் படி விளங்கும்
நேசம் நெறித் தேசும் நிறை
நல்லைக் கும ரோனே

16. வள்ளிப் பெரு மாட்டி யுனை
வணங்கித் தொழ, வாட்டிக்
கள்ளத் தனங் கூட்டிப் புதுக்
கலையா டல்கள் காட்டி
உள்ளந் தனை நாட்டி யுன
துடைமை யெனச் சூட்டி
நள்ளும் மனத் துள்ளு முறை
நல்லைக் கும ரோனே!

17. அருண கிரி யருள்நா வினில்
அரு வேலினைப் பொருத்தி
பெருகு மொரு பேறா யுருப்
பெறும் பாடல்கள் சந்தம்
மருவு, மத னுருவுந் தமிழ்
மங்கா தினி யெங்கும்
நெருங்கும் புகழ் மருங்குந் திகழ்
நல்லைக் கும ரோனே!

18. சூரன் செயுங் கொடுமை களைச்
சொல்லி யழுந் தேவர்
பாரத் துயர் தனைப்போக் கிடப்
பரிந்தாய் களம் விரிந்தாய்
சூரத் தன மொழித்தாய் மயில்
சேவ லென விளித்தாய்
நேரந் தெரிந் தாள்வாய் பரம்
நல்லைக் கும ரோனே!

19. அன்பா லுன தடியே தொழும்
அடியார் களை யென்றும்
துன்பத் தினில் துவளா, வெழுந்
துயர் போக்கிடும் தூயன்
கன்ம வினை களையு, முடன்
களையும் கன மாயன்
நன்மை பொழி யின்மை யொழி
நல்லைக் கும ரோனே!

20. வேலைத் தொழு வதுவே யொரு
வேலை யென நாளும்
காலைப் பிடித் தாலே, வருங்
காலை வினை மாழும்
மாலை யணி யார, மணி
மலையே! கவின் கலையே!
நாலுந் தெரிந் தாளும் புரி
நல்லைக் கும ரோனே!

21. அருவு மவ னுருவு மவன்
அருவே யுரு வானான்
தருவு மவன் மருவும் வினை
தகர்க்கும் பொரு வானான்
கருவு மவன் குருவு மவன்
கருத்தும் மிக விரித்தும்
நெருகும் வகை பெருகும் தகை
நல்லைக் கும ரோனே!

22. கலியே படர் யுகமே யிடர்
களையும் படி விழையும்
வலுவா னவன் கொலுவா னவன்
வடி வேலவன் பலவான்
எலிவா கனன் பொலிவான் மடி
இருந் தாடிடும் புலவோன்
நலிவா னவர் வலி மாற்றிடும்
நல்லைக் கும ரோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. உயர் வானசப் பறத் தேரினில்
ஒளி கூட்டியே வருவான்
பய மேனவன் பதம் பற்றிடில்
பவ வூழ்வினை யொழியும்
புய மேவலு வய மானவன்
பொறையா னெம திறையான்
நய மேயவன் மயமே யுவன்
நல்லைக் கும ரோனே!

24. தேரில் வரு முருக னுரு
தெவிட்டா தொரு காட்சி
பாரி லடி யார்க ளிடி
போக்கும் பெரு மாட்சி
காரிற் கொழி மழையா யொளிக்
கருணைப் பொழி வோச்சி
நேரிற் திகழ்ந் தாள்வான் புகழ்
நல்லைக் கும ரோனே!

25. ஆறே சிர மதை யேற்றிடில்
அஞ்சே! லென விளிப்பான்
ஆறாத் துய ரழிப்பான் பெரு
ஆறாய் நல மளிப்பான்
மாறா விள மாறன் சிவ
மைந்தன் முக மாறன்
நீறா டிடும் நெற்றித் திகழ்
நல்லைக் கும ரோனே!

26. ஆயுங் கலை யறுபத் தொடு
அரு நான்கிலும் மூழ்கி
தோயும் பெரு ஞானர் செய்யுள்
தொட்டே னுளத் துற்றேன்
பாயுந் தமிழ்ப் பாக்கள் குகன்
பகர்ந்தா னதை முகர்ந்தேன்
நாயிற் கடை யேனுக் குடை
நல்லைக் கும ரோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் இருந்து மீட்க மயிலேறி வா...!

**சின்னையா சிவபாலன்**
கோண்டாவில்.

எருதேறி உலகாளும் அரனார்க்கே ஒரு நாளிற்
குருவான கும - ரேசனே
விருப்போடு உனைப்பாட வளமான மொழியீந்தாய்
பொதிகையிலே தமிழ் - நேசனே
திருப்பாதம் அதையேத்தும் பலகோடி அடியார்போல்
அழகாநான் உன் - தாசனே
அருளோடு அறங்கல்வி திருவோங்கும் யாழ்நல்லைப்
பதிவாழும் முரு - கேசனே!

பிடிவாதம் திமிரோடு குழந்தாய்நீ எனத்தானே
தொடுத்தார்போர் அதன் - போதிலே
கொடியோரின் குலம்யாவும் பொடியாக வடிவேலை
விடுத்தாயே களம் - மீதிலே
முடிசூடி யாழ்ப்பாண அரசாண்ட விறல்வேந்தர்
கரங்கூப்பிச் சிரம் - தாழ்த்தியே
அடிவீழ்ந்து தொழுதேதான் வரலாற்றிற் புகழ்கண்டார்
நல்லூரா உனை - வாழ்த்தியே!

மலைபோல உயர்ந்திட்ட பலதூல லிங்கங்கள்
நிலையாக எமை - ஈர்க்குமே
அலைபோல வருமன்பர் குறையாவும் அமராவுன்
முகமாறும் உடன் - தீர்க்குமே
கலையாத புகழோடு நல்லூரிற் குடிகொண்டாய்
வேலாக உரு - மாறியே
வலைமீதில் அகப்பட்ட விலங்கானேன் எனைமீட்க
வருவாயே மயில் - ஏறியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஷண்முகப்பெருமான் வீற்றிருக்கும் சுவர்ண சபா மண்டபத்தின் தூபி தங்கத்தினால் வேயப்பட்டு 02.09.2018 அன்று கார்த்திகை உற்சவத்தின் போது மகா திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டது.



சூரசங்காரத்தின் போது ஷண்முகப்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2019

## கட்டுரைகள்


- முருகனிடம் பொதுநல வேண்டுகையும் தன்னல வேண்டுகையும்
- வழிபாடு ஒரு வாழ்வியல்
- சோழர்காலத்தில் சமஸ்கிருத நூல்களில் சைவசித்தாந்தம
- சிவாகமங்கள் காட்டும் தீட்சை முறைகளும் வகைகளும் - குறிப்புக்கள்
- சிவாகம மரபில் சுப்ரம்மண்யரது படைக்கலம் வேல் - ஓர் ஆய்வு
- நல்லைக்கந்தனின் வேல்வடிவம்
- நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை
- திருமுறைகளால் மீண்டும் துலங்கியது சைவம்
- சைவமும் வாழ்வும்
- யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள்
  சமகால அவதானிப்புகள்
- யாழ்ப்பாணத்து முருகத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற
  பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் - ஒரு சிறப்புப்பார்வை
- திருக்கோவையார்
- அபிராமி அந்தாதியில் சக்தியின் பெருமை
- தேவாரங்களின் அகப்பொருளியல் மரபு
- அருணகிரிநாதரும் திருப்புகழும்
- "இடுக்கண் நீக்கும் மந்திரத் திருப்புகழ்"
- ஆன்மிக நல்வாழ்வும் சித்தர்களும்
- குழந்தைவேல் சுவாமிகள்
- பிடி அரிசித் தொண்டினால் பெருங்கோயில் அமைத்த இணுவில் சாத்திரம்மா
- புலனடக்கம்
- ஆன்மாவின் எதிரியை விரட்ட மனதை ஒரு நிலைப்படுத்துவோம்
- மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக்கலை
  உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள்
- ஆலய வழிபாட்டில் கிடைக்கும் உளவளத்துணை
- சைவ பரிபாலனசபை - சைவ நூலகம்
- ஆயிரம் பேரைக் காத்த திருமுருகாற்றுப்படை
- 2019இல் யாழ். விருது பெறும் வாழ்நாள்
  பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனிடம் பொதுநல வேண்டுகையும் தன்னல வேண்டுகையும்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பண்டைக்காலத்திலிருந்தே தமிழர் வணங்கும் கடவுளாக முருகப்பெருமான் விளங்குகிறார். நம்முடைய பண்டைக்கால நில அமைப்புக்கேற்ற வழிபாட்டு வாழ்வும் நடைமுறைகளும் அமைந்திருந்தன. ஒவ்வொரு நிலத்திலும் மிக உன்னதமான ஒரு வழிபடு கடவுள் விளங்கினார். முருகப் பெருமான் குறிஞ்சி நிலத்தின் கடவுளாக வழிபடப் பெற்றார். மலையும் மலை சார்ந்த இடத்தினை, அங்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அருமையாக மலருகின்ற குறிஞ்சி என்னும் பூவினாலே பெயரிட்டு பண்டைத் தமிழர் வழங்கினர். முருகன் குன்றுகளிலே உறைகின்ற கடவுளாகத் தமிழர் வணங்கினர். திருமுருகாற்றுப்படை என்னும் சங்கத்தமிழரின் நெடும்பாட்டு முருகனின் அடியவர் ஒருவரைத் தமிழ்நாட்டிலுள்ள முருகப் பெருமானின் ஆறுபடை வீட்டுத் திருக்கோவில்களுக்கும் ஆற்றுப்படுத்துகின்றது. சங்க இலக்கியப் பாடல்கள் சில முருக வழிபாடு பற்றிக் கூறுகின்றன. கி.மு. 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரைக்கான காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களே சங்க இலக்கியங்கள் எனப்படுகின்றன. இக்காலப் பகுதிக்குப் பின்னர் தமிழ் இலக்கியங்கள் சிவனையும் திருமாலையுமே பெரிய அளவிலே பாடுகின்றன. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராண காவியத்தின் பின்னரே முருகனைப் பற்றித் தமிழ்ப் பாடல்கள் பல மீண்டும் எழுந்தன. அவை இன்றுவரை பாடப்படுகின்றன. இப்பாடல்களுள் பண்டைக்கால முருகன் பாடல்களிலே அடியார்களுடைய வேண்டுகை பெரும்பாலும் பொதுநலமாகவும் பிற்காலத்தில் அவை பெரும்பாலும் தன்னல வேண்டுகையாகவும் அமைகின்றன என்பதனை முன்வைத்து அதற்கான சில எடுத்துக் காட்டுகளை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பொதுநல வேண்டுகை

சங்கப் பாடல்களிலே முருகனுக்கு "செவ்வேள்", "சேயோன்", "முருகு" முதலிய பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன. பரிபாடல் என்னும் நூல் சில சங்கப் பாடல்களின் தொகுதியாக அமைந்துள்ளது. 70 பாடல்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்திருந்த போதும் இன்று 22 முழுப்பாடல்களைக் கொண்டதாகவே அமைகிறது. இவற்றுள் முருகனுக்கு எட்டுப் பாடல்கள் உள்ளன. இவை "செவ்வேள் "பாடல்கள் எனப்பட்டன. இப்பாடல்களில் பொதுநல வேண்டுகை அமைந்துள்ளதை இரு பாடல்களுடாக இங்கு எடுத்துக்காட்டலாம். பரிபாடல் (ஶ்ரீ தியாகராச விலாச வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை: கபீர் அச்சுக்கூடம், 1956) நூலில் ஐந்தாம் பாடல் 81 அடிகளாலாகியது. பாடலின் மிகச் சுருக்கமான பொருள் வருமாறு:

"பிணிமுகம் என்னும் யானையின்மேல் ஏறி, வேலாயுதத்தால் சூரபன்மனாகிய மாமரத்தை பிளந்து கிரவுஞ்ச மலையை ஊடறுத்தோய்! ஆறு திருமுடியை உடையோய்! ... கார்த்திகை மாதர் அறுவரும் சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயலில் நின்னைப் பெற்றார் என்பர். முருகா! அவ்வாறு உன்னைப் பெற்ற அன்றே இந்திரன் பொறாமையால் தனது வச்சிராயுதத்தால் எறிய, ஆறு வேறு உருவமாகிப் பின்னும் ஒருவனாயினாய். குழவிப் பருவத்தில் முற்ற வளராத திருமேனி உடைய நீ விளையாட்டாகச் செய்த போரில் படைக்கலமில்லாத உன் கைக்கு இந்திரன் தோற்றான். இதனால் "இவ்வாற்றலை உடைய இவனே நம் படைக்குத் தலைவன்" என்று கருதி உனக்கு அக்கினித் தேவன் கோழியைத் தந்தான். இந்திரன் மயிலையும் யமன் வெள்ளாட்டு மறியையும் தந்தனர்..."

இவ்வாறு பல செய்திகளைக் கூறும் பாடல்,

**"..............................யாஅம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே."**

என முடிவடைகின்றது. இங்கு முருகனிடம் வேண்டுகை செய்யும் அடியவர்கள் கூட்டாக எல்லோருக்கும் மகிழ்வு தருவனவற்றை வேண்டுகின்றனர்.

பரிபாடல் எட்டாம் பாடலில் அடியார்கள் ஒரு வியப்பான வேண்டுகை செய்கின்றனர். "தம்முட் பிரியாத மகளிரும் மைந்தரும் அல்லாத வரம்வேண்டும் மக்களும் கூடி முருகா! மண்ணிலே மழை வறந்த தாயினும் உன்னுடைய திருப்பரங்குன்ற மலையிலே தெறிக்கின்ற நீரையுடைய அருவி நிலைபெற்றிருக்க வேண்டும்" என்று வேண்டுகை செய்கின்றனர். இதனை பின்வரும் பாடலடிகள் கூறுகின்றன:

**"உடன்புணர் காதலரும் அல்லாரும் கூடிக்**
**கடம்பமர் செல்வன் கடிநகர் பேண**
**மறுமிடற்று அண்ணற்கு மாசிலோன் தந்த**
**தெறிநீர் அருவி அசும்புறு செல்வம்**
**மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா**
**தண்பரங் குன்றம் நினக்கு."**

இவ்வாறு செவ்வேளைப் பாடும் பரிபாடல்களிலே தன்னலமற்ற வேண்டுகைகள் இடம் பெறுகின்றன.

சங்கப் பாடலான திருமுருகாற்றுப்படையிலே அடியானொருவனுடைய ஆன்மீக வேண்டுகை இடம்பெறுகிறது. பாட்டிலே,

**"நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்**
**நின்னடி உள்ளி வந்தனென்......"**

"உன்னுடைய தன்மை எல்லாம் முழுவதுமாக அளவிட்டு அறிதல் பல்லுயிர்க்கும் அரிது. ஆகையினாலே நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைத்து வந்தேன்.

"என்று அடியவனுடைய வேண்டுகை அமைகிறது. பிற்காலத் தன்னல வேண்டுகையின் தொடக்கம் திருமுருகாற்றுப் படையிலே காணப்படுகிறது. இதனுடைய விரிவினை பிற்காலத்திலே அருணகிரிநாதருடைய பாடல்களிலே காணலாம்.

## தன்னல வேண்டுகை

தாம் செய்த பிழைகளை, பழி பாவங்களை மறக்காது, மறைக்காது தம்முடைய பாசுரங்களிலே கூறி இறைவனைத் துதித்த அடியார்களுள் அருணகிரிநாதர் முன்னிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலுள்ளார். அவர் பாடியவை முருகவேள் பன்னிரு திருமுறை எனத் தொகுக்கப்பட் டுள்ளன. முதல் ஏழு திருமுறைகளுள் அருண கிரியார் பாடிய திருப்புகழ் அடங்குகின்றன. முதல் ஆறு திருமுறைகளும் ஆறுபடை வீடு களில் வீற்றிருக்கும் முருகப் பெருமானைப் பாடும் திருப்புகழ்ப் பாசுரங்களைக் கொண் டுள்ளன. அருணகிரியார் தன்னுடைய திருப்பு கழிலே பல வேண்டுகைகளை முன்வைக் கிறார். இறையடியார்கள் யாவருமே இறை வனைப் பணியுமிடத்து வேண்டுகைகளை முன் வைப்பது வழக்கம். "வாசி தீரவே காசு நல்குவீர்" என்று சம்பந்தப்பெருமான் இறை வனிடம் செல்லக்கூடிய காசு தரும்படி வேண்டு கின்றார். "கூற்றாயினவாறு விலக்க கலீர்" என்று அப்பர் பெருமான் வேண்டுகை செய்கி றார். நாயன்மார்களுள் சுந்தரமூர்த்தி சுவாமி களே பல வேண்டுகைகளை முன்வைக்கி றார் "சுந்தரனே கந்தமுதல் ஆடையா பரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித் தருள வேண்டும்" என்றும் "கோழிலி யெம் பெருமான் குன்றையூர்ச் சில நெல்லுப் பெற்றேன். ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே" என்றும் பாடுவதை எடுத்துக் காட்டுகளாகக் காணலாம். அருண கிரியாருடைய திருப்புகழிலோ பெருந் தொகையான வேண்டுகைகள் இடம் பெறு கின்றன. அவற்றுள் சில எடுத்துக் காட்டுகள் தரப்படுகின்றன.

1. காலனுடைய தூதர் பாசக் கயிறு கொண்டு என் காலைக் கட்டித் தம்முடன் கொண்டு போகமுன்.

**"ஆலம்வாள் தண்டு செஞ்சேவல்கோ தண்டமுஞ்**
**சூடுதோ ளுந்தடந் திருமார்பும்**
**தூயதாள் தண்டையுங் காண ஆர்வஞ்செயுந்**
**தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்" (35)**
**தன்முன் "வரவேணும்"**

என்னும் வேண்டுகையை முன்வைக்கிறார்

2. 398 ஆம் திருப்புகழில் "அருள்வாயே" என்று வேண்டுகிறார். அதில் சில வரி கள் வருமாறு:

**ஐங்கரனை யொத்தமனம் ஐம்புலம கற்றிவளர்**
**அந்திபக லற்ற நினைவு அருள்வாயே**
**அம்புவிதனக்குள் வளர் செந்தமிழ்வ முத்தியுனை**
**அன்பொடுது திக்கமனம் அருள்வாயே**

3. அருணகிரியாரின் பிற வேண்டுகைகள் சில பின்வரும் அட்டவணையில் இடம் பெறுகின்றன:

| | | |
|---|---|---|
| பாராய் | "உனக்கடிமையுற் றுன் தலத்தினி லிருக்கும்படி | பாராய்" (262) |
| புரிவாயே | "நாண மகற்றிய கருணை | புரிவாயே" (450) |
| ஆள்வாய் | "பொருள்தங்கத் தொடுக்கஞ் சொற்றமிழ்தந்திப் | படியாள்வாய்" (33) |
| தவிராய் | "இளைக்கவிட்டுத் துரத்துவார் தங்கள் சேர்வை | தவிராய்" (73) |
| புகல்வாயே | "அடிமைக் கொருசொல் | புகல்வாயே" (128) |
| களைவாயே | "அடியே னிடர் | களைவாயே" (732) |
| இசைவாயே | "அழகுபெற மரகத மயில்மிசை வர | இசைவாயே" (132) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

தேவாரங்கள் பாடிய நாயன்மார்கள் சிவனைப் பாடுகின்றபொழுது சில வேளைகளில் அருணகிரியாரைப்போல தனிப்பட்ட தேவைகளுக்கு வேண்டுகை செய்கின்றனர். ஆனால் அருணகிரியாரோ திருப்புகழில் தொண்ணூறு வீதத்துக்கு மேற்பட்ட இடங்களில் தன்னுடைய தனிப்பட்ட தேவைக்கான வேண்டுகைகளையே முருகப்பெருமானிடம் முன்வைக்கிறார். இது அவருடைய தனிப்பட்ட வாழ்வு காரணமாக அமைந்துள்ளது என்று கூறுவது பொருத்தமாகும். விலைமாதருடன் அவருக்கிருந்த உறவு, அதனாலேற்பட்ட துன்பங்கள் பற்றி எண்ணுகின்ற பொழுதெல்லாம் தன்னைக் காப்பதற்கு முருகன் ஓடோடி வரவேண்டுமென வேண்டுவார். இவ்வாறு வேண்டும் பொழுது சில வேளைகளில் முருகன் தன்வேண்டுகையை முற்று முழுதாக ஏற்றுக்கொள்வானோ என்றும் எண்ணியுள்ளார். இதனாலே தான்.

**"மடமாதர்கள் மயலின் சேற்றி லுழன்வேனோ" (90)**

**"வந்துநின்ற மகளிர்பின் சுழன்று திரிவேனோ" (91)**

என்று பாடுகிறார். முன்னர்க் குறிப்பிட்ட ஏனைய வேண்டுகைகளிலே காணப்படும் நம்பிக்கை இவற்றிலே காணப்படவில்லை. தான் புரிந்த குற்றத்தின் தன்மையினை எண்ணியே இத்தகைய நம்பிக்கையீனம் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

## தமிழ்க் கடவுளே

தந்தையின் மகனாய் உதித்தாலும்
தாயின் சிறப்பையும் காட்டினாய் முருகா!
இந்திரன் முதலான தேவர்களுக்கெல்லாம்
தலைவனாய் திகழ்ந்தாய் தமிழ்க் கடவுளே!
கந்தக் கலாசாரம் மிகுந்த நல்லை
மாநகரிலே கோவில் கொண்ட குமரா!
எந்தன் வேண்டுதல்களையும் எல்லோர்
வேண்டுதல்களையும் தருபவனே முருகா!

**இராம. ஜெயபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு ஒரு வாழ்வியல்

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்வியலை நெறிப்படுத்துவது வழிபாடு. அது ஒரு பட்டறிவு என்று சொன்னாலும் சாலப் பொருந்தும். நமது முன்னோர்கள் தமது பட்டறிவால் வகுத்த நெறியே வழிபாடு ஆகும். "வழிபாடு" என்ற சொல் பண்டைய இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. வழி என்பது நாம் செல்கின்ற வழியெனப் பொருள்தருவது. நாம் செல்லும் வழி நமது முன்னோர் வகுத்த வழியாகும். அதனால் 'வழிபாடு' என்பது நமது முன்னோர் வகுத்த வழியிலே செல்லுதல் எனப் பொருள் தரும் சொல்லாகவும் விளங்கியது. மனித வாழ்வியலில் இயற்கையைப் பணிந்து வாழும் முறைமை தோன்றிய போது 'வழிபாடு' என்பது வணங்கிவாழ்தல்' என்ற நிலையை உருவாக்கியது. மனிதன் தன்முன்னோர் வகுத்த நல்ல நெறியிலே இயற்கையை வழிபட்டு வாழ்ந்த போது வழிபாட்டு நடைமுறைகளும் தோற்றம் பெற்றன. குறிப்பாக நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழர் வாழ்வியலில் வழிபாடு ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தது. அது எவ்வாறு இன்றுவரை ஒரு வாழ்வியலில் நிலைத்து நிற்கிறது என்பதை விளக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

**தொன்மை இலக்கியங்களில் வழிபாடு**

தமிழர் வழிபாட்டு மரபு பற்றிய செய்திகள் தொன்மையான இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களின் காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அண்மைக் காலத்துத் தொல்லியல் ஆய்வுகள் நிறுவியுள்ளன. எனவே அவ்விலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ள வழிபாடு பற்றிய செய்திகளை இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டும். மனித வாழ்வியலை வழிபாடு எவ்வாறு நெறிப்படுத்தியது என்பதை அவை நன்கு உணர்த்தும். மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்த போது வழிபாட்டு நடைமுறைகளையும் வகுத்துக் கொண்டான். இயற்கையைப் பணிந்து அதன் பேராற்றலை வியந்து வழிபட்டபோது அது ஒரு வாழ்வியலாக நிலை பெற்றது.

அன்றைய வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய பதிவுகளை இன்று மீள நோக்கும் போது தமிழர் வாழ்வியலில் வழிபாடு எவ்வாறு பேணப்பட்டதென்பதைத் தெளிவாக உணரமுடிகிறது. மனிதன் வாழ்ந்த நிலத்து இயல்பு நிலைக்கு ஏற்ப வழிபாட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ள செய்திகளைத் தொல்காப்பியம் என்னும் தொன்மையான இலக்கண நூல் சிறப்பாக வகுத்துக் கூறியுள்ளது. ஒரு நிலத்தில் வாழும் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலைத் தெளிவாக அறிவதற்கு அந் நிலத்துக் கருப்பொருட்களைப் பகுத்துக் காட்டியுள்ளது. கருப்பொருள்களிலே அந் தந்த நிலத்திற்குரிய தெய்வங்களும் குறிப் பிடப்பட்டுள்ளன. எனவே வழிபாட்டு நடை முறைகளில் உள்ள வேறுபாடுகளையும் அப் பதிவுகள் மூலம் தெளிவாக அறிவதற்கு இன்று வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டா கப் புறநானூறு என்னும் தொகுப்பு நூலிலே அமைந்துள்ள ஒரு பாடலைக் காட்டலாம்.

**"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்**
**மாரியான்று மழைமேக் குயர்கெனக்**
**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்**
**புனத்தினை யயிலும் நாட...."**

**(புறநானூறு : 143)**

இப் பாடலடிகளில் மலைப்பகுதியை மழை வந்து சூழ வேண்டுமென வேண்டிக் குறவர் கள் பலியைத் தூவி இயற்கையை வழிபட்ட செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் களுடைய வழிபாட்டால் மழை மிகுதியாகப் பெய்தது. அதனால் அப் பெயல் குறைந்து மழைமுகில்கள் மேலே போக வேண்டுமென வும் குறவர்கள் மீண்டும் வழிபாடு செய்கிறார் கள். மழை நின்றுவிட்டது. குறவர்கள் மலை யிலே விளைந்த தினையை உண்டு மகிழ் கின்றனர். இப்பாடலைப் பாடியவர் கபிலர் என்னும் புலவராவார். வையாவிக் கோப் பெரும் பேகன் என்னும் மன்னனைப்பாடும் போது புலவர் குறவருடைய வழிபாட்டு மரபையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

மனித வாழ்வியலில் தனக்கு வேண்டிய தைப் பெறுவதற்கு இயற்கையை வழிபட வேண்டும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் நிலவியுள்ளது. நிலத்துக்கேற்ற வாழ்க் கையை வழிபாடு நெறிப்படுத்தியதையும் இப் பாடல் தெளிவாக உணர்த்துகிறது. மக் கள் தமது வாழ்க்கைக்கு வேண்டியவற் றைப் பெறுவதற்கு வழிபாட்டு நடைமுறை களைப் பேணினர். வழிபாட்டு நடைமுறை களைச் செய்வதற்கெனத் தனித்துவமான இடங்களைத் தெரிவுசெய்து அங்கு வழிபாடு செய்தனர். அவ்விடங்களிலே தெய்வம் விரும்பி வந்து உறையும் என நம்பினர். எனவே அத்தகைய வழிபாடு செய்யப்படும் இடங்களுக்கூடாகப் பயணம் செய்யும் போது அங்கு உறையும் தெய்வத்தை வழி பட்டுச் செல்லும் மரபு பேணப்பட்டது. குறிப் பாக இளையோரிடையேயும் இந்த வழி பாட்டு நம்பிக்கையிருந்ததையும் ஒரு பாடல் பதிவுசெய்துள்ளது.

**"அழிவில முயலும் ஆர்வ மாக்கள்**
**வழிபடு தெய்வம் கட்கண் டாங்கு**
**அலமரல் வருத்தம் தீர யாழநின்**
**நலமென் பணைத்தோள் எய்தினம்..."**

**(நற்றிணை : 9)**

இப் பாடலடிகள் ஒரு காதலனும் காதலியும் பெற்றோர் அறியாமல் உடன் போக்கிலே சென்று கொண்டிருக்கும் போது அவர்களி டையே இருந்த வழிபாட்டு நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றன. தமது முன்னோர்களது வழிபாட்டு மரபைப் பின்னவரும் பேணும் நிலை யிருந்ததையும் இப் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன. சிதைவில்லாத செயலை முயற் சியுடனும் ஊக்கத்துடனும் செய்கின்ற மக் கள் வழிபடுகின்ற கடவுளைக் கண்ணெதிரே கண்டாற்போல நான் நெடுங்காலம் உன் னைப் பெறுவதற்குச் செய்த முயற்சிகளின் வருத்தம் எல்லாம் நீங்கும்படி உனது மென் தோளை அடைந்தேன்" எனக் காதலன் காதலியிடம் கூறுவதாக இப் பாடலடிகள் அமைந்துள்ளன. இச் செய்தியை அவன் கூறும் போது அவனுடைய வழிபாட்டு உணர்வு புலப்படுகிறது. வழிபாட்டால் நாம் விரும்பியதைப் பெறலாம் என்ற நம்பிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை அவன் ஏற்றுக்கொண்டுள்ளான். இன்றும் இந்த நம்பிக்கை "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாந் போல" என்ற பழமொழியாக வழக்கிலுள்ளது.

எனவே வழிபாடு பற்றிய நம்பிக்கை தனிமனிதநிலையிலும் கூட்டுநிலையிலும் பண்டைத்தமிழரிடையே வெகுவாகப் பரவியிருந்தமையைத் தொன்மை இலக்கியப் பதிவுகளால் நன்கு அறிய முடிகிறது. ஒரு நிலத்து வாழ்வியலை இந்த நம்பிக்கை நெறிப்படுத்தியது. மனித முயற்சிக்கு அப்பால் ஓர் இயற்கையின் பேராற்றல் எல்லாவற்றையும் இயக்குகிறது என்ற கருத்தே பண்டைத்தமிழரின் வழிபாட்டு மரபின் அடித்தளமாக இருந்தது. இயற்கைத் தோற்றங்களையே கடவுளாகக் கருதி வழிபாடு செய்யும் நடை முறையும் தோன்றியது. பரிபாடல் என்னும் நூலிலே இதனைத் தெளிவாகக் காணமுடிகிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அதேவேளை நீர்நிலை, பெருமரம், குன்றம் போன்ற இயற்கைத் தோற்றப்பாடுகளைப் பணிந்து வழிபாடு செய்யும் நிலையும் இலக்கியங்களிலே விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வழிபாட்டு நடைமுறைகளும் வாழ்வியலும்**

மனித வாழ்வியலில் மூன்று நிலைகள் மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன. உணவு, உடை, உறையுள் என்ற மூன்றும் மனிதனுக்கு இறுதிவரை வேண்டப்படுகின்றன. இம் மூன்றையும் தேடுவதிலும் அவற்றைப் பேணுவதிலும் அவனுடைய முழு முயற்சிகளும் உள்ளடக்கப்பட்டன. அவன் தனியாக இருந்தபோது இவற்றின் தேட்டம் எளிதாக இருந்தது. ஆனால் குடும்பமாகக் கூடி வாழும் போது தனக்காக மட்டுமன்றித் தன்னைச் சார்ந்தவர்களுக்குமாக அவனுடைய தேட்டம் விரிவடைந்தது. இந்த நிலையில் இரண்டு தொழில்கள் அவனுக்குக் கைகொடுத்தன. உணவுத் தேட்டத்திற்கு நிலவேளாண்மையும் கடல் வேளாண்மையும் உறுதுணையாக இருந்தன. நிலத்து இயல்புக்கேற்பப் பயிர்ச் செய்கையை அவன் மேற்கொண்டான். கடலிலே மீன் வேட்டையாடி உணவைப் பெற்றான். எனினும் இயற்கையின் கொடைகளான மழையும் வெயிலும் அவனுடைய உணவுத் தேட்டத்திற்குப் பெரிதும் வேண்டப்பட்டன. எனவே அவற்றின் பயனை அவன் பெற்றபோது பல விளைபொருள்களும் கிடைத்தன. அந்த விளை பொருட்களை இயற்கைத் தெய்வத்திற்கு மடையிட்டு வழிபாடு செய்த பின்னரே அவற்றைத் தான் உண்ணும் நடைமுறையை மனிதன் வகுத்துக் கொண்டான். இந்த நிலை வாழ்வியலில் வழிபாட்டை மேலும் இறுகப் பிணித்துக்கொண்டது.

தனது பயிர்ச்செய்கை நிலத்திலே முதல் விளை பொருளை கடவுளுக்கு மடைப் பொருளாக விட்ட நடைமுறையைக் குறுந்தொகைப்பாடல் பதிவுசெய்துள்ளது.

**"புனவன் துடவைப் பொன் போற் சிறுதினைக்**
**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**
**சூர்மலை நாடன்....."**

**(குறுந்தொகை : 105)**

இப்பாடல் குறவனுடைய தோட்டத்திலே பொன்னைப் போல ஒளிரும் நன்கு விளைந்த சிறுதினையிலே கடவுளுக்கு மடையாக இடுவதற்காக விட்டிருந்த கதிர்களை அறியாமல் உண்ட மயில் வெறியாடுகின்ற மகளைப் போல நடுங்கி நிற்கும் மலைநாடு எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச் செய்தி அக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால வழிபாட்டு நடைமுறையொன்றை இன்று நாம் உணர வைக்கின்றது.

வழிபாட்டு நடைமுறைகளில் மனிதனுடைய உடை பற்றிய குறிப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழிபாட்டு நடைமுறைகளை மேற்கொள்வோர் சிவந்த ஆடை அணியும் வழக்கம் இருந்துள்ளது. குறவர் முருகனுக்கு வெறியாடல் செய்தமை பற்றிய குறிப்புகள் பல பாடல்களிலே பதிவாகியுள்ளன. மறியறுத்து திணையரிசியைப் பரவி வழிபாடு செய்துள்ளனர். அவர்கள் உறையுள் அமைந்த இடங்களில் கடம்பமரத்தை நட்டு அதனடியில் மேடையமைத்து வழிபாடு செய்தனர். அவ்விடத்தை மன்றம் என அழைத்தனர். அங்கு ஆணையிட்டுச் சூளுரை செய்வர். கொடியவர்களைத் தெய்வம் ஒறுக்கும் என நம்பினர். இந்நிலை வாழ்வியலில் வழிபாடு ஓர் உறுதியான கோட்பாடாக அமைந்ததை உணர்த்துகிறது. வழிபாட்டு நிலையில் இசைக்கருவிகளும் இணைந்தன. குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தெய்வம் உறையும் இடமாகக் கருதிப் பேணினர். பெருமர நீழலிலும், மலையடிவாரத்திலும் குன்றின் உச்சியிலும், ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும் தெய்வம் உறையும் வழிபாட்டிடங்கள் பற்றிய பல பதிவுகள் உள்ளன.

இந்த வழிபாட்டு நடைமுறைகள் விளைபொருட்பெருக்கம், பிணிநீக்கம், மக்கட்பேறு, மணவாழ்வு எனப் பல்வேறு வேண்டுதல்களைச் செய்ய நிகழ்த்தப்பட்டன. நிலத்தின் இயல்புக்கேற்ற வாழ்வியலிலும் தமது இன்றியமையாத வேண்டுகோளை நிறைவேற்ற வழிபாடு துணை செய்யும் என்ற நம்பிக்கையை அக்கால மக்கள் கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கையைத் தலைமுறையினரும் பின்பற்ற வேண்டுமென எண்ணிச் செயற்பட்டனர். வழிபாட்டு நடைமுறைகளில் பல கட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன. தூய்மை பேணப்பட்டது. வழிபாட்டிற்குப் பூவும் புகையும் இன்றியமையாதவையாகக் கருதப்பட்டன. பருவகாலத்திற்கேற்பப் பெறப்பட்ட விளைபொருட்கள் ஆண்டுதோறும் மடைப் பொருட்களாகத் தெய்வத்திற்கு மடைபரவப்பட்டன.

குறிஞ்சியெனப்படும் மலைநிலமே வழிபாட்டு நடைமுறைகளைப் பெரிதும் பேணியதைப் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. மலை நிலத்தில் வாழ்ந்தவர் பல இடர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் அவற்றிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்கு வழிபாட்டைத் துணையாகக் கொண்டனர். கூட்டு வாழ்க்கையில் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிபாட்டு நடைமுறைகள் பெரிதும் துணை செய்தன. ஏனைய நிலத்திலே வாழ்ந்தவர்களும் இதனைப் பின்பற்றினர்.

வழிபாட்டு நடைமுறைகளை எல்லோரும் ஓர் இடத்திலே கூடிச் செய்கின்ற முறைமையைப் பரிபாடல் என்னும் நூல் விரிவாகப் பதிவு செய்துள்ளது. மலைமீது இருக்கும் முருகனை வழிபடச் செல்வோர் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

வழிபாட்டிற்காகச் செல்பவர் இசைக் கருவிகளையும் சந்தனம் முதலிய நறுமணப் பொருட்களையும் அகிற்புகையையும் கொடிகளையும் கொண்டு செல்கிறார்கள். சிலர் மலர்களையும் குழைகளையும் பூந்துகில்களையும் மணியினையும் வேலையும் சுமந்து வருகிறார்கள். கடப்ப மரத்தைத் துதித்துப் பாடி வழிபாடு செய்கிறார்கள். பாணர்களுடைய யாழோசை ஒருபுறம் கேட்கிறது. புல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



லாங்குழலின் ஓசை இன்னொரு புறமாகக் கேட்கிறது. இன்னொரு புறம் முழவின் முழக்கம் கேட்கிறது. இது திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் வழிபாடு எனப் பரிபாடல் 17ஆம் பாடல்பதிவுசெய்துள்ளது.

இத்தகைய வழிபாடு திருக்கோயில் என்ற அமைப்பைக் காட்டுகிறது. மலைமேல் உறையும் முருகன் திருக்கோயில் வழிபாட்டை, பரிபாடல் சிறப்பாகக் காட்சிப் படுத்தியுள்ளது. மனிதர் கூட்டாக வந்து வழிபாடு செய்யும் மரபின் தொடக்கமாக இது அமைந்துள்ளது. அவரவர் தத்தமக்கு ஏற்ற வழிபாட்டைச் செய்கின்றனர். மடைப் பொருட்களோடு மட்டுமன்றி இசைக் கருவிகளையும் இசைத்து இசைப்படையல் செய்யும் நடைமுறையும் வழிபாட்டில் இணைந்ததைப் பரிபாடல் பதிவு செய்துள்ளது. இது மனித வாழ்வியலில் வழிபாடு எல்லா நிலைகளிலும் தொடர்புற்றிருந்ததை உணர்த்துகின்றது.

இயற்கையழகு நிறைந்த இடமே வழிபாடு செய்ய உகந்த இடமாகக் கருதப்பட்டது. அங்குள்ள மலர்க்காட்சியைப் பின்வருமாறு பரிபாடல் காட்டியுள்ளது.

**"பசும்பிடி யிளமுகிழ் நெகிழ்ந்தவா யாம்பல்**
**கை போற் பூத்த கமழ் கலைக் காந்தன்**
**எருவை நறுந்தோ டெரியிணர் வேங்கை**
**உருவமிகு தோன்றி யூழிணர் நறவம்**
**பருவமில் கோங்கம் பகைமல ரிவவம்**
**நிணந்தவை கோத்தவை நெய்தவை தூக்க**
**மணந்தவை போல வரை மலை யெல்லாம்**
**நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துத் தொடர்ந்தும்**
**விடியல் வியல்வானம் போலப் பொலியும்**
**(பரிபாடல் : 19:75.83)**

இப்பாடலடிகளில் பச்சிலையினது இளந் தளிரும் மகளிருடைய வாய் போலச் சிவந்த ஆம்பல் மலரும் கைபோலப் பூத்த குலையுடைய காந்தளும் பஞ்சாய்க்கோரையின் பூவும் வேங்கைப் பூங்கொத்தும், தோன்றிப் பூவும் நறவம்பூவும் கோங்கமலரும் இலவமுமாகிய இம்மலர்களெல்லாம் பின்னப்பட்ட மாலைகளைப் போல மலர்நிறைந்தும் கோத்த மாலைகளைப் போல நிறம் மாறுபட்டும் தொடுத்த மாலைகளைப் போல இடையிட்டும் தூக்கிக் கட்டின மாலைகளைப் போல நெருங்கியும் பூத்திருந்தன. இவ்வாறு விரவிப் பூத்த மலர்ப்பரப்பானது திருப்பரங் குன்றத்து உச்சியெங்கும் விடியற் காலத்து பல நிறமுடைய மேகங்கள் நிறைந்த வானம் போல விளங்கும் என திருப்பரங்குன்ற வழிபாட்டிடத்தின் அழகான தோற்றப் பொலிவு விளக்கப்பட்டுள்ளது. இது வழிபாட்டிடம் அழகான தாக அமையவேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. மலர்கள் இயற்கையின் இனிய கொடைகள் அவற்றை வழிபாட்டுக்குப் பயன்படுத்துவது சிறந்தது. மலர்களே இறைவனுக்கு நாம் மடையிட உதவும் மடைப்பொருளாகும்.

இந்த இயற்கையான மலர்களோடு விளக்கேற்றிவைத்து வழிபாடு செய்யும் நடைமுறையுமிருந்தது. நினைத்தது நிறைவேற வேண்டி விளக்கேற்றி வழிபாடு செய்தனர். விளக்கேற்றல் மனிதனுடைய அன்றாட நிலையில் இருளை அகற்றும் ஒரு செயற்பாடாகவே இருந்தது. ஆனால் அந்தச் செயற்பாட்டை ஒரு வழிபாட்டு நடைமுறையாகக் கைக்கொண்டமை ஒரு தனித்துவமான கருத்தாகும். தனக்கு விஞ்சிய பேராற்றலை ஒளி வடிவமாகக் கண்டு வழிபாடு செய்வது ஒரு எளிய நடைமுறையாக இருந்தது. அதை எங்கும் எப்போதும் செய்ய முடியும். வழிபாட்டில் நீர், பூ, விளக்கு என்னும் மூன்றும் இன்றியமையாதனவாகக் கருதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. இதனையே அப்பர் தனது தேவாரத்தில் "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" எனப் பதிவு செய்துள்ளார். திருக்கோயில் வழிபாடு தொடங்கிய பின்னரும் இம் மூன்றும் வழிபாட்டிலே மிகவும் இன்றியமையாதன வாகக் கருதப்பட்டன.

**இன்றைய வாழ்வியலில் வழிபாடு**

இன்றைய மனித வாழ்வியல் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் வழிபாடு செய்வதற்கும் வழிபாட்டு நடைமுறைகளைக் கையாள்வதற்கும் பலர் பின்னிற்கின்றனர். மேலும் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப வசதிகளும் வழிபாடு தேவையற்றது என்ற எண்ணத்தை வலுப்படுத்தியுள்ளது. குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே இப்பண்பு பெரிதும் பரவியுள்ளது. இயற்கைநிலையில் அன்றிச் செயற்கை நிலையால் பெறக்கூடிய வாய்ப்புகளில் எல்லோரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். புதிய விஞ்ஞான நுட்பங்களும் மின்சாரமும் வழிபாட்டில் திசைமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. வழிபாடு தொடர்ந்து செய்யப்படாமல் சில நேரங்களில் மட்டும் செய்தால் போதுமானது என்ற கருத்தும் தோன்றியுள்ளது. இந்நிலையால் பல்வேறு சமயங்கள் தோன்றலாயின. புதிய இறை தொடர்பான கருத்துகள் பரப்புரை செய்யப்பட்டன. கருத்துகளை மட்டும் அறிந்தால் போதும். அதனை வாழ்வியலாகக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்ற எண்ணமும் வலுவடைந்துள்ளது.

இக்கருத்து மாற்றங்களிடையே வேறுபாடு தோன்றிய போது அது மதமாக உருவாகியது. தனது கருத்தே சரியானது என மூர்க்கமாகப் பேசும் நிலையும் தோன்றியது. வழிபாடு என்ற முன்னோர் வழிச்சென்ற நிலை மாறிச் சமயத்துக்கு ஏற்றவாறு மாறும் இயல்புடையோராகித் தமது கொள்கையே எல்லோருக்கும் ஏற்றது என்று திணிக்கின்ற நிலை ஏற்பட்டது. மனித வாழ்வியலில் வழிபாட்டு நடைமுறைகள் பயன்படாது என்ற கருத்து தற்போது முனைப்புப் பெற்று வருகிறது. அறிவு நிலையான கருத்துப்பரிமாற்றம் மட்டும் மனித வாழ்வுக்குப் போதுமானது என்ற முடிவுக்கு பலர் வந்துள்ளனர்.

ஆனால் இக் கருத்துப் பரிமாற்றம் மனித வாழ்வியலில் ஒரு குறிப்பிட்ட வேளையில் மட்டுமே வழிபாடு பற்றிய எண்ணத்தை ஏற்படுத்தும். அதுமட்டுமன்றித் தனியே இயங்க முடியும் என்ற நிலையையும் உருவாக்கும். கூட்டு நிலையிலே தொழிற்படும் உணர்வு மழுங்கடிக்கப்படும். வீடு, சமூகம், நாடு என்ற நிலையிலே ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் வாய்ப்பு இல்லாது போய்விடும். மனித வாழ்வியலில் வழிபாடு நடைமுறைகளாகப் பேணப்படும்போது எதிர்ப்புணர்வு தோன்றுவதற்கு வழியில்லை. இயற்கையை உணர்த்தும் வகையில் இன்று வழிபாடு பயிற்றப்பட வேண்டும். திருக்கோயில் அமைப்பு இன்று இத்தகைய பயிற்சியை வழங்கமுடியும். ஊரவர் மட்டுமல்ல அயலூரவரும் திருக்கோயிலுக்கு வந்து வழிபாட்டு நடைமுறைகளில் இணைந்து செயற்படும்போது ஒற்றுமையும் அமைதியும் வந்து சேரும்.

வழிபாடு மனித வாழ்வியலுக்குத் தேவையான பயிற்சியையும் தருகிறது என்பதை நாம் மறந்துவிட்டோம். ஒற்றுமை, பகிர்வு, துணை நிற்றல், விருந்தோம்பல், தூய்மை போன்ற பண்புநலன்கள் வழிபாட்டு நடைமுறைகளை இணைந்து செய்யும்போது ஏற்படும். மனம் பக்குவப்படுவதற்கு வழிபாட்டு நடைமுறைகளோடு இணைந்த இசை, ஆடல், உரையாற்றல் என்பன துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக வேறுபாடின்றி எல்லோரும் ஒன்றாகப் பணி செய்யும் மனப் பக்குவம் இதனால் வளரும். மொழிப்பயிற்சி, ஆடை அணிகலன் பற்றிய மரபு நிலை என் பனவும் வழிபாட்டால் பேணப்படலாம். குழந்தை முதல் முதியோர்வரை எல்லோ ரும் இணைந்து செயற்படும் வாய்ப்பும் வழி பாட்டு நடைமுறைகளால் கிடைக்கிறது.

நிறைவாக மனிதவாழ்வியலில் வழிபாட் டைப் பிரித்து நோக்கமுடியாது என்பதே உண்மை. போலியான வாழ்க்கையை விடுத்து மெய்யான வாழ்வை வாழ்வதற்கும் வழிபாடு துணை செய்யும். இன்னும் வழிபாட்டு நடை முறைகள் இன்றைக்கு வேண்டியதில்லை என்ற எண்ணப்பாங்கும் தோன்றி வளர்ந்துள் ளது. கூட்டுவாழ்க்கை என்ற நிலையிலி ருந்து தனிவாழ்க்கை என்ற நிலைக்கு மக் கள் சென்று கொண்டிருக்கும் வேளையில் அவர்களை மீளவும் கூட்டுவாழ்க்கைக்குத் திருப்புவதற்கு வழிபாடு பற்றிய எண்ணம் அவர்களுக்கு இன்றியமையாதது. வைய கத்து மக்கள் அனைவரும் வாழ்வியலில் ஓர் ஒழுங்குநிலையில் செல்வதற்கு வழிபாடே துணையானது என்பதை உணர்த்தும் பணி யில் பலர் ஈடுபட்டுள்ளனர். எனினும் அம் முயற்சி இன்னமும் நிறைவான வெற்றியைத் தரவில்லை. ஆனால் தமிழர் வாழ்வியலில் வழிபாடு பெற்றிருந்த சிறப்பான இடத்தைத் தொன்மை இலக்கியச் சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது அது நிலத்து வாழ்வோடு பொருந்தியிருந்தமையை நன்கு உணர முடிகிறது. நிலத்து வாழ்வியல் இன்று வேறுபட்டிருப்பினும் மனிதம் என்ற பண்பு நலன் பொதுவானது என்பதை எல்லோரும் நன்கறிவர். எனவே தமிழர் மரபான வாழ் வியலில் வழிபாடு இன்னமும் நிலைத்திருப் பது எல்லோரும் அறியவேண்டியது.

## குபேர வாசல் இராஜகோபுரம்

- நல்லூர்க் கந்தப் பெருமானின் குபேரவாசல் இராஜகோபுர அமைப்பிற்காக நவதானியம் விதைப்பு 10.08.2012 வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா அன்று காலைப்பொழுதில்
- குபேர வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது 20.11.2012 செவ்வாய்க் கிழமை கந்தசஷ்டி உற்சவ திருக்கல்யாணத்தின் போது காலை 6.00 மணி
- குபேரவாசல் இராஜகோபுரம் முதலாவது தளத்திற்கான கொங்கிறீற் 29.04.2013 இரண்டாவது தளம் 01.07.2013 மூன்றாவது தளம் 04.08.2013

– பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்காலத்தில் சமஸ்கிருத நூல்களில் சைவசித்தாந்தம்

**பேராசிரியை (திருமதி)கலைவாணி இராமநாதன்**
(ஓய்வுநிலை) இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சோழ மன்னர்கள் பேரரசு ஒன்றினை உருவாக்கி ஆட்சி செய்த நானூறு (கி.பி 900 - 1300) வருடங்களும் இந்தியா முழுவதிலும் சைவசமயமும் சைவ மெய்யியல் கோட்பாடுகளும் உன்னதமான வளர்ச்சி கண்ட காலமாகும். சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழ் இலக்கியம் போன்று சமஸ்கிருத இலக்கியத்தில் அத்தகைய வளர்ச்சியினை காணமுடியாவிட்டாலும் சமயம், கலை, தத்துவம் போன்ற துறைகளில் சமஸ்கிருதத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையினை ஆய்வாளர்கள் மறுப்பதற்கில்லை. பேராசிரியர் வி.சிவசாமி அவர்களின் முதலாம் இராஜராஜனும் 'வடமொழிக் கல்வியும்' என்ற ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டது போல சோழர் தம் ஆதிக்கத்தை உறுதிபட அமைத்து பேரரசாக ஆக்கி முதலாம் இராஜராஜன் காலத்தில் (கி.பி 985 - 1014) சமஸ்கிருதக் கல்வியானது தமிழகத்தில் உயர்நிலை பெற்றிருந்தது.

இம்மன்னன் சிறந்த வைதீக சைவப்பற்றுக்கொண்ட சமரசஞானி என சிறப்பிக்கப்பட்டவன். சைவத் திருமுறைகளுடன் வடமொழி சாத்திர நூல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். சிவபாதசேகரன் என்னும் பட்டப்பெயர் கொண்ட இம்மன்னன் காலம் முதல் பின் வந்த 3ம் குலோத்துங்கன் காலம்வரை சோழமன்னர்கள் யாவரும் சைவம், தமிழ், திருக்கோயிற்பண்பாடு, தத்துவம், கலை, கலாசாரம் என்பவற்றை வளர்த்தெடுப்பதில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தனர். அவ்வாறே சமஸ்கிருத இலக்கிய ஆக்கங்களுக்கும் அரசபையில் பெருமளவு ஆதரவு அளித்ததுடன் வடமொழி சிவாகம சித்தாந்த நூல்கள் பலவற்றிற்கும் தமிழ்மொழியில் பல உரைநூல்கள் எழுந்த காலமும் சோழர்காலம் என்றே கூறலாம். தமிழ் சைவசித்தாந்த மெய்யியல் வளர்ச்சியில் அரும்பெரும் சாதனைகளை நிலைநாட்டிய மெய்கண்டார் வாழ்ந்த காலம் ஆதலால் சமஸ்கிருத சித்தாந்த நூலாக்கங்களிலும் குறிப்பாக சிவாகம உரைநூல்கள் பலவும் எழுச்சி பெற்றுள்ளமையினையும் காணமுடியும். 1ம் இராஜராஜன், 1ம் இராஜேந்திரன் போன்ற மன்னர்களுக்கு சமய குருவாகவும் இராஜ குருவாகவும் விளங்கியவர்கள் சித்தாந்த ஞானத்தில் சிறந்து விளங்கிய அந்தணர்களான ஈசான பண்டிதர், சர்வசிவ பண்டிதர் என்போர் ஆவார்.

கி.பி 10ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழகத்திற்கு அப்பால் கஷ்மீரத்திலும் சைவமும் சிவ வழிபாடும் சிறந்து விளங்கின என்பதற்கு கஷ்மீரத்தில் காணப்பட்ட 70 சிவன்கோவில்களும் அக்கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அண்டி சைவமடங்களும் வளர்ச்சி பெற்றமை சிறந்த எடுத்துக்காட்டாகும். சோழர் ஆட்சிக்காலத்தில் ஆண்ட சமகால மன்னர்களான பரமார மன்னர்கள், சாக மானர்கள், சந்திராத்தரயர் போன்றவர்களும் மிகுந்த சிவபக்தர்களாக சைவத்தையும் சித்தாந்த மெய்யியலையும் வளர்க்கும் ஆர்வம் உள்ளவர்களாக விளங்கினர் என்பதற்கு கி.பி 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த போஜமன்னனுடைய தத்துவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூலையும் உதாரணமாகக் கூறலாம். சாளுக்கிய மன்னர்களும் இவ்வாறே புகழ்பெற்ற ஆலயங்களான சித்தேஸ்வரம், சோமநாதபுரம் போன்ற பல சிவாலயங்களைக் கட்டி அவற்றுடன் இணைத்து சைவமடாலயங்களையும் அமைத்தனர். இம்மன்னர்கள் அம்மடத்தலைவர்களிடம் தீட்சை பெற்றதுடன் தம்மை 'பரமமாகேஸ்வரர்கள்' எனக் கூறிக் கொண்டமையினையும் அக்கால கல்வெட்டுக்களால் அறிய முடியும். 'ஓம் நமசிவாய' என்றே அவர்களது கல்வெட்டுக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய செய்திகளிலிருந்து சோழர் தமிழகத்தை ஆண்ட காலங்களில் சைவமும் அதன் சாரமான சிவாகம சித்தாந்தமும் முறைப்படுத்தப்பட்ட கோட்பாட்டு ரீதியான பன்முக வளர்ச்சியை தமிழ்நாட்டிலும் வட நாட்டிலும் அடைவதற்கு அவர்களது ஆதரவும் பேருதவியாக அமைந்தன.

சோழர்காலம் வடஇந்தியாவிலே கங்கைக்கும் நர்மதையாற்றிற்கும் இடைப்பட்ட தாஹளதேச மன்னர்கள் தமது தலைநகரான திரிபுரி என்ற இடத்திலுள்ள ஆமர்தக சைவமடத் தலைவரான துர்வாசர் போன்ற துறவிகளை ஆதரித்து வந்தனர் அத்துடன் அவர்கள் வழிவந்த சைவாச்சாரியார்களையும் போற்றியதுடன் அவர்களுக்கு மடங்களைக் கட்டிக்கொடுத்து தமது இராஜகுருவாகவும் ஏற்றுக்கொண்டனர். அவர்களில் சிறந்தவரான சத்பாவ சம்பு என்பவருக்கு கலசூரி மன்னனான யுவமகராஜன் கி.பி.940ல் கோளகி என்ற மடத்தை அமைத்துக்கொடுத்து பல கிராமங்களையும் மானியமாகக் கொடுத்தான். இம் மடத்தைச் சார்ந்த சைவாசாரியார்களான ஈசான சிவன், ருத்திரசம்பு, மத்தமயூரநாதன், இருதயசிவன், அகோரசிவன், விஸ்வேஸ்வரசம்பு முதலியவர்கள் சிவாகம ஞானமுள்ள சித்தாந்த ஆசிரியர்களாக விளங்கினர். அவர்களும் தம்மை 'பரமமாகேஸ்வரர்' என்றே கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளனர். அவர்களில் ஒருவரான அகோரசிவாச்சாரியார் என்பாரே சமஸ்கிருதமொழியில் எழுந்த எட்டு அஷ்டப்பிரகரண சித்தாந்த சாத்திர நூல்களில் ஆறு சாத்திர நூல்களுக்கு தமிழில் உரை எழுதிய மகானாகவும் விளங்கினார். அஷ்டப்பிரகரண சித்தாந்த சாத்திர நூல்கள் வடநாட்டில் சமஸ்கிருத மொழியில் முதல்முதல் சைவசித்தாந்த மெய்யியலை முறைப்படுத்தப்பட்ட (Systematized) திட்டமிட்ட மெய்யியல் கோட்பாடாக விளக்க எழுந்த நூல்களாக அமைந்துள்ளன. சத்தியோதி என்பார் இச்சித்தாந்தப் பிரகரணங்களின் முதல் சித்தாந்த ஆசிரியராகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

எனவே வடக்கே கங்கைக்கரை வரை சென்று வெற்றிக்கொண்ட சோழமன்னர் காலம் இந்தியா முழுவதிலும் குறிப்பாக வட நாட்டிலும் சைவமும் சித்தாந்தமும் சிறப்பாகத் தழைத்திருப்பதனைக் கண்டு அவர்கள் அதனால் கவரப்பட்டனர். அத்தகைய சூழ்நிலை காரணமாக கோளகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட பிரிவைச் சார்ந்த சைவாச்சிரியார் மேற் குறிப்பிட்ட சிலரையும் தம்முடன் தமிழகம் அழைத்துவந்து தமது குலகுருவாகக் கொண்டதுடன் அவர்கள் மூலமாக சமஸ் கிருதமொழியில் சிவாகமசாரம் கொண்ட பல சித்தாந்தநூல்களையும், உரைநூல் களையும், உருவாக்கி சமஸ்கிருதமொழி யிலும் சைவசித்தாந்தக் கோட்பாடு சிறப் படைய காரணமாக விளங்கினர்.

இவற்றின் விளைவாக சோழமன்னர் காலம் தமிழகத்திலும் சைவசித்தாந்தம் தொடர்பாக தமிழ்மொழியில் மட்டுமன்றி சமஸ்கிருதமொழியிலும் பல நூல்கள் எழுந்தன. 1ம் இராஜராஜனின் குலகுரு வான ஈசானசிவன் என்பவரால் எழுதப்பட்ட சித்தாந்தசாரம் திரிலோசன சிவாச்சாரி யாரின் சித்தாந்தசாராவளி என்பன இவற் றில் குறிப்பிடத்தக்கவையாகும். 1ம் இராஜேந்திரன் கங்கைக்கரையிலிருந்து அப்பகுதியில் சைவசித்தாந்த வளர்ச்சியி னால் ஈர்க்கப்பட்டு அங்குள்ள சைவாச்சாரி யார்கள் பலரை அழைத்துவந்து தமிழகத் தில் குடியேற்றினான் என்ற செய்தி சித் தாந்தசாராவளி என்ற நூலின் முன்னுரை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக கோளகி மடத்தைச் சார்ந்த சமஸ்கிருத மொழி வல்லுனர்களான சைவாச்சாரியார் களே சோழ இராஜவம்சத்தின் இராஜ குரு மாராக விளங்கினர் என மா.இராஜமாணிக் கனாரும் குறிப்பிட்டுள்ளமை மேற்குறிப் பிட்ட செய்திகளை உறுதிப்படுத்தும்.

1ம் குலோத்துங்கன் தனது குருதேவர் கட்டளைப்படி 108 சதுர்வேதிகளுக்கு ஒரு கிராமத்தை பிரமதேயமாக அளித்தான் எனவும் விக்கிரமச்சோழன் காலம் சுவாமி தேவர் எனப்படும் ஸ்ரீகண்டசிவன், அம் மன்னனது குருவாக விளங்கினார் எனவும் அவரது மகன் சோமேஸ்வரஈஸ்வரசிவன் என்பார் 3ம் குலோத்துங்கனுடைய இராஜ குருவாக விளங்கியவர் எனவும் சோழர் காலத்தில் வாழ்ந்த சைவாச்சாரியார்களது சிறப்புக்களை ஆய்வாளர் பலரும் எடுத் துக்காட்டுவதிலிருந்து சோழர்காலம் சமஸ்கிருதமொழியும் சித்தாந்த மெய்யிய லும் வளர்ச்சிபெற்ற காலமாகவும் கொள்ள முடியும். ஈஸ்வரசிவன் என்பார் சிவதரி சனத்தில் தேர்ச்சி பெற்றவர் எனவும் உப நிடதங்களில் உள்ள சிவதத்துவக் கொள்கையினை சித்தாந்தரத்தினாகரம் என்ற நூலில் வெளியிட்டவராகவும் பிற ஆய்வுகளிலிருந்தும் அறியமுடிகின்றது. மேலும் சோழர்காலம் எழுந்த சைவதத் துவ நூல்களில் ஹரதத்த சிவாச்சாரியா ரின் சுருதிசுக்திமாலா, ஹரிஹரதார தம்மிய என்ற நூல்களும் ஸ்ரீகண்டரின் பிரமமீமாம் சபாடியம், அகோர சிவாச்சாரியாரின் கிரி யாக்கிரமஜோதி என்பனவும் சிவாகமக் கோட்பாடுகளை விளக்கும் சமஸ்கிருத நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

உமாபதி சிவாச்சாரியாரும் பௌஸ் கராகமவிருத்தி சதரத்தினசங்கிரகம் முதலிய பல வடமொழி நூல்களை எழுதி யுள்ளார். இவர் மெய்கண்டசாத்திர நூலா சிரியார்களில் ஒருவராகவும் விளங்குகின் றார். சோழர் ஆட்சியின் பிற்காலமே சைவ சித்தாந்த மெய்யியலின் மணிமுடி எனச் சிறப்பிக்கப்படும் சிவஞானபோதம் என்ற சித்தாந்த முதல் நூல் தமிழகத்தில் எழுந் தது. இந்நூலின் ஆசிரியரான மெய்கண் டார் (கி.பி 1232) கி.பி 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரென திருவண் ணாமலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின் றது. தமிழ் நாட்டின் அரும்பெரும் சொத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக போற்றப்படும் சைவசித்தாந்தமும் அதன் சாத்திரநூல்களும் தமிழ்மொழியில் மட்டுமன்றி சமஸ்கிருதமொழியிலும் விரவிக்கிடக்கின்றன என்பதற்கு அஷ்டப் பிரகரண சித்தாந்த நூல்கள் சிறந்த எடுத் துக்காட்டாகும். வடநாட்டிலே கி.பி 9-12 நூற்றாண்டிற்கும் இடையில் எழுந்த அஷ் டப்பிரகரண சித்தாந்த நூல்களின் காலம் தமிழகத்தை சோழப்பெருமன்னர் ஆண்ட காலத்திற்கு சமாந்தரமாக அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. வடநாட்டில் குறிப்பாக சைவசித்தாந்தம் அக்காலத் தில் பொற்காலம் எனக்கருதும் அளவிற்கு சமஸ்கிருதமொழியிலும் அது உன்னத மான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் பதிப்பொருள் சிவமாக கொள்ளப்படுவதனால் - சோழர் மன்னர்கள் சிறந்த சிவபக்தர் ஆகையி னால் இக்கோட்பாட்டினால் தூண்டப்பட்டு சைவசித்தாந்த தத்துவத்தை தொடர்ந்து தமிழகத்திலும் கி.பி 13ம் நூற்றாண்டிலி ருந்து முறையியல் படுத்தப்பட்ட கோட் பாடாக நிறுவுவதில் வெற்றி கண்டனர் எனலாம். மெய்கண்டசாத்திர நூல்களில் முதல் நூலாக விளங்கும் சிவஞான போதம் ரௌரவ ஆகமத்தை தழுவியே எழுதப் பட்டது என்ற கருத்து நிலவிய போதிலும் இக்கருத்து நன்றாக ஆராயத்தக்க விடய மாகும்.

சோழப்பேரரசு உச்சநிலையில் இருந்த காலத்தில்தான் மெய்கண்டார் சிவஞான போதம் என்ற நூலை உருவாக்கி அதன் மூலம் சைவசித்தாந்த கோட்பாட்டினைப் பெரும் தத்துவமாக்க முடிந்தது எனவும் சோழப்பேரரசின் தெய்வீக அரசுரிமைக் கோட்பாடும் அதன் தத்துவவடிவமைப் பிற்கு ஒரு காரணமாயிற்றுமென ஆய் வாளர் க.கைலாசபதி அவர்கள் குறிப்பிட் டுள்ளார். சிவனைப் பெரும் தலைவனாக வும், சீவர்கள் யாவும் அத்தலைவனுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் சித்தரிக்கும் ஒரு போக்கு சோழப்பேரரசின் ஆதிக்கவலு வைப் புலப்படுத்துமொரு கருவி என்ற கருத்தும் இக்கோட்பாட்டின் மூலம் முன் வைக்கப்படுவதாகவும் விமர்சிக்கப்பட் டது. எனினும் சோழர் ஆட்சியில் முதலாம் இராஜராஜன் (கி.பி.985 - 1014) முதல் இரண்டாம் இராஜேந்திரன் வரையுள்ள காலப்பகுதியே (கி.பி 1052 - 1064) அதன் உச்சமான வளர்ச்சிக்கட்டங்களாகும். ஆனால் கி.பி.13ஆம் நூற்றாண்டிலும் அதற் குப்பிற்பட்ட காலத்திலுமே சிவஞான போதமும் ஏனைய மெய்கண்ட சாத்திர நூல்களும் தமிழில் எழுந்துள்ளன.

கி.பி 1200ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலம் முதல் சோழர் ஆட்சி நலிவடையத் தொடங்கிய காலமாகும். இக்காலத்திலே தமிழகத் தில் இரு புதிய வளர்ச்சிப்போக்குகள் தோற்றம் பெற்றன. ஒன்று சிவாகம அடிப் படையில் உருவாகிய சைவசித்தாந்தம். ஏனையது தெலுங்கு நாட்டில் ஏற்பட்ட வீரசைவம் அல்லது லிங்காயத சைவத் தின் வளர்ச்சி என்பனவாகும். சைவசம் பிரதாயங்களில் வீரசைவத்திற்கும் சிவா கமங்களே பிரமாணங்களாக இருப்பத னால் சைவ தத்துவங்கள் இவ்வாறு காலத்திற்கு காலம் கிளைவிட்டு வளர்ந்து வருவதும் இயல்பாக நடைபெறும் ஒன்றா கக் காணப்படுகின்றது. மூன்றாம் குலோத் துங்கன் காலம் முதல் (கி.பி. 1178 - 1218) நிலை தளர்ந்த சோழர் ஆட்சி மூன்றாம் இராஜராஜன் காலம் மேலும் நலிவடைந் தது. (கி.பி 1218-1256) இக் கால கட்டத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலேதான் கி.பி.1232 ஆம் ஆண்டில் மெய் கண்டார் தோன்றிச் சிவாகமச் சித்தாந்தக் கோட்பாட்டை சிவஞானபோதம் என்ற நூலின் வாயிலாகத் தர்க்கரீதியாக முறைப்படி நிறுவுவதில் வெற்றிகண்டார். சோழர் ஆட்சியானது கி.பி.1279ஆம் ஆண் டில் முடிவுற்ற பின்னரே ஏனைய சித்தாந்த சாத்திரங்களும் எழுச்சி பெற்றுள்ளன.

இவ்விடத்தில் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கருத்திற்கு விளக்கம் காண் பது அவசியம் ஆகும்.

**"சோழப்பேரரசின் புகழ் உச்சநிலையில்**
**பட்டொளி வீசியபொழுது கங்கையும் கடாரமும்**
**இலங்கையும் அடிபணிந்தபோது அராபியரும் சீனரும்**
**வாணிபச்சிறப்பில் பங்குகொண்ட போது...**
**இத்தகைய சிறப்பு மிக்ககாலத்தில் தான்**
**சைவசித்தாந்தம் என்னும் பெரும் தத்துவம்**
**சாத்திர வடிவம் பெற்றது"**

என்ற பேராசிரியர் க.கைலாசபதி அவர் களது மேற்படி கூற்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கிய பின்னரே பெரும் தத்துவமான சைவசித்தாந்தம் சாத்திர வடிவில் உரு வாக்கம் பெற்று பிற்பட்ட சோழர் காலத்தி லேயே எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே பேராசிரியரின் மேற்படி கூற்று வட நாடு பற்றியதா அல்லது தமிழ்நாடு பற்றி யதா என்பது ஆய்வுக்குரியதாகும் எனினும் வடநாட்டைப் பொறுத்தவரை சமஸ்கிருத மொழியில் கி.பி. 9-12ம் நூற்றாண்டு வரை சைவசித்தாந்தம் தமிழகத்தை சோழர் ஆண்டகாலம் உன்னத வளர்ச்சி பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சைவத்தின் சித்தாந்தக் கோட்பாட்டு வளர்ச்சியானது ஒருமைவாதம், இருமை வாதம், பன்மைவாதம் என மூன்று கிளை களாக வளர்ந்தன. சங்கரஅத்வைதம், பாசுபத இருமைவாதம், சித்தாந்த முப் பொருள்கொள்கை எனச் சைவத்தின் வளர்ச்சி துரிதமாக முன்னேறியது. காலச் சூரி, பரமார, சாளுக்கிய, பிரதிகார மன்னர் களின் பேராதரவு இவற்றினை மேலும் ஊக் குவிப்பதாயிருந்தது. சாளுக்கிய மன்னர்க ளது ஆட்சியில் தக்கிணம் உட்பட்ட மத்திய இந்தியா "சைவசித்தாந்தக் கோட் பாட்டின் நிறுவனமாகவே" (Central India - Home land of the Siddhanta Church) செயற்பட்டு வந்தது எனவும் அறியமுடிகின்றது. இவற் றினை வளர்ப்பதில் மூன்று சித்தாந்த ஆதீன மரபுகள் அல்லது மடங்கள் பங்காற்றியுள் ளன. அவையாவன, ஆமர்தகமரபு (Amarthaka order), மாத்யமயூரமரபு (Mathiamayura), மதுமதேய மரபு (Madhu matheya) என மூன்று வகைப்படும். சித் தாந்தத்துறவிகளால் இம்மடப் பிரிவுகள் நிர்வகிக்கப்பட்டன. இவற்றில் ஆமர்தக பிரிவே காலத்தால் மிக முற்பட்டது. (கி.பி.775) கி.பி.8ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பிரிவு அறியப்படுகின்றது. ஆமர்தக பிரிவு ருத் திரசம்புவால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவு ஆந்திரப்பிரதேசத்தில் காகதீய மன்னர்க ளால் ஆதரிக்கப்பட்டது. மாத்யமயூர மரபு புரந்தரர் என்பவரால் தோற்றுவிக்கப் பெற்றது. இது பஞ்சாப், பஜரதேசம் உட்பட மத்திய இந்தியப் பகுதியில் பிரதிகார, பரமார, காலசூரி வம்சம் சார்ந்த மன்னர்க ளால் ஆதரிக்கப்பட்டது. மதுமதேயமரபு துர் வாசரால் தொடக்கப்பட்டது. இதுவும் மத்திய இந்தியாவிலுள்ள காலசூரி வம்ச மன்னர்களால் வளர்க்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் துறவிகள் மடங்களாகவே காணப் பட்டன. சோழமன்னர்களும் தமிழகத்தில் இந்த வகையான சைவமடங்கள் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவிகட்குப் பெரும் ஆதரவளித்துள்ள னர். இது தொடர்பாக மா.இராசமாணிக்க னார் அதிகமான தகவல்களைத் தந்துள் ளார். இராஜபுதனம், பஞ்சாப், குஜராத் ஆகிய பகுதிகளிலுள்ள சைவப்பாரம் பரி யத்தைச் சிறப்பிக்கும் மா.இராசமாணிக் கனார் சத்தியோஜோதி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

தொடர்ந்து சைவதத்துவ வரலாற்று வளர்ச்சியின் பின்னணியில் கி.பி.9ஆம் நூற் றாண்டிலே சைவசிந்தாந்த தத்துவத் தினைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி வெளி யிடும் நிலைமைகள் உருவாகின. இவற்றின் தொடர்ச்சியாக கி.பி.13ஆம் நூற்றாண்டில் தமிழக சித்தாந்த ஆசிரியர்களும் சிவசம வாதமெனும் சித்தாந்தத்தை மறுத்து சுத் தாத்வைத கோட்பாட்டில் 'இருமையில் ஒருமையென்னும்' கோட்பாட்டை உரு வாக்கம் செய்தனர். சித்தாந்த வரிசையில் மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகள் தம்மை இந்தியாவின் பல பகுதியிலும் விரிவுபடுத் திக்கொண்டன. ஆமர்தக மரபு இராஜஸ் தான், மகாராஷ்ராவிலும், மாத்யமயூர மரபு மாலவம், கடம்பவனம், உபேந்திரபுரம் என்ற இடங்களிலும் மதுமதேயமரபு சோணையாற்றங்கரையிலும் சேதி நாட்டிலும் (Vedi Country) முக்கியத்துவம் பெற்றன.

கி.பி. 10ஆம் நூற்றாண்டினை அடுத்து கோளகி மடப்பிரிவினரால் தமிழகத்தில் சைவம் பாரிய வளர்ச்சி பெற்று இந்நிலை கி.பி.13ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது என ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். மல்கா புரம் (Malkapuram) கல்வெட்டொன்று (கி.பி.1261) சிவாச்சாரியார்கள் பற்றியும் கோளகிமடத்தினது ஆமர்தக பிரிவு பற்றி யும் குறிப்பிடும். கோளகி வம்சத்திலே ஆறு பாரம்பரியங்கள் (Lineages) காணப்பட்டன. லக்ஷதீய, ஞானாமிர்தாச்சாரிய, திருச்சுட்டி முற்றம், நந்திகேஷ்வர, கீழை மதப் பிரிவு, மெய்கண்டார் மரபு என்பன அவையாகும். இவைபற்றி அம்பா சமுத்திரம் பகுதியி லுள்ள திருவாலீஸ்வரம் கோவில் சுவரிலும் பொறிக்கப்பட்டுள்ளன. சத்பவம்சம்பு என்ப வரே இப்பிரிவின் வழித்தோன்றல்களில் முதன்மையானவர் எனவும் கூறப்படும்.

சைவசித்தாந்த ஞானத்தை இனிது விளக்கும் காலத்தால் மிக முற்பட்ட நூல் கள் சிவாகமங்களாகும். அவை நான்கு பாதங்களையுடையன. அவற்றுள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் உண்மை யையும் அவற்றின் இலக்கணங்களையும் பசுவானது பாசநீக்கம் பெற்றுப் பதிஞான மடைதற் பொருட்டு செய்யத்தகுந்த சாத னங்களையும், சாதனம் முற்றுப்பெற்ற பின் நிகழும் பேரானந்த முத்திநிலையினையும் தருக்கமுறையில் செவ்வனே விளக்குவன ஞானாபாதமாகும். இவ்விடயம் பற்றி விளக்கும் எட்டு பிரகரணங்களில் ஆறு பிரகரணங்கட்கு அகோரசிவாச்சாரியார் உரை செய்துள்ளார். இவ் ஆசிரியரே சோழர்காலம் சமஸ்கிருதமொழியில் சித் தாந்தக் கோட்பாடுகளை விளக்கிய உரை ஆசிரியர்களில் முதன்மையானவ ராக விளங்குகின்றார்.

சோழராட்சிக்காலத்தில் வாழ்ந்த அகோரசிவாச்சாரியார் மிகப்பழமை வாய்ந்த நூலாசிரியர் உரையாசிரியர் களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர். எனினும் எந்தச் சோழமன்னனும் தனது குலகுருவா கவோ அல்லது ராஜகுருவாகவோ அவரை ஏற்றுக்கொண்டதாகக் கல்வெட்டுச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்றுகளோ இலக்கியச் சான்றுகளோ கிடைக்கவில்லை. அஷ்டப்பிரகரண நூல்களின் முதலும் முடிவுமாக அமைந்த சுலோகங்களிலேயே அவரை அவற்றின் பிரதான உரையாசிரியராகக் காணமுடிகின்றது. சத்தியோஜோதி சிவாச்சாரியாருடைய ஐந்து பிரகரணங்களிலும் மூன்றுக்கும் மற்றும் இரத்தினத்திரயம், நாத காரிகை, தத்துவப் பிரகாசம் ஆகிய மூன்றுக்குமாக ஆறு பிரகரணங்கட்கு உரை எழுதியதன் மூலம் அவரது சைவசித்தாந்தப் புலமையையும், சிவாகமங்களில் அவருக்கிருக்கும் ஆளுமையையும் அவை வெளிப்படுத்துவனவாகவுள்ளன. பிறப்பால் தமிழரான இவர் வடமொழியிலேயே அதிகநூல்களை எழுதியுள்ளார். இவர் இரண்டு இலட்சம் நூல்கள் எழுதியவரென்று கூறப்படும் கூற்று மிகைப்படுத்தப்பட்டதாகவுமிருக்கலாம். ஆனால் பல வடமொழி நூல்களின் ஆசிரியர் என்பதனை எவரும் மறுக்க முடியாது. ஆயினும் சோழ மன்னர் காலம் வாழ்ந்த இவரால் தமிழில் ஒரு நூல்கூட எழுதப்படவில்லை என்பதும் இங்கு கவனத்திற்குரியது.

இவர் கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதில் அனைவரும் உடன்பாடுடையவர்கள். றொகான் டுனுவில என்பாரின் நூலில் இருந்து "சோழதேசம் குண்டின குலத்தில் தோன்றியவர், ஸ்ரீசர்வாத்ம சிவசம்புவினுடைய மாணவர் எனவும் மிகப் பெரிய சைவவாதி எனவும் அறியமுடிகின்றது. இவரது உரைநூல்கள் அனைத்தும் சுருக்கமாகவும் அதே சமயம் ஆழமான பொருள் கொண்டனவாகவும் அமைந்துள்ளன. அவரது தர்க்க நுணுக்கங்களின் புலமையினை அவர் பயன்படுத்திய சாத்திர நூல்களிலிருந்து கண்டுகொள்ளலாம். ஏறக்குறைய பெரும்பாலான சிவாகமங்கள், உபாகமங்களிலிருந்தும் இவரால் காட்டப்பட்ட மேற்கோள்களே அதற்குச் சிறந்த சான்றாதாரங்களாகும்.

கி.பி.11ஆம் நூற்றாண்டில் சோமசம்பு கர்ம கிரியாகாண்ட என்ற நூலை எழுதினார். இவர் சத்பவசம்பு என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட கோளகிமரபைச் சார்ந்தவர் எனப்படும் முதலாம் இராஜராஜனின் ராஜகுரு வான ஈசானசம்பு வட மொழியில் குருதேவ பத்ததி ஒன்றினை எழுதினார். அதைத் தொடர்ந்து கி.பி.12 ஆம் நூற்றாண்டிலே அகோரசிவர் கிரியாக்கிரம ஜோதி, இரத்தினத்திரய விருத்தி, தத்துவநிர்ணய வியாக்கியானம், தீட்சா விதி போன்றவற்றையும் எழுதியுள்ளார். திரிலோசன சிவாச்சார்யார் சித்தாந்த சாராவளியுடன், இரத்தினத்திரயோதய என்ற நூலை எழுதியதாகவும் கூறப்படும். இவர் தன்னை ஆமர்த கமடத்தைச் சேர்ந்தவர் எனக் கூறிக் கொள்வதுடன் அகோரசிவாச்சாரியாரும் தானும் இம்மரபில் வந்தவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். சத்தியோஜோதி சிவாச்சார்யார் என்பாரின் குருவான உக்கிரஜோதி, சங்கரர், சோமசேனர், சர்வாத்மசிவர், அகோரசிவர் என்பவர்கள் ஆமர்தக மரபில் வந்த மூத்தகுருமார் ஆவார் எனத் திரிலோசனர் மேலும் குறிப்பிடுவது மிக முக்கியமான செய்தியாகும். இவற்றின் உண்மைத்தன்மை பற்றிய செய்திகள் எதிர்காலத்தில் ஆய்வுசெய்யப்பட வேண்டியவையாகும்.

கி.பி.12ஆம் நூற்றாண்டிலே (கி.பி. 1118 - 1135) விக்கிரமசோழன் அரச சபையிலே ஒட்டக்கூத்தர், கம்பர், சேக்கிழார் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கட்கு சமகாலத்தவராக அகோர சிவாச்சார்யாரும் வாழ்ந்தார் என்பது ஆய் வாளர் சிலருடைய கருத்தாகும். 'அகோர சிவாச்சார்யார் புதியதொரு கோட்பாட்டி னால் தூண்டப்பட்டு புதிய சித்தாந்தக் கோட்பாட்டினை ஒருமைவாதச் சித்தாந் திகளுக்கு எதிராக அமையுமாறு இரு மைக் கொள்கையாக ஸ்தாபித்தார்' என டுணுவில எனும் அறிஞர் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றித் தனது சைவசித்தாந் தக் கோட்பாடு என்னும் ஆங்கில நூலில் (Saivasiddhanta Theology பல) அவ்ஆய்வு வாளர் சுமார் இருபது பக்கங்கட்கு மேலாக அகோரசிவாச்சார்யாரின் சாதனைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்துள்ளார். வட மொழிச் சைவசித்தாந்த நூல்களையும் அவற்றின் கால ஒழுங்கினையும் எடுத்துக் கூறுவதில் இவ்வாசிரியரின் பணி குறிப்பிட் டுச் சொல்லக்கூடியதாகும். அகோரசிவாச் சார்யாருடைய சைவசித்தாந்தக் கோட் பாட்டினைத் தமிழ்ச்சித்தாந்திகள் சிலர் ஒப்புக்கொள்ளுவதில்லை. சிவஞானமுனி வர். சிவாக்கிரகயோகியர் அவர்களிற் சிலராவர்.

**சிவாகம வழிவந்த சோமசம்புசிவாச்சாரியார்,**
**ஞானசிவாச்சார்யார் என்போரது**
**பத்ததிகளுடன் அவற்றை மொழிபெயர்ப் புச்செய்த**
**சிவார்ச்சனாபோதம்**
**முதலியவற்றிலிருந்து சிவசமவாத ஸ்தாபகரான**
**அகோரசிவாச்சார்யார் மாறுபடுகின்றார்.'**

என சிவஞானமுனிவர் கூறி இருப்பினும் மறைஞானதேசிகர், ஞானப்பிரகாசர் என் போர் இவரை ஆதரிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். சிவஞானபோத உரைகளிலும் இதன் பாதிப்புக்களைக் காணமுடியும். டாக்டர் கோ.சுந்தரமூர்த்தி என்பார் இவ்விடயம் பற்றிக் கூறும்போது "அகோரர் தமது உரையில் 'சித்தாந்த சாஸ்திரஞானம் இல்லாததால்

**அத்வைதவாசனையுடன் கூடிய சில உரையாசிரியர்கள்**
**தத்துவப்பிரகாசத்திற்கு உரை செய்துள்ளனர்"**

எனக் குறிப்பிட்டமையினை எடுத்துக் காட்டுவதிலிருந்து அகோரசிவர் சிவசம வாதி என்ற கருத்தினை இக்கூற்று மறுப்ப தாகக் கூறலாம். (equality of the Soul with Siva) எஸ்.என்.தாஸ்குப்தா, றொகான் ஏ.டுணுவில போன்ற ஆய்வாளர்களும் அகோரசிவர் சிவசமவாதியாக இருப்பர் என்ற கருத்தினை மறுப்பவர்களாகவே கூறலாம். அஷ்டப்பிரகரணச் சித்தாந்த நூல்களும் சரி அவற்றின் விருத்தியுரை நூல்களும் சரி வடமொழி மூலமாக இருந் தாலும் அவை தமிழகத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார்களால் ஆக்கப்பட்டவை யா கும். எனவே சைவசித்தாந்தம் தமிழர்க் கேயுரிய பெரும் சொத்து என்பதனைக் குறிப்பிடும் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அவர்கள்.

"சைவர்கள் சைவசித்தாந்தம் என்பன முதலில் வடமொழியில் தோன்றியதா அல்லது தமிழ்மொழியில் தோன்றியதா என்ற பிரச்சினைகள் காணப்பட்டாலும் அவ் வேறுபாடு இருவேறு பிரிவுகளாகு மளவிற்கு வலுப்பெறவில்லை" என்பதனை யும் சுட்டிக்காட்டியுள்ளார். அதேசமயம் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் 'சைவசித்தாந்தத்தில் வடமொழியில் நூல் கள் எதுவும் காணப்படவில்லை என்றும் வடமொழியில் சித்தாந்த நூல்கள் எதுவும் எழவில்லை' என்றும் கூறுவதானது அஷ்டப் பிரகரண வடமொழிச்சித்தாந்த நூல்கள் பற்றி அறியப்படுவதற்கு முன்னர் எழுந்த கருத்தென்றே கூறவேண்டும். சைவசித் தாந்தக் கோட்பாட்டின் தர்க்க ரீதியான ஒழுங்கமைப்பு உருவாக்கமானது வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் கி.பி 9ம், 12ம் நூற்றாண்டு காலப் பகுதியிலும் தமிழ்மொழியில் கி.பி. 13ம், 14ம் நூற்றாண்டிலும் முற்றுப்பெற்றது என் பதனை இதுவரை கூறியவற்றிலிருந்து விளங்கிக்கொள்ளமுடியும்.

**முடிவுரை**

தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்கள் பற்றியே மிகுதியாகப் பேசுவதுடன் திரிபதார்த்தக் கோட்பாட்டினை நிச்சயம் செய்வதையே இலக்காகக் கொண்டவை யாகும். வடமொழி நூல்களில் காணப்பட்ட சித்தாந்த நூல்களில் இந்த முப்பொருள் கோட்பாடுகள் விளக்கப்பட்ட போதிலும் அவற்றுள்ளே கருத்து முரண்பாடுகள் அதிகம் நிலவுவதனை மறுக்கமுடியாது. அந்தவகையில் வைதீக சுத்தசைவசித் தாந்தக் கோட்பாட்டினை நிறுவுவதில் வட மொழியில் அஷ்டப்பிரகரண நூல்களும், தமிழ் மொழியில் மெய்கண்ட சாத்திர நூல் களும் பெரும் பங்காற்றியுள்ளன எனலாம்.

இவற்றிலிருந்து சோழப்பெருமன்னர் காலத்தில் சைவசித்தாந்தம் தொடர்பான தத்துவ நூல்கள் பல வடமொழியிலும் எழுந்துள்ள போதிலும் அவை தமிழ்ச் சித் தாந்த சாத்திர நூல்களைப் போல அறிஞர் உலகிலோ, ஆய்வாளர் கருத்திலோ, தமி ழக மக்கள் மத்தியிலோ பெரும் செல்வாக் கைப் பெறவில்லை என்பது தெளிவாகின் றது. இதற்கான காரணங்களை மேலும் ஆராய்வது சமஸ்கிருத நூல்களில் உள்ள சைவசித்தாந்தக் கோட்பாடுகளை அறிவ தற்கு மேலும் துணைபுரியும். இது பற்றிய ஆய்விலே வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி கூறியவாறு சோழர்கால சமஸ்கிருதக் கல்வியும் சைவ தத்துவ நூல்களும் சிறந்த நிலையில் வளர்ச்சியுற்றி ருந்தமையும் அவற்றிற்கு சோழப் பெருமன்னர்களின் ஆதரவு பெரு மளவில் இருந்தது என்பதும் அவற்றிற் கான சான்றுகள் பல பக்கத்திலிருந்து கிடைத்துள்ளன என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது. எனினும் சோழர்கால சமஸ் கிருத சித்தாந்த நூல்கள் பற்றிய பூர் வாங்க ஆய்வுகள் கூட இன்றளவும் பெரியளவில் நடைபெறவில்லை என்றே கூறலாம். அவ்வாறான ஆய்வு முயற்சிகள் வெளிவரும் போதுதான் சோழர் கால சமஸ்கிருத மொழியில் சைவ சித்தாந்தக் கோட்பாட்டு வளர்ச்சி பற்றிய ஆய்வு களைப் பெரிதும் முன்னெடுக்க முடியும்.

**சான்றாதாரங்கள்**


1. சைவசமய வளர்ச்சி, மா.இராச மாணிக் கனார், சென்னை, 1958
2. The Cholas, K.A.Nilakandasastri, Madras, 1955
3. முதலாம் இராஜராஜன், க.த.திரு நாவுக்கரசு, சென்னை, 1975
4. Seminar on Inscriptions, R.Nagasamy (Ed) Madras, 1966
5. வடநாட்டு அரசர் மரபின் வரலாறு, தொகுதி I, II, பக்.120 - 130, II, 680-727
6. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், க.கைலாசபதி, சென்னை, 1991
7. அஷ்டப்பிரகரணம் கூறும் சைவசித்தாந் தக் கோட்பாடும் அற ஒழுக்கச் சிந்தனை களும் - சத்தியோதியை அடிப்படை யாகக் கொண்ட ஆய்வு. கலைவாணி இராமநாதன், யாழ்ப்பாண பல்கலைக் கழகம், 2004 (கலாநிதிப்பட்ட ஆய்வேடு)
8. சமஸ்கிருத இலக்கியச் சிந்தனை கள், வி.சிவசாமி, இலங்கை.1985
9. Saiva Siddhanta Theology, Rohan A.Dunuwilla, Delhi, 1985




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகமங்கள் காட்டும் தீட்சை முறைகளும் வகைகளும் - குறிப்புக்கள்

கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா
தலைவர், சமஸ்கிருதத்துறை,
இந்து கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆகமம்**

சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படையாக இருப்பது சைவாகமங்களாகும். இருபத்தெட்டு சைவாகமங்கள் காணப்படுகின்றன. அவைகளை ஸ்ரீ குமாரர் முறைப்படுத்துகின்றார். இவ்வாகமங்களில் கூறப்பட்ட தீட்சை முறைகளும் விதிகளும் என்ன என்பதை சிறிதேனும் இங்கே சிந்திப்பது சாலச் சிறந்ததாகும். தீட்சை சிறப்பாக மூவகைப்படும். அவை சிவ (சமய) தீட்சை, விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை என்பனவாகும்.

**தீட்சைகள்**

சிவ(சமய) தீட்சை
விஷேச தீட்சை
நிர்வாண தீட்சை

**சிவ(சமய) தீட்சை**

நாணய தீட்சை, பரிச தீட்சை, பாவனு தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை, எனச் சிவ தீட்சை, ஏழு வகைப்படும். இவைகள் ஒவ்வொன்றும் ஆசிரியன் யாருக்கு எப்பொழுது தர வேண்டும் என்று காஞ்சிபுரம் ஸ்ரீ பஞ்சாக்கர யோகிகள் அருளிச் செய்த "சைவபூசணம்" என்ற வடமொழி நூலில் கூறுகின்றார்.

**நயன தீட்சை**

ஆசிரியன் "சிவோகம்" (நானே சிவன்) பாவனை செய்து கொண்டு தன்னுடைய கண்களைச் சிறிது திறந்து மாந்திரீகனாக இருக்கின்றவன் கருட பாவனையினால் சர்ப்பத்தால் தீண்டப்பட்டவனது விசம் நீங்குமாறு பார்ப்பது போல், சிஷ்யனை சிவ பாவனையினால் பார்த்து "பாச நீக்கம்" செய்வதாகும்.

**பரிச தீட்சை**

ஆசிரியன் தன்னுடைய வலது கரத்தை சிவனுடைய கரமாக எண்ணி அவ்வாறே அர்ச்சித்து, பின்னர் சிஷ்யனுடைய சிரமுதலாக எல்லா அங்கங்களையும் அந்தக் கையால் தொடுவதாகும்.

**வாசிக தீட்சை**

ஆசிரியன் "சிவோகம்"என்று தியானித்து பாவனை செய்துகொண்டு சிஷ்யனை சிவனுடைய திருநாமங்களை கூறச் செய்து மனனம் பண்ணுமாறு செய்தலாகும். எவ்வாறெனில், மாணிக்கவாசகர் சிவபெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொடுத்து இராஜகுமாரத்தியின் ஊமைத்தன்மையை போக்கியது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவனு தீட்சை**

ஆமையானது முட்டையை நினைத்துப் பிள்ளையை வெளிப்படுத்துவது போல, ஆசிரியன் தன்னுடைய "சிவோகம்" பாவனையினால் மனதிலே சிஷ்யனை நினைத்துப் பாச நீக்கம் செய்வதாகும். இது "சிந்தனைத்தீட்சை" எனவும் பேசப் படும்.

**சாத்திர தீட்சை**

சைவ சாத்திரங்களை பிழையறச் சிஷ்யனுக்கச் சொல்லி வைப்பதாகும்.

**யோக தீட்சை**

ஆசிரியன் நாலிதழ்த் தாமரையான மூலாதாரம், ஆறிதழ்த் தாமரையான சுவாதிட்டானம், பத்திதழ்த் தாமரையான மணிபூரகம், பன்னிரெண்டிதழ்த் தாமரை யான அநாகதம், பதினாறிதழ்த்தாமரை யான விசுக்தி, இரண்டிதழ்த்தாமரையான ஆக்கினையென்னும் ஆறாதாரங்களை யும் சிஷ்யனுக்கு வருண குணமாக தரிசிப்பித்தலாகும்.

**ஔத்திரி தீட்சை**

குண்டமண்டல வேதிகளுடனே கூடினதாகும்.

இவ்வேழு வகை தீட்சையின் முறைகளை அறிந்து கொள்வதால் தான் ஒருவன் முழுச் சைவனாக முடியும். மேற் குறித்த ஏழுவகை தீட்சைகள் யாவும் ஔத்திரி தீட்சைக்கு அங்கமாய் விளங்குவதால் ஔத்திரி தீட்சையே மேலானதாகும். ஆயினும் ஏனைய தீட்சைகளாலும் பாவம் நீங்கும் என்பதில் ஐயமில்லை.

**விஷேச தீட்சை வகைகள்:**

**சைவமுத்திரா தீட்சை**

செம்பு முதலியவற்றோடு செய்யப்பட்ட உருத்திராக்கங்களினால் ஆக்கிய, திரு வேடமாகிய சிவமுத்திரையை சமய தீட்சையிலாவது அதற்கு முன்னர் சிஷ்ய னுடைய காதுகளில் மந்திர சகிதமாகத் தரிக்க வேண்டும். இதுவே முதலில் செய்யும் சிவமுத்ரா தீட்சை எனப்படும். சுவர்ணம் முதலியவற்றோடு செய்யப்பட்ட உருத்திராக்கங்களுடன் கூடிய சட்குண் டலமென்னும் சுந்தர வேடமாகிய சிவ முத்திரையை விசேட தீட்சையில் தரிசிக்க வேண்டும். இவ்வாறன்றி அன்பர் களுடைய அன்பிற்கு தக்கவாறு சிவனது அடிமையென்பதை தெரிவிக்கும் முத்திரையை தரித்தலும் சைவமுத்திரா தீட்சை ஆகும்.

**சாதார நிதராதாரதீட்சை**

பொதுவாக தீட்சையினை இரு வகை யாகப் பகுப்பர். அவை சாதார தீட்சை, நிராதார தீட்சை என இரண்டு வகைப்படும். சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கும் ஆசிரியர் செய்வது சாதார தீட்சையாகும். பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் இருவகை ஆன்மாக்களுக்கும் ஸ்ரீ மகா தேவர் தாமே செய்வது நிராதார தீட்சை ஆகும்.

சாதார தீட்சை மேலும் இருவகைப் படும். அவை சபீஜ தீட்சை, நிர்பீஜ தீட்சை ஆகும். இவற்றுள்சபீஜ தீட்சை சமயா சாரங்களுடன் செய்யப்படுவது. நிர்பீஜ தீட்சை சமயாசார சுத்தியுடன் செய்யப்படு வது. இவ்வாறு சிவாகமங்களில் கூறப்பட் டுள்ளது. ஆகம தீட்சா விதியில் அகோர சிவாச்சாரியார் சாதார தீட்சை செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினை விளக்கமாகக் கூறியுள் ளதை பின்வரும் பகுதியில் காணலாம்.

### நிர்வாண தீட்சை வகைகள்:

"ஞானரத்னாவளி" என்னும் நூலில் நிர்வாண தீட்சை நால்வகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

### உலோகதர்மிணி தீட்சை

பாபகர்மம் எவ்வளவு உண்டோ அவை அனைத்தையும் சோதித்து, புண்ணிய கர்மங்களை சோதியாமல் இல்வாழ்க்கை யில் ஈடுபட்டுள்ளவனுக்குச் செய்யப்படுவது உலோகதர்மிணி தீட்சை ஆகும்.

### சிவதர்மிணி தீட்சை

புண்ணிய பாவங்களிரண்டையும் நன் றாகச் சோதித்து மோட்சத்தில் விருப்ப முடைய துறவிக்குச் செய்யப்படுவது சிவதர்மிணி தீட்சை ஆகும்.

### சத்தியோ நிர்வாண தீட்சை

சற்குருவானவர் சடத்துவ சோதனை செய்து சிகாச்சேத ஓமமும் செய்து சிவ பதத்தில் ஆன்மாவைச் சேர்த்த மாத்தி ரத்தில் தேகநீக்கமுண்டாவது.

### அசத்தியோ நிர்வாண தீட்சை

மேற்குறித்த சத்தியோ நிர்வாண தீட்சைக்குக் கூறியவாறன்றி பிராரத்த கர்ம அனுபவத்தின் முடிவில் சிவபதத்தில் ஆன்மாவை சேர்ப்பது ஆகும்.

சமய தீட்சை, நிர்வாய தீட்சை முதலிய வற்றைப் பெறுவதினாலே ஒருவன் உயர் குலத்தவனாக மாறுகின்றான். இக் கருத்தை "பிராமண குருவானவர் சூத்திர ரான அனைவருக்கும் சிவ தீட்சை உப தேசம் செய்யும் காலத்தில் சிஷ்யனுடைய செவியிலேயே மந்திரோபதேசம் செய்ய வேண்டும். வாகீசுவரனுடைய கர்ப்பக் கோளத்தினின்றும் இந்த சிஷ்யன் பிறந்த தாக பாவிக்க வேண்டும். அதன் பின்னர் சூத்திரத் தன்மை நீங்கி இருபிறப்பாளன் (பிராமணன்) ஆகிறான். சிஷ்யனுக்கும் தனக்கும் நாடி ஒன்றாக பாவிக்க வேண்டும். பின்னர் ஸ்தாலியென்னும் பாத்திரத்தில் சமைத்த அன்னத்தை மூன்று கூறு செய்து, அவற்றுள் ஒரு கூறு மண்டலேஸ்வராதிகளுக்கும் மற்றொரு கூறாகிய அமுதத்தை சூரியன் முதலான மண்டல தேவதைகளுக்கும் நிவேதித்து மீதமுள்ள ஒரு கூறு, சிவ திட்சை நிறை வேறிய பின்னர் ஒரு பந்தியிலே சிஷ்யனு டனே இருந்து உண்ணப்பட வேண்டும். இவ்வாறு பிராமண குருவானவர் செய்ய வேண்டும். இதுவே உத்தமம்" என சைவ பூசணத்தில் கூறப்பட்டதிலிருந்து அறிகின் றோம்.

### பாதுகாப்பு நடவடிக்கை

21.04.2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்த சம்பவம் காரணமாக 2019ம் ஆண்டின் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தின் போது சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு படைத்தரப்பினரால் அடியார்கள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகம மரபில் சுப்ரம்மண்யரது படைக்கலம் வேல் - ஓர் ஆய்வு

ச.பத்மநாபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

மூலசிவாகமங்கள் இருபத்தெட்டு. உபாகமங்கள் இருநூற்றேழு. இவற்றுள் சுப்ரம்மண்ய வழிபாடு பற்றிக்கூறும் சிவாகமம் குமாரதந்திரம் ஆகும். குமாரதந்திரம் மூலாகமமான லலித ஆகமத்தின் உபாகமம் ஆகும். சிவாகமங்கள் முருக வழிபாட்டு மரபுகளை சுப்ரம்மண்யருக்குரிய வழிபாட்டு மரபிலேயே கூறுகின்றன. சுப்ரம்மண்யரே முருகன் என அழைக்கப்படுகின்றார். சுப்ரம்மண்யரது மூர்த்திபேதங்களுள் ஒன்று ஞான சக்தி தரன் என்பதாகும். ஞானசக்தி என்பது சுப்ரம்மண்யரது படைக்கலமாகும். இதுவே வேல் எனவும் அழைக்கப்படுகின்றது. குமார தந்திரம் சக்தியஸ்திரம் எனும் தன்மையில் இப்படைக்கலத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது. அவைபுராணங்களிலும் இடம் பெறுகின்றன. சிவாகமமரபில் சுப்ரம்மண்யரது படைக்கலமானவேல் எத்தகைய முக்கியத்துவமுடையது? அது அமையத் தக்கலக்ஷணம் யாது? அமையத்தக்க பொருட்கள் யாவை? அதனது முக்கியத்துவம் எத்தகையது என்பன பற்றி சிறப்பாக குமாரதந்திரத்தையும் ஏனைய சிவாகமங்களையும் முன்னிலைப்படுத்தி இலக்கிய விவரண ஆய்வுமுறையியலின் ஊடாக ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வினூடாக சுப்ரம் மண்யரது படைக்கலமானவேல் வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது என்பது பற்றியும் வேலினையே சுப்ரம் மண்யராக வழிபடத்தக்க மரபு எவ்வாறு வளர்ச்சிபெற்றது என்பது பற்றியும் அப்படைக்கலத்தின் சிறப்பும் தனித்துவமும் வெளிக்கொணரப்படும்.

திறவுச்சொற்கள்:சிவாகமம்,சுப்ரம்மண்யர் வேல்,சக்த்பியஸ்திரம்,குஹாஸ்த்திரம்.

**அறிமுகம்**

சிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரையாக இருபத்தெட்டாகும். இவை இருநூற்றேழு உபாகமங்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் மூல சிவாகமங்களும், சிற்ப சாஸ்திர மூலங்களும் சுப்ரம்மண்யரது ஸ்தாபனவிதி, லக்ஷணவிதி போன்றவைகளைக் கூறிநிற்கின்றன. இவற்றுள் சுப்ரம் மண்யரதுபடைக்கலங்களுள் ஒன்றேவேல் ஆகும். அதனைசிவாகமங்கள் சக்தியஸ்திரம் எனச் சிறப்புப்படக் கூறுகின்றன. சுப்ரம் மண்யவடிவங்கள் ஒவ்வொன்றிலும் தனித்துவம் மிக்க அடையாளமாகவும், முக்கியத் துவமிக்க படைக்கலமாகவும் சுட்டப்படுவது வேற்படைக்கலம் ஆகும். வேலையே முருகனாகக் கொண்டுவழிபடும் மரபுகளும் காணப் படுகின்றன. சிவ வடிவங்களுக்குளவ்விதம் திரிசூலம் முக்கியத்துவம் பெறுகிறதோ அத்தகைய முக்கியத்துவம் சத்தியஸ்திரம் எனப்படுகின்ற வேலிற்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவாகமங்களில் சுப்ரம்மண்யலக்ஷணம்**

சிவாகமங்களில் ப்ரதிமாக்ஷணவிதி என பொதுவான லக்ஷணவிதிகள் கூறப்பட்டுள் ளன. அவற்றுள் சுப்ரம்மண்ய மூர்த்தி பேதங் கள் பற்றிப் பேசப்படுகின்றன. சிறப்பாக சுப் ரம்மண்ய மூர்த்திபேதங்கள் பற்றி குமாரதந் திரம் மிகவிரிவுபடக்கூறுகின்றது. இதனது தனித்துவத்தை ஸ்ரீதத்வநிதி எனும் நூலும் கூறியிருப்பது சுட்டிக் காட்டத்தக்கது.

**சுப்ரம்மண்ய மூர்த்திபேதங்கள்**

சுப்ரம்மண்யரது மூர்த்தி பேதங்கள் பதினாறு எனச் சுட்டப்படுகின்றது. அவை பின்வருமாறு

1. ஞானச்சந்திரன்
2. ஸ்கந்தன்
3. சேனானீ
4. சுப்ரம்மண்யன்
5. கஜவாஹனன்
6. சரவணபவன்
7. கார்த்திகேயன்
8. குமாரன்
9. க்ஷண்முகன்
10. தாரகாரி
11. சேனாதிபதி
12. பிரம்மசாஸ்தி
13. வள்ளிகல்யாணசுந்தரர்
14. பாலஸ்வாமி
15. க்ரௌஞ்சபேத்தர்
16. சிகிவாஹனன்

என்பனவாகும். இவை ஸ்வாமி எனும் பெயருடன் இணைத்துச் சுட்டப்படுவது குறிப் பிடத்தக்கது.

இவ்வாறான (முருகனது)சுப்ரம்மண்யரது மூர்த்தி பேதங்கள் சத்தியஸ்திரம் எனும் படைக்கலத்தை தாங்கி நிற்ப்பது சுட்டிக் காட்டத்தக்கது.

**சத்தியஸ்திரம்**

சுப்பிரமண்யரது படைக்கலமே சத்தியஸ்திரம் ஆகும். இதனையே வேலி என்று அழைப்பர். இச்சத்தியஸ்திரம் எத்த கைய முக்கியத்துவமுடையது என குமார தந்திரம் குறிப்பிடுகையில் பின்வருமாறு விபரிக்கின்றது.

குமாரதந்திரத்தின் இருபத்தெட்டாவது படலம் சத்தியஸ்திர ஸ்தாபனவிதியில் "அசுரர்களின் அழிவிற்காகவும் தேவர்களை பாதுகாக்கவும் எல்லா உலகிற்கு நன்மை அளிப்பதற்கும் அனைவரையும் பாதுகாப்ப தற்கும் ஆதிசக்தியிடம் இருந்து உண்டான இந்த சத்தியஸ்திரமானது உலகத்தவர் யாவராலும் வணங்கப்படுகிறது எனச் சுட்டப் படுகிறது.

**சத்தியஸ்திரத்தின் வடிவம்**

மூன்றுபத்திரத்தின் அளவாகஅவை இச்சா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி, வடிவமாகவும் தண்டம்,கீழ்ப்பத்மாசனம் என்பவைகளுடன் கூடியதாகும்.

இச்சத்தியஸ்திரத்தில் முக்குணங்கள், முச்சக்திகள், மூன்றுதேவதைகள், மூன்று அக்கினிகள், மூன்று தத்துவங்கள், முன்று வேதங்கள் என்பனஉறைகின்றன.

சத்தியஸ்திரத்தை வேலாயுதம் எனவும் அழைப்பர். கந்தபுராணமரபில் சூரன் முதலானவர்களை அழித்து தேவர்களை பாதுகாக்க உமாதேவியாரால் வழங்கப் பட்ட படைக்கலமேசத்தியஸ்திரம் எனும் வேற்படைக்கலமாகும். இப்படைக்கலம் அக்கினியின் வடிவமாகதிகழும் முருகனது வடிவத்திற்கு நிதர்த்ததாகும். இதனையே மாணிக்கவாசகரின் சிவபுராணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஆழ்ந்தகன்றநுண்ணியனே"** எனக்கூறுகின்றது. சிவனதுவடிவங்களிலும் லிங்கோற்பவ வடிவமாக ஜோதியின் வடிவத்தினை நிகர்த்த தன்மையதே இவ்வடிவம் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இப்படைக்கலத்தை தங்கம், வெள்ளி, பஞ்சலோகம், பித்தளை, செப்பு, இரும்பு, கல் இவைகளில் செய்யலாம் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இப்படைக்கலத்தை பூஜிப்பதன் பலனாக அரசன் ராஜ்ஜியத்தில் வெற்றி கொள்வதோடு, சத்துருக்கள், தீயமன எண்ணங்கள் நீக்கப்பெறுகின்றன. இப் படைக்கலத்திற்கான சிறந்த வழிபாடே "சத்ருசம்ஹார வழிபாடு" என சுட்டிக் காட்டப்படுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

**வேலின் வகைகள்**

சத்தியஸ்திரம் எனப்படும் வேல் அதனது அமைப்பின் தன்மையில் பல்வேறு வகைகளில் கொண்டு விளங்குகின்றது.

அவையாவன சத்ருவேல், சக்ரவேல், உத்தண்டவேல், முத்துவேல், மந்திரவேல், இரத்தினவேல், வஜ்ஜிரவேல், தங்கவேல், வெள்ளிவேல், எஃகுவேல் எனப் பல்வேறு பெயர் பெறுகின்றன. இவை வேல்கள் அமைந்த உலோகத்தின் தன்மையாலும் வடிவத்தின் தன்மையாலும் அமைப்பின் சிறப்பாலும் தனித்துவம் பெறுகின்றன.

**வேலின் சிறப்பு**

வேலின் சிறப்பினையும் மகிமையினையும் கந்தபுராணம் கூறும் அதேவேளை அருணகிரிநாதரின் வேல்வகுப்பு தனித்துவமான சிறப்புடன் விளக்கியிருப்பதனை காண முடிகிறது.

**வேல்வழிபாடு**

இலங்கையில் முருக வழிபாட்டு மரபில் வேல்வழிபாடு மிகுந்த முக்கியத்துவம் உடையது. வேலை வேலவனாக வழிபடும் மரபு ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் சிறப்புற விளங்கிய அதேவேளை கந்தபுராணபடன மரபுவளம் பெற்ற யாழ்ப்பாண சமூகத்தில் முருக வழிபாட்டுக் கலாசாரம் வேல் வழிபாட்டு மரபில் ஒன்றியமைவதும் சுட்டிக் காட்டத்தக்கது. இலங்கையின் புராதன முருக வழிபாட்டு தலங்கள் ஆகிய செல்வச் சந்நிதி, கதிர்காமம் என்பவையும் கிழக்கிலங்கையில் சிறப்புப் பெறும் படைக்கோயில்களிலும் வேல் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதனைகாணலாம். இத்தகையமரபில் நல்லூர்க்கந்தன் ஆலயமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**கதிர்காமத்தின் சிறப்பு**

கந்தபுராணமரபுடன் தொடர்புடையது கதிர்காமத் தலமாகும். இத்தலத்தின் சிறப்புப் மகிமையும் கந்தபுராணத்தில் சூரபத்மன் வதைக்கப்பட்ட கதைமரபுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. கதிரைமலை, மாணிக்ககங்கை, சூரன்கோட்டை எனப் பல்வேறுபட்ட கதைமரபுகள் உண்டு. கதிர்காம முருகன் மீது திருப்புகழ், எண்ணிலடங்காத தமிழ்ப் பிரபந்தங்களும் காணப்படுகின்றன. ஸ்ரீமதத்க்ஷிணகைலாச மாத்மியம் ஒன்பதாம், பத்தாம், பதினோராம் அத்தியாயங்கள் முறையே கதிர்காம மகிமையுரைத்தபடலம், கதிர்காமகிரி மகிமையுரைத்த படலம், கதிர்காம தல விசேடபடலம் என விரிவுபடக் கூறுகின்றமை சுட்டிக்காட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. பண்டைய மரபு மாறாத முருக வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றமை கதிர்காமத் தலத்தின் தனித்துவ அடையாளமாகின்றது.

**காவடியும் செதில் குத்துதலும்**

புராதன தமிழ் வழிபாட்டு மரபில் வேலன் வெறியாட்டம் போன்றதன்மையில் வேலவனது வேலினை உடலில் குத்தி காவடியில் பல்வேறு வகைகளையும் நேர்த்திக் கடனாக வழிபட்டுவரும் முருக வழிபாட்டு நம்பிக்கைகள் சமூகநம்பிக்கையில் பிணி நீக்கத்தினை ஏற்படுத்தியமை சுட்டிக் காட்டத் தக்கது. இம்முறைமை சீனர்களின் "அக்குப் பஞ்சர்" வைத்தியமுறைமையின் முன்னோடிச் சிந்தனை என்பதனை உணர்த்தும் அதேவேளை இன்றுவரை அத்தகைய வழிபாட்டு முறைமைகளை சமூகத்தில் நம்பிக்கையுடன் பின்பற்றுவதனை காணமுடிகிறது. அவற்றுள் செதில் குத்திகாவடி எடுத்தல், தூக்குக்காவடி, துலாக்காவடி, பறவைக் காவடி என்பன சுட்டிக்காட்டத்தக்கன. இதே சிந்தனையில் மலேசியாவின் பத்து மலைமுருகன் ஆலயத்தில் தைப்பூச நன்னாளில் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் பல்வேறு விதமான காவடிகளை எடுத்து வழிபடுதலும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**நிறைவுரை**

சிவாகமங்கள் சக்திவாய்ந்ததும் தனித்துவமுடையதுமான சத்தியஸ்திரத்தின் சிறப்பைக் கூறுகின்றன. சுப்ரம்மண்யத்து படைக்கலமானசத்தியஸ்திரம் முருக வழிபாட்டு மரபில் வேல் என சிறப்பு பெறுகின்றது. சுப்ரம்மண்ய மூர்த்தி பேதங்களிலும், சுப்ரம்மண்யபிரதிமாலக்ஷணத்திலும் இடம் பெறுகிற தனித்த ஆயுதமாக சிறப்புபெறும் சத்தியஸ்திரம் எனும் வேல்படை அதனது அமைப்பு முறைமையை கொண்டு பல்வேறு பெயர்களை பெற்றுக் கொள்கின்றது. அதேவேளை சுப்ரம்மண்ய மூர்த்திக்கு நிகராக இப்படைக்கலத்தையேவழிபடும் மரபு முருக வழிபாட்டு மரபில் தனித்துவ மிக்க முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


1. குமாரதந்திரம்(2003) மூலமும் தமிழ் மொழி பெயர்ப்புடன், அல்லூர் சிவஸ்ரீ விஸ்வநாத சிவாச்சாரியார்(பதி) அருள்மிகு தண்டாயுதபாணி, கோவில், பழனி.
2. ரௌரவ ஆகமம் volI,II & III.N.R.Bhatth (E.D). (1961,1972,1988) Institute of Francais. D,Indologie, Pondichery.
3. காரணாகமம்(1921) பூர்வாயகம், மயிலை அழகப்ப முதலியார் (பதி) சிவஞான போத யந்திரசாலை, சிந்தாரிப் பேட்டை, சென்னை.
4. கைலாசநாதகுருக்கள், கா. (1961) சைவத்திருக் கோவிற்கிரியைநெறி, இந்துக்கலாவிருத்திச் சங்கம், கொழும்பு.
5. தக்ஷிணகைலாசபுராணம்(1928) வதிரிசி. நாகலிங்கபிள்ளை, வதிரி, யாழ்ப்பாணம்.


**இந்துக் கற்கைகள் பீடம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் 2019ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்கந்தனின் வேல்வடிவம்

அளவையூர், சைவப்புலவர், பண்டிதர்
**வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்**
B.A(Hon) Cey, M.A

அழகுத் தெய்வம் முருகனுக்கு கிராமங்கள் தோறும் எண்ணுக்கணக்கான ஆலயங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்திலும் பல பிரசித்தி பெற்ற முருகன் தலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று தான் யாழ்ப்பாணம் நல்லூரில் கோயில் கொண்டுள்ள நல்லைக்குமரன் ஆலயம் ஆகும். இங்கே முருகன் வேற்பெருமானாகக் காட்சியளிக்கிறார்.

முருகப் பெருமானது பல்வேறு வடிவங்களைப்பற்றி விவரிக்கும் குமாரதந்திரம், தத்வநிதி, தியானரத்னாவளி முதலான சிற்ப நூல்களில் அவரது ஆயுதங்களைப் பற்றிய விவரங்களையும் அறிய முடிகிறது. தணிகைப் புராணத்தில் முருகனது வடிவங்களைப் பற்றியும், அகத்தியர் அருள்பெறு படலத்தில் ஆயுதங்களைப் பற்றியும் விவரம் அறிய முடிகிறது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் முதலான நூல்களில் முருகனது படைக் கலங்களைப் பற்றிய விவரங்கள் காணக்கிடக்கின்றன. முருகனுக்கு வேல் ஆயுதமாக உருவகிக்கப்பட்டிருக்கிறது. வேல் வெற்றிக்கும், அறிவுக்கும் அடையாளமாகத் திகழ்கிறது. வேல் நடுவில் அகன்றும் உருவில் நீண்டும் முனையில் கூர்மையாகவும் இருக்கிறது. இதுபோல் இக பர வாழ்வில் மனிதன் சிறந்தோங்க அகன்ற, ஆழ்ந்த, கூர்மையான அறிவுடையவனாக இருக்கவேண்டும். அவ்வறிவைத் தருபவன் வாலறிவனாகிய இறைவனே. இதையே திருவள்ளுவர்,

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்...** என்கிறார்.

முருகன் கையில் இருக்கின்ற வேல் அவனை நம்பி வணங்குகின்றவர்களுக்கு அறிவையும் ஆற்றலையும் அளித்து அவர்களின் பகைவர்களையும் அழித்து அருள்புரியும். கூவுகின்ற கோழி நாத வடிவானது. கோழிக் கொடி வெற்றியின் சின்னமாக விளங்குகின்றது. அழகிய மயிலின்மிசை வீற்றிருக்கின்றான் முருகன். மயில் மனத்தின் சின்னம். பரிசுத்தமான, அழகான உள்ளம்தான் இறைவனின் உண்மையான கோயில் என்பதனை மயில் வாகனம் விளக்குகிறது.

ஆடும் மயில் அணி சேவல் என்று மயிலுக்கும் சேவலுக்கும் அடை கொடுத்துச் சொன்னர் அருணகிரியார். ஆடும் பரிவேல் அணி சேவல். நடுவில் வேல் என்பதற்கு மாத்திரம் ஓர் அடையும் இல்லாமல் சும்மா வேல் என்று சொன்னார். வேலாயுதத்திற்குப் பல வகையான அடைகள் கொடுக்க வாய்ப்பு உண்டு. "வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி குளித்தவேல், கொற்றவேல் சூர்மார்பும் குன்றும் - தொளத்தவேல் உண்டே துணை" என்று வேலின் சிறப்பைப் பாடிய புலவர் உண்டு. இங்கே அருணகிரிநாதர் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும் சொல்லாமல் சும்மா வேல் என்று சொன்னர். முன்னும் பின்னும் உள்ள பொருள்களுக்கு அடை கொடுத்தவர் வேலை நடு நாயகமாக வைத்து எந்த அடையும் சொல்லாமல் சொன்னதில், ஒரு சிறப்பு இருக்கிறது. சிறப்புடைய பொருள்களுக்குப் பலபல அடையாளங்கள் சொல்லவேண்டியது இல்லை. அடையின்றி வழங்குவதே அந்தப் பொருளின் சிறப்பைப் புலப்படுத்தும். இத் தகைய வேலின் உருவாக விளங்குபவர் நல்லூர்க் கந்தன்.

சூரன் முதலிய அசுரர்களை வென்று வாகை சூட, கந்தப் பெருமான் கொண்ட பல்வேறு போர்க் கோலங்களில் அவரது கரங்களில் கொண்ட படைக்கலங்களே ஆயுதங்களாக அமைந்து உள்ளன. அப் பெருமானது கரங்களில் திகழும் அனைத்துமே ஆயுதங்கள் அல்ல. உதாரணமாக ஜபமாலை, கமண்டலம், கரும்பு, வில், மலரம்பு, தாமரை, நீலோத் பலம், பூரணகும்பம், சுருவம் முதலானவற்றை வெவ்வேறு வடிவங்களில் காரணகாரியம் கருதி அவரது கரங்களில் ஏந்தியுள்ளார். பன்னிரு கரமுடைய பெருமான் ஆதலால் மற்ற எந்தக் கடவுளருக்கும் இல்லாத வகையில் அதிகமான எண்ணிக்கையில் ஆயுதங்களை உடையவர் இவரே.

முருகப் பெருமானிடம் அமைந்துள்ள ஆயுதங்களில் தலையாயது வேலாயுதம் என்ற ஞானசக்தியாகும்.

வெல்லும் தன்மை உடையது. வேல், எல்லாவற்றையும் வெல்வது அறிவாற்றல்.
அறிவானது ஆழமும், அகலமும், கூர்மையும் உடையது.

**“ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே”**
...என்று இறைவனைப் போற்றுகின்றார் மாணிக்கவாசகர். வேலின் வடிவமும் இத்தகையதே. முருகனின் ஞானவேலுக்கு “சக்தி” என்ற பெயரும் உண்டு.

**“சக்திதான் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும் என்பது சிவஞான சித்தியார் வாக்கு”**
ஞானமே அஞ்ஞானத்தை வெல்ல வல்லது. ஆதலின் ஆணவம், கன்மம், மாயை எனும் மலங்களாகிய சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் என்னும் அசுரர்களை அழிதொழித்து “ஞானமயம்” ஆகிய வேலே யாவருக்கும் நலம் புரிந்தது. வேல் வஞ்சர்க்கு வஞ்சனை செய்யும். அடியவர்க்கு உதவும் அது ஐந் தொழில் செய்யும் என்பதையெல்லாம் திருப் புகழில் காட்டுகிறார் அருணகிரியார்.
வேலாயுதத்தை **“உடம்பிடித் தெய்வம்”** என்று கந்தபுராணம் போற்றும்.

**“உடம்பிடித் தெய்வம் இங்ஙன் உருகெழு**
**செலவினேகி**
**மடம்பிடித் திட்டவெஞ்சூர் மாமுதல்**
**தடிந்ததன்றே”**

எனக் கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் இவ்வாறு முருகனுக்கு வேலின் பெயரைக் கூறுகின்றார். முருகப் பெருமானை வழிபடுவோர் வேல் நட்டு வழிபடுதல் மரபு. வேல் பிரதானமாக அமைந்த கோயில் வேற்கோட்டம் எனப்படும். புகார் நகரில் இத்தகைய வேற்கோட்டம் இருந்ததைச் சிலப்பதிகாரம், இந்திரவிழாவூரெடுத்த காதை கூறும்.

பாநுகோபன் தலைமையில் அசுரருடன் நடந்த மூன்றாம் நாள் போரின்போது வேலாயுதத்தின் ஆற்றலைக் கண்ட வீரவாகுத் தேவர்.

போதுசுன நூலகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்**
**எந்தைக ணின்றும் வந்த இயற்கையாற் சத்தியாம்பேர்**
**தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்!**
**கந்தனே யென்ன நின்னைக் கண்டுளங் கவலை நீத்தேம்"**

...எனப் போற்றினார் (கந்தபுராணம் - யுத்த காண்டம் மூன்றாம் நாட்போர், (212)

இப்பாடலில் வீரவாகுதேவர் கூற்றாக கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப் பெருமானுக்கும் வேலாயுதத்திற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டி வேலே முருகன் என வேற்று மையின்மையை வலியுறுத்துகின்றார்.

**"ஈறிலாத ஒளிவீசுதலாலும், அறுமுகம் படைத்திருத்தலாலும்,**
**சிவபெருமான் அருளுதலாலும், சத்தியென்ற பேர் பெற்ற தன்மையாலும்**
**ஒப்பற்ற வேலாயுதக் கடவுளே,**
**நின்னைக் கந்தன் எனவே கண்டு நாங்கள் கவலையை விட்டொழிந்தோம்"**

...என வீரவாகுதேவர் கூற்றிலிருந்து வேலா யுதத்தைக் கந்தன் எனவே போற்றி வழிபட வேண்டும் என்னும் உண்மை பெறப்படுகின்றது.

வேலாயுதத்தின் ஒளிப்பெருமையை,

**"சுடர்ப்பரிதி ஒளிப்ப நிலவொழுக்குமதி ஒளிப்ப அலை**
**அடக்குதழல லொளிப்ப ஒளிரொளிப் பிரபை வீசும்"**

..என அருணகிரியார் ஓதுவார் (வேல்வகுப்பு).

வேல் தியானத்துக்கு உரியது. "வேலும் மயிலும் துணை, வெற்றிவேல் உற்ற துணை" என்பது தமிழ் மந்திரம்.

**"வேல்வேல், வெற்றிவேல்"**

என்பது வெற்றி தரும் வீரமுழக்கம். சித்தி தரும் இம்மந்திரத்தால் நன்மையடைந் தோர் பலர்

**"வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்"**
**"காமக் கள்ளை மொண்டுண் டயர்கினும் வேல்மறவேன்"**

...என்றார் திருப்புகழ் முனிவர்.

**"செருவெங் களத்தில் வந்த அவுணன் தெறித்து மங்க**
**சிவமஞ் செழுத்தை முந்த விடுவோனே"...**
**"பருவம் பணை" சிதம்பரத் திருப்புகழ்.**

...என்றமையால் வேலே திருவைந்தெழுத்து என்பதும் பெறப்படும்.

**"ஏத்துவார்க்கு இடரான**
**கெடுப்பன வினைப்பகைக்கு அத்திரமாவன ஐந்தெழுத்துமே"**

...எனத் திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்துக்கு ஓதிய பெருமையெல்லாம் வேலாயுதத்துக் கும் உண்டு.

**"நாதன் நாமம் நமச்சிவாயவே"**

...என்ற திருவருள் வாக்கால், சிவமும் ஐந் தெழுத்தும் ஒன்றே என்பது பெறப்படும்.

**ஐந்தெழுத்தே வேல். வேலே முருகன். முருகனே சிவம். "ஐந்து முகத்தோடு அதோமுகமும்" கூடிய சிவமே அறுமுகன்.**

கழையோடை வேற்பதிகம்

**"சிவசிவசங் கரமுருகன் செங்கை வேலே"...**

எனத் துதிக்கின்றது.

**மாலொன்றும் நெஞ்சம் தெளிவாகும் இன்பம் வருந்தி அதன்**
**மேலொன்று இரெண்டெனத் தோற்றாத வீட்டுக்குள் விடுப்பதற்கு**
**கோலொன்றும் வில்லியர்தம் குலப்பேதை கொழுநன் அங்கை**
**வேலொன்றுமே துணை அல்லால் மற்றுயாவும் வெறுந் துணையே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதமே - பஞ்சாட்சர மூலமந்திரம் எனப்படும் சிவமஞ்செழுத்தாம்.

செருவெங் களத்தில் வந்த அவுணன் தெறித்துமங்க
சிவமஞ்செழுத்தை முந்த விடுவோனே...
பாடல் 465 "பருவம் பணை" (சிதம்பரம்)

**வேலதே சிவமஞ்செழுத்தெனச் சொற்றார்**
**விரிபுகழ்ப் பாவலரதனால்...**

பராசக்தியிற் தோன்றிய ஆரணி, ஜனனி, உரோதயித்ரி என்னும் முச்சக்திகளின் புற வுருவான ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி எனும் ஐந்தொழில் சக்தியே சிவமஞ் செழுத்தாகும். பராசக்தியே உயிர்கள் உய்யும் பொருட்டு சிவமஞ்செழுத்தெனக் கனிந்திருப்பது. எனவே பராசக்தியே வேலா யுதத்தின் வடிவாய் குமரப்பெருமான் திருக் கரத்தில் விளங்குகின்றாள். பிரம்மன், விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐவரும் பூஜித்து வணங்குமாறு 1008 இதழ் தாமரையில் கொலு வீற்றிருந்தருளும் பரா சக்தியே தனது மைந்தன் யாவர்க்கும் கிட் டாத புகழும் யாவர்க்கும் மேலான நலனும் பொருந்தி விளங்க வேண்டும் என்பதற்காக வெற்றி வேலின் உருவம் கொண்டு விளங்கு கிறாள்.

திருமுருகப்பெருமானின் மிகவும் முக்கிய மானதோர் அலங்காரமாவது தீயசக்தி களை ஒடுக்கி அழிப்பதுவும்மெய்ஞ்ஞானத்தை அருளும் சின்னமாகவும் விளங்கும் வேலாயுத மாகும்.

**"வேலே விளங்கும் கையான்" பாடல் 28**
**- வேலே விளங்கும்,**
**"வேத ஆகம சித்ர வேலாயுதன்" பாடல் 17**
**- வேத ஆகம,**
**"அயில் வேலன்" பாடல் 2 - அழித்துப் பிறக்க,**
**"வெற்றி வேலோன்" பாடல் 11 - குசை நெகிழா**
**"வையிற் கதிர் வடிவேலோன்" பாடல் 18**
**- வையின் கதிர்,**

என அழைக்கப்படும் திருமுருகன், சூரபன் மன் போன்ற தீயசக்திகளை அழிக்கும் "போர் வேலன்" எனவும் அழைக்கப்படுகின்றார்.

பாடல் 91 - கருமான் மருகனை.

**இந்த மரபு சங்க காலந்தொட்டே வழங்கி வரும் மரபு என்பது,**

**"சூர்மறுங்கறுத்த சுடர்இலை நெடுவேல் சினமிகு**
**முருகன் தண்பரங்குன்றத்து"**

என்று குறிப்பிடும் அகநானூற்றுப் பாடலி லிருந்து தெரியவருகின்றது
அகநானூறு, 59:10-11

திருமுருகப்பெருமான், "சூர்மீது கதிர்வேல் எறிந்தவன்" - பாடல் 49 - சூரில் கிரியில்,

"சுவர்ண கிரௌஞ்சகிரி ஊடுருவத் தொளைத்த வைவேல்" உடையவன் - பாடல் 19 - சொன்ன கிரௌஞ்ச எனவும் கந்தரலங் காரத்தில் குறிப்பிடப்படுகின்றது.

திருமகளும், கலைமகளும் - பராசக்தியிற் தோன்றியவர்கள். ஆதலால் வேலே - மகா லட்சுமியாகவும், சரஸ்வதியாவும் நிற்பது.

**செந்தாமரை மலர்மேல் வசிக்கின்ற திருமகளும்**
**கொந்தார் கடம்புடைக் கோமான் கை வேல் என்று**
**கூறுமினே.**
**வெள்ளைக் கமலமிசை வீற்றிருந்ததும்**
**வேற்படையே.**

வேல் ஒன்றை வழிபடுவதால் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய மூவரையும் வழிபட்ட பயனுண்டாம். கல்வி, செல்வம், வீரம் ஆகியன ஒருங்கே வாய்க்கப் பெறு வதாம். எனவே, என்றும் கெடாத திருமால்புகழ் கீர்த்தி நிறைவெய்தும் என்பது திண்ணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருக்கும் அகப்படாத ஆறுமுகத்தை அகப்படுத்திய அருளாளராகிய அருணகிரி நாதர்,

**மாதர் இன்பம் உண்டுண்டு அயரினும்**

**யான் மறவேன் என்றுரைத்த பொருள் வேலே**

**கண்டு உண்ட சொல்லியர் மெல்லியர்**

**கல்விக்கள்ளை**

**மொண்டு உண்டு அயர்கினும் வேல் மறவேன்...**

கந்தர் அலங்காரம் பாடல் 37

"கண்டுண்ட மாமுருகனே வேலிடம் தஞ்சம் அடைந்திருக்கின்றான். வேற் பூசையே குகன் பூசனையாகும். வேலின்றி குகனை பூசை செய்தால் பயன் வீண்படுமே. வேலாயுதத்திற்கு வேலாயுதம் வேறில் லையே. வினைகளை வேரறுத்தல், யம பயம் தீர்த்தல், உண்மை அறிவை அறியச் செய்தல் ஆகியன வேலின் வேலையாம். வேல் ஊழ் வினை மாற்றும் மாண்புடையது.

**இடுக்கண் வினை சாடும் - அதனை வழிபடுவார்...**
வேல் வகுப்பு

வேல் - உணர்வின் அடிப்படையில் நின்று தொழிற்படுவதால் உள்ளத்தில் உண்டா கும் சிந்தாகுலம் உயிரில் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும் கவலை ஆகியவற்றை அகற்றவல்லது. கருத்தே புகுந்து கதிகாட் டக் கூடியது. நுண்ணுணர்வையும் அதன்பாற் பட்ட பேரின்பத்தையும் எளிதில் நுகர வைப் பதில் நிகரற்றது. வேல் - என்றாலே உணர்வு என்று பொருள்.

வேல் - என்ற சொல் "வெல்" என்ற முதல் நிலை நீண்ட தொழிற்பெயர். எல்லாவற்றை யும் வெல்வது வேலாயுதம். எல்லாவற்றை யும் வெல்வது அறிவு. மேலும் அறிவு, ஞானம், வேல் என்பவை ஒருபொருட்கிளவிகள். அறி வுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. அவை ஆழம், அகலம், கூர்மை என்பன அறிவு ஆழ மாக இருக்கும், பரந்து விரிந்து விளங்கும், கூர்மையாகத் திகழும். இப்பொழுது வேலின் உருவத்தை நினையுங்கள். வேலின் அடிப் பகுதி ஆழமாக அமைந்துள்ளது. இடைப் பகுதி விசாலமாக விளங்குகின்றது. நுனிப் பகுதி கூர்மையாகத் திகழ்கின்றது.

**ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே - என்கிறார் மாணிக்கவாசகர்** - திருவாசகம்

எனவே ஞானமே வேல். சூரியன் எதிர்பட்டா லன்றி இருள் கெடாது. அதுபோல் அறிவை அறிந்தால் அன்றி அறியாமை அகலாது. உயிர் கள் அவ்வறிவை அறிவதே ஆகும் பொருள். அருணகிரிநாதரும் அறிவை அறிவது பொருள் என்பதையே - முருகப்பெருமான் சிவபெரு மானுக்கு உபதேசித்தார் என்று கூறுகின்றார்.

**அரவு புனைதரு புனிதரும் வழிபட**

**மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்**

**அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே**

**அறிவால் அறிந்து உன் இருதாளிறைஞ்சும்**

**அடியார் இடைஞ்சல் களைவோனே...** பாடல் 101
"விறல்மாரன் ஐந்து" (திருச்செந்தூர்)

அறிவே உருவானது கந்தன் திருவடி. அறிவும் அறிவை அறியச்செய்யும் பொருளும் அறிவு ஒன்றேயாகும். அறிவே உருவான கந்தன் திருவடியை அறிய வேல் வழிபாடே வகை செய்யும். எனவே வேற்பூசையே குகனுக்குரிய வழிபாடாகும். அது ஒன்றே மெய்ப்பேறு நல்கி உயிரை உய்விக்கவல்ல தாகும்.

**தன்னையன் பொடுபாடி ஆடும் ப்ரதாபமும்**

**தலைமையும் பெற்ற வைவேல்...**

வேல் விருத்தம் பாடல் 6
"பந்தாடலிற்கழ"

இங்ஙனம் வடிவாகியுள்ள தெய்வம் வேல் ஒன்றே. ஆகவே அனைவரும் நித்தம் ஆராதிக்கவேண்டிய தெய்வம் ஏதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்து ஆராய்ந்தால் வேல் ஒன்றே என் பதை அறுதியிட்டுக் கூறலாம்.

**வாலாயுதக் கரத்து இந்திரணாதியர் வாழ வைத்து**
**மாலாயுதத்தின் அவமானம் தீர்த்து மடிவில் சிவன்**
**சூலாயுதத்தின் துணையாய்க் குகன் கையில்**
**தோற்றும் வெற்றி**
**வேலாயுதத்துக்கு மேலாயுத மென்ன வேறில்லையே.**

சிவன் சூலாயுதத்தின் துணையாயும், பராசக்தியே பரிணமித்துள்ளதாயும், சரஸ்வதி, இலக்குமி, பார்வதி ஆகியோர் போற்றிப் புகழும் மேன்மையுடையதாயும் மாமுருகனே தஞ்சம் அடைந்திருக்கும் சிறந்த பொருளாயும் உள்ள கந்தவேளின் திருக்கை வேலின் மகிமை எங்கள் நல்லைக் கந்தனின் வேல் வடிவில் முழுமைபெறுகிறது.

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## விகாரி வருஷம் ஆவணி மாதம் - 2019
## மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 05.08.2019 | திங்கள் | வைரவர் சாந்தி உற்சவம் | மாலை 4.45 மணி | |
| 06.08.2019 | செவ்வாய் | கொடியேற்றம் | பகல் 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 15.08.2019 | வியாழன் | மஞ்சம் | மாலை 04.45 மணி | (10ம் திருவிழா) |
| 22.08.2019 | வியாழன் | அருணகிரிநாதர் உற்சவம் | மாலை 07.00 மணி | (17ம் திருவிழா) |
| 23.08.2019 | வெள்ளி | கார்த்திகை உற்சவம் | மாலை 04.45 மணி | (18ம் திருவிழா) |
| 24.08.2019 | சனி | சூர்யோற்சவம் | காலை 07.00 மணி | (19ம் திருவிழா) |
| 25.08.2019 | ஞாயிறு | சந்தானகோபாலர் | காலை 07.00 மணி | (20ம் திருவிழா) |
| 25.08.2019 | ஞாயிறு | கைலாசவாகனம் | மாலை 04.45 மணி | (20ம் திருவிழா) |
| 26.08.2019 | திங்கள் | கஜவல்லி மஹாவல்லி | காலை 07.00 மணி | (21ம் திருவிழா) |
| 26.08.2019 | திங்கள் | வேல்விமானம் | மாலை 04.45 மணி | (21ம் திருவிழா) |
| 27.08.2019 | செவ்வாய் | தெண்டாயுதபாணி | காலை 07.00 மணி | (22ம் திருவிழா) |
| 27.08.2019 | செவ்வாய் | ஒருமுகத் திருவிழா | மாலை 04.45 மணி | (22ம் திருவிழா) |
| 28.08.2019 | புதன் | சப்பறம் | மாலை 04.45 மணி | (23ம் திருவிழா) |
| 29.08.2019 | வியாழன் | தேர் | காலை 07.00 மணி | (24ம் திருவிழா) |
| 30.08.2019 | வெள்ளி | தீர்த்தம் | காலை 07.00 மணி | (25ம் திருவிழா) |
| 31.08.2019 | சனி | பூங்காவனம் | மாலை 04.45 மணி | (26ம் திருவிழா) |
| 01.09.2019 | ஞாயிறு | வைரவர் உற்சவம் | மாலை 04.45 மணி | (27ம் திருவிழா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை

**சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம்**
ஓய்வுநிலை அஞ்சலதிபர்

முருக வழிபாடு மிகப் பழைமையான வழிபாடாகும். உலகில் முதலில் மலைகள் தாம் தோன்றின என்பர் அறிவியலாளர். மலையும் மலை சார்ந்த பகுதியும், "குறிஞ்சித் திணை" என்றும் அழைத்தனர் சங்க காலத் தமிழர். அந்தக் குறிஞ்சிக்கு முருகனைத் தெய்வம் என்றும் கூறினார்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் இன்று வணங்கும் ஒரு தெய்வம் முருகன் ஆகும். எங்கே புதிதாகக் கோயில்கள் கட்டினாலும் அதில் முருகனுக்கு ஒரு சன்னதி இருப்பதாகக் காண்கின்றோம். உலகெங்கும் உள்ள தமிழர்கள் முருகப் பெருமானின் இந்தியாவில் உள்ள ஆறுபடை வீடுகளுக்கும் சென்று ஷண்முகனைத் தரிசித்து மனநிறைவு பெறுகின்றனர். இப்படிப்பட்ட "ஆறுபடை" வீடுகள் சார்ந்த முருக வழிபாட்டு நெறியை நமக்கு முதலில் அறியத் தந்தவர் "திருமுருகாற்றுப்படை" என்ற நூலை இயற்றிய மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரர் ஆவர்.

தமிழல் உள்ள பக்தி நூல்களில் மிகவும் புராதனமானது நக்கீரர் இயற்றிய 317 அடிகளைக் கொண்ட பக்திப் பனுவலான "திருமுருகாற்றுப்படை" ஆகும். இத்திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டில் முத்துப் பாட்டாய் முதலில் வைத்து வழங்கப்படுகிறது. முழுவதும் அழகிய குமரன் பற்றிய முழு நூல் என்பதாலும் தெய்வப் புலமையும் தீந்தமிழ் உணர்வும் ஓங்கியதாலும், இது திருமுறைகளில் பதினொராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. மறைகளின் முடிவால், வாக்கால், மனத்தினால் அளக்கவொண்ணா முருகன் பெருமைகளை பறைசாற்றுகிறது. சங்ககாலப் பல பாடல்களில் முருகனின் சிறப்புக்கள் கூறப்பட்டிருந்தாலும் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையே முருகனின் பெருமையை எடுத்துக் காட்டும் முதல் நூலாக அமைகிறது.

ஏனைய ஆற்றுப்பாடல்கள் சாற்றும் பொருள் எத்துணை உயர்வானதாயும் அவை வாழ்வியல் (லௌகிக) நோக்கம் பற்றியவை. மேலோட்ட வாரியாகப் பார்ப்போம். ஆனால் இதன் கருத்து : ஒரு வள்ளலிடம் பரிசுகள் பல பெற்றுத் தன் வறுமையைப் போக்கிக் கொண்ட ஒருவன், வறுமையில் வாடும் இன்னொருவனை அந்த வள்ளல் இருக்குமிடம் போகும் வழி, வள்ளலின் ஊர், பெயர் அவன் குணங்கள் யாவற்றையும் கூறி, "அவனிடம் சென்று உன் வறுமையை நீக்கிக் கொள்" என்று ஆற்றுப்படுத்துவது இப்பாடல் வகையின் இலக்கணம். இப்பாடல் வகையே தமிழரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. தனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கிட்டிய செல்வம் மற்றவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் தெரிகிறது. ஆனால் இதன் உட்கருத்து ஈண்டு நோக்கற்பாலது. திருமுருகாற்றுப்படை என்பது வீடு பெறுவதற்கு பக்குவமுடைய ஒருவனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவது என்ற பொருளில் வருகிறது. அதாவது இங்கு ஜீவன் முக்தி நிலை பேசப்படுகிறது. நக்கீரர் ஒரு புதுமையாய் இப்பாடலுக்கு முருகனைப் பாட்டுடைத் தலைவனாய் வைத்துள்ளார். அதனால் இந்த நூலுக்கு முதலில் இருந்த "புலவராற்றுப்படை" என்ற பெயர் வழக்கொழிந்து, "திருமுருகாற்றுப் படை" என்றே பெயர் நிலைத்து விட்டது.

இந்நூலில் போற்றப்படும் ஆறு வீடுகள் : திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவிநன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை பெரும்பாலானோர் திருவாவிநன்குடி பழனி என்றும் பழமுதிர்ச்சோலை அழகர் கோயில் என்றே நம்புகின்றனர். ஐந்தாவது படைவீடு என்று, திருத்தணியைக் குறித்தாலும் முருகன் இருக்கும் எல்லாக் குன்றுகளும் இதில் அடக்கம்.

திருமுருகாற்றுப்படையின் முதல் பகுதியில் முருகனின் உருவ அழகு, சூரரமகளிர் விளையாட்டு, பேய் மகள் துணங்கை, சூரசங்காரம், மதுரையின் பெருமை, பரங்குன்றத்தின் இயற்கை வளம் சொல்லப்படுகிறது. திருப்பரங்குன்றப்படை வீட்டின் "உலகம்" என்ற மங்களச் சொல்லுடன் தொடங்குகிறார் நக்கீரர்.

**"உலகம், உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு**
**ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"**

மேருவை வலம் வந்து, நீலக் கடலிடத்தே எழுகின்ற கதிரவன் அன்பர்கள் உள்ளகத்தே ஒளிருபவருமாகிய இயற்கை ஒளியாக விளங்கும் முருகப் பெருமான் என்றவாறு இரண்டாவது படை வீடான திருச்செந்தூரில் முருகப் பெருமான் புராண புருஷனாகவும், ஆகமப் பொருளாகவும் காட்சி தருகிறான். இங்கு ஆறுதிருமுகங்களின் மாண்பும் செயலும் பன்னிரு கரங்களின் மாண்பும் செயலும் விரித்துக் கூறப்படுகின்றன.

**"வைந்நுதி பொருத வடுகூழ் வரிநுதல்**
**வாடா மாலை ஓடையொடு துயல்வரப்**
**படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்**
**கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ப்பின்**
**கால் கிளர்ந்து அன்ன வேழும் மேல் கொண்டு"**

முருகப் பெருமான் யானை மீது ஏறி வருகிறான். அங்குசத்தின் கூரிய நுனி பதிவதால் வடு விளங்கும் அழகிய யானையின் மத்தகத்தே பொன்னரி மாலையும் பட்டமும் கிடந்து அசைகின்றன. வேகமாக நடக்கும் அந்த யானையின் இரு மருங்கிலும் தாழ்ந்து கிடக்கும் மணிகள் மாறி மாறி ஒலிக்கின்றன. இவ்வாறு முருகன் ஏறி வரும் அழகினையும் நடையினையும் வலிமையையும் கூறுகிறார் புலவர்.

அடுத்து மூன்றாம் படை வீடான திருவாவினன்குடிப் பகுதியில் முருகனின் சொரூப இலட்சணத்தை கூறுகிறார். திருமால் உள்ளிட்ட பெருங்கூட்டம் முருகப் பெருமானைக் காணச் சென்று கொண்டிருக்கிறது. முதலில் முனிவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இறையறிவு கைவரப் பெற்ற இம் முனிவர்கள் இம்மையிலேயே வீட்டின்பம் பெறும் சிவன்முக்தர்கள். இவர்கள் கற்றவர்களுக்கு வரம்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் தலைமையும் தகவும் உடைய வர்கள். அதோடு காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக் குற்றங்களின் நாமமும் கெட்ட மெய்க்காட் சியாளர்கள், அதனால் நக்கீரர் "கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்" என்பதோடு "காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்" என்றார். இம்முனிவர்கள் எந்நாளும் இன்பமன்றித் துன்பத்தை அறியாதவர்கள் "இடும்பை யாவதும் அறியா இயல்பினர்" இவ்வாறு முனிவர்கள் முன்னே செல்ல, அவர்களைத் தொடர்ந்து யாழி சைக்கும் கந்தருவர் தம் மகளிரோடு செல்கின்றனர். இவர்கள் யாழின் இசையிலேயே பயின்று நன்மை உடைத்தான நெஞ்சம் கொண்டதனால் எக்காலமும் இனிய மென் மொழியே பேசும் இயல்பினர். இனி இவர்களைத் தொடர்ந்து வரும் தேவர்கள் யார் யார் என்பதையும் அவர்களின் இயல்புகளையும் கூறுகிறார். முதலில் திருமால் வருகிறார் அவர் கருடக் கொடியுடன் வருகிறார். அத் திருமாலான வர் உயிர்களைக் காக்கும் தன்மை கொண்டவர். திருமாலை அடுத்து உருத்திரன் வருகிறார்.

உமாதேவியை ஒரு பாகத்தே கொண்ட வனும், முக்கண்ணனும் திண்ணிய தோள் களைக் கொண்டவனும் திரிபுரங்களை அழித்த பெருமையை உடையவன் உருத் திரனாவான்.

**"வெள்ளேறு வலவயின் உயரிய பலர் புகழ்**
**திணிதோள்**
**உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்,**
**மூஎயில்**
**முருக்கிய முரண்மிகு செல்வனும்"**

இதனை அடுத்து இந்திரனும் அவனைத் தொடர்ந்து ஏனைத் தேவர்களும் வருகின் றனர் என்று காட்டுகிறார் நக்கீரர்.

அடுத்து நான்காம் படைவீடாகிய திரு வேரகம் பற்றிப் பேசப்படுகிறது. இங்கு முருகனை வழிபடும் அந்தணரின் இயல்பு வர்ணிக்கப்படுகிறது. இத் தலத்தில் முருகப் பெருமான் யோக நிலையில் இருந்து அருளுகிறான் என்பர் ஆன்றோர்.

ஐந்தாம் பகுதியாகிய குன்று தோறாட லில் குன்றில் வாழும் மக்கள் ஆடும் குரவை, முருகன் தேவ மகளிரொடு ஆடுதல் போன் றவை கூறப்படுகின்றன. குன்றுகள் பல வற்றையும் கூறுதல் எளிய காரியமன்று என்பதால் அவற்றை ஒரே தொகுதியாக் கிக் குன்று தொறாடலும் நின்றதன் பண்பே' என்று கூறுகிறார்.

ஆறாம் பகுதியாகிய பழமுதிர் சோலை யில் முருகப் பெருமான் எழுந்தருளியிருக் கும் இடங்கள் குறமகள் செய்யும் பூசை, முருகனிடம் சென்று வழிபடும் முறை, அவனைத் துதிக்கும் வகை, அவன் ஏவலர் இயல்பு, அவன் அருள் செயும்விதம், பழ முதிர் சோலையின் இயற்கை வளம் போன்ற வற்றைக் காணக்கூடியதாக உள்ளது. நக்கீரர் மற்றைய தலங்களில் உறைபவன், சேர்பவன், அசைபவன், உரியன், ஆடுப வன் என்று கூறி வந்தவர், இங்கு "பழமுதிர் சோலை மலை கிழவோனே" அதாவது 'பழ முதிர்சோலைக்கு உரிமை உடையவன் என்கிறார். ஆற்றுப்படுத்தப்படும் அன்பனு க்கு பெறலரும் பரிசாகிய சிறந்த வீட்டுலக இன்பத்தை தருபவன் என்று நூலை நிறைவு செய்கிறார்.

முருகனின் ஆறுமுகங்களைப் பற்றி இரண்டாவது ஆற்றுப்படை கூறும் பாங்கு மிக மிக அழகுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன் றொருமுகம் ஒரு முகம்**
**ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்**
**காதலின் உவந்து வரங் கொடுத்தன்றே ஒரு முகம்**
**மந்திர விதியின் மரபுளி வழா அ**
**அந்தணர் வேள்வியோர்க் கும்மே ஒரு முகம்**

**எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்**
**திங்கள் போலத் திசை விளக்கும்மே ஒரு முகம்**
**செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்**
**கருவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே**
**ஒரு முகம்**
**குறவர் மட மகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொடு நனையமர்ந் தன்றே"**

கடைசியாக நக்கீரரின் ஒரு பரிந்துரையை முன்வைப்போம்

**"செவ்வேற் சேஎய்...**
**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம் புரிந்துறையும்**
**செலவு நீ நயந்தனை யாயின், பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப**
**இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"**

சிவந்த வேலையுடைய செந்நிறத் தெய்வமான முருகனின் செம்மைத் திருவடியை சென்றடையும் நோக்கோடு நீ செய்த நல்வினையினாலே இனிய வீடு பேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவாய் என்பதாகும்.

இந் நூலின் பயனைச் சொல்கிறது ஒரு பழம் வெண்பா

**"நற்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்**
**படையைத்**
**தற்கோல நாள் தோறும் சாற்றினால்**
**- முற்கோல**
**மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்**
**தான் நினைத்த எல்லாம் தரும்"**

முற்காலத்தில் இந்நூல் கவசம்போல் மக்களால் பாராயணம் செய்யப்பட்டு வந்தது.

எனவே நமக்காகப் படைக்கப்பட்ட முருகப் பெருமான் புகழ்கூறும் அரிய நூலாகிய திருமுருகாற்றுப்படையை பொருள் உணர்ந்து ஓதி பிறவிப்பயனைப் பெறுவோமாக!

## நவதள இராஜகோபுரம்

நல்லூர் ஷண்முகப் பெருமானின் நவதள இராஜகோபுரம் இரண்டாவது தடவையாக வர்ணம் பூசப்பட்டு திருக்குடமுழுக்கு 2017ம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகளால் மீண்டும் துலங்கியது சைவம்

**சைவச்செம்மல் மதிவாணர் செ.மதுசூதனன்**
(வசந்தாமணாளன்)

ஆதியில் மனிதனின் அறிவு வளர்ச்சியில் இறைவழிபாடு ஏற்பட்டதாயினும், மதவழிபாடு தோன்றவில்லை. இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, இயற்கையையே வழிபட்டனர். தமிழகத்தில் நிலங்களுக்கெனத் தெய்வங்கள் வழிபடப்பட்டன. "மாயோன் மேய காடுறை உலகமும் சேயோன் மேய மைவரை உலகமும் வேந்தன் மேய தீம்புனல் உலகமும் வருணன்மேய பெருமணல் உலகமும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்பது தொல்காப்பியம். தமிழ் கூறும் நல்லுலக மாந்தர் இறைவழிபாட்டிற்காக, இலிங்கமும் பீடமுமாயமைந்த சிவலிங்கத்தை அமைத்து, அம்மையப்பராகக் கருதி, பூவும், நீரும் கொண்டு, பூசனை புரிந்தனர். சிவனையும், சக்தியையும் ஒன்றாகக் கண்டு சதாசிவன் என்றனர். இது அருவுருவ வழிபாடாயிற்று. அதன் பரிணாம வளர்ச்சியில் சக்திவேறு, சிவன் வேறு என்னாத வகையில், தூக்கிய திருவடி கொண்ட நடமாடும் நடராஜ வடிவில் (கூத்தப்பிரான்) சிவபெருமானை முழு முதற் கடவுளாகப் பெருந்தெய்வமாகப் போற்றி மகிழ்ந்தனர். பிறவாயாக்கைப் பெரியோன் எனவும் போற்றினர். அவர் ஒரு வரே கடவுள் எனவும் ஏனைய தேவர்கள், தேவதைகளைச் சிறு தெய்வங்களாகவும் கருதி வழிபட்டனர். உலகனைத்தையும் திருவுடம்பாகவும், பேசப்படும் மொழிகள் அனைத்தையும் வார்த்தையாகவும், சந்திரன் நட்சத்திரங்கள் ஆகியனவற்றை அணிகளாகவும் கொண்டிலங்கும் அந்தப் பரிசுத்தமான சிவனை "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று மணிவாசகர் பாடி வழிபட்டார். இவ் வழிபாடே சைவமாயிற்று.

### சிந்துவெளி நாகரிகம்

சைவத்தின் மேன்மையைச் சிந்து வெளி நாகரிகம் காட்டுகின்றது. இலச்சினைகள், கல்வெட்டுக்கள், இலிங்கங்கள், தாயித்துக்கள் சைவத்தின் தொன்மையை எடுத்துக் கூறுகின்றன. உயர்ந்த பண்பாட்டுடன் ஆலயங்கள் அமைத்து உருவ வழிபாடு செய்து வந்தவர்கள் திராவிட சமுகத்தவராகவிருந்தனர். இயற்கை அழிவு, போர், ஆரியரின் வருகை போன்றவற்றால் இந்நாகரிகம் அழியத் தொடங்கியது. தமிழர்கள் சங்கம் வைத்து அறிவு நூல்கள் இலக்கியங்கள் போன்றவற்றை இயற்றி, உலகியல் வாழ்க்கையை மேம்படுத்தினர். அதேவேளை ஆரியர் ஆன்மிகம் சம்பந்தமான புராண இதிகாசங்களை வடமொழியில் யாத்து, மதவழிபாட்டை மேம்படுத்தினர். வேதங்களை நான்காக வேதவியாசர் (இருக்கு, யசுர், சாமம், அதர்வம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்தார். அதற்கிணங்க வேதநெறி (வைதீக சமயம்) உருவானது. வேள்வி - யாகம் என்ற முறையில் ஆரியர் வழிபா டாற்றினர். வேதங்களை நான்காக தொகுப்பதற்கு முன்னர், அவை எழுதாமறை யாக (சுருதி) வாய் மொழி மூலம் நெட்டு ருப்பண்ணி வழிவழியாக வந்தமை குறிப் பிடத்தக்கது. உருவகப்படுத்திய பல தெய்வக் கொள்கையும் உருவானது. ஆரியரின் ஆக்கிரமிப்பு அமைதியான முறையில் தமிழகத்தில் வேரூன்றியது. தமிழர் நாகரிகமும், ஆரிய கலாசாரமும் பிரித்தறிய முடியாத படி கலப்புறலானது. தமிழரின் சைவநெறியும், வேதநெறியும் ஒன்றாயது. சைவத்தில் சிவன் எனக் குறிப் பிடப்பட்ட தெய்வத்தை வேதகால உருத் திரனாக ஆரியர் இணைத்துக் கொண்ட னர். சேயோன் எனப்பட்ட முருகனை ஸ்கந்த னென்றும், திருமாலை விஷ்ணு வென்றும், வேந்தனை இந்திரனென்றும், கொற்றவையைத் துர்க்கையெனவும் ஆக் கிக் கொண்டனர். சிந்துவெளி நாகரிகத் திலிருந்து சிவ வழிபாட்டை இந்திய ஆரி யர் ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படுவ தால் சிவன் தமிழர்களின் வழிபடு தெய்வம் என்பது புலனாகின்றது. படைத்தல், காத் தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்கின்ற சிவனையே ஆரியர்கள் தங்கள் அழித்தல் தொழிலுக் குரிய உருத்திரனோடு ஒப்பிட்டனர் எனலாம். இவ் வேளை வடநாட்டில் பல வைதிக மதங்கள் தோற்றம் பெற்றிருந்தனவாயி னும் சிந்து நதிக்கப்பாலிருந்தவர்கள், அனைத்தையும் ஒன்றாக்கி இந்து மதம் என்றனர். நாவலந்தீவு என்றும், பரத கண்டம் - பாரத தேசம் என்றும் குறிப்பிடப் பட்ட பெரு நிலப் பரப்பை இந்தியா என்றும் குறிப்பிடலானார்கள். இந்து மதமென் றொரு மதம் இருந்த தேயில்லை.

## தத்துவங்கள்

நிலம், நீர், தீ, காற்று, வெளி என்ற ஐம் பெரும் பூதங்களாலாயது இப்பிரபஞ்சம். இதன் உயிர் கடவுள். பண்டைய சைவ நெறிப்படி கடவுள் சிவனெனப்படுகின்றார். சிவனெனப்படுவது ஆண்மையும் பெண் மையும் கலந்த வடிவம் (அர்த்தநாரி) ஆகும். "உடையாள் உன்றனடுவிருக்கும், உடையாள் நடுவில் நீ இருத்தி" என்பது மணிவாசகர் வாக்கு. சிவனின் வலது பாகம் ஆணாகவும், இடது பாகம் பெண் ணாகவும் கூறப்படுகின்றது. பெண் நீல நிறமாகவும் ஆண் செம்மை நிறமாகவும் வர்ணிக்கப்படுகின்றது.

நீல மேனி வாலிழை பாகத்தொருவன் என்பது இதனை விளக்கும் உலகிலுள்ள இயற்கியற் பொருட்கள், நிலையியற் பொருட்கள் யாவற்றிலும் ஆண், பெண் பேதங்கள் உள்ளதை நாமறிவோம். ஆண் தன்மை சிவமாகவும், பெண் தன்மை சக்தி யாகவும் (கடவுள் + திருவருள்) கொள்ளப் படுகின்றன. விஞ்ஞான ஆய்வாளர்கள் உலகம் அக்கினிப் பிழம்பிலிருந்து உண் டானதாகக் கூறுவர். அவற்றிலிருந்து நீரும் நிலமும் வாயுவும் ஆகாயமும் எல்லாம் உண்டாயின. ஆகவே, அக்கினியைச் சிவ மெனவும் சலத்தைச் சக்தியெனவும் கொணடனர். நமது பூமியிலிருப்பது போன்ற பொருட்கள் மற்றைய அண்டங் களிலும் உள்ளன. எல்லா உலகத்திற்கும் ஒரே உற்பத்தியானமையால் ஒரே குண முள்ள பொருட்கள் எங்கும் காணப்படுகின் றன. எமது உடலும் ஐம்பெரும் பூதங் களாலானதேயாம். "தன்னிலைமை மன்னு யிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பிரான்" என்பது திருவருட்பயன் கூறும் தெய்வ நிலையாகும்.

(அ) "சோதியே சுடரே சூளொழி விளக்கே சுரிகுழற் பணை முலை மடந்தை பாதியே பரனே"

(ஆ) "நம் தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்"

(இ) தென்னன் பெருந்துறையின் மேயானை, வேதியனை மாதிருக்கும் பாதியனை" என்றும் மணிவாசகர் கூறுவதோடு,

**"தோலும், துகிலும் குழையும் சுருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும் பைங்கிளியும்**
**சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்**
**கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"**

என்று தொண்மைக் கோலம் குறித்தும் பாடியுள்ளார்.

**"நீலமேனி வாலிழை பாகத்தொருவன் இருதாள் நிழற்கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"**

எனச் சங்ககால நூலான ஐங்குறு நூறு கூறுகின்றது.

**"சங்கமும் சக்கரமும் தாமரைக்கையேந்திச்**
**செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்**
**கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து**
**மங்கையுருவாய் மறையேத்தவே நிற்பாய்"**

என்று கூறும் சிலப்பதிகாரம் "பிறவா யாக்கைப் பெரியோன்" எனவும் சிவனைக் குறிப்பிடுகின்றது. "வெந்தநீறு விரையெனப் பூசியே, தந்தையாரொடு தாயிலர் தம்மையே" என்று திருஞானசம்பந்தர் தேவாரம் தெளிவுபடுத்துகின்றுது. "பால் புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீலமணி மிடற் றொருவன்போல மன்னுக பெரும" என்று சங்ககால ஒளவையார், கருநெல்லிக் கனியீந்த அதியமானைப் புகழ்ந்து வாழ்த்தினார். நம்மவர் அதியமானைப் பாடிய ஒளவையாரும் ஆத்திசூடி, வாக்குண்டாம் பாடியவரும் சுந்தரர் காலத்தில் விநாயகர் வழிபாடாற்றிய ஒளவையாரும் ஒருவரென நினைப்பது அறியாமையாகும். சங்ககாலத்தில் விநாயகர் பற்றி எவரும் அறிந்திலர். கணபதி வழிபாடு காணப்பட்டதில்லை. சிறுத்தொண்டர் வாதாபி சென்று, வீரக்கொடி நாட்டி, அங்கிருந்த வேழமுகத்து விநாயகரை முதன்முதலில் தமிழகத்துக்குக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார் என்பது வரலாறு.

## பிறமதங்கள்

தமிழினம் பல்லாற்றலும் சிறப்புப் பெற்று விளங்கிய சங்க காலத்திற்குப் பிறகு, தமிழரல்லாத பிற இனத்தவர்கள், தமிழ் நாட்டில் யாண்டும் பரவினர். இதனால் தமிழகத்தின் தொன்மை நெறியான சைவமும் அதனுடன் ஓரளவு சிறப்புப் பெற்றிருந்த வைணவமும் செல்வாக்கிழந்தன. களப்பிரர் காலத்திற்குப் பின்னர், பல்லவ மன்னர்களின் காலத்தில், சமணமும், பௌத்தமும் மிக்க செல்வாக்குற்றிருந்தன. கி.மு 539-467ல் வர்த்தமான மகாவீரர் (ஜினர்) மகத நாட்டைப் பிம்பிசாரரும், அசாத சத்துருவும் ஆண்ட காலத்தில் "தூய நம்பிக்கை, தூய அறிவு, தூய நடத்தை" என்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்ட ஜைன மதத்தை நிறுவினார். வாழும் உயிர்களிடம் மனிதர் கருணை காட்டுவதே மிகுந்த அறம் என்றுரைத்த இச் ஜைன மதத்தவர்கள், நாளடைவில் சுவேதம்பரர், திகம்பரர் என்று இரு பிரிவினராயினர். தமிழ் நாட்டில் இம்மதம் சமணம் என்ற பெயரில் பரவியிருந்தது. சமணரைச் ஜைனரென்றும், அமணரென்றும் ஆருகதர், ஆசீலகர் என்றும் சொல்வதுண்டு. அழிவில்லாத உயிர் சீவனென்றும் உடலும் எனைய சடப்பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அசீவன் என்றும் சொல்லப்படுகின் றன. உயிர்கள் பல (அனந்தம்) எனவும், சட சம்பந்தமில்லாத போது, முற்றுணர்வும் முடிவிலாற்றலும் உடையன எனவும் சொல் வர். சாந்தமும் ஞானமுமே அவற்றின் இயல்பான சொரூபம் என்பர். உடலோடு சேர்ந்து, புலன் பொறி ஆகிய கட்டுகளால் அறிவு மழுங்குகின்றது. சீவன் சித்துப் பொருள், அசீவன் அறிவற்றது. அசீவத் தளையிலிருந்து விடுவித்துக் கொண்ட சீவன் நித்திய சித்தன் அல்லது அனாதி சித்தன், முத்தன், பெத்தன் என மூவகை யில் அடங்குகின்றது. அனாதி சித்தன் அசீவத் தொடர்பில்லாத இறைவனின் ஸ்தானத்தில் வைக்கத்தக்கவன். முத்தன் பாசத்திலிருந்து நீங்கியவன். பெத்தன் அசீவத் தொடர்பிலிருந்து நீங்காதவன் என்பது சமணம்.

கபில வஸ்துவில் சுத்தோதனன் என்ற சாக்கிய மன்னருக்கு மகனாகப் பிறந்த சித்தாத்தர், யசோதையை மணந்து இராகுலன் என்ற ஆண்மகவைப் பெற் றெடுத்த பின்னர், உலக வாழ்க்கையை துறந்து யோகத்திலாழ்ந்து மெய்யுணர்வு பெற்று புத்தரானார். ஆரியரின் உயிர்ப்பலி வேள்விகளையும் (யாகம்) சாதி ஆசாரங் களையும் வெறுத்த அவர், பிறப்பும் இறப் பும் கொண்ட மானிட வாழ்க்கை துன்ப மானதென்றும் ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றும் ஆசையை ஒழித்தல் பிறவிக் கடலிலிருந்து விடுபட்டு மோட்சம் பெற வழியென்றும் அதுவே நிர்வாணம் என்றும் போதித்தார்.

மேற்படி சமணம், பௌத்தம் ஆகிய வற்றுடன் ஆரியரின் மத வழிபாட்டு முறை களும் தமிழ் நாட்டில் பரவிய போது, வட நாட்டு மொழிகளாகிய பாளி, சமஸ்கிரு தம், பிராகிருதம் ஆகிய மொழிகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. தமிழ் மக்களிடம் தாய்மொழிப் பற்றுக் குறையத் தொடங்கியது. இவ்வேளையிற்றான் பக்தி மார்க்கம் தோன்றிச் சீர்குலைந்த தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்மொழிப் பற்றையும் வளர்த்தது எனலாம். "சிவனொ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை, அவனொ டொப்பர் இங்குயாவரும் இல்லை" என்பார் திருமூலர். தனித் தமிழர் மெய்யியலாகச் சைவம் விளங்குகின்றது. திருமூலரின் எல்லை, தமிழக எல்லைக்குள் தனித்த ஒன்றாக விளங்குவது காணலாம். சமண, பௌத்த எச்சங்கள் திருமூலரால் சைவ மாகக் குழைத்துத் தரப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. சீற்றமுற்ற வைதீகப் பிராமணராகிய திருஞானசம்பந்தர் சைவத்தையும் தமிழையும் பக்திப் பாடல் களால் வளர்க்க முன்வந்தார். ஞானசம் பந்தன் செந்தமிழ், நற்றமிழ் ஞானசம்பந் தன் அருந்தமிழ் ஞானசம்பந்தன் என்றும் தன்னையும் பாடல்களிற் பாடி, தமிழையும், சைவத்தையும் வளர்த்தார். திருநாவுக் கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற வர்களால் சைவத்தமிழும் பக்தி மார்க்க மும் பரவின. சைவமும் தமிழும் நம்மவர் களுக்கு இரு கண்களாகின. வீழ்ச்சியடை ந்த சைவமும், தமிழும் நாயன்மார்களு க்கு இரு கண்களாகின. தமிழும் நாயன் மாரால் எழுச்சி பெற்றன. "சொற்கோவும், தோணிபுரத்தோன்றலும் எம் சுந்தரனும் சிற்கோலி வாதவூர்த் தேசிகனும் - முற் கோலி வந்திலரேல் நீறெங்கே, மாமறை நூல்தானெங்கே எந்தை பிரான் திருவைத் தெழுத்தெங்கே?" என்ற பாவால் இதை நாம் அறியலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமுறைகள்

வைதீக சைவமும், தமிழும் செழித்து விளங்கத் திருமுறைகள் துணை நின்றன. இதனைச் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்கள், "தமிழின் வளம் குன்றா திருக்கத் திருமுறைகளும் ஒரு காரணம் தமிழின் இனிமை, இளமை இன்றும் மாறா திருக்க அருளாளர்கள் தந்த பொக்கிஷங்களான திருமுறைகள் காரணம். திருமுறைகளை நாம் கருத்தூன்றிப் படிக்க வேண்டும். இறை உணர்வுக்கு எதிராக எந்த இடர்களும் அணுகமுடியாது. எம் கடன் பணி செய்தல் என்றால், எம்மைப் பாது காக்கும் பணி இறைவனுக்குரியது எனத் திருமுறைகள் கூறுகின்றன. நாயன்மார்களின் வாழ்க்கைமுறை, வாக்கு என்பவற்றால், நாம் இவற்றை அறிந்து கொள்கின்றோம். பிள்ளைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை திருமுறைகள் நமக்கு வழிகாட்டுகின்றன. என்று கூறியுள்ளமை உற்று நோக்கத்தக்கது. உள்ளத்தைத் தொடும் மொழியிலேயே வழிபாடு செய்தல் வேண்டும். அதுவே பூரண பலனைக் கொடுக்கக் கூடியது. பகுத்தறிவுக்கு விரோதமான தீண்டாமை, புரியாத மொழியிலான வழிபாடு போன்றனவும் நியாயம் என்று வாதம் செய்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். தமிழனுக்குப் பெருமை தருவது சைவம் தான். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு சைவசித்தாந்தம் பற்றித் தெரியாது. அறிவு அனுபவத்தோடு பொருந்தியதான கொள்கையுடையது சைவசித்தாந்தம். தொல்காப்பியம், திருக்குறள் போன்றவற்றின் உட்கருத்துக்கள் சைவசித்தாந்தம் தான். சைவசித்தாந்த சிவ வழிபாட்டில் சாதி மத வேறுபாடு இல்லை. அதிகாலை எழுதல், தியானம் செய்தல், சைவசித்தாந்தங்களைக் கடைப்பிடித்து தொண்டு செய்தல் போன்றவை சிறந்த வாழ்வளிக்கும். சாதி வேற்றுமை கூறுபவர் முன் "ஒன்றே குலம்" என்பவரும், சமய வேற்றுமை கூறுபவர் முன் "ஒருவனே தேவன்" என்பவரும், இட வேற்றுமை கூறுபவர் முன் "யாதும் ஊரே" என்பவரும், இன வேற்றுமை கூறுபவர் முன் "யாவரும் கேளீர்" என்பவரும் அறிவுடையோராகக் காட்சியளிப்பர்.

### சமரச சன்மார்க்கம்

"அரியானை அந்தணர் தம் சிந்தையானை, அருமறையின் அகத்தானை, அணுவை யார்க்கும் தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகழ் ஒளியைத் தேவர் கடல் கோனை, மற்றைக் கரியானை, நான்முகனைக் கனலைக் காற்றை கன கடலைக் குலவரையைக் கவர்ந்து நின்ற பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்ற தேவாரத்தால், சைவம், மத வேற்றுமையில்லாத சமரச சன்மார்க்க நெறி என்பதைச் சுட்டுகின்றது. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்ற கொள்கையுடைய சைவர்கள், மற்றைய மதம் கூறும் தெய்வங்களை வெறுக்க முன்வரார் என்பது நிதர்சனம். இல்லற வாழ்க்கைக்கு முன்னுரிமை தரும் மதமாகியபடியாலும், பதி, பசு, பாசம் (கடவுள், உயிர், தளை) என்ற அடிப்படை உண்மைகளைத் தெளிந்து சைவத்தில் திளைத்து நிற்பவர்கள் எப்பொழுதும் சுத்த சமரச சன்மார்க்கத்தையே விரும்புவர். "சமய வாதி யொருவர் தனக்குரிய முறையில், தனது சமயத்தின் முடிந்த முடிபு இது தான் எனக் கொண்டுள்ள கொள்கையினால், மற்றொரு சமய வாதியின் கொள்கையிலுள்ள குற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மறுத்துரைப்ப தென்பது அக் கொள்கைக்கு இருப்பு இல்லாமல் போக வேண்டுமென்ற கருத்தினதன்று. அதற்கு மேற்பட்ட சிறந்த கொள்கைகளில், நாட் டல் கொள்ளாது இருப்பவரை நாட்டங் கொள்ளச் செய்யும் வழிமுறையாகும்" என்றே உமாபதி சிவாச்சாரியார் சித்தாந்த அட்ட கத்தின் இறுதி நூலாகி சங்கற்ப நிரா கரணத்தில் கூறிப் போந்துள்ளமையால், சைவசித்தாந்தமென்பது சமரச சன்மார்க்க நெறியாகின்றது. வேத நெறியும் சைவ நெறியும் கலந்த வைதீக சைவ நெறியையே திருஞானசம்பந்தர் தழைத்து விளங்க அருந்தொண்டாற்றியமை கண்டு கொள் ளத்தக்கது. எனவே மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மங்கல வாழ்த்தினைப் பாடுகின்றோம். வேத மந்திரங்கள், ஒலிப்பினாலேயே சிறப் புப் பெறும். உச்சரிப்புப் பிழைபடின் பயனும் மாறாகும். இது பலரும் அறிய வேண்டிய உண்மை. ஒலி சிறந்த வேதியர், வேதம் ஒழுங்கான உச்சரிப்போடு ஓதப்படாவிட் டால், உலகுக்கு கேடுண்டாக்கும். ஆகவே, தகுதியானவர்கள் மட்டுமே அதனைக் கையாள வேண்டும்." வேத மந்திரங்களை அவதானமாக ஓதுதல் வேண்டும். நம்மவர் களிற் சிலர் தமிழிற் பாடப்பட்ட "வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல் லாம்" என்ற மங்கல வாழ்த்தினைப் பாடும் போது லகர, ளகர பேதந் தெரியாது, பிழையான உச்சரிப்பில் "மேன்மை கொல் சைவநீதி, என்று மேன்மையைக் கொல் கின்ற சைவ நீதியே விளங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதையே கேட்க முடிகின்றது. அது தானே இப் பொழுது நிகழ்கின்றது. "பிறவாயாக்கைப் பெரியோன்" என்று கூறப்படும் எம் பெருமான் பேரருளா ளர், பிறவியில் சேரார் பிணியிலார், கேடிலர். அவரையும் அவதாரம் எடுப்பதாகச் சிலர் தவறாகக் கூறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, உண்மையை உய்த்துணர்ந்து ஒழுங்காக வாழ்வோ மாக!

## நல்லூர் குபேர வாசல்
## இராஜகோபுர கலசாபிஷேகம்

நல்லூர்க் கந்தன் ஆலய குபேர வாசல் நவதள இராஜ
கோபுரத்திற்கான கலசாபிஷேகம்
04.09.2015 வெள்ளிக்கிழமை அன்று (கார்த்திகைத் திருவிழா)
காலை 06.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் வாழ்வும்

**தேவராசா விஜிதா**
சுன்னாகம்

சைவம் என்றாலே பண்பாடு, விழுமியங்கள் பேணுதலாகும். விரதங்கள், பண்டிகைகள் சைவ மக்கள் வாழ்வில் இறையுணர்வையும் புனிதத்தன்மையையும் உருவாக்குகின்றன. சைவர்களுக்கு ஆலய வழிபாடு என்பது மிக முக்கியமானது. ஆலயம் என்பது ஆன்மாக்களின் வேண் டுதலை, வழிபாட்டை ஏற்றருள் புரியும் இடமாகும். அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளிலிருந்து மக்களை பாதுகாக்கும் சாதனங்களை தன்னகத்தே கொண்ட மதமாகும்.

அத்தகைய சைவத்தில் விரதமானது மிக முக்கிய பங்காற்றுகின்றது. விரதம் என்றாலே மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதலாகும். என நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதையும், சைவ மக்கள் வாழ்வில் தனித்துவமானது ஆலய வழிபாடு என்பதையும் இப்பாடல் அடிகள் வலியுறுத்தி நிற்கின் றன.

சைவ மக்கள் வாழ்வில் வீடு என்பது மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அவர்கள் வீடுகளைப் பார்த்தாலே பக்தியும், பரவசமும் மனதில் தானாக உருவாகும். அதிகாலை எழுந்து வீடு, வாசல் கூட்டி, துப்புரவாக்கி குளித்து, முழுகி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து வாசலிலே நீர் தெளித்து, கோலமிட்டு, வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி, தூபமிட்டு, பூவைத்து, பூமாலை, பாமாலை சூட்டி வீடே ஒரு கோயிலாக காட்சியளிக்கும் அழகோ மனதுக்கு இதம் தரும் தனித்துவமானது அத்தகைய சிறப்பு வாய்ந்த கொள்கையுடைய மதம் சைவமாகும்.

சைவ மக்கள் வாழ்வியலில் விரதங்கள், பண்டிகைகள் சிறப்பாக காணப்படுகின்றன. வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, கௌரி விரதம் எனப்பல விரதங்கள் மக்கள் மனதையும் வாழ்வியலையும் வர முறைப்படுத்தி வாழ வைக்கின்றன. சைவம் என்றாலே சிவனை முழுமுதலாகக் கொண்ட சமயமாகும். உலகைப் படைத்தவர் அவரேயானாலும் "சிவமின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை" என்ற தனித்துவமுணர்த்த சிவன் பாதி, உமை பாதியாக மாதொருபாகனாக உருவெடுத்திருக்கிறார்.

அத்தகைய தனித்துவமிக்க கடவுளின் சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக இலங்கையில் பல சிவன் கோயில்கள் காணப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. கீரிமலைச் சிவன், திருக்கோணேஸ் வரம், திருக்கேதீஸ்வரம், ஒட்டிசுட்டான் தான் தோன்றீஸ்வரம் பிரசித்திபெற்ற கோயில்களாக இன்னும் சிவன் சிறப்புக் கூறும் கோயில்களும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

அந்த கோயில்கள் தோறும் சிவ விர தங்களும் பூசைகளும் வழிபாடுகளும் சிறப்பாக நாளாந்தமும் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. சிவனுக்குரிய மந்திரங்களும் தேவாரங்களும் புராணங் களும் அவ்விறைவன் பால் மக்கள் கொண் டுள்ள அளவற்ற பக்தியை வெளிப்படுத்து வனவாக ஓதியும் பாடியும் பூசைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

அத்தகைய உலகைப் படைத்த சிவ னின் பிள்ளைகளாக விநாயகரும் முருக னும் சிறந்து விளங்குகின்றனர். உலகைப் படைத்த இறைவனைவிட தனித்துவமான கடவுளாக அவரின் மூத்த பிள்ளையான விநாயகர் சிறந்து விளங்குகின்றார். விக்கி னேசுவரர் என்றாலே விக்கினங்களை தீர்ப்பவர். இடையூறுகளை தடுப்பவர். அதனால் எந்தக்காரியம் தொடங்கும் போதும் அவரையே முதலில் வணங்கி ஆலயங்கள், வீடுகள் தோறும் எந்தச் செயலும் தொடங்கப்படுகின்றது.

அத்தகைய சிறப்புறு தெய்வமாக அவர் விளங்கிய போதும் தனிப் பெருங்கடவு ளாக முருகன் சிறப்படைந்து காணப்படு கின்றார். ஏனெனில் உலகைப் படைத்த சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றி ஆறு தீப்பொறிகளாக சரவணப் பொய்கை யில் வீழ்ந்து ஆறு குழந்தைகளாகி கார்த்திகைப் பெண்கள் அறுவரினால் வளர்க்கப்பட்டு உமையம்மையின் அர வணைப்பினால் ஆறுமுகங்களும், பன்னிரு கைகளும் கொண்டு உதித்தான். ஒரு முருகனாக அதனை கச்சியப்பச் சிவாச் சாரியார் கந்தபுராணத்தில், "அருவமு முருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக் கருணைகூர் முகங்களாறும் கரங் கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திருமுரு கன் வந்தாங்கு குதித்தனன் உலகமுய்ய" என்று பாடியிருக்கிறார்.

அந்த ஆறு குழந்தைகளையும் உமை யம்மை அணைத்த போது ஒரு உடலும் ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் கொண்டு தோன்றினார். அப்படி தோன்றிய குழந்தைக்கு கந்தன் என்ற பெயரை அம் மையப்பர் இட்டனர். அத்தகைய முருகன் புகழ்கூறும் நூல்களாக கந்தபுராணம், கந் தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுருகாற் றுப்படை, பிள்ளைத்தமிழ், கந்தர் கலி வெண்பா, சண்முக கவசம், திருப்புகழ் என்பன முருகனின் தோற்றம், வரலாறு, பெருமை கூறுகின்றன.

நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தால் சிறப்புறு தெய்வமாகக் காணப்படு வதுடன் அழகு என்ற சொல்லுக்கு முருகா என்னும்படி அழகிய தெய்வமாக விளங்கு கின்றார். ஔவையின் தமிழையே ஏளனம் செய்து அதற்குப் பொருள் உரைத்த தமிழ்க் கடவுள் முருகன் "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? எனக் கேட்டு மண் ஒட்டிய பழங்கள் சுட்ட பழங் கள் எனவும், மண் ஒட்டாத பழங்கள் சுடாத பழங்கள் எனவும் விளக்கமளித்து ஔ வையை வியக்கவைத்த தமிழ்க் கடவுள் என்ற பெயர் பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றி பிரணவ மந்திரத்தின் உட்பொருள் தெரியாத பிரமனை குட்டி சிறையில் அடைத்த சிறுவன் என்ற புகழ் பெற்றவர். அதற்கு விளக்கம் கூற, தனயனே குருவாக சுவாமிநாதராகி சிவனுக்கு உபதேசம் செய்த உபதேசக் கடவுள். விநாயகருக்கும் முருகனுக்கும் நாரதர் தொடக்கிவிட்ட போட்டியில் உலகையே மயிலில் சுற்றி வந்த ஒரு கடவுள். அத்தகைய கடவுளை மக்கள் வழிபட தைப்பூசம், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, வெள்ளிக்கிழமை விரதம் என்பன சிறப்பாக காணப்படுகின்றது.

கந்தசஷ்டி என்றாலே ஆறு நாட்கள் விரதமிருந்து வேண்டுதல் செய்யும் ஒரு விரதமாகும். 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்னும் தத்துவம் கூறும் விரதமாகும். அதாவது கந்தசஷ்டி பிடித்தால் குழந்தைப்பேறு உருவாகும் என்பதை கூறும் விரதமாகும்.

திருக்கார்த்திகை விரதம் என்பது 12 வருடங்கள் பிடித்தால் நினைத்த காரியம் கைகூடும். அப்படி ஒவ்வொரு விரதமும் ஒவ்வொரு விளக்கம் கொண்டு காணப்படுகின்றது. அத்தகைய முருகப் பெருமானின் புகழ்கூறும் கோயில்களாக இலங்கையில் மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி சிறப்புற்று விளங்குகின்றன. ஒவ்வொரு கோயில்களும் ஒவ்வொரு அருள் வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

மாம்பழக்கதையில் பெற்றோரை கோபித்துக்கொண்டு மலையில் போய் குடியிருந்தவர் ஔவையின் தமிழுக்கு கட்டுப்பட்டு, அவர் அறிவுரைகளைக் கேட்டு பின் கோபம் தணித்து பெற்றோருடன் சேர்ந்த முருகன் பெரியோர்கள் சொல்லுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும்படி நடந்து காட்டியவர். அத்தகைய முருகன்

**'நெற்றியில் உதித்தனன்**
**பொய்கையில் விழுந்தனன்**
**அன்னையர் அறுவரின்**
**அன்பினில் திளைத்தனன்**
**அம்மையின் அணைப்பினில்**
**ஒன்றென உருவானவன்**
**ஆறுமுகம் பன்னிருகை**
**கொண்ட மகனவன்**
**பிரமனை குட்டி**
**தந்தைக்கு சுவாமியானவன்**
**ஔவையின் தமிழை**
**அசர வைத்தனன்**
**அவனே முருகன்"**

அத்தகைய முருகனின் கோபம் தணிக்க ஔவையார் ஆறுவது சினம், கூறுவது தமிழ் எனும் உண்மை உணர்த்தி கோபம் தணித்து இன்முகங்காட்ட வைத்து பெற்றோரைச் சேர்ந்த கடவுள் முருகன். அத்தகைய கடவுள்கள் சைவத்தின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றனர். கடவுளின் விரதங்களிலும் வழிபாடுகளிலும் சைவமும் வாழ்வும் எப்போதும் 'பழமும் சுவையும்' போல இரண்டறக் கலந்து காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள் சமகால அவதானிப்புகள்

திரு.சி.ரமணராஜா
விரிவுரையாளர், இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

தமிழர்களின் பண்பாட்டு இருப்பு, தனித்துவ அடையாளம், அறிவியல் வளர்ச்சி என்பவற்றின் நிலைக்களன்களாகத் திகழ்பவை திருக்கோயில்களாகும். கோயிலுருவாக்கம் என்பது மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்ட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். தொடக்க காலத்தில் சிறு அளவில் அமைந்த கோயிலமைப்பு மக்களின் மனப்போக்கிற்கும் ஈடு பாட்டுக்கும் ஏற்றாற்போல படிப்படியாக வளர்ந்து பெரியகோயிலமைப்பைப் பெற்றுள்ளது. மனம் பக்தியில் ஊறிப்போனமையின் விளைவே இத்தகைய கோயிலமைப்புகள் உருவாவதற்கு வழிகோலியது என குறிப்பாகச் சுட்டலாம். திருக்கோயிற் பண்பாட்டு வளர்ச்சியின் படிமுறை நிகழ்வுகள் பலவாகும். கருவறையில் தொடங்கி மண்டபங்கள், தூண்கள், பிராகாரங்கள், விமானம், தூபி, திருச்சுற்று மதில்கள், திருச்சுற்று மாளிகை, மணிக்கோபுரம் மற்றும் கோபுரம் என்றவாறாக அந்நிகழ்வுகள் நீண்டிருந்தன. கோயில்களின் வழியாகச் சமூக உளவியலைத் தமது கட்டுக்குள் வைத்திருக்க கோயிலதிகாரத்தைத் வைத்திருந்தோர் கையாண்ட உத்தி, கோபுர கட்டுமானமும், "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற சிந்தனை வழியுருவான வழிபாடுமாகும்.

திருக்கோயில் கட்டடக்கலை மரபில் உன்னத அலகாகவும் அமைப்பாகவும் திகழ்வது கோபுரமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் கோபுர கட்டுமானத்தின் பரிமாணம் விசாலமடைந்திருப்பதனைக் காணலாம். குறிப்பாக இருபத்தியோராம் நூற்றாண்டின் முன்னிரு தசாப்தங்களில் மிகப்பரந்த அளவில் கோபுரக் கட்டுமானப்பணி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. "கோபுரங்களின் எழுச்சிக்காலம்" என விதந்துரைக்கத்தக்க வகையில் இக்காலப்பரப்பில் பிரம்மாண்டமான கோபுரங்கள் எழுச்சிபெற்றுள்ளன. இதனடிப்படையில் கோபுரங்கள் எழுந்த ஆலயங்களை இனங்காணுதல், கோபுரங்களின் கட்டமைப்பு, அழகியல் என்பவற்றை ஆய்வுக்குட்படுத்துதல், திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள் எழுந்தமைக்கான சமூகக்காரணிகளைக் கண்டறிதல் என்பவற்றை இலக்குகளாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது. ஆயினும் இது முழுமையான ஆய்வன்று. மேற்கூறிய நோக்கங்களின் அடிப்படையில் முழுமையான ஆய்வொன்று இடம்பெறுதல் வேண்டும். அவ்வாய்வுக்கான தொடக்கப் புள்ளியாக இக்கட்டுரை அமையும் எனக்கருதலாம்.

யாழ்ப்பாண மாவட்டம் என்பது யாழ்ப்பாணம், தீவகம், வலிகாமம், தென்ம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராட்சி மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்றுள்ள திருக்கோயில்கள் குறித்த ஆய்வுகள் பல்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றதாயினும், அண்மைக்காலங்களில் மகோன்னதமான வளர்ச்சியைப் பெற்றிருக்கின்ற கோபுரங்கள் குறித்த ஆய்வுகள் வெளிவரவில்லை. இதனடிப்படையில் அவை குறித்ததான ஆய்வுகள் அவசியமாகின்றன. இவ்வாய்வில் இலக்கிய மூலங்களைக் காட்டிலும் கள ஆய்வு பிரதான இடத்தினைப் பெறுகின்றது. கோபுரங்களின் அமைப்பு எந்த நூற் பிரமாணத்திற்கமைய அமைக்கப்பெறுகின்றது என்பது ஆய்வுப்பிரச்சினையாகவே உள்ளது.

**கோயிலும் கோபுரமும்**

கோயில் என்பது குறித்ததோர் இடத்தினை மட்டும் குறிப்பதன்று. தேர்வு செய்து வரையறுக்கப்பட்ட நிலம், அதில் கட்டப்பெறும் கருவறை (திருவுண்ணாழிகை) மண்டபங்கள், தூண்கள், திருச்சுற்றுப் பிராகாரங்கள், திருச்சுற்று மாளிகை, திருமதில், விமானம், கோபுரம், பரிவாராலயங்கள் எனப் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியதாக கோயில் உள்ளது. சமய நிறுவனங்களாகச் சிறப்பிக்கப்படுகின்ற கோயில்களானவை சமயம் விதித்த வரையறைகளைத் தாண்டி பண்பாட்டுக் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. திருக்கோயில் வழிபாடுகளும், கோயிலுக்கு அணி செய்து பெருமை சேர்க்கும் அதன் பகுதிகளும் தமிழர்களின் வாழ்வியலில் சிறப்பிடம் பெறுகின்றன. இப்பகுதிகளுள் விமானம், கோபுரம் என்பன திருக்கோயில்களுக்கு வனப்பைக் கொடுக்கும் வகையில் உயர்வானதாக அமைவுபெற்றிருக்கும் தன்மையன. இங்கு கோபுரம் என்பது, கோயிலின் நுழைவாயிலின் மேல் எழுப்பப்படும் அடிப்பக்கம் அகன்றும், மேல்பகுதி குறுகியும் பக்கங்களில் சிற்ப வேலைப்பாடுகள் கொண்டும் அமைக்கப்படும் உயர்ந்த கட்டடப் பகுதி[1] ஆகும்.

தமிழகக் கோயில்களை ஒரு குறியீட்டால் காட்டவேண்டுமெனில் அதற்கு கோபுரம் என்ற வடிவமே பொருத்தமுடையதாகும் என்கிறார் குடவாயில் பாலசுப்ரமணியம்.[2] கோயில் கட்டடக்கலையில் தலையாய இடம்பெற்றுத் திகழ்வது கோபுரம் எனும் கட்டுமானமே ஆகும். கோபுரங்கள் கட்டடக் கலைத்திறத்தை மட்டும் வெளிக்காட்டுபவை அல்ல. அங்கு சிற்பக்கலை செழித்தன் நாட்டியக்கலை பரிணமித்தன் இசையும், ஓவியமும் இழையோடின் அங்கு வரலாற்று நிகழ்வுகளும் பதிவாகின. அத்தகைய சிறப்புடைய தமிழகக் கோயில்களின் தலைவாயில்களாக திகழ்வன கோபுரங்களே எனவும் அவர் கூறுகின்றார்.

கோயிற்பண்பாட்டு வளர்ச்சியில் மற்றொரு நிகழ்வு, கருவறை என்னும் "வெளி" (space) முற்றிலுமாகப் பார்ப்பனர்களுக்கு உரிமையாக்கப்பட்டு "பிறர்" அதனுள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது என்பதாகும். அரசன் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத மக்களின் "சாதித் தாழ்வு" இதன்வழி நிலை நிறுத்தப்பட்டுவிட்டது என்கிறார் தொ.பரமசிவன்.[3] ஆனால் திருக்கோயில்களுக்கு கோபுரமாவது புறத்தே இருந்து மக்கள் அகத்தே புகுவதற்கு பிரதான வாயிலாகப் பயன்படுவதாகும். ஆன்மிகவாதிகள் கருவறையைத் தலை என்றும் கோபுரத்தை கால் பாதம் என்றும், கோபுர கலசங்களை பாதத்தின் விரல்கள் என்றும் மனித உடலமைப்புடன் திருக்கோயிலுறுப்புகளை மெய்யியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் நோக்குவர். கோயிலின் அமைப்பு, செல்வப்புழக்கம், மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு என்பனவற்றுக்கு ஏற்ப பல்வேறு மாடங்களுடன் (நிலைகள்) கூடிய தாக கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

**"கறைக்கண்டன் உறைகோயில் கோபுரக்**
**கோகர்ணம்**
**சூழாக் கால்களாற் பயன் என்"[4]**

என்று திருக்கோகர்ணத்து திருத்தலத்தை பாடுமிடத்து வினவுகிறார் அப்பர் சுவாமிகள். கால்களால் பயன் யாது? எனில் கோயில் கோபுரத் தரிசனம் செய்தலே என்பது அவரது பதிலாக அமைகிறது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அனைவராலும் தொலை தூரத்தில் நின்றும் தரிசிக்கக்கூடிய பகுதியாக கோபுரங்கள் அமைந்திருப்பதானது அதன் சமூக முக்கியத்துவத்தினை உணர்த்துகிறது எனலாம்.

## கோபுரம் எண்ணக்கரு விளக்கமும் இராச கோபுரம் பெயர்க்காரணமும்

கோபுரம் என்ற சொல் சமஸ்கிருதம், பிராகிருதம், பைசாசம் போன்ற மொழிகளில் தோற்றம் பெற்றுப் பின் தமிழுக்கு வந்த சொல்லாகும் என்பர். இச்சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளமையினை கால அடிப்படையில் வைத்து நோக்கும் போது தமிழ்மொழியில் இச்சொல் கையாளப்படுவதற்கு முன்பே பிறமொழி இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறியமுடிகிறது. "கோபுரம்" என்ற சொல் தமிழ்ச் சொல்லா? அல்லது பிறமொழிச் சொல்லா? என்பது குறித்து ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களை வழங்கியுள்ளனர். இது குறித்த சிந்தனையில் தேவநேயப்பாவாணரின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன.[5] "மாளிகை, கோபுரம், மணிமண்டபம் எனும் நாற்சொல்லும் தென் சொல்லே எனக்கூறி, அச்சொல்லை கோ புரம் எனப்பிரித்து பொருள் கண்டுள்ளார். கோ - அரசு, தலைமை என்றும், புரம் - உயர்வு என்றும் பொருள் கொண்டு "உயர்ந்த கட்டிடம்" எனவும் அச்சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகிறார். மேலும், கோபுரம் உள்ள நகர்களின் பெயர்களே முதலில் புரம் எனும் ஈறுபெற்றன என்றும் அதற்கு எடுத்துக்காட்டாக காஞ்சிபுரம், கங்கை கொண்ட சோழபுரம் என்றும் குறித்துள்ளார். ஈழத்திலும் மாவிட்டபுரம், சோழியபுரம் (சுழிபுரம்) உருத்திரபுரம், ஜனநாதபுரம் (பொலநறுவை) எனும் பெயர்களும் நினைவிற் கொள்ளத்தக்கன.

"கோபுரம்" எனும் சொல் தொடர்பில் குடவாயில் பாலசுப்ரமணியன் பலவாறான விளக்கங்களை அளித்துள்ளார். சங்கத் தமிழ் நூல்களில் "கோபுரம்" என்ற சொல் இடம்பெறவில்லை. சப்த கல்பத்ருமம் எனும் சம்ஸ்கிருத அகராதி, கோ - பசுக்கள், பிபர்த்தி - காப்பது என்ற சொற்களை கோபுரம் என்பதற்கு விளக்கமாகக்கூறி பசுக்களை காக்கும் இடம் என்ற ஒரு பொருளும், கோபலம் - காப்பாற்றுதல், கோபாயதி, நகரத்தை காப்பாற்றுவது என்று மற்றொரு பொருளும் கூறுகின்றது. மேலும், (குப்+உரம்) குப் + உரச் = கோபுரம் என்றும் அச்சொல்லைப் பிரித்தும் கூறுகின்றது. வடமொழியிலுள்ள இராஜ நிகண்டு எனும் நூல், கோபுரம், என்ற சொல்லை எடுத்துக் கொண்டு காம் - பூமியை, பயிர்த்தீதி - காக்கின்றது என்பதால் கோபுரம் என்றும் அழைக்கப்பெற்றதாகக் கூறுகின்றது. ஹிந்து கட்டடக்கலை பேரகராதி பசுவான காமதேனு உறையும் இடத்தை "கோமதிபுரம்" என வேதங்களும் "கோக்ருஹம்" என சமஸ்கிருத காப்பியங்களும் கூறுவதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக பசுக்கள் உறையும் இடத்தை அல்லது அவ்விடத்தின் வாயிலை கோபுரம் என்ற சொல்லால் குறிக்கத்தொடங்கி பின்பு ஒரு நகரம் அல்லது கோயில் ஆகியவற்றின் வாயிலை அதே சொல்லால் குறிக்கும் மரபு ஏற்பட்டது என்றும் விபரிக்கின்றது.[6] இச் சொல் குறித்த ஆய்வினைக் கால அடிப் படையில் குடவாயில் பாலசுப்ரமணியன் நிகழ்த்தியுள்ளார்.

தமிழகத்திலுள்ள பண்டைக் கோயில்கள் மண்டளிகளாகவே இருந்தன. இந்துக்கோயில் கட்டடக்கலை மரபினை வரலாற்றினடிப்படையில் நோக்குமிடத்து பல்லவமன்னர்களின் படைப்புகளே முத ன்மை பெறுகின்றன. அம்மரபு சோழர் காலத்தில் பரிணாம வளர்ச்சி அடைந்தது. கோபுரங்களைக் காட்டிலும் விமானங்கள் பெருவளர்ச்சி கண்டிருந்தன. விமானங் களின் எழுச்சிக்காலம் எனத்தக்க வகை யில் சோழர்காலம் கோயிற் கட்டடக் கலை வரலாற்றில் சிறந்த பேறுடைய, "கோபுரங் களின் எழுச்சிக் காலம்" எனப் போற்றத் தக்க வகையில் விஜய நகர நாயக்கர் காலம் சிறப்படைந்திருந்தது.

திருக்கோயிற் கலைகளுக்கு பேராதரவு அளித்து கோயிற் பண்பாட்டுக்கு புதுமலர்ச்சியையும், எழுச்சியையும் வழங்கி யவர்கள் விஜய நகர மன்னர்களும் இவர் களின் ஆதரவைப் பெற்ற மதுரை நாயக்க மன்னர்களுமேயாவர். விஜயநகர மன்னர் களுள் கோயிற் கட்டடங்களை விரிவுபடு த்தியதுடன் வானளாவிய பெரிய கோபுரங் களையும் கட்டி வழிகாட்டியவர் கிருஸ்ண தேவராயர் ஆவார். இவர் காலத்தில் எழுந்த கோபுரங்களை சிதம்பரம், திருவண்ணா மலை, திருவானைக்கா, காஞ்சிபுரம் முத லிய தலங்களில் காணலாம். ராயர் காலத்து கோபுரம் அல்லது ராயர் கட்டிய கோபுரம் ஆதலின் "ராயர்" கோபுரம் என குறிக்கப் பெற்று காலப் போக்கில் "ராச கோபுரம்" என வழங்கப்படலாயிற்று என்பர். தவிர ஆலயத் தில் மிகப் பெரியளவில் கட்டப்படும் கோபுரங் களும் இராச கோபுரங்கள் என அழைக்க படலாயின. இங்கு "ராஜ" என்பதில் அரச அதி காரத்தன்மையும், கோபுர கட்டுமானத்தின் கம்பீரத்தன்மையும் புலப்படுவதனை அவ தானிக்கலாம்.

இராஜ கோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பை கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன் கண் அமைக்கப் பெற்றி ருக்கின்றன. அவைகளுள் மானுட வடிவங் களை ஏராளமாகக் காணலாம். அவர்களு டைய விதம்விதமான வாழ்க்கை முறை களும் அங்குள்ள வடிவங்களில் விளக்கப் பெற்றிருக்கும். தேவர்களும், தேவர்களின் செயல்களும் வேண்டியவாறு இடம் பெற்றுள் ளன. விலங்குகள், பறவைகள் மற்றும் ஏனைய சிற்றுயிர்களும் இடம்பெறுகின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவையாவுக்கும் இட முண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், மக்களினம், தேவர் கூட்டம் ஆகியோர் பிரபஞ்சத்தில் இருக்கிறார்கள் அண்டத்தினுள் இன்னது தான் இருக்கிறது. இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லாப் படித்தரங் களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம் பெற்று இருக்கின்றன. இக்கோட்பாட்டை இராஜகோபுரம் உருவகப்படுத்தியுள்ளது. என்று இராசகோபுரத்தின் சிறப்பினை சுவாமி சித்பவானந்தர் எடுத்துக் கூறியுள் ளார்.[7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியும் கோபுரங்களின் எழுச்சியும்**

ஈழத்தில் திருக்கோயில் பாரம்பரியம் என்பது இன்று நேற்று உருவாக்கப் பட்டதல்ல. இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே திருக்கோயில் வழிபாடுகள் நிலவியமைக்கான சான்றுகள் பலவுண்டு. இன்று இருப்பது போல கோயிலின் அனைத்துறுப்புக்களுடனும் மிகப் பெரியளவில் காணப்படாவிட்டாலும் இந்துக்களின் ஆன்மிகத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு சிறியளவிலான ஆலயங்களாகவும் அவை இருந்திருக்கக் கூடும். பின்னாட்களில் மக்களின் வழிபாட்டுப் பெருக்கம் காரணமாக ஊர்கள் தோறும் எண்ணற்ற ஆலயங்கள் எழுந்திருக்கலாம். யாழ்ப்பாண மன்னர் காலத்தில் பல்வேறு இடங்களிலும் பலதெய்வங்களுக்கு கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆனால் 16ஆம் நூற்றாண்டில் சுதேசியர்களான இந்துக்களின் வாழ்வியற் செல்நெறியில் பாரிய மாற்றம் நிகழ்ந்தது. சுதேசிய மதம்சார் அழிப்புகளும் விதேசியப் பண்பாட்டுப் பரப்புதல்களும் அரசியல் ஆதரவோடு இடம்பெற்றன. போர்த்துக்கேயர்களால் இந்துக்களின் சமயப்பண்பாட்டு இருப்பிடங்களான கோயில்கள் இடித்தளிப்புக்கு உள்ளாகின. டச்சுக்கார ஆட்சியிலும் இத்தகைய போக்கே நிலவியது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நெகிழ்ச்சித் தன்மை காணப்பட்டது. விதேசியர்களின் செயற்பாடுகள் சுதேசிய மக்களின் கோயில் வழிபாட்டு மரபுகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. அந்நியர்களால் வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டு சமயத்தின் அடிநாதங்களான திருக்கோயில்கள் உருமறைப்புச் செய்யப்படினும் ஊர்கள் தோறும் நேரடியாகவோ மறைமுகமாகவோ திருக்கோயில் அமைக்கும் கைங்கர்யத்தை இந்துக்கள் நிறுத்தினார்களில்லை. ஈழத்தில் பைரவர் வழிபாட்டின் உருவாக்கச் சூழலை இப்பின்னணியிலேயே நோக்கவேண்டும். ஆக திருக்கோயில் பாரம்பரியம் என்பது தொன்மை வாய்ந்தது. இதன் வளர்ச்சிக் கட்டங்களின் தொடருறு நிலையினைப் பலவாறு அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத்து திருக்கோயிற் கட்டக்கலை வரலாற்றில் விமானங்கள் உயரமாகவும், கோபுரங்கள் சிறியதாகவும் அமைக்கும் நிலை காணப்படவில்லை. கோண்டாவில் சிவமகா காளிகோயிலிலுள்ள விமானம் மிகவும் உயரமானதாகும். ஆனால் அவ்வாலயத்தில் கோபுரம் இல்லை. மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் மேற்கு வாசலில் உள்ள கோபுரமே மிக உயரமானதாக அனைவராலும் சென்ற நூற்றாண்டு வரை கருதப்பட்டுவந்தது. இதுவே மிகவும் பழமையான கோபுரமாகவும் இனங்காணப் படுகிறது. இக்கோபுரம் முழுவதும் கருங்கற்களைக் கொண்டு ரங்கூன்பண்டாரம் என அழைக்கப்பட்ட நாகலிங்கதேசிகரால் அமைக்கப்பட்டது. வீரசைவ சமுகத்தை சார்ந்த இவரது பணிகள் திருக்கோயில் பண்பாட்டு விருத்தியில் தனித்துவமானவை.

கோயிலில் கோபுரங்கள் அமைக்கப்படும் விதம் மற்றும் எண்ணிக்கை என்பன அவ்வக் கோயிலின் சிறப்பும், மக்களின் அல்லது கோயில் அமைப்போரின் விருப்பங்களையும், செல்வப் புழக்கத்தையும் பொறுத்து அமையும். இவ்வாறான சில கோயில்களில் ஒரே கோபுரமும், ஒரே விமானமும் அமைவது உண்டு. சில கோயில்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோபுரங்களும், பரிவார தெய்வங்களைப் பொறுத்து விமானங்களும் பலவாக அமைவதும் உண்டு. சான்றாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலை திருக்கோயிலில் பத்துக் கோபுரங்களும் பத்து விமானங்களும் அமைந்திருப்பதனைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் அண்மைக்கால அவதானிப்புகளின் படி திருக்கோயில் செல்நெறியில் கோபுர கட்டுமானம் அதியுச்ச இடத்தைப் பெற்றிருக்கின்றது. பிரதான வாசல் பக்கமாக ஒரு கோபுரம் அமைப்பதே பிரதான இலக்காக இருப்பினும் இன்று சில கோயில்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோபுரங்கள் அமைக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கோபுரத்தை பொறுத்த வரையில் மாடங்கள் அல்லது தளங்களின் எண்ணிக்கையை மனதிலே கொண்டு ஆகம விதிப்படி கலசங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றன. பெரும்பாலும் புலக்காட்சிக்கு உட்படும் வகையில் கலசங்களை வரிசையாக அமைக்கும் நிலையே யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்றது. ஆனால் விமான கலசங்கள் விமான வகைகளுக்கு ஏற்ப வேறுபட்ட முறைகளில் அமைக்கப்படுகின்றன. கோபுர மாடங்கள் மற்றும் கலசம் என்பன ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று எனும் ஒற்றை எண்ணிக்கையில் அமைக்கப்படுவது மரபாக இருந்து வருகின்றது. பெரும்பாலான கோபுர கலசங்கள் உலோகத்தினால் அமைக்கப்படும்.

இந்தவகையில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம், முதலான பிரதேசங்களிலுள்ள சிவன், சக்தி, முருகன், கணபதி, விஸ்ணு, ஆஞ்சநேயர், வைரவர், ஐயனார், கண்ணகி, வீரபத்திரர் முதலான கடவுளர்க்குரிய கோயில்கள் கோபுரங்களுடன் கூடியதாக புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கமுடிகிறது. அதாவது குறிப்பிட்ட இக்காலத்தில் கோபுரங்களுடன் கூடியதாக எழுந்த ஆலயங்களாக பழன் வருவனவற்றை இனங்காணலாம். கீரிமலை நகுலேஸ்வரர் கோயில், ஆவரங்கால் சிவன் கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில், நல்லூர் சிவன் கோயில், நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில், நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோயில், நல்லூர் முத்துவிநாயகர் கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில், கரணவாய் முத்துமாரி அம்மன் கோயில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில், யாழ்ப்பாணம் வெங்கடேஸ்வர பெருமாள் கோயில், நயினை நாகபூசணி அம்மன் கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில், மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயில், மருதடி விநாயகர் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணிநாகபூசணி அம்மன் ஆலயம், கல்வளைப் பிள்ளையார் கோயில், இருபாலை கற்பகவிநாயகர் ஆலயம், அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில், கட்டப்பிராய் முத்துமாரியம்மன் கோயில், பன்னாலை பிள்ளையார் ஆலயம், அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி அளகொல்லைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி தெற்கு முத்துமாரியம்மன் கோயில், பணிப்புலம் அம்மன் கோயில் கோயில், பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுதர் ஆலயம், சுழிபுரம் பறாளை முருகன் கோயில், சித்தன் கேணி பிள்ளையார் கோயில், பிரான்பற்று அம்மன் கோயில், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில், சங்கத்தானை முருகன் கோயில், கைதடிப்பிள்ளையார் கோயில், சாவகச்சேரி முத்துமாரி கோயில், மாவடிப் பிள்ளையார் கோயில், மட்டுவில் துர்க்கையம்மன் கோயில், மட்டுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றிப் பிள்ளையார் கோயில், மண் கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், நாரந்தனை தான் தோன்றி ஸ்ரீமனோன்மணியம்மன் கோயில், புளியங்கூடல் ராஜமகாமாரி அம்மன் கோயில், வேலணை பெருங்குளம் ராஜமகா மாரி அம்மன் கோயில், மண்டைதீவு திரு வெண்காடு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம், புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில், முதலான கோயில்களில் எழுந்த கோபுரங் களை சில சான்றுகளாகச் சுட்டித்துக் கூற லாம். இக்கோபுரங்கள் களஆய்வின் மூலம் தளம் (மாடங்கள்), நூற்பிரமாணம், ஸ்தபதி கள் மற்றும் பிரதேசம் எனும் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டிலிருந்து இற்றை வரையான சுமார் 19 வருட காலத் தில் யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான கோயில்கள் கோபுரங்களை அமைக்கும் பணியில் முனைப்புக் காட்டியிருக்கின்றன. "கோபுரங்களின் எழுச்சிக்காலம்" எனப் போற்றத்தக்க வகையில் அதிகளவான கோபுரங்கள் இக்காலப்பகுதியில் எழுந்துள் ளன. குறிப்பாக நல்லூர் கந்தசுவாமி கோயிலில் உள்ள கோபுரங்களில் தெற்கு மற்றும் வடக்கு வாசல் கோபுரங்கள் அண் மைக்காலத்தில் எழுந்தனவே. அருணகிரி நாதர் கிளியின் உருவம் எடுத்து கந்தரனு பூதி பாடினார் என்னும் வரலாற்றை பதிவு செய்தல் மற்றும் அவரது பெருமையை உணர்த்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு தெற்குப் பக்கமாக அமைந்துள்ள கோபுரம் "கிளிக்கோபுரம்" என்றும், வடக்குப் பக்கமாக அமைந்துள்ள கோபுரம் "குபேர வாசல்கோபுரம்" என்றும் சுட்டுணர்த்தப் படுகின்றது. ஈழத்துக் கலைஞர்களின் கோயிற் கட்டுமானப் பணிக்கு தக்க சான்று களாக இவ்விரு கோபுரங்களும் காட்சி தரு கின்றமை குறிப்பிடற்குரியது. குபேரவாசற் கோபுர கட்டுமானத்தின் பின்னர் நேர்த்திக் காக எடுப்பிக்கப்படும் காவடிகள் அங்கு வைத்தே நிறைவுசெய்யப்படுகின்றன.

கோபுரங்களின் எழுச்சியிலும், திருக்கோயில்களின் புனருத்தாரணப் பணி களிலும் சமூக, பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஈழத்தில் தமிழர்களுக்கெதிரான இனரீதியான அட க்குமுறைகளால் தமிழ் மக்களின் பொருளா தாரம், கல்வி, சமயம், மற்றும் சமூகக் கட்ட மைப்புகள் பல வகையிலும் சிதைவுநிலை கண்டிருந்தது. இராணுவ ஆக்கிரமிப்புக ளால் உள்ளக இடப்பெயர்வுகள் எற்பட்டன. திருக்கோயில்கள் மக்களின் தங்குமிடங்க ளாயின. இதனால் பூசை வழிபாடுகள் ஒழுங் கற்றும், செயலிழந்தும் காணப்பட்டன. உயிர்களைப் பாதுகாப்பதே அவர்களின் பிரதான இலக்காக காணப்பட்டதனால் இக்காலங்களில் கோயிற்கட்டுமானப் பணி களில் அதிகம் அக்கறை காட்டவில்லை. எனவே இத்தகைய இடப்பெயர்வுகள் பொரு ளாதார ரீதியில் தமிழ்ச்சமூகம் முன்னேறுவ தற்கு தடைகளாக அமைந்திருக்கின்றன. ஆயினும் "புலம்பெயர்தல்" என்னும் வேற்றி டப் பெயர்வுக்கு தமிழர்களை அழைத்துச் சென்றது. அரசியல், பொருளாதாரம், கல்வி, என்றவகையில் மேம்படுவதற்கு இத்தகைய புலம்பெயர்தல் எனும் நிகழ்வு அடிப்படை யாக அமையலாயிற்று. புலம்பெயர்தலால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி நிலையா னது சமூக மேனிலை யாக்கத்தில் அதிக ளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளது. சமூக மேனிலையாக்கம் அல்லது உயர்குடியாக் கம் என்பது சமயங்களின் அடிப்படையி லேயே இடம் பெற்றிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களில் திறந்த வெளிக் கோயில்களாக சிறிய அமைப்பில் காணப் பட்ட கோயில்கள் யாவும் ஆகம மரபுக்கு உள்வாங்கப்பட்டு கட்டட அமைப்பில் விஸ் தீரணமடைந்தன. நம்பிக்கை, பக்தி, மற்றும் வழிபாட்டு முறைகளில் நிகழ்ந்த பெரியளவி லான மாற்றங்கள் இதன் விளைவுகளாயின. கோயிலுறுப்புகளான கருவறை, மண்டபங் கள், பிராகாரங்கள், தூண்கள், திருச்சுற்று மதில்கள், திருச்சுற்று மாளிகை, விமானம், கோபுரம் முதலியன காலந்தோறும் இடம் பெற்ற புனருத்தாரணப் பணிகளால் புதுப் பொலிவு பெற்றன. இவற்றைப் புதிதாக அமைக்கும் நிகழ்வுகள் ஒருபுறம் இடம் பெற்றனவாயினும் மறுபுறம் ஏலவே இருந்த கோயிலுறுப்புறுப்புகளை பகுதியளவில் அல்லது முழுமையாக நீக்கி புதியதாக அமைக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். இதனால் கலைப்பேணுகைகளின் தொன் மைக்கூறுகள் சிதைக்கப்பட்டன. மருதடி விநாயகராலயம் இதற்குத் தக்க சான்றா கும்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்துக் கோயில்கள் பண்பாட்டு விருத்திக்கு பிராந் தியளவில் மக்களின் கொடையளிப்புகள் ஏதுவாக அமைந்தாலும் புலம்பெயர்ந்த மக்களின் பங்களிப்புகளே முதன்மையான தாக அமைகின்றன. புலம்பெயர்ந்த ஈழத் துத் தமிழ் இந்துக்களின் பெருமளவிலான நிதிக்கருவூலங்களே திருக்கோயில் சார் ந்த கட்டுமான மற்றும் புனர்நிர்மாணப் பணி களுக்கு அடிப்படையாக அமைகின்றன. கோபுரங்களின் எழுச்சியிலும் இவர்களின் செல்வாக்கே அதிகளவில் உள்ளது. கோபு ரம் அமைக்கும் பணியானது ஆலய நிர்வா கத்தினர், திருப்பணிச்சபையினர், அந்தணர் கள், வழிபடுநர்களான மக்கள் முதலியோ ரது ஒருங்கிணைந்த செயற்பாட்டில் நிகழும். அன்றில் நேர்த்திக் கடன்கழித்தல் நிகழ் வாகவும் இடம்பெறுவதுண்டு. இவ்வாறான நிகழ்வுகள் தனிநபர் அல்லது குடும்ப உறுப் பினர்கள் இணைந்து மேற்கொள்வர். ஆகவே, இருபத்தோராம் நூற்றாண்டின் முன்னிரு தசாப்தங்களில் அதிகளவிலான கோயில் கள் கோபுரங்களோடு கூடியனவாக விருத்தி யுறுவதற்கு புலம்பெயர் மக்களின் நிதிப்பங் களிப்புகளே காரணம் என்பதனை மறுத்து விடமுடியாது.

கோடிக்கணக்கில் நிதிகளைச் செலவிட்டு கோபுரங்கள் அமைப்பது முதலான புனருத்தாரணச் செயற்பாடுகள் யாவும் பொருளாதார முடக்கமே என்பதான விமர் சனப் போக்கினை மக்கள் முன்வைப்ப துண்டு. உண்மையில் ஆலயங்கள் மக்கள் நலனோன்பும் சமய நிறுவனங்களே. அத்த கைய செயற்பாடுகளில் ஒவ்வொரு ஆலயங் களும் தொழிற்படுமானால் மதமாற்றம் உள் ளிட்ட பிரச்சினைகளில் இருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்கலாம் என்று ஆதங் கப்படுபவர்களுமுளர். திருக்கோயில் நிலவு டைமையாளர்கள் தங்களின் அதிகார மையங்களாக அவற்றைக் கருதுவதனால் நீதிமன்ற வழக்குகளில் தமது காலத்தைச் செலவிடுகின்றனவே தவிர சமூகநலனோன் பும் பண்பிலிருந்து அவை விலகிவிடுகின்றன என்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பது முண்டு. ஒருவகையில் இத்தகைய விமர்ச னங்களை ஏற்றேயாக வேண்டும். ஏனெனில் மதமாற்றம் உள்ளிட்ட சமயவிரோதச் செயல்கள் இடம்பெறாமலிருக்க வேண்டு மாயின் ஆலயங்கள் "சமுதாய மையங்கள்" என்ற உயரிலக்கிலிருந்து விலகக்கூடாது. "சமயம் வாழவேண்டுமாயின் முதலில் சமூகம் வாழ வேண்டும்" என்ற விவேகானந்தரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்த சிந்தனையை மேற்குறித்த பின்னணியில் வைத்து நோக்குதல் வேண்டும்.

மேற்கூறிய விமர்சனங்களை உள்வாங்கிக் கொண்டு "அதுவும் சரிதான்" என ஆமோதிப்பதோடன்றி, இத்தகைய புனருத்தாரணப் பணிகள் அவசியமாக இடம்பெற வேண்டியனவே என "வாதம்" செய்யவேண்டியதும் காலத்தின் தேவையாகும். ஏனெனில் ஈழத்தமிழர்களின் தேசியம் என்பது சைவம் என்பதிலிருந்தே உருவாகியது. அந்த தேசிய அடையாளம் சிதைவுறாது அல்லது சிதைக்கப்பட முடியாத வகையில் நிலைத்து நிற்பதற்கு திருக்கோயிற் கட்டுமான விருத்திப் பணிகள் இன்றியமையாதன. விமானங்களும் கோபுரங்களும் தமிழர்களின் சுய அடையாளங்களாகும். இவ்வினத்தின் இருப்புக்கு புலக்காட்சி வடிவங்களாக அவை என்றும் காட்சியளிக்கும். ஆகவே தமிழர்களின் வாழ்வியலில் கோபுர தரிசனம் கோடி புண்ணியமே. தழிழ் மக்களின் "இருத்தல்" என்பது திருக்கோயிற்பண்பாட்டுச் சூழலிலேயே தங்கியுள்ளது. தற்போது சமயங்களில் அரசியல் என்ற சிந்தனையோடு இடம்பெற்று வருகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், அடையாள அழிப்புகள், மதமாற்றம் என்பவற்றிலிருந்து இந்துப் பண்பாட்டடையாளங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் கோயிற் கட்டுமானங்கள் விரிவாக்கம் பெறுவதோடு மக்கள் நலன் சார்ந்தும் அவை செயற்பட முன்வரவேண்டும்.

**நிறைவாக**

யாழ்ப்பாணத்தில் எண்ணற்ற திருக்கோயில்கள் காணப்படுகின்றன. மக்களின் நம்பிக்கைகளின் பின்னணியில் கோயில்களின் உருவாக்கமும் அவற்றின் புனருத்தாரண வேலைகளும் அமைந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள திருக்கோயில்கள் உருவாகும் போதே கோபுரக் கட்டுமானத்தை கொண்டிருந்ததாக அறியுமாறில்லை. பிற்காலங்களிலேயே கோபுரங்கள் அமைக்கும் பணி தொடங்கியது. பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளிலேயே கோபுர கட்டுமானப் பணி இடம்பெற்றிருக்கிறது. குறிப்பாக இருபத்தோராம் நூற்றாண்டின் முன்னிரு தசாப்தங்களில் அதிகளவிலான கோபுரங்கள் எழுந்தமையினை அவதானிக்கலாம். கோபுரங்களின் அமைப்பு முறை, சிறப்பு, எண்ணிக்கை என்பவற்றில் சமூக, பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்திவருகின்றன. புலம் பெயர் வாழ் மக்களின் பெருந்தொகையிலான நிதியளிப்புகள் இவற்றின் கட்டுமானப் பணிகளுக்குத் துணைபுரிகின்றன. இவ்வாறு புனருத்தாரணம் செய்யப்படுகின்ற திருக்கோயில்களானவை வெறுமனே காட்சிப் பொருட்களாக அமையாமல் சமூக நலன் சார்ந்து தொழிற்பட வேண்டியதும் அவசியமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழ் தமிழ் ஆங்கில அகராதி, ப. 398.
2. குடவாயில் பாலசுப்ரமணியன், 2013, தமிழகக் கோபுரக்கலை மரபு, ப. 4.
3. பரமசிவன், தொ., 2005, சமயங்களின் அரசியல், ப. 22.
4. அப்பர் தேவாரம், 6:16:3
5. தேவநேயன், ஞா., 1966, பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக். 159-160.
6. குடவாயில் பாலசுப்ரமணியன், மு. கு. நூ., பக். 9-10.
7. வைத்தியலிங்கன், செ., 1997, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, இரண்டாம் பாகம், ப. 366


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து முருகத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் - ஒரு சிறப்புப்பார்வை

**சண்முகலிங்கம் சஜீலன்**
பன்னாலை, தெல்லிப்பழை

சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்த இலக்கியங்கள் தொன்னூற்றாறு வகையாகும். அந்தாதி, தூது, சதகம், கலம்பகம், பள்ளு என்று விரிந்து செல்லும் வரிசையில் பிள்ளைத்தமிழ் இலக்கியமும் ஒன்றாகும். பிள்ளைத்தமிழ் அல்லது பிள்ளைக்கவி எனப்படும் இப்பிரபந்த இலக்கியம் தெய்வத்தை அல்லது மகான்கள், அறிஞர்கள், புலவர்கள், புகழ் பெற்றவர்கள் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைச் சிறு குழந்தையாக உருவகித்துப் பாடப்படுவதாகும்.12ம் நூற்றாண்டில் எழுந்த இலக்கணப்பாட்டியல் நூல்களான பன்னிருப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல் ஆகியன பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கணங்களை வகுத்துக் கூறுகிறது. குழந்தைப்பருவத்துக்குரிய காலமாகக் கணிக்கப்படும் 2ம் மாதம் முதல் 4 வயது வரையுள்ள காலப் பகுதியை 10 பருவங்களாக வகுக்கிறது பிள்ளைத்தமிழ் இலக்கியம். இப்பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும். பாட்டுடைத் தலைவர் ஆணாயின் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் எனவும் பாட்டுடைத் தலைவர் பெண்ணாயின் பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனவும் வழங்கப்பெறும். ஆண்பாற் பிள்ளைத் தமிழாயின் காப்பு, செங்கீரை. தால், சப்பாணி, முத்தம், வாரானை, (வருகை) அம்புலி சிற்றல் சிறுபறை, நிறுதேர் என 10 பருவங்களாக அமையும். பெண்பாற் பிள்ளைத்தமிழாயின் முதல் ஏழு பருவங்களும் மேற்குறித்தவாறே அமைய இறுதி மூன்று பருவங்களாக அம்மானை, நீராடல், ஊசல், (ஊஞ்சல்) என 10 பருவங்களில் அமையும். மரபுவழி வந்த பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு பருவங்களிலும் 10 பாடல்கள் இடம்பெறும் எனினும் எல்லாப் பிள்ளைத் தமிழ் இலக்கியங்களும் அவ்வாறு அமைவதில்லை. சில பருவத்திற்கு 11 பாடல்களையும், சில பருவத்துக்கு 5 பாடல்களையும் கொண்டிருக்கும். பருவத்திற்கு ஒரு பாடலுள்ள பிள்ளைத் தமிழ் இலக்கியங்களுமுள்ளன. இவற்றிலுள்ள பாடல்கள் விருத்தப் பாக்களால் அல்லது வெண்பாக்களால் பாடப்பட்டிருக்கும்.

பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றுவதற்கான முன்னாயத்தவிதை சங்ககால இலக்கியங்களிலேயே தூவப்பட்டதெனலாம். காப்பு, சிற்றில் , சிறுதேர், கழங்கு. நீராடல், ஊசல் என்ற பதங்கள் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், கலித்தொகை, பட்டினப்பாலை, புறநானூறு, பரிபாடல், நற்றிணை போன்ற சங்க இலக்கியங்களில் வருதலையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தலங்கள் மீது பாடப்பெற்றவை

யாழ்ப்பாணத்தில் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் பிரபந்தங்கள் அனைத்தும் தெய்வத்தை பாட்டுத்தலை வராகக் கொண்டு சிறு குழந்தையாக உரு வகித்து பாடப்பட்டிருப்பதைக் காணலாம். தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவராயும், பிள்ளைத்தமிழின் சில பருவங்களைக் கொண்டு முதன் முதலில் படைக்கப்பட்ட சிற்றிலக்கியங்களாக 8ம் நூற்றாண்டில் ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியும், குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திரு மொழியும் 9ம் நூற்றாண்டில் பெரியாழ்வார் பாடிய பெரியாழ்வார் திருமொழியும் உள் ளன. எனினும் பிள்ளைத்தமிழிற்குரிய இலக்கண அமைப்புடன் 17ம் நூற்றாண்டி லேயே கடவுள் மீது பிள்ளைத்தமிழ் பிர பந்தங்கள் பாடப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணத்தில் விநாயகர், முருகன், சக்தி, திருமால் ஆகியோரைச் சிறு குழந்தையாகெ உருவகித்தே பெரும்பா லான பிள்ளைத்தமிழ் பிரபந்த இலக்கியங் கள் படைக்கப்பட்டுள்ளன. பொதுவாக சிவபெருமான் பிறப்பு இறப்பு யாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருள் என்பதால் சிவபரம் பொருள் மீதோ சிவத்தலம் மீதோ யாழ்ப்பாணத்தில் இதுவரை எந்தப்புலவர்க ளாலும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் படைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஈழத்தில் எழுந்த முதலாவது பிள்ளைத் தமிழாக ஒல்லாந்தர் காலத்தில் (17ம் நூற்றாண்டு) வாழ்ந்த இணுவில் சின்னத்தம்பி புலவரால் இயற்றப்பட்ட சிவகாமியம்மைத் தமிழே அறியப்படுகிறது. இதனைத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டில் நான்கு பிள்ளைத்தமிழ் நூல்கள் எழுந்தன. சிறுப்பிட்டி, தா. அமிர்தலிங்கம்பிள்ளை பாடிய சாலை விநாயகர் பிள்ளைத்தமிழ், அச்சுவேலி அ. வைத்தியநாதச் செட்டியார் பாடிய அச்சு வேலி நெல்லியோடை அம்பாள் பிள்ளைத் தமிழ், நல்லூர் சி. அப்புக்குட்டி ஐயர் பாடிய நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், வல்வை ச. வைத்திலிங்கப் பிள்ளை பாடிய செல்வச்சந்நிதி பிள்ளைத் தமிழ் என்பனவே அவையாகும். எனினும் இவை மூன்றும் எழுத்துப்பிரதியாகவேனும் இன்று கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## முருகத்திருத்தலங்கள் மீது பாடப் பெற்றவை

தமிழகத்தில் முருகக் கடவுள் மீதும், முருகத்திருத்தலங்கள் மீதும் ஏராளமான பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் படைக்கப் பட்டுள்ளன. இவற்றுள் 17ம் நூற்றாண்டில் குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழும், 18ம் நூற்றாண்டில் பகழிக் கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத் தமிழும் சிறப்பான பிள்ளைத்தமிழ் இலக் கியங்களாகப் போற்றப்படுகின்றன. இவையே பிற்காலத்தில் எழுந்த பல பிள்ளைத்தமிழ் இலக்கியங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளன. அதே போன்று ஈழத்திலும் முருகத் திருத்தலங்கள் மீது அதிகமான பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பாடப் பட்டுள்ளன. அவற்றுள் புகழ் பெற்ற முருகனா லயங்களான கதிர்காமம், நல்லூர், மாவிட்ட புரம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய தலங் களும் அடங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் மட்டுமே பத்திற்கு மேற்பட்ட முருகத் திருத் தலங்கள் மீது பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தங் கள் பாடப்பட்டுள்ளன. இவற்றுள் செல்வச் சந்நிதி பிள்ளைத்தமிழ் தவிர்ந்த ஏனை யவை நூல் வடிவில் வெளிவந்துள்ளன. இப் பிள்ளைத்தமிழ்ப்பிரபந்தங்களுள் அனேக மானவை 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பின்னருமே இயற்றப்பட்டுள்ளன. முருகனுக்குரிய இப்பிள்ளைத்தமிழ் பிரபந்தங்கள் அனைத்தும் தமிழருக்கேயுரிய சிறப்பான வழிபடு தெய்வமான முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிறு குழந்தையாக உருவகித்துப் பாடப்பட்டுள்ள ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களாகும். முருகன் குழந்தையாக, குமரனாக, அழகு யெ்வமாகக் காட்சியளிப்பதால் அத்தெய்வத்தை குழந்தையாக உருவகப்படுத்திப் பிள்ளைத்தமிழ் பாடுவது புலவர்களுக்கு கை வந்த கலையாகவும் இலகுவாகவும் அமைந்து விடுகிறது. இப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் பின்வரும் சிறப்பம்சங்களை அவதானிக்கலாம்.

- சொல்நயம், இனிமை, கவித்துவம், சந்தம் அழகு தமிழில் பயின்றுவரும்
- இப்பிள்ளைத்தமிழ் பாடிய புலவர்கள் தெய்வங்கள் மீது மிகவும் உணர்வொன்றிய நிலையில் உருக்கமாகப் பாடியிருப்பார்.
- இத்திருத்தலங்கள் மீது பிள்ளைத் தமிழ் பாடியோர் குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களை முன்னோடியாகக் கொண்டு அவற்றினை அடியொற்றிப் பாடியிருப்பர்.
- கந்தபுராணம், புராண இதிகாசக் கதைகளை அடியொற்றி அவற்றில் நிகழ்ந்த சம்பவங்களையும் நிகழ்வுகளையும் காட்சிப்படுத்தி வர்ணித்திருப்பர்.
- ஆலயம் அமைந்துள்ள . பிரதேசம், ஊர், ஆலயச் சூழல், இயற்கைக் காட்சிகள், வர்ணிக்கப்பட்டிருக்கும்.
- ஆலயத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் தெய்வத்தால் நிகழ்த்தப் பெற்ற அற்புதச் செயல்கள் விபரிக்கப்பட்டிருக்கும்.
- குறித்த பிரதேச மக்களின் கலாசாரம். பண்பாடு, வாழ்வியல், பொருளாதாரம் புவியியல் அம்சங்கள் குறித்துரைக்கப்பட்டிருக்கும்.
- பிள்ளைத்தமிழ் பாடப்பெற்ற சமகாலத்தில் உலகில் நடைபெற்ற ஆன்மிக அரசியல் நிகழ்வுகள் முக்கிய சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கும்.
- குறித்த ஊரிலுள்ள மக்களின் செல்வச் செழிப்புக்கும் மகிழ்வான வாழ்வுக்கும் அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தெய்வத்தின் தெய்வீகத் தன்மையே காரணமென்று குறித்துரைக்கப்பட்டிருக்கும்.
- காப்புப் பருவத்தில் குறித்த தெய்வக் குழந்தையைக் காக்கும் படி அப்பிரதேசத்தில் அல்லது சுற்றயற்பிரதேசத்தில் எழுந்தருளியுள்ள கடவுளை அல்லது யாழ்ப்பாணத்தின் சக்தி மிக்க பிரபலமான ஆலயங்களில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கடவுளை வேண்டி பாடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் முருகத்திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள் சிலவற்றை முறையே பாடப்பெற்ற தலம், பாடிய (இயற்றிய) ஆசிரியர், பிள்ளைத்தமிழின் அமைப்புப் முறை (யாப்பு) குறிப்பிட்ட பிள்ளைத்தமிலுள்ள சிறப்பு என வேறுபடுத்தி நோக்கலாம்.

**1. மாவை பிள்ளைத்தமிழ்**

இது திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், பழனி பிள்ளைத்தமிழ் போன்று தலத்தின் பெயரால் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருந்தே நிரைக்கு நறுங்கொன்றைப்**
**பிரானார் செவிக்கே பிரணவத்துப்**
**பேசாப் பொருள்பே சியகுழவிப்**
**பெருமான் வருக! பெருந்தவத்தோர்**
**விருந்தே வருக! நகுலமுனி**
**விரூப முகமும் மாருதப்ர**
**வீக வல்லி மாமுகமும்**
**விலகாப் பெருநோய் விலக்குமலை**
**மருந்தே வருக! மலைமடந்தை**
**மனைமாண் பினுக்கு நன்கலமாய்**
**வையம் வாழ வாழ்ந்தபெரு**
**வாழ்வே வருக! வாழ்வறியாத்**
**திருந்தா வசுரர் செருக்கொழித்த**
**தேவே வருக! வருகவே!!**
**சிவமே விளைக்குந் திறன்மாவைத்**
**திருவே வருக! வருகவே!!.**

பாடப்பெற்ற தலம் : பிரசித்தி பெற்ற மூர்த்தி, தலம், தீர்த்தம், ஒருங்கே அமையப் பெற்ற மாவிட்டபுரம் எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்றது.

பாடிய (இயற்றிய) ஆசிரியர் : பண்டிதர் மு. கந்தையா

இயற்றபட்ட ஆண்டு : 1967

பிள்ளைத்தமிழின் அமைப்பு : 10 பருவங்களில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவமும் 11 பாடல்களைக் கொண்டுள்ளன. பாடல்கள் அனைத்தும் விருத்தப்பாக்களால் ஆனது

பிள்ளைத்தமிழின் சிறப்பு:

காப்புப் பருவத்தில் பிள்ளைத் தமிழுக்குரிய விநாயகர் காப்புடன் திருமால், சிவபெருமான். உமாதேவியார், சித்திவிநாயகர் பிரமதேவர், ஆறுமுகசுவாமி, வைரவப்பெருமான், இலக்குமிதேவி, சரஸ்வதி, நவக்கிரக மூர்த்திகள், சண்டேஸ்வரர் ஆகியோர் குழந்தையைக் காக்கும் படி வேண்டப்படுகின்றனர். செங்கீரைப் பருவத்தில் அன்னை குழந்தை முருகனை நீராட்டி ஆடை புனைந்து, அழகுபடுத்திவிடும் கோலம் வியந்து போற்றப்படுகிறது. மாவையில் முருகனை வழிபட வரும் அடியார்கள் மனமுருகி வழிபடும் பாங்கையும் வர்ணிக்கிறார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர். அத்துடன் நக்கீரர், அருணகிரிநாதர், குருபரர், பகழிக்கூத்தர் ஆகியோருக்கு கவி பாடவைத்து அருள் கொடுத்தமை, பற்றியும் கூறுகிறார். தாலப்பருவம், சப்பாணிப் பருவப்பாடல்களில், மாவிட்டபுரம் எனும் ஊரின் இயற்கைச் சூழல், வனப்பு ஆகியவை வர்ணிக்கப்படுவதோடு சைவசித்தாந்தக் கருத்துக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாவைப் பதியைச் சார்ந்து வாழும் இசை வேளாளர்கள் வழிபடும் அடியவர்கள், காவடி எடுத்து ஆடி வரும் பக்தர்களின் பக்தித் திறம் ஆகியவை பற்றிக் கூறப்பட்டுள்ளது. முத்தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராக இருந்து சங்கப்புலவர்களுக்கு முருகப் பெருமான் அருள் ஈந்தமை பற்றிக் குறித்துரைக்கப்பட்டுள்ளது. முத்தப் பருவத்தில் முருகப் பெருமானின் கழலின் அடியில் பொருந்தியிருக்கும் ஞானப்பற்றே புன்னாலைக்கட்டுவனூர் பெரும் அறிஞர் கணேசையர் அவர்களை சுவைபட தொல்காப்பியத்திற்கு உரை எழுத வைத்ததென தெளிவுபடக் கூறுகிறார் ஆசிரியர். வாரானைப் பருவத்தில் மாவிட்டபுரம் ஊரின் பண்பாடு, கலாசாரம், மக்களின் வாழ்க்கை, தொழில் ஆகியவற்றுடன் கீரிமலைப் புனித தீர்த்தத்தில் நீராடி நகுலமுனிவர், மாருதப் புரவீக வல்லி ஆகியோர் முருகனருளால் சாபவிமோசனம் பெற்றமை பற்றியும் பதிவு செய்யப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. முனிவர்கள், தேவர்கள், ஞானியர்களுக்கு, அருள் கொடுத்தமை பற்றிக் கூறப்படுவதோடு சுன்னாகம் முத்துக்குமார கவிராயர், நாமாந்தரிதை முறையில் பிர கேளிக்கைச் செய்யுளுடன் கவிகளை இயற்ற மாவை முருகப் பெருமானே உள் நின்று உணர்த்தியதாக கவிஞர் சுட்டிக் காட்டுகிறார். அத்துடன் முத்தப் பருவத்துப் பாடல்களில் சைவசித்தாந்தத்கருத்துக் களும் விரவியுள்ளன. அம்புலிப்பருவத்தில் சந்திரன் எவ்வெவ் வகையில் குழந்தை முருகனிலிருந்து வேறுபடுகிறான் என்று கூறியும் சந்திரன் தனது செய்கையால் பெற்ற சாபங்களைக் கூறி உன்னிலும் முருகக் குழந்தை மேன்மையுடையது என்று கூறி சந்திரனை குழந்தையுடன் விளையாடவரு மாறு அழைக்கிறார் ஆசிரியர். நகுலமுனி வர், மாருதப்புரவீகவல்லி ஆகியோரின் நெடு நாள் நீங்காத சாபத்தை நீக்கியருளிய முரு கப்பெருமான் உனது சாபத்தையும் நீக்கி அருளுவான் என்று கூறியும் மேற்குலகின் குண்டர்கள் உன்னைக் கைப்பற்ற ஸ்பூட் னிக் விண்கலத்தை ஏவியும் உன்னை அணு குண்டால் வீழ்த்தவும் எண்ணியுள்ளதால் நீ குழந்தை முருகனிடம் வந்து விளையாடி னால் இத்துன்பத்திலிருந்து அவன் உன் னைக் காத்தருள்வான் என்று கூறியும் சாம, பேத, தான, தண்ட, முறையில் சந்திரனை முருகனுடன் விளையாட அழைக்கிறார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர். சிற்றிற்பருவத் தில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலு முள்ள ஊர்களுக்கும் கந்தபுராணத்தில் நிகழும் சம்பவங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு உட்பொருள் விளக்கமாக அமைந் துள்ளது. இயற்கை ஒலிகளையும், பஞ்ச பூதங்களால் எழுப்பப்படும் ஒலிகளையும் மனிதர்கள், உட்பட உயிரினங்களால் எழுப் பப்படும் ஒலிகளையும், சீமெந்து தொழிற் சாலையிலிருந்து எழும்பும் ஒலியையும், வேறு இதர ஒலியையும் குழந்தை முருகனின் சிறுபறை ஒலியுடன் ஒப்பிட்டு உவமையணி நவிற்சியுடன் சிறுபறைப் பருவத்தின் பாடல் களை கவிஞர் அமைத்துள்ளார். சிறுதேர்ப் பருவத்தில் தேரில் முருகப் பெருமான் எழுந் தருளும் மாவைக்கந்தனின் மகோற்சவ கால திருவிழாக்காட்சிகளும் அழகுறக் காட்சிப்படுத்திப்பாடப்பட்டுள்ளது. தேரேறி வந்து அடியவர்களின் மும்மலங்களையும் அகற்றியருளுமாறு மாவை முருகனிடம் வேண்டுகிறார் இப்பிள்ளைத்தமிழ்க் கவிஞர்.

## 2. நயினை முருகன் பிள்ளைத்தமிழ்

**வங்க மெறியும் பொங்குதிரை**
**வளர்ந்து வளைந்து மோதுதலாற்**
**சங்கங் கொழிக்கும் தரளநிரை**
**தரையிற் கிடந்து நிலாப்பரப்ப**
**எங்கும் பரந்த வெண்மணலும்**
**எழிலார் முல்லை நெல்வயலும்**
**தெங்கும் பனையும் கதலிகளும்**
**தேமா வுடனின் றெழில்பரப்பும்**
**சங்கத் தமிழார் நயினையினிற்**
**சாரும் அன்பர்க் கருள் புரியும்**
**தாயை நாக பூக்ஷணியைச்**
**சாமுண் டியையாம் போற்றுதுமே**
**வெங்கண் ணவுணர் விறலழிய**
**வேல்விட் டெறிந்த விடலையினை**
**வினைதீர் இரட்டங் காலிவளர்**
**விமலன் றன்னைக் காக்கவென்றே**

பாடப்பெற்ற தலம் : நயினாதீவு இரட்டங்காலி எனும் தலத்தில் வீற்றிரு ந்து அருள் பாலிக்கும் முரு கப் பெருமான் மீது பாடப் பெற்றது.

இயற்றிய ஆசிரியர்: பண்டிதர் சு.சி. கதிரவேலு

இயற்றிய ஆண்டு : 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைத்தமிழின் அமைப்பு : 10 பருவங்களில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் விருத்தப்பாக்களாலான 10 பாடல்கள் அமைந்துள்ளன.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு :**

சிறப்புப்பாயிரம் அவையடக்கம் ஆகிய செய்யுட்களுடன் காப்புப்பருவத்தில் செம்மணத்தம்புலம் விநாயகக் கடவுள், திருமால், சிவபிரான், நாகபூசணியம்மன் (உமாதேவியார்) பிரம்மா, சரஸ்வதி, இலக்குமி, இந்திரன், காளி, முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோரை குழந்தை முருகனைக் காக்கும் படி வேண்டிப் பாடப்பட்டுள்ளது. செங்கீரைப் பருவத்தில் எவ்வுயிரிலும் எப்பொருளிலும் எல்லாமுமாக நின்று விளங்கும் பரம்பொருள் பெற்ற மகவாகக் குழந்தையைச் சித்தரித்து செங்கீரை ஆடி அருளுமாறு வேண்டப்படுகின்றது. சிவபெருமான், உமாதேவியார், திருமால் மற்றும் பிற தெய்வங்களுக்கும் முருகனுக்கும் இடையிலுள்ள உறவு நிலையினைப் புலப்படுத்தி குழந்தை தாலாட்டப்படுகிறது. சப்பாணிப்பருவத்தில் சிவன், பார்வதிதேவி யின் திருவருளினால் முருகன் தோற்றம் பெற்ற வரலாறும் கார்த்திகைப் பெண்களி னால் பாலமுதூட்டி வளர்க்கப்பட்ட நிகழ்வும் கூறப்படுகிறது. முத்தப் பருவத்தில் குழந் தைப் பருவ முருகனின் குறும்புத்தனமும் வழிபடவரும் பக்தர்களுக்கு முருகன் அருள் செய்யும் பாங்கும் அழகுற எடுத்துக் கூறப் படுகின்றது. சிவத்தினதும் சக்தியினதும் அம்சமாக சிவசக்தி பாலனாக உருவகித்து வருகைப் பருவத்தின் பல பாடலைக் கவிஞர் யாத்துள்ளார். அம்புலிப்பருவத்தில் முருகனுடன் சந்திரனை நிகராக ஒப்பிட்டும் முருகனின் மாசற்ற மேன்மையை கூறியும் சந்திரனின் மாசுக்களைக் கூறியும் குழந்தையின் உயர்வான பரம் பொருட் தன்மையை எடுத்துக் கூறியும், சந்திரனை விளையாட வருமாறு தாய் அழைப்பது போலப் பாடல்கள் உள்ளன. அன்னை மடியில் கொஞ்சி விளையாடும் நின்னை சிறிது நடக்கும்படி விடுத்தால் வந்து சிற்றிலைச் சிதைக்கின்றாய் என்றும் பலம் பொருந்திய துதிக்கை அண்ணனுடன் வந்து சிற்றில் சிதைக்காதே என்றும் நாம் உனக்கு மலர் மாலை சாத்தி, பாமாலை புனைந்து ஏற்றிப் போற்றி வணங்கிடுவோம் எம் சிற்றில் சிதைக்காதே என்றும் சிறுவர்கள் கெஞ்சும் வகையில் சிற்றிற் பருவப் பாடல்கள் உள்ளன. சிறுபறைப் பருவத்தில் இயற்கையினின்று எழும் ஒலிகளும் பறவையினங்கள் எழுப்பும் ஒலிகளும் ஒன்றுசேர சிறுபறை முழக்கியருள்க என்று கூறுகிறார் ஆசிரியர். மேலும் இப்பருவத்தில் கடல் சூழ் நயினாதீவின் இயற்கை வனப்பும், இயற்கைக் காட்சிகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன. தீவின் அருள் சுரக்கும் பல ஆலயங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதோடு நயினை நாகபூசணியம்மன் கோயில் தல வரலாறு, நடைபெற்ற அற்புதங்கள் நாகங்கள், வழிபடும் காட்சி என்பனவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சிறு தேர்ப்பருவத்தில் தீவினைச் சூழவுள்ள கடலின் இயற்கை அழகும் நயினாதீவின் வனப்பும் நயினை நாகபூசணியம்மன் கோயில் மற்றும் இரட்டங்காலி முருகன் ஆலயங்களின் சூழலின் வனப்புமிகு தோற்றமும் வழிபடவரும் அடியார்களின் எண்ணவோட்டங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்**

**மஞ்சமொன் றாக்கியே மகிழ்ந்துநின் னருள்பெற்ற**
**மாதவச் சன்யாசியார்**
**வாழ்ந்தமஞ் சத்தடி மாதவத் தலத்திலும்**
**மன்னியருள் புரியும் வேலா,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சுவளர் பருத்தியடைப் பானபதி செகராசப்**
**பழமன்னன் பண்ட மைத்த**
**பதியமரு வேளமுகன் பாங்கமர்ந் தோய், அரசன்**
**பரராச சேகரன்தன்னால்**
**மிஞ்சுபழம் உதிருமர விளாத்தியடி நிறுவுற்ற**
**விநாயகன் அருகில் கொண்டோய்,**
**விம்முமுலை சுரந்தூட்ட விரைந்தணுகு மண்மையினை**
**வேண்டியிணு வில் அமர்ந்த**
**செஞ்சொலருள் சிவகாமி சிதம்பரநல் வளவிலுள**
**திருக்கோயில் நீங்கிவருவாள்!**
**சிவதேவ கணஞ்சூழுஞ் சீரிணுவைப் பதிவாழுஞ்**
**சேந்தனே முத்தமருளே!**

பாடப்பெற்ற தலம் : இணுவில் கந்தசுவாமி கோயில் என வழங்கப் பெறும் இணுவில் மேற்கில் நொச்சியம்பதி எனும் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கந்தசுவாமி மீது பாடப்பட்டது.

இயற்றிய ஆசிரியர் : பண்டிதர் ச.வே பஞ்சாட்சரம்

இயற்றிய ஆண்டு : 1980

பிள்ளைத்தமிழின் அமைப்பு: பிள்ளைத்தமிழின் 10 பருவங்களும் உள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் 10 பாடல்களாக 100 பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் அனைத்தும் விருத்த பாக்களாலானது.

பிள்ளைத்தமிழின் சிறப்பு:

காப்புப் பருவத்தில் ஆசிரியர் செகராச சேகரப் பிள்ளையார், மருதனார்மடம் வைரவக் கடவுள், சிவகாமியம்மை ஆகிய அயற்பிரதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் கடவுளரை குழந்தையைக் காக்கும்படி வேண்டுவதுடன் , திருமால், சிவபெருமான், பிரம்மா, விநாயகர், வைரவர், காளி, தேவேந்திரன், அகத்தியர், பிற தெய்வங்கள் ஆகியோரையும் தெய்வக் குழந்தையைக் காக்கும்படி வேண்டுகிறார். தேவர்கள் முனிவர்கள், இணுவைப்பதி வாழ் பக்தர்கள் மகிழ்வுடன் வணங்கி நிற்க செங்கீரை ஆடுக என முருகனை அழைக்கிறார். தாலப்பருவம், சப்பாணிப்பருவம், ஆகியவற்றில் இணு விலூரின் இயற்கை வனப்பு, வளம், வயல்வெளிகள், தோட்டங்கள், கால் நடை வளர்ப்பு, விவசாயம் பற்றிப் பாடப்பட்டுள்ளது. இணுவிலூர் மக்களின் கலாசாரம், பண்பாடு, சைவ சமயத்தோடு ஒன்றிணைந்த வாழ்க்கை முறை, தொழில் ஆகியவை பற்றிக் கூறப்பட்டுள்ளதோடு, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் பிறப்பிடமாக இணுவில் பதி வர்ணிக்கப்படுகின்றது. கந்தபுராணக்கதைகள், புராண இதிகாசக்கதைகள் ஆகியவற்றின் நிகழ்வுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் சைவசித்தாந்தக் கருத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. உலகப் பெருமஞ்சத்தின் தோற்றமும் அதனைப் பெரிய சன்னியாசியார் உருவாக்கியமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. முத்தப் பருவத்தில் இணுவிலூர் மக்களின் முருக பக்தியை சுட்டிக் காட்டுகிறார். ஆணவத்தால் பீடிக்கப்பட்டு இறைவனை மறுத்து நிற்போர் இறுதியில் முருகப்பெருமானிடம் ஞானம் பெற்று இறை வழிபாட்டில் ஈடுபடுவர் என்று கூறுகிறார். முரு கனுக்குரிய விரதங்களும் அதனை நோற்றவர்கள் பெற்ற பேறும் இவ்விரதத்தை இணு வையூர் பக்தர்கள் நோற்பதும் அதனால் மகிழ்ந்து முருகப் பெருமான் வழங்கும் அருள் பற்றியும் வருகைப் பருவத்தில் கூறப்பட்டுள்ளது. அம்புலிப்பருவத்தில் மாசற்ற இறைக் குழந்தையின் மேன்மையைக் கூறியும் சந்திரனுக் கேற்பட்ட மாசுக்களைக் கூறியும் இணுவிலூரின் முருக அடியார்களின் மேன்மையைக் கூறியும் அம்புலியைக் குழந்தையுடன் ஆட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு அழைக்கிறார் ஆசிரியர். உனது அடியவர்களாகிய எங்கள் பெற்றோர் ஏற்றிப் போற்றும் முருகா எம் சிற்றிலைச் சிதைக் காதே என்று சிறுமியர் முருகனைக் கெஞ்சி வேண்டும் வகையில் சிறுபறைப் பருவத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. மலம் நீக்கி ஆன்ம முத்தியளிக்கும் இறைப் பரம்பொரு ளாக முருகனைக் குறிப்பிட்டு பறையொலி கொட்டுக என்றும் உயிர்களுக்குள் இயல் பாய் எழும் மும்மலங்களை அழித்து அடியவர் களைக் காக்குமாறும் சிறுபறைப் பருவத் தில் வேண்டுகிறார் ஆசிரியர். சிறு தேர்ப் பருவத்தில் இணுவையூரில் முருகப் பெரு மான் அடியவர்களுக்குச் செய்த அற்புதங் கள் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டு ள்ளன.

**காரைநகர் பயிரிக்கூடல்**
**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ்**

**கொடுங்கோ லாட்சி புரிபவரின்**
**கூலிப் படையா மவுணர்களால்**
**கோலக் கோயில் கலாலயங்கள்**
**குடிவாழ் மனைகள் பயிர்நிலங்கள்**
**நெடுநோய் வைத்திய சாலையெலாம்**
**நெருப்பால் எறிகுண்டாயுதத்தால்**
**நிலையழிந் துன்பணி மக்கள் குழாம்**
**நித்திரை யின்றித் திரிந்தலைந்து**
**படிமேற் புரண்டு படுந்துயரம்**
**பரமன் மகனே திருவுளத்தில்**
**பற்றித் துயிலா திருக்கின்றாய்**
**பன்னிரு கைதுணை என்றுவரும்**
**அடியார் பயிரிக் கூடலுறை**
**ஐயா தாலோ தாலேலோ**
**அறத்தை வளர்த்தாள் பெற்றதமிழ்**
**அரசே தாலோ தாலேலே**

பாடப்பெற்ற தலம் : காரைநகரில் பயிரிக் கூடல் எனும் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக் கும் சுப்பிரமணிய சுவாமி மீது பாடப்பெற்றது.

இயற்றிய ஆசிரியர் : அருட்கவி சீ. விநாசித் தம்பிப்புலவர்

இயற்றிய ஆண்டு : 1987

பிள்ளைத்தமிழின் அமைப்பு : பத்துப் பருவங் களாயமையும் இப்பிள்ளை த்தமிழின் ஒவ்வொரு பருவ மும் விருத்தப்பாக்களா லான பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளன.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு**

கணபதி, ஈழச்சிதம்பரநாதன், ஸ்ரீ மனோன்மணி, ஸ்ரீ திருமால், ஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ சரஸ்வதியம்மை, ஸ்ரீமுத்துமாரி, ஸ்ரீ அரி கரபுத்திரர் (ஐயனார்), ஸ்ரீ வீரபத்திரசுவாமி, ஸ்ரீ வைரவ மூர்த்தி ஆகிய மூர்த்தங்களை காப்புடைத் தெய்வமாக காப்புப்பருவம் கொண்டுள்ளதுடன் புலவர் பிள்ளைத் தமிழையும் பிள்ளையையும் காக்குமாறு இக்கடவுளர்களை வேண்டிப்பாடுகிறார். புராண இதிகாசக்கதைகள், இறைவனின் திருவிளையாடல்களைக் கொண்டு செங் கீரைப் பருவத்தின் பாடல்களை யாத்துள் ளார் புலவர். தாலப்பருவத்தில் முருகப் பெருமான் செய்த அற்புதங்களும், திரு விளையாடல்களும் சொல்லப்பட்டுள்ளதோடு யுத்த காலத்தில் காரைநகரில் ஏற்பட்ட சில அவலங்களையும் ஒரு பாடல் பதிவு செய் கிறது. சப்பாணிப்பருவத்தில் சிவனுடைய அம்சமாகவும் சக்தியினுடைய அம்சமாக வும் முருகக்குழந்தையை வர்ணிக்கிறார் ஆசிரியர். முத்தப்பருவத்தில் இயற்கையின் வியாபகமாக எங்கும் நீக்கமற நிறைந்திருக் கும் பரம்பொருட் தத்துவம் உரைக்கப்படு கின்றது. வாரனைப்பருவத்தில் முருகனுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் ஏனைய கடவுளர்களுக்குமிடையே காணப்படும் உறவு முறைகளைக் கூறி பக்தர்களைக் காத்தருளுமாறு முருகப்பெருமானை வேண்டுகிறார். கறைகளைக் கொண்டுள்ள நீ எந்தவிதக்கறைகளுமற்ற இறைக் குழந்தையுடன் வந்து வியைாடி உன்கறைகளையகற்றலாம் என்று கூறி அம்புலியை ஆட அழைக்கிறார் கவிஞர். அம்புலிப் பருவத்தில் சிறுபறைப்பருவத்தில் சிவபெருமானின் ஆடல்தாண்டவத்தின் போது எழும் ஒலிகளையும் முருகன் அணிந்திருக்கும் அணிகலங்களிலிருந்து எழும் ஒலிகளையும் குழந்தை முருகன் முழக்கும் பறையொலியோடு ஒத்தனவாகப் புலவர் காண்கிறார். முருகனின் உயர்வான குணங்களையும் செய்யும் அற்புதங்களையும் கூறி சிற்றில் சிதையேலே என்று சிறுமியர் வேண்டும் வகையில் சிற்றிற் பருவப்பாடல்கள் அமைகின்றன. சிறுதேர்பருவத்தில் முருகக் குழந்தையின் தந்தையாகிய சிவபெருமானினதும் தாயாகிய பார்வதியினதும் சிவதத்துவத் திருவிளையாடல்களை எடுத்துக் கூறி, ஞானநிலையில் நின்று சிறுதேர் உருட்டியருள்க என்று முருகப் பெருமானை வேண்டுகிறார் பிள்ளைத்தமிழாசிரியர்.

## நல்லைக்கந்தன் பிள்ளைத் தமிழ்

நல்லூர் முருகப் பெருமான் மீது வெவ்வேறு காலத்தில் நல்லூர் அப்புக்குட்டி ஐயர் எனும் பாலசுப்பிரமணிய ஐயர் நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் எனும் பெயரிலும், கவிஞர் வ.கோவிந்தப்பிள்ளை நல்லைக் கந்தன் பிள்ளைத்தமிழ் எனும் பெயரிலும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பாடியுள்ளனர். எனினும் இவற்றின் முழுமையான வடிவம் கிடைத்திலது. தற்போது கிடைக்கும் முழுமையான வடிவமான இப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் நல்லைக்கந்தன் பிள்ளைத் தமிழ் எனும் பெயரில் கவிஞர் ச.தங்கமாமயிலோனால் இயற்றப்பட்டதாகும். இது நல்லைக் குமரன் 8ஆவது மற்றும் 9ஆவது மலரில் வெளிவந்துள்ளது.

**செங்கீரை யாடிச் சிறந்தருள வேண்டுவமே**
**வெங்கோபங்**
**கொண்டசூர் வென்றானைத் - தெங்கோங்கு**
**தாலம் பழவிருட்சந் தானிறையு நல்லூரின்**
**கோலம் பலகாட்டுங் கோன்**

**ஒருகால் மடக்கி யொருகாலை நீட்டி**
**இருகைநிலஞ் சேர்த்து மிளையாய் - முருகாநின்**
**செங்கீரை யாட்டஞ் செகமேழுங் காணவருள்**
**தெங்கார்நல் லூரா திகழ்ந்து.**

பாடப் பெற்ற தலம் :– யாழ்ப்பாணத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் வாய்க்கப் பெற்றதும் பிரசித்தி பெற்றதும் இராசதானி எனப் போற்றப்படுவதுமான நல்லூர் எனும் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கந்த சுவாமி மீது பாடப்பெற்றது.

இயற்றிய ஆசிரியர் : கவிஞர் ச.தங்கமாமயிலோன்

இயற்றிய ஆண்டு : 2000

பிள்ளைத்தமிழின் அமைப்பு : 10 பருவங்களாக அமைந்துள்ளது ஒவ்வொரு பருவத்திலும் 10 பாடல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் வெண்பாவினால் பாடப்பட்டுள்ளன.

பிள்ளைத்தமிழின் சிறப்பு :

பிள்ளைத்தமிழுக்குரிய காப்பு, அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கம் ஆகிய செய்யுட்களுடன் காப்புப் பருவத்தில், விநாயகர். திருமால், சிவன், தையலம்மை, முப்பத்து முக்கோடி தேவர் கள், வைரவர், காளி. சந்தானகோபாலர், சூரியன், சந்திரன் ஆகியோர் குழந்தை யைக் காக்கும் படி வேண்டப்படுகின்றனர். செங்கீரைப் பருவத்தில் நல்லூரின் வளச் சிறப்பு. நல்லூர் கோயிலின் சிறப்பு, முருகன் எழுந்தருளும் அருட்கோலம் என்பன சிறப்புற பாடப்பட்டுள்ளது. சப்பாணிப் பருவத்தில் முருகப் பெருமானின் தோற்றம், அழகுக் கோலம் என்பன பேசப்பட்டுள்ளது. கலியுகத் தில் நமது துன்பம் பறந்தோடவும் மகிழ் வளிக்கவும் முத்தந்தாவென்று முத்தப்பரு வத்துப் பாடல்கள் கூறுகின்றன. தாலப்பரு வத்தில் தொட்டிலில் குழந்தை முருகன் ஆடும் காட்சி படம் பிடித்துக் காட்டப்படுவ தோடு, வருகைப் பருவத்தில் நடந்து வந்து அடியார்களுக்கு அருளுக என்றும் கூறப்படு கின்றது. வானத்தில் பால் நிலவொளி பாய்ச் சும் சந்திரனை நல்லைப் பதி வந்து கந்த னோடு விளையாடுக என அம்புலிப்பருவத் தில் சந்திரனை அழைக்கிறார் ஆசிரியர். சிற்றிற் பருவத்தில் எம் சிற்றில் சிதைப்ப தால் உன் பிஞ்சுக் கால்கள் தான் கறை படும், நோகும் எனக் கூறி, எம் சிற்றில் சிதை யேலே என சிறுமியர் குழந்தை முருகன் மீது மிகவும் இரக்கத்துடன் வேண்டுகின்றனர். அசுரர்கள் மாய்ந் தொழிய சிறுபறை கொட் டுக என சிறுபறைப் பருவத்துப் பாடல்கள் கூறுகின்றன. சிறுதேர்ப் பருவத்தில் தேவர் கள், வணங்க வரும் அடியார்கள் ஆகியோ ருக்காக தேர் உருட்டும்படி முருகக் குழந் தையை வேண்டுகிறார் ஆசிரியர். அத்துடன் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந் திருவிழாக்களான தேர், சப்பறம், தங்க ரதம். தீர்த்தம், ஆகியவற்றின் காட்சிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பள்ளப்புலம் குமரக்கோட்டம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்

**போரெமுந்த காலமதில் புலம்பெயர்ந்த போது முந்தன்**
**பிஞ்சுமனம் கொண்டுநின்றோம்!**
**பூரித்த மனம்நொந்து பிறப்பாரூர் மறக்காமல்**
**பூசித்த படியுறைந்தோம்!**
**நீரமுத்தும் வயல்மருங்கில் நெடுஞ்சுனையு மருதமுமாய்**
**நிசம்பூத்த தமிழூரிற்**
**நித்திலத்து மணிகேட்க நின்வதனப் படியுரைக்க**
**நேர் நின்ற மனிதரோடும்**
**பேரமுத்தத் துட்பிறகும் பெருங்கோவில் நினதருளால்**
**பொற்தேரு மோடவைத்துப்**
**பிஞ்சுமன மஞ்சலெனப் பூவுனக்குச் சாத்திநின்று**
**பெருங்கவலை போக்குகின்றோம்!**
**கூரமுத்தும் படிவாழ்வுக் குறைபோகக் குமராநீ**
**கொட்டுகவே சப்பாணி!**
**குவிகடப்பும் குமுதமுமாய் கோலம்பு திதாக்கிக்**
**கொட்டுகவே சப்பாணி!**

பாடப்பெற்ற தலம்: வேலணை சரவணையூரில் பள்ளம்புலம் எனும் பதியில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள முருகப் பெரு மான் மீது பாடப்பெற்றது.

இயற்றி ஆசிரியர் : கவிஞர் வே. இராசலிங்கம்

இயற்றிய ஆண்டு : 2013

பிள்ளைத்தமிழின் அமைப்பு: பத்துப் பருவங் களில் அமைந்துள்ள இப் பிள்ளைத் தமிழில் ஒவ் வொரு பருவத்திலும் 10 பாட ல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் விருத்தப்பாக் களாகும்

பிள்ளைத்தமிழின் சிறப்பு :

விநாயக வணக்கம், சிறப்புப்பாயிரம், அவையடக்கம் ஆகிய செய்யுட்களுடன் காப்புப் பருவத்தின் கணபதி காப்புச் செய் யுளில் மணக்கும்பான் வீரகத்தி விநாயகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலந்தைவனத்து ஐங்கரன், வேலணை மேற்கு முடிப்பிள்ளையார், புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆகிய சூழ் தலங் களிலுள்ள விநாயகரை குழந்தையைக் காக்குமாறு இப்பிள்ளைத்தமிழாசிரியர் வேண்டுவதுடன் சிவன், செருத்தனை அம்மன் (பார்வதி), கங்காதேவி, மயிலப் புலம் அரிகர ஐயனார், திருமால், உமை யவள், காளி, ஆகிய கடவுளரையும் வேண்டு கிறார். இந்திரர், தேவர்கள், தில்லை நாதப்புலவர், அகத்தியர், ஆகியோரும் குழந்தையைக் காக்குமாறு வேண்டப்படு கின்றனர். செங்கீரைப் பருவத்தில் பள்ளம் புலம்பதியின் இயற்கைவனப்பும் எழில் கொஞ்சும் காட்சிகளும் அடியார்கள் முரு கப் பெருமானைத் தரிசிக்கவரும் கோலமும் நினைந்துருகி வழிபடும் காட்சிகளும் அழகு பட வர்ணிக்கப்பட்டுள்ளது. தாலப்பருவத் தில் முருகன், எவ்விடத்தும் எங்கும் இயற் கையுடன் நீக்கமற நிறைந்திருந்து உயிர் களுக்கு அருளும் தத்துவம் பாடப் பெற்றி ருக்கிறது. சப்பாணிப்பருவத்தில் வேலணை சரவணையூரின் போர்க்கால அவல வாழ்வும் அவ்வின்னல்களுக்கிடையேயும் அடியவர் களின் ஆன்மிக வாழ்வும் போருக்குப்பின்னர் முருகனை ஏற்றிப்போற்றி வழிபடும் மக்க ளின் வாழ்வும் படம் பிடித்துக் காட்டப்படுகி றது. முத்தப்பருவத்தில் முருகப் பெருமா னின் கழல் அடியில் பாமாலை சூட்டுவோரின் இன்னல்களையும் அவல நிலையையும் நீக்கியருளுமாறு கவிஞர், பெருமானை வேண் டுகிறார். பண்டைய புலவர்களுக்கும் ஈழத்துப் புலவர்களுக்கும் ஞானம் கொடுத்து கவி பாடவைத்தமை பற்றிக் கூறும் கவிஞர், முத்தம் தந்தாயானால் நானும் கவிபாட உன் கோயில் வருவேன் எனச்சுவைபடக் கூறுகிறார். வாரனைப் பருவத்தில் அடியார் பாடும் திருமுருகாற்றுப்படை, கலிவெண்பா, கவசம் போன்ற பாக்களுக்குள் கலந்துறை யும் இறையை அருள் செய்ய வருமாறு வேண்டுகிறார். அம்புலிப்பருவத்தில் சாமம், பேதம், தானம், தண்டம் என்ற முறையில் சிவனும் மருகனும் ஒருவரே எனக் கூறி அம்புலியைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கிறார். சிற்றிற் பருவத்தில் சிற்றில் இழைக்கும் சிறுமியரை விட தெய் வக் குழந்தையின் உயர்வான நிலையை எடுத்துக் கூறி சிற்றில் சிதையாதே என வேண்டுவதுடன் போரின் அவலத்துள் வாழ்ந்து பெரும் இன்னல்களை அனுபவித்த சிறுமியர் மிகவும் கஷ்டப்பட்டு உருவாக்கிய சிற்றில்களைச்சிதைக்காதே என சிறுமியர் பொருட்டு பிள்ளைத் தமிழாசிரியர் குழந்தை முருகனிடம் மிக அன்பாக வேண்டுகிறார். சிறுபறைப்பருவத்தில் ஊரை விட்டு இடம் பெயர்ந்த ஒருவர் ஊரில் தனது கடந்தகால மகிழ்வான வாழ்வை எண்ணி ஏங்குவதுடன் மீண்டும் அவ்வாழ்வை முருகனின் துணை யுடன் மீட்கும் வகையில் பாடல்கள் அமைந் துள்ளன. சிறுதேர்ப் பருவத்தில் பாமாலை பாடி வரும் அடியார்களுக்கு அருள் செய்தும் எமது அவல வாழ்வைப் போக்கியும் எமது தாய் நிலம் செழிக்கவும் தேரை உருட்டு மாறு முருகக் குழந்தையிடம் ஆசிரியர் அன்பாக வேண்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவையார்

பொ.சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை

## நூல் அறிமுகம்

தேவாரம் அருளிய மூவர் முதலிகட்கும் முந்தியவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் தித்திக்கும் திருவாசகத்தை அருளினார். பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடும் வண்ணம் இறைவன் ஆணையிட்டதால், அந்த ஆணையை ஏற்ற மாணிக்கவாசகர், திருக்கோவையாரைப் பாடியதாகக் கூறுவர். திருக்கோவையார் பழைய பிரபந்தங்களில் ஒன்றாகும். பன்னிரு திருமுறைகளில் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாரை திருச்சிற்றம்பலக் கோவை என்றுஞ் சொல்வர்.

திருவாசகம், வீட்டுப்பேறாக பேரின்பத்தை அடையவல்ல பக்தி இலக்கியமாக அது விளங்குகிறது. ஆனால் உலகில் மனிதன் வாழ அவசியமான அக இன்ப முறைகளை, விரிவாக விளக்கி நிற்பது திருக்கோவையார் ஆகும். மாணிக்கவாசகர் திருக்கோவையாரை தில்லையில் பாடி அருளினார். இந்த அக நூலை பாடப்பாட, திருச்சிற்றம்பல முடையானே தன்னுடைய திருக்கரத்தால் எழுதிக் கொண்டார் என்ற பெருமை பெற்றது. திருக்கோவையாரில் முழுமுதற் பொருளான சிவபரம் பொருளை, மணிவாசகர் உருகி உருகிப் பாடுவதைக் காண்கிறோம். உலகம் உய்ய, ஆனந்த நடனம் ஆடும் திருச்சிற்றம்பலத்தை பாடல் தோறும் மாணிக்கவாசகர் இந்த அக நூலில் பாடத் தவறவில்லை. இதனால் திருக்கோவையார் திருச்சிற்றம்பலக் கோவை என வழங்குகிறது. அகப் பொருளை மூலமாகக் கொண்டு, அமையும் படியாக நாநூறு இனிய பாடல்களைப்பாடி அமையப் பெற்றது இந்தக் கோவை இலக்கியம் எனலாம்.

## நூலின் சிறப்பு

அறவோராகிய அந்தணர்கள் திருக்கோவையாரை வேதம் என்பர். சிவயோகியர் ஆகமங்களின் பிழிந்த கலசம் என்று கூறுவர். சிற்றின்ப வயப்பட்டோர் திருக்கோவையாரை இன்ப நூல் என்றுஞ் சொல்வர். ஆனால் தர்க்க நூலார் திருக்கோவையாரை எண்ணூல் என்பர். எவர் எவர் என்ன சொன்னாலும் புலவர்கள் இதை இலக்கண நூல் என்று உறுதிபடக் கூறுவர். ஆழமாக ஆய்வுசெய்வோர் தெய்வாம்சம் பொருந்திய நூல் திருக்கோவையார் என்று நூலின் சிறப்பைக் கூறுவர்.

திருக்கோவையார் அகப் பொருள் நிகழ்வுகளைக் கொண்ட பாக்களால் விஞ்சி நிற்கிறது. இவை களவு, கற்பு என்னும் கூறுகளால் நிறைந்து நிற்கிறது. களவு என்பது ஆணும் பெண்ணும் எவரும் அறியாமல் சந்தித்து விரும்பி வாழ்வதாகும். ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு என்பது விரும்பிய இருபாலாரும், இறுதியில் திருமணஞ்செய்து, இல்லறம் புகுந்து இனிது வாழ்வதாகும். ஒருமித்த உருவமும், ஒருமித்த செல்வமும், ஒத்த பருவமும், ஒத்த அன்புடையராய் விளங்கும், காதல் தலைவனும் தலைவியர் இருவரும் ஊழின் வழியே சந்தித்து, கொடுப்போர் இன்றிக் காந்தருவ மணத்தால் கலந்து வாழும் நிகழ்வை எடுத்துக் கூறுவது இவ்வகை இலக்கியத்தின் சிறப்பம்சமாகும். கோவை இலக்கியங்களைக் கட்டளைக் கலித்துறைப் பாவினால் பாடுவது தமிழ் இலக்கிய மரபாகும். இந்த வகையில் திருக்கோவையாரில் பாட்டுடைத் தலைவனாகத் திருச்சிற்றம்பலம் உடையானைப் பாடல்தோறும் சிறப்பிக்கப் பெற்று, அவருடைய திருத்தலமான தில்லையையும், அதன் வளமும், திருச்சிற்றம்பலம் உடையாரின் சிறப்பும் இடம் பெறுகின்றன.

பெரும்பாலும் சிவபரம்பொருளின் பெருமைகளாக, நஞ்சுண்டதும், முப்புரம் எரித்ததும் மன்மதனை அழித்ததையும், அயனும் மாலும் அறியாவண்ணம் ஒளியாய் நின்றதும், விரிவாக திருக்கோவையாரில் காணமுடியும். சிவபெருமானின் திருத்தலங்களின் பெயரும், இடத்திற்கிடம் இடம்பெறுகின்றன. அகப்பொருள் சுவைக்கு ஏற்ப உவமை, உருவகங்கள் அமைத்து இலக்கியச்சுவை தருகின்றன.

## கொளு

திருக்கோவையாரில் ஒவ்வொரு பாட்டுக்கும் முன், அந்தப் பாட்டின் பொருளை சுருக்கமாக முன்கூட்டியே தருவது கொளு எனப்படும். இந்தக்கொளு மணிவாசகர் வாழ்ந்த காலத்தின் பின் வாழ்ந்தவர்களால் பாடி இருக்கலாம்.

திருக்கோவையாரில் ஆன்மாவாக காதல் தலைவனையும், சிவத்தலைவியாக காதல் தலைவியையும், தலைவியின் தோழியாக திருவருளும், தோழனாக ஆன்ம அறிவும், இன்பமாக ஞானமும், பரத்தையாக பிற தெய்வ வழிபாடும் பரக்கக் காணலாம். திருக்கோவையாரில் உள்ள பாடல்களில் ஒரு சில இனிமையான பாடல்களையும் அதன் பொருள்களையும் புகுந்து பார்ப்போம்.

**01. ஐயம்**

கொளு

**"தெரிய அரியதோர் தெய்வம் என்ன**
**அருவரை நாடன் ஐயுற்றது"**

அறிவதற்கு அருமையான தெய்வமோ என்று தலைவியை அரிய மலைநாட்டை உடையவன் ஐயம் கொண்டது.

**போதோ! விசும்போ! புனலோ!**
**பணிக ளது பதியோ**
**யாதோ அறிகுவ(து) ஏதும்**
**அரிதி யமன் விடுத்த**
**தூதோ அனங்கன் துணையோ**
**இணையிலி தொல்லைத் தில்லை**
**மதோ மடமயிலோ என**
**நின்றவர் வாழ் பதியே"**

அனங்கன் - மன்மதன், பணிகளது பதி - பாம்புகள் வாழும் நாகர் உலகம்

**பொருள்**

எமது உயிரை பறிக்க இயமன் விட்ட தூதோ, வசியம் செய்ய மன்மதன்விட்ட மலரம்போ, சொல்ல முடியாத இறைவனுடைய தில்லையில் வாழ்கின்ற பெண்ணோ, அல்லது மயிலோ, என்று நாம் ஐயப்படும் இந்த பெண் வாழ்கின்ற இடம்தான் எது? தாமரையோ, ஆகாயமோ, நீரோ, நாகர் உலகமோ என்று ஐயப்படவேண்டி உளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவப் பொருள்

அறியமுடியாத இறைவனின் ஞானத்தை தருகின்ற சிவத்தலைவியின் திருமேனி எங்கே உள்ளது? என்று அறிய வேண்டிய நிலை.

## 02. கல்வி

கொளு

**கொலை வேலவன் கொடியிடையோடு**
**கலவியின்பம் கட்டுரைத்தது**

வேட்டையாடுகின்ற வேலை உடைய தலைவன் கொடியிடையை உடைய தலைவியோடு கூடிய இன்பத்தைக் கூறியது.

**“சொற்பால் அமுதிவள் யான் சுவை**
**என்னத் துணிந்திங்ஙனே**
**நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று**
**நானிவ ளாம்பகுதிப்**
**பொற்பார் அறிவார் புலியூர்ப்**
**புனிதன் பொதியில் வெற்பில்**
**கற்பா வியவரை வாய்க்கடி (து)**
**ஒட்ட களவகத்தே”**

## இதன் பொருள்

தில்லை வனத்தில் உள்ள தூயவனாம் இறைவனின் பொதிய மலைச்சிகரத்தில் பரந்துபட்டுப் பரவலாகக் கற்கள் கிடக்கும். அந்த மலைச்சாரலில், எவருங் காணாத புணர்ச்சி நிகழ்கிறது. சொற்களால் விபரிக்க முடியாது, அமுது போன்ற இவளின் சுவையை நான் அனுபவிக்கும் இன்பத்தை தெய்வம்தான் தந்தது என்கிறான்.

## தத்துவப் பொருள்

சிவபோகத்தில் அழுந்திய ஆன்மா சிவத்தலைவியுடன் இரண்டறக் கலந்தமையால் விளைந்தது தான் பேரானந்தம் இந்த நிலையை "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்கிறது திருவாசகம்.

## 03. நலம் புகழ்தல்

கொளு

**பொங்கி ழையைப் புனைநலம் புகழ்ந் (து)**
**அங்கதிர் வேலோன் அயர்வு நீங்கியது**

சித்திரம் போன்ற அழகிய ஆபரணங்களை அணிந்த அழகுடைய தலைவியைப் பார்த்து, புகழ்ந்தான் வேலினை உடைய தலைவன் இதனால் அவன் கவலை அகன்றது.

**கூம்பலங் கைத்தலத் (து) அன்பர் என்(பு)**
**ஊடுரு கக்குனிக்கும்**
**பாம்பலங் காரப் பரன்தில்லை**
**அம்பலம் பாடலரின்**
**தேம்பலம் சிற்றிடை ஈங்கிவள்**
**தீங்கனி வாய்கமழும்**
**ஆம்பலம் போதுள வோஅளி**
**காள்நும் அகன் பணையே**

கூம்பல் - குவிதல்
குனிக்கும் - குறுகும்,
தேம்பும் - மெலியும்,
பணை - மருதநிலம்

## பொருள்

வண்டுகளே கைகுவித்து வணங்கும், அடியார்கள் எலும்பும் கரையுமாறு, நடனம் ஆடுகின்ற, நல்ல பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமானின் தில்லையம்பலத்தை பாடாதவர்கள் உண்டோ? அதே போல மெலிந்த இடையை உடைய தலைவியின் கனிந்த வாய் போல, நறுமணம் வீசுகின்ற ஆம்பல் மலர்களை நீங்கள் வாழ்கின்ற மருதநிலத்தில் கண்டீர்களா? சொல்லுங்கள் என்றவாறு

## தத்துவப் பொருள்

உபதேச உரையை விருப்பொடு கேட்ட ஆன்மா, அவை கைகூடாத நிலையில், சிவமாம் தலைவியின் முக மலர்ச்சியைக் கண்டு அதன் காரணமாக, சிறிது கவலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி, அவளது திருவாய் அழகினைக் கண்டுபுகழ்ந்தது.

**04. பாங்கனை நினைதல்**

கொளு

**எய்துதற்(கு) அருமை ஏழையில் தோன்றப்**
**பையுள் உற்றவன் பாங்கனை நினைந்தது**

பையுள் - வருத்தம்

தலைவியைச் சந்திப்பதற்கு அரிதாக இருந் தமையால் வருத்தமுற்ற தலைவன் தோழனை நினைந்தது.

**பூங்கனை யார்புனல் தென்புலி**
**யூர்புரிந்(து) அம்பலத்துள்**
**ஆங்கெனை யாண்டு கொண்டாடும்**
**பிரானடித் தாமரைக்கே**
**பாங்கனை யான் அன்ன பண்பனைக்**
**கண்(டு) இப் பரிசுரைத்தால்**
**ஈங்கெனை யார்தடுப் பார்மடப்**
**பாவையை எய்துதற்கே**

பூங்கனையார் புனல் - பூக்கள் நிரம்பிய நீர்

**பொருள்**

தண்ணீரால் சுற்றிவரப்பெற்ற தாமரை மலர்களால் நிரம்பிய தென் பால் உள்ள திருத்தில்லைத் தலத்தில்; அந்த சிற்றம் பலத்தில் எழுந்தருளி இருந்து, என்னை அடி மையாக்கி ஞான நடம் செய்யும் அந்த சிவ பெருமானின் தாமரைமலர் போன்ற திருவடி கட்குப் பக்கத்தே வீற்றிருப்பவனும், என் னைப் போன்றவனும் ஆன எனதருமைத் தோழனைக்கண்டு எனக்கும் அவளுக்கும் இடையே நிகழ்ந்த காதலைச் சொன்னால் அவளைப்பெற எவரும் குறுக்கே நிற்கமாட் டார்கள் என்று மன நிறைவு அடைகிறான்.

## தத்துவப் பொருள்

சிவத்தலைவியை அடைவதற்கு திரு வருளாகிய தோழி முதன்மை என்றாலும் அவளை ஆன்மா முதலில் உதவியாகக் கொள்ளவில்லை. ஆன்மா அறிவாகிய தோழ னையே முதலில் உதவிசெய்யவிரும்பியது.

**05. பாங்கன் கேட்டல்**

கொளு

**"கலிகெழு திரள்தோள் மெலிவது கண்ட**
**இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை வினாயது!"**

புகழ் கொண்ட தோள்கள் மெலிந்தது கண்டு ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்று தோழன் தலைவனைக் கேட்டான்.

**சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்**
**பலத்தும்என் சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதில் கூடலின்**
**ஆய்ந்தஒண் தீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனை யோஅன்றி**
**ஏழிசைச் சூழல்புக்கோ**
**இறைவா தடவரைத் தோட்கென்கொ**
**லாம்புகுந்(து) எய்தியதே.**

**பொருள்**

தலைவனே! மண் அணையாலே காக்கப்பெற்ற நிறைந்த நீரைக்கொண்ட சிற்றம்பலத்துள்ளும், என்னுடைய சிந்தை உள்ளும் புகுந்து தங்கி உள்ள ஆடற் கரசனின் உயர்ந்த மதில்களால் சுற்றிவரப் பெற்ற மதுரை மாநகரில் இருந்த தமிழ்ச் சங் கத்திலே, அமர்ந்து செம்மொழியான தமிழை ஆய்வுசெய்யச் சென்றாயோ? இவை நீங்கலாக ஏழிசை எனப்படும் குரல், துத்தம், கைக்கிளை, விரளி, தாரம், உழை, இளி ஆகிய (இவை தமிழ்த்துறையின்) அகப் பொருள், புறப்பொருளாகும். இத்துறைகளை ஆய்வுசெய்யப் புகுந்தாயோ? தலைவா நீ மெலிந்ததின் காரணம் தான் என்ன? என்று கேட்டான் நண்பன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் சங்கப் புலவராய் அமர்ந்திருந்தார் என்பதை "சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார் சாலு மேன்மையில் தலைச்சங்கப் புலவனார் தம்முள்" என்கிறது பெரியபுராணம். முத் தமிழுள் ஒன்றையோ அல்லது ஏழிசையுள் ஒன்றையோ உணரப் புகுந்த வழியும் உடல் மெலிவை உண்டாக்கும் என்றவாறு பார்த்து நின்றதை கண்டேன் என்று தோழன் கூறுகிறான்.

### தத்துவப் பொருள்

சிவத்தலைவியானவள் ஆன்மாவின் வரவை எதிர்பார்த்து. அந்த ஞான பூமியில் காத்திருக்கிறாள் என்று தோழன் எடுத்துரைத்தது

### 06. கண்டமை கூறல்

கொளு

**பிடிமிசை வைத்துப் பேதையது நிலைமை**
**அடுதிறல் அண்ணர்க்கு அறிய உரைத்தது**

ஒரு பெண் யானையை நடுநாயகமாக வைத்து, தலைவியின் நிலையை தலைவனுக்கு எடுத்துக் கூறியது.

**"பணந்தாழ் அரவரைச் சிற்றம்**
**பலவர்பைம் பொற்கயிலைப்**
**புணர்ந்தாங்(கு) அகன்ற பொருகரி**
**யுன்னிப் புனத்தயலே**
**மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண்**
**பரப்பி மடிப்பிடிவாய்**
**நிணந்தாழ் சுடரிலை வேல்கண்**
**டேன் ஒன்று நின்றதுவே"**

பணம் - படம், அரவரை - இடை, உன்னி - நினைந்து, நிணம் - தசை பிடி - பெண் யானை கரி - ஆண்யானை

### பொருள்

இலைவடிவான வேலை ஏந்திய தலைவனே! உனது கூரிய வேலின் நுனியில், தசை எஞ்சி இருப்பது போல படம் எடுக்கும் பாம்பை கழுத்திலே மாலையாக அணிந்திருக்கும் அந்த சிற்றம்பலக் கூத்தனின், கயிலை மலையிலே தன்னைக் கூடிப்பிரிந்த ஆண்யானையை நினைந்து, கூர்மையான கண்களையுடைய பெண் யானை ஒன்று தினைப் புனத்திற்கு அருகே கரியை எதிர்

### 07. பிறை

கொளு

**பிறைதொழு கென்றுபேதை மாதரை**
**நறுநுதற் பாங்கி நாண நாட்டியது**

பிறையைத் தொழுவாயாக என்று பேதைத் தன்மை உடைய தலைவியை, நல்ல நெற்றியினை உடைய தோழி கூறித் தலைவியை நாணும் படி செய்தது. இதில் ஐந்து துறைகள் உளது.

தலைவியை தலைவனோடு சேர்ப்பதற்கு உணரவைக்க தோழி இவ்வாறு கூறியது.

**"மைவார் கருங்கண்ணி செங்கரம்**
**கூப்பு மறந்து மற்றப்**
**பொய்வா னவரிற் புகாதுதன்**
**பொற்கழற் கேயடியேன்**
**உய்வான் புகவொளிர் தில்லைநின்**
**றோன்சடை மேல(து) ஒத்துச்**
**செய்வான் அடைந்த பசுங்கதிர்**
**வெள்ளைச் சிறு பிறைக்கே"**

### பொருள்

மறந்தும் மறவாத தெய்வ அருள் இல்லாத தேவர்கள் இடத்து நான் போக மாட்டேன். ஆனால் அழகிய சிவந்த திருவடிகளை உடைய, தென்தில்லையிலே நடம் ஆடும் சிவபெருமானின் சடையில் உள்ள, பிறையைப் போல, செக்கச் சிவந்த வானத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே தோன்றும் ஒளியை உடைய சிறிய மூன்றாம் பிறையைப் பார்க்க அழகான மைதீட்டிய கண்களை உடைய தலைவியே! உனது சிவந்த கரங்களைக் கூப்பி அந்த மூன்றாம் பிறையைத் தொழுவாயாக! என்று வினையமாக வேண்டினாள் தோழி. உலக வழக்கின்படி கன்னி கழிந்த பெண்ணான வள் தனது தலைவனுடன் நின்றுதான் மூன்றாம் பிறையைத் தொழுவர். தோழி மேற்கூறியவாறு கூறியதால் தலைவிக்கு நாணம் வந்தது. ஒதுங்கி நின்றாள். இதுவே நாண நாட்டம் ஆகும்.

## தத்துவப் பொருள்

சிவபெருமானை நாம் வணங்க வேண்டும். அந்த பரம்பொருள் யாவர்க்கும் மேலானவர். ஆதலால் அந்த பரம்பொருள் எவர்க்கும் தலைகுனியாது. ஆகவே பிறை தொழுக என்பது மேலான வேண்டுதல் ஆகும்.

இது காறும் நூல் அறிமுகம், நூலின் சிறப்பு, ஐயம், கலவி, நலம்புகழ்தல், பாங் கனை நினைதல், பாங்கன் கேட்டல், கண் டமை கூறல், பிறை தொழுதல் போன்ற சுவை தரும் பாடல்களையும் அதன் கருத்துக் களையும் தொகுத்து விரித்து உரைத் தோம்.

திருவாதவூரடிகள் இறைவன் திருவருள் பெற்ற பின்னர், இவ்வுலகில் சில காலம் வாழ்ந்தார். தில்லையின் கண்வந்து அத்திருவூரில் தவக்குடிலமைத்து நீண்ட நாள் அதன்கண் இருந்து, நித்தலும் எம் பெருமானைப் பாடிப் பரவி இருந்தார். பொன் னம்பலத்தின் எதிரே போயிருந்து, அடியார் சூழ திருக்கோவையாருக்கு பொருள் சொன் னார். திரண்டு இருந்தோர் மத்தியில் மணி வாசகர் 'இத்தமிழ் மாலைக்கு பொருள் இவரே! என்று கூறினார். திருக்கோவை யாருக்கு விளக்க உரை தந்த பெருமழைப் புலவர் திரு.பொ.வே.சோமசுந்தரனார் மணி வாசகர் குதிரை கொள்ளும் பொருட்டு செல்லும் வழியில், இறைவனால் கட்ட விழ்த்துவிட வேண்டியமையால் இறைவன் ஓர் அந்தணராகி, வழியில் இருந்த குருந்த மரநிழலில் அமர்ந்த நிலையில், அடிகளாரை அருட்பார்வையால் இழுத்து தன் அருட் கரத்தால், மணிவாசகரின் உச்சியைத் தொட்டு, அவர் திருச்செவியில் திருவைந் தெழுத்தை ஓதி, அவரை கட்ட விழ்த்து போயினார் என்று கூறிப் போந்தார் பெரு மழைப்புலவர்.

## தொகுத்து எழுத உதவிய நூல்கள்

01. திருக்கோவையார் - உரை ஆசிரியர் முனைவர் பழ.முத்தப்பன் தமிழாகரர், சித்தாந்தச் செம்மணி

02. திருக்கோவையார் - விளக்க உரை தந்தவர் பெருமழைப் புலவர் திரு. பொ.வே.சோமசுந்தரனார்

03. திருவாசகம் - விளக்க உரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## நல்லைக்குமரன் மலர் (2019) ஆய்வு

27ஆவது நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்து வைப்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் முதலாவது பீடாதிபதி திருமதி. சுகந்தினி சிறீமுரளிதரன் அவர்கள்.

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதியில் சக்தியின் பெருமை

**ஆறுமுகம் சசிநாத்**
விடுகையாண்டு இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

சைவசமயம் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மக்களால் பின்பற்றப் பட்டு வருகின்ற சமயமாகும். இச்சமயம் உல கின் பல பாகங்களிலும் பரந்து விளங்குகின் றது. சைவத்தின் தொன்மைக்கு அகழ் வாராய்வுகள், தொல்பொருட்சான்றுகள், வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றிலுள்ள பழம்பெரும் நூல்கள், பிற வரலாற்றுக் குறிப் புக்கள் என்பன ஆதாரங்களாக விளங்கு கின்றன. இந்து சமயத்தில் சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறுவகையான சமயப்பிரிவு கள் காணப்படுகின்றன. தெய்வத்தை தாயாகப் போற்றி வழிபடும் சக்தி வழிபாடு மிகவும் பழங்காலந் தொட்டே நிலவி வரு கின்றது.சக்தியை தனிப்பெருந் தெய்வமாக முதலிடங் கொடுத்து வழிபடும் சமயம் சாக்தம் எனப்படும்.

சக்தியின் பெருமைகள், சிறப்புக்கள், பற்றி பெருந்தொகையான நூல்களும், தோத்திரங்களும், புகழ்மாலைகளும் தோன் றியுள்ளன. அவ்வகையில் சக்தியாகிய அபிராமி மீது எழுந்த இலக்கியமே அபிராமி அந்தாதி ஆகும். திருக்கடவூரில் எழுந் தருளியிருக்கும் அம்பிகையின் புகழை இந் நூல் எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் 102 செய்யுட்களைக் கொண்டது. காப்புச் செய் யுள் ஒன்றும் பயன் ஒன்றுமாக இடையிலுள்ள நூறு செய்யுட்களும் அந்தாதி யாப்போடு அமைந்துள்ளது. அந்தாதி என்பது அந்தம் - முடிவு, ஆதி - தொடக்கம் எனப் பொருள்படும். ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள அசையோ, எழுத்தோ, சீரோ, அடியோ அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி ஆகும்.

திருக்கடவூரில் 250 ஆண்டுகளுக்கு முன்னர் அந்தணர் குலத்தில் பிறந்தவரே சுப்பிரமணிய ஐயர் என்னும் இயற்பெயர் கொண்ட அபிராமிப்பட்டர். இவரால் பாடப் பட்டதே அபிராமி அந்தாதி ஆகும். இது பாடப்பெற்ற சந்தர்ப்பத்தை நோக்குதல் இன்றியமையாத ஒன்றாகும். இவர் இசைத் துறையில் பாடல் புனைவதில் வல்லவராக, ஒளிவடிவில் அம்பிகையைத் தரிசித்து பேரின் பம் காண்பவராக விளங்கினார். இவரின் இத்தகு நிலையினை மற்றவர்களால் உணர முடியவில்லை. இதனால் பித்தன் என்று வசைபாடினர். அக்காலத்தில் அரசனாக இருந்த சரபோஜி மன்னன் அபிராமி அன் னையை வழிபட கோவிலுக்குச் சென்றபோது, மன்னரின் வருகையைக் கூட கவனிக்காமல் அம்பிகையின் முன் தியான நிலையில் இருந்த பட்டரைக் கண்ணுற்ற மன்னன் அருகில் இருந்தோரை நோக்கி "இவர் யார்?... என்று கேட்டான். இதற்கு அருகில் இருந்தோர் "இவர் ஒரு பித்தர் தம்குல ஆசாரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் கைவிட்டு விட்டு ஏதோவொரு துர்தேவதையை வழிபடுகின்றவர்" என்று கூறினார்கள். எனவே மன்னன் பட்டரின் உள் ளுணர்வை அறிய எண்ணி "அமாவாசை இன்று உண்டா? எவ்வளவு நாழிகை இருக் கிறது?" என வினாவினார். ஆனால் அரசன் கேட்ட வினா பட்டரின் செவிகளிலே சிறி தளவே எட்டியது. தேவி உபாசன ஆனந்தத் தில் அமிழ்ந்தியிருந்த பட்டர், இன்று பௌர் ணமி திதியல்லவா" என்று நிதானந் தவறி விடை கூறினார். சுயநினைவுக்கு வந்ததும் தன் தவறை எண்ணி வருந்தி அம்பிகையின் அருளை வேண்டி நின்று அந்தாதியைப் பாடி அம்பிகையின் அருளினைப் பெற்றார். இவ்வாறு அம்பிகையின் அருளை வேண்டிப் பாடிய பாடல்களில் அம்பிகையின் பெருமை களை எடுத்துக் கூறியுள்ளார். அந்தாதி யைப் பாடிக்கொண்டிருக்கின்ற போதே, அபிராமி தனது அருட்கடாட்சத்தினை வழங்கி தனது தத்துவத்தினை உலகறியச் செய்தவளாக உள்ளாள். இத்தகைய தன்மை கொண்ட அபிராமி அன்னையின் பெருமை களை கீழ்வருங்கால் எடுத்து நோக்கலாம்.

இறை மூர்த்தங்களிலே பேரழகுடனும், புதுப்பொலிவுடனும், மங்களகரமாயும், எல் லோர் மனதையும் கொள்ளை போகச் செய் பவனாக விளங்குவது சக்தி வடிவங்களா கும். அபிராமியின் தோற்றப் பொலிவு, அழ குச் சிறப்பு என்பன அபிராமி அந்தாதியிலே பல இடங்களிலும் வர்ணிக்கப்பட்டுள்ளன. அன்னை செந்நிறங் கொண்டவளாயும், அழகியவிரு திருமுலைகளைக் கொண்ட வளாயும், அழகிய திருப்பாதங்களைக் கொண் டவளாயும், சிறுமையான இடையினை உடை யவளாயும் தாமரை மலரில் விரும்பி உறை பவளாயும் அபிராமியின் அழகியல்பு எடுத் துக் கூறப்படுகின்றது. "தயங்கு நுண் நூல் இடையாளை," "வார்க்குங்கும முலை யும்", "அளி ஆர் கமலத்தில் ஆர் அணங்கே", "ஆடகத் தாமரை ஆர் அணங்கே", "பவளம் போலும் திருவாய்", "பனி மா மலர்ப் பாதம்", "சிந்துர வண்ணப் பெண்ணே" என்ற அபிராமி அந்தாதித் பாடலடிகள் அழகுக் கோலத்தை வர்ணித்து நிற்கின்றன.

அபிராமிதேவி பல சக்தி பேதங்களா யிமிருப்பவளாகவும், பஞ்சவர்ணமுடைய வளாகவும் பட்டர் போற்றியிருக்க காண லாம். சக்தியின் பெருமைமிகு சிறப்புக்களில் ஒன்றாகக் காணுகின்ற போது,

**"மங்கலை செங்கல சம்முலை யாண்மலை**
**யாள்வருணச்**
**சங்கலை செங்கைச் சகல கலாமயி றாவுகங்கை-"**

எனவரும் 21வது பாடல் எடுத்துக் கூறுகின்றது.

இதில்,

மங்கலை - அபிராமிதேவி, நீலி - துர்க்கை, செய்யாள் - மகாலக்ஷ்மி, வெளி யாள் - சரஸ்வதி, பசும்பெண் கொடி - உமை என ஐவகைச் சக்தி பேதங்கள் குறிக்கப்படுவதனைக் காணலாம். மேலும், சண்டி, காளி, வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி எனப்பல திருநாமங்களை சக்தியின் ஒவ்வொரு செயற்றிறனுக்கு ஏற் றாற் போல பட்டர் கூறியிருப்பது சிறப்பாக வுள்ளது. இதனை,

**"... வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே**
**செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்..."**

என அந்தாதிப்பாடல் எடுத்துக் கூறுகின் றது.

சிவனும் சக்தியும் இணைந்த நிலை பற்றி அபிராமி அந்தாதி கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியின்றிச் சிவம் இல்லை சிவம் இன்றிச் சக்தியில்லை என்னும் தன்மைகேற்ப பிரிப் பின்றிய வடிவமாகத் திகழ்வது அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். இதனை,

**"..சண்பக மாலையும் சாத்துதும் தில்லை**
**ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே..."**

எனும் பாடலூடாக, கொன்றை மாலையும், சண்பக மாலையும் அணிந்து நிற்கும் தில்லை யம்பதியில் நாயகனுக்கு ஒரு பாதியாக நிற் கும் உமையாக அபிராமி அன்னை போற் றப்பட்டாள்.

நமக்கு இருவினையொப்பு உண்டா வதற்காகவே கன்ம மூலமான விருப்பு வெறுப் புக்களைப் பாசம், அங்குசங்களாகத் தன் கரங்களிலே தாங்கியுள்ளாள். "ராகஸ் வரூப பாசாட்சயா", "குரோத் ஆகார அங்குரோஜ் வலா" எனவமையும் லலிதா சகஸ்ரநாமம் இதனைப் புலப்படுத்துகின்றது. இது

**"பநிபுரச் சீறடிப் பாசாங் குசை பஞ்ச..."**

எனவரும் அபிராமி அந்தாதிப் பாடலுக்கு அணி செய்கின்றது. சக்தியின் பாதங்களின் பெருமையினைப் பட்டர் தன் தலைமேல் கொண்டு போற்றினார். அழகிய தாமரை போலுள்ள சேவடியைப் பணிந்தேன் என்கின் றார். இதனை,

**"நின் பத்ம பாதம் பணிந்த பின்னே..."**

எனவும், என்னை ஆட்கொண்டு அருளிய பொற்பாதம் என்பதனை,

**"என்னை ஆண்ட பொற் பாதமும்"**

எனவும், தாமரை போன்றது என்ற பெருமை யினை

**"உன் பொன் திருவடித் தாமரை.."**

என்றும் பல பாடல்களில் அன்னையின் பாதக் கமலத்தினை வெகுவாகப் போற்றிப் பாடியுள்ளார்.

எல்லாவிதக் காமங்களின் முடிவே காமக்கோடியாகும். நம்முடைய மனமும், இந்திரியங்களும் வெறித்தோடாது தரும நெறிப்படுவதற்காகவே ஞானாம்பிகை தன் திருக்கரங்களில் கரும்புவில்லையும், மலரம்பு களையும் பிடித்தருளுகின்றாள் என் பதனைப் பட்டினத்தார், **"மாயநட் போரையு மாயா மல மெனும் மாதரையும்..."** எனும் பாடலூடாக கூறிச் செல்கின்றார். அபிராமிப்பட்டர் எடுத்துக் கூறும் போது, தித்திப்பான கரும்பு வில்லை யும், சுகந்தமும் மென்மையுமுள்ள மலரம்பு களையும் கபாலத்தையும் ஏந்தி நிற்கும் உருவமாக சக்தியை வழிபடுகின்றார். இதனை,

**"பனிமலர்ப் பூங்கணையுங் கரும்புச்**
**சிலையுமென்**
**பாசாங்குச முங்கையிலணையுந் திரிபுர சுந்தரி"**

எனவும்,

**"ஆரணத்தோன் கம் தரி கைத்தலத்தாள்"**

என்றும் பாடிப் பெருமைப்படுத்துகிறார். மேலும் அம்பிகையானவள் மணியாக விளங்குபவள் அம் மணியில் உண்டாகும். ஒலியும் ஆவாள் ஒளி பொருந்திய நவ மணிகளால் இழைக் கப்பட்ட அணியாகவும், அந்த அணிக்கு அழகாகவும் திகழ்கின்றாள் என்பதனை, "மணியே, மணியின் ஒலியே..."என்ற பாடல் விபரிக்கின்றது. அபிராமிப்பட்டர் உயிருக் கும் மேலாகப் போற்றும் தாயாக பலவிடங் களில் அடையாளப்படுத்து கின்றார்.

**"பூதங்களாகி விரிந்த அம்மே..."**
**"தேவரைப் பெற்ற அம்மே..."**
**"தொழும் தெய்வமும் பெற்ற தாயும்..."**

எனவமையும் பாடல்களில் சக்தியை தாயாக சிறப்பித்து பெருமைப்படுத்துகின்றார்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" எனும் முதுமொழிக்கு இணங்க, தாய்மைப் பண்பே மிகப் பெருமையுடைத்தான ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவ நெறியொன்று அல்லது பிறிதொரு பற்றுக் கோரும் என்னுயிர்க்கு உண்டு என்பதை நன்கறிந்திருந்தும் தேவரீருடைய அத்தவ நெறியின் கண்ணே மனத்தைச் செலுத்தாது செய்த பிழைக்காக பெற்ற தாயானவள் தன் குழந்தையின் குற்றத்தை தண்டிக்காது பொறுத்தல் போல என்னையும் தண்டிக்காது காத்தருள வேண்டும் என்பதினூடாக அன்னை பெருமைப்படுத்தப்பட்டுள்ளாள்.

**"மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்**

**பஞ்சஞ்சு மெல்லடி யாரடி..."**

இவ்வுலகத்தை தோற்றுவித்து, பாதுகாத்து மீண்டும் ஒடுக்கி உயிர்களை உய்விக்கும் வகையில் இறைவன் அருள் பாலித்து வருகின்றான். அவன் செய்கின்ற சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரகம் என்ற ஐந்தொழிலையும் சக்தியின் திருவிளையாடலாக ஆதிசங்கரர், திருமூலர் போன்றோர் தமது பாடல்களில் எடுத்தாண்டுள்ளனர். இதனைச் சிவசக்தி என்பர். இதனை திருமூலர்,

**அவளை யறியா அமரரும் இல்லை**

**அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை..."**

என்கிறார். இப்பாடலின் கருத்துச் செறிவுத் தன்மையினை நாம் அபிராமி அந்தாதியிலே காணலாம்.

"புவனம் பதினான்கையும் பூத்தவளே" என்ற அடியினூடாகப் படைத்தலும், "காத்தவளே" என்பதனூடாகக் காத்தலும், "பின் பூத்தவண்ணம் கரந்தவளே" என்பதனூடாக அழித்தலும் வலியுறுத்தப்படுகின்றது. உற்பத்திக் கிரமத்தில் சக்தி தத்துவத்தின் நின்றும் சதாசிவ தத்துவமும், அதனின்று மகேஸ்வர தத்துவமும், அதிலிருந்து சுத்த வித்யா தத்துவமும் தோன்றுகின்றமையும் மேற்கூறப்பட்ட பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

மேலும், "ஸ்ரீ கண்ட பரமசிவனுக்கு மூத்தவளே" என்ற அடியின் மூலமும்,"சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரமா, ஸ்ரீகண்ட ருத்ரர், விஷ்ணு, அகத்தியர், விநாயகர், சுப்பிரமணியர், மன்மதன் முதலிய புண்ணியர் தேவியை வழிபட்டனர் என்ற கருத்தின் மூலமும் சக்தியே சிவனுக்கும் மூத்தவராக உயர்வான பரம்பொருளாகச் சித்தரித்துக் காட்டுகிறது அபிராமி அந்தாதி.

தேவி ஒன்பது சக்கரங்களைக் கொண்ட ஆபரணங்களில் விரும்பி உறைபவளாவாள். இதனால் "நவயோனி சக்கரம்" எனவும் நாற்பத்து மூன்று முக்கோணங்களைக் கொண்டதால் "த்ரிசத் வாரிம் சத்சக்கரம்" எனவும், அன்னையின் மாத்ருகா சக்திகள் அடங்கியிருப்பதால் "மாத்ருகா சக்கரம்" எனவும் அழைக்கப்படுகின்றன. இந்த ஒன்பது சக்கரங்களிலும் உறையும் அம்பிகையை அபிராமிப்பட்டர்,

**"ஒளிர்கின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி**

**உறைபவளே"** எனக் குறிப்பிடுகிறார். இவற்றுள் சிவகோணம் நான்கும் கீழ் நோக்கியும், சக்தி கோணம் ஐந்தும் மேல் நோக்கியும் தம்முள் புணர 43 முக்கோணமும் உற்பத்தியாகின்றன. இவற்றின் உற்பத்திக் கிரமத்தினுள் சங்கார கிரமங்களும், கௌமத, சமய மத விகற்பங்களும் அக்ஷ்ர அடைப்பும், கிரக மாலிகா கிரமமும் பிறவும் ஈண்டு விரிகின்ற போது பெருகுகின்றது. இத்தவகோணங்களிலும் தேவி விசேஷ வியாபகமாய் வீற்றிருக்கிறாள். இதனை,

**"ஒளி நின்ற கோணங்களொன்பது**

**மேவியுறைபவளே" என்று கூறுகிறார்.**

அபிராமி அன்னை இசைவடிவாய் நிற்பாள் ஒளியாய் ஒளிர்வாள். வெளியாய் விரிவாள், திங்களுக்குள் இருந்து தண்ணொளி வீசுவாள், பிரமனிடம் கலைமகளாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலிடம் திருமகளாகவும் இருப்பவர்கள் அவளுடைய சக்தி அம்சங்களே ஆகும். புவனம் பதினான்கும் பூத்துக் காக்கும் பரா சக்தி பிறப்பும் இறப்பும் அற்றவள்,

**"நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே..."** என்ற பாடல் இதனை எடுத்துக் காட்டுகிறது. மேலும் அபிராமி அன்னையின் கடைக்கண் பார்வை தேவியின் அன்பர்க்கு எல்லாவித ஐஸ்வர்யங்களையும் தரக்கூடிய சிறப்பு வாய்ந்தது. இதனை,

**"தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும்**
**தளர்வறியா...**
**அபிராமிக் கடைக்கண்களே"** எனும் அந்தாதிப்பாடல் விபரிக்கின்றது. தாயானவள் வேதமாகிய சிலம்பை உடையவள் என்பதனை,

**"பனி மொழி வேதப் பரிபுரையே..."** என்கிறார்.

சக்தியை வழிபடும் அடியவர்கள் எவ்வாறான மறுமைப் பயனை அடைகின்றனர் என்பதனையும் அபிராமிப்பட்டர் எடுத்துக் கூறுகின்றார். அபிராமி தேவியின் திருவடிகளை மறுமை வாழ்வை நினைத்து இம்மையில் அர்ச்சனை செய்து வழிபடுகின்ற அடியவர்கள் சுவர்க்கலோகம் முதலிய தசாங்கங்களையுமுடைய இந்திரராவர். இதனை,

**"விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல...**
**முரவுங் குலிசமும் கற்பகக் காவு முடையவரே"**
என்ற பாடல் வாயிலாகவும், இந்திர தேவராகி கற்பகச் சோலையில் அரம்பையர் ஆடிப்பாட பொற்சயனத்தில் வீற்றிருப்பார்கள் என்பதனை,

**"தபனியக் காவினில் பொருந்து பொன் சயனம்**
**பாவையர் ஆடவும் பாடவும் தங்குவர்"**
என்ற பாடலினூடாக வெளிப்படுத்தியிருக்கக் காணலாம். அபிராமி தேவியை வழிபடுகின்றவர்கள் பிறவிச் சுழற்சிக்கு உட்படாமல் நித்திய முத்தியைப் பெற்றுத் தேவராகி என்றும் இன்பத்தில் திளைப்பார்கள்.

சகல தெய்வங்களும் சக்தியின் அம்சமாகவும் அங்கமாகவும் இருத்தலின் சக்தி வழிபாடு ஒன்றே சர்வ தெய்வ அநுக்கிரகத்தையும் பெறத்தக்க வழிபாடாக அமைகின்றது. ஏனைய தெய்வங்கள் கேட்ட வரம் அருள, அன்னையோ வேண்டத்தக்க தறிந்து கேட்டதிலும் அதிகமாகக் கொடுக்கும் கற்பகமாக விளங்குகிறாள். இத்தகு சிறப்பினை அபிராமி அந்தாதியிலே காணமுடிகின்றது. அந்தவகையில், அடியவர்களுக்கு திருவடி தீட்சை செய்து, அவர்களை தடுத்தாட் கொண்டருளுகின்றாள் அபிராமி அன்னை. இதனை,

**"அருள் அற்ற அந்தகண் கைப்பாசத்தில்**
**அல்லல்பட இருந்தேனை**
**நின் பாதமென்னும் பாசக்கமலம் தலைமேல்**
**வைத்து..."**
என்று பாடுகின்றார்.

அபிராமி அன்னையின் திருவடிகளைப் புகலடைந்த அடியார்களுக்கு எக்காலத்திலும் வறுமை இல்லை என்று கூறப்படுகின்றது. இதனை,

**"இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சொன்..."** எனவமையும் 51ஆவது அந்தாதிப் பாடல் எடுத்துக் கூறுகின்றது. மேலும்,

**"தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் பாத்திரங் கொண்டு..."** எனும் பாடலில் அபிராமியை தொழுது வணங்காதவர்கள் கல்வி, தோத்திரம், கொடை முதலியவற்றை இழந்து நித்திய தரித்திரராகி பிச்சையின் பொருட்டு பூமி எங்கும் அலைந்து திரிவர் என்று கூறுகின்றது. பட்டினத்தடிகளும்,

**"ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்**
**தமைப்...**
**வேற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற்**
**றிருப்பர்களே.."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவதானது அபிராமி அன்னையை வணங்குவோர்க்கு எக்காலத்தும் துன்ப மில்லை என்று கூறுகின்றது.

தொகுத்து நோக்குகின்ற போது சக்தியை போற்றித் துதிக்கும் இலக்கியங் கள் பல எழுந்திருப்பினும், அபிராமி அந் தாதியிலே சக்தியினது அழகு, பாதச்சிறப்பு, சக்தி நாமங்கள், தத்துவம், கலை, கூந்தல் சிறப்பு எனப் பல்வேறு விடயங்களும் சக்தி யின் பெருமையை எடுத்து விளக்குகின்றது

**உசாத்துணை நூல்கள்**


01. சிவசங்கரசர்மா, நா., (2006),"சாக்தத் தில் ஸ்ரீசக்கரம்", நல்லைக்குமரன் மலர் - 14, சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.
02. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்., (1959), அபிராமி அந்தாதி மூலமும் உரையும், வித்தியாநுபாலன இயந்திரசாலை, சென்னை.
03. நாகராஜன், அநு.வை., (2000), பட்ட ரின் அபிராமி மான்மியம், வைரமான் வெளியீடு, தெல்லிப்பழை, யாழ்ப் பாணம்.
04. வேற்பிள்ளை.ம.க., (1936), அபிராமி அந்தாதி, வித்தியாநுபால அச்சியந் திரசாலை, சென்னை.
05. தங்கம்மா அப்பாக்குட்டி., (1987), அபி ராமி அந்தாதி மூலமும் பொழிப்புரை யும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
06. ஜகந்நாதன்.கி.வா., (1970), மாலை பூண்ட மலர், அமுத நிலையம் லிமிடெட், சென்னை.




## நல்லூர் ஷண்முகர் வாசல் இராஜகோபுரம்

- ♦ நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான யந்திரம் 31.08.2010 (கார்த்திகைத் திருவிழா) அன்று காலை வேளை பிரதிஷ்டை செய்யப்பட்டது
- ♦ நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான நவ கலசம் 25.07.2011 (கார்த்திகை தினம்) அன்று மாலை வேளை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.
- ♦ அதிகம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள ஸ்ரீ ஷண்முக இராஜ கோபுரம் ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஸ்வர்ண வாசல் தரிசனம் நவகலஷாபிஷேகம் 21.08.2011 ஞாயிறு (கார்த்திகை உற்சவ தினம்) காலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்களின் அகப்பொருளியல் மரபு

**தி.செல்வமனோகரன்**
விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சைவ சமய பக்திப் பனுவல்களுள் தேவாரங்களுக்குத் தனியிடமுண்டு. சைவத்தின் சமய, சமூக, தத்துவ வளர்ச்சிக்கும் மாற்றத்துக்குக் காரணமாகவும் தமிழ் நாட்டில் அவைதிக நெறிகளிடமிருந்து மக்களையும் மன்னர்களையும் சைவத்தின் பாற்படுத்தி மீட்டுருவாக்கம் செய்த பக்தியியக்கத்தின் குரலாகவும் தேவாரங்கள் வர்ணிக்கப்படுகின்றன. இவை பக்தியுணர்வின் வழி சாதாரண மக்களிடமும் கற்றவரிடமும் அதிகாரத்தரப்பிடமும் சைவத்தின் மீது நம்பிக்கை யேற்படுத்தப் பலவாறு முனைந்தன. பிரதேசவுணர்வு, மொழியுணர்வு, சுதேசியவுணர்வு, உலகியல் வாழ்வுக்கு முதன்மை, யாத்திரை, தலப் பெருமை கூறும் பதிகங்கள், உணர்ச்சியூட்டும் விருத்தப்பாவின் கையாளுகை, இறைபெருமை, அவன் அருளுடைமை, மக்கள் மத்தியில் அற்புதம் செய்தல், சமூகப் பணி போன்ற இன்னோரன்ன விடயங்கள் அவற்றுள் அடங்குகின்றன. அதேபோல் இறைபக்தியை - இறைவனின் உருவம், சிறப்பு, அநாதித்துவம் அருட்திறன் அதற்கான பக்தனின் தகுதி, எண்ணம், சொல், செயல் என்பன எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதையும் சொல்ல வேண்டியிருந்தது. கற்றவரும் மற்றவரும் விளங்கத் தக்க வகையில் அதேவேளை சுவாரஸ்யம் மிக்கதாகவும் கூற நாயன்மார்கள் அகத் துறையைத் தேர்ந்தெடுத்தனர்.

ஆரம்பகாலத் தமிழிலக்கியங்கள், இயற்கையோடு ஒட்டிய வாழ்வின் நின்றும் தோன்றியவை என்றும் அவை அகம், புறம் என்பவற்றைத் தம் கருப்பொருட்களாகக் கொண்டவை என்றும் பொதுவில் சுட்டப்படுகின்றன. அக்காலத்தில் உலகியற் துய்ப்பில் முழுமையாக ஈடுபட்ட தமிழர்கள் தமக்கான தனித்துவமான சமூக, சமய, கலை, பண்பாட்டடையாளங்களை உருவாக்கியதோடு தம்மைத்தாமே ஆண்டதோடு அரசியல், பொருளாதார, சமூக அசைவியக்க செல்நெறியில் சிறப்புற முன்னேறிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறான இயற்கையோடு ஒட்டிய வாழ்வுக்கு அப்பால் சமண பௌத்த செல்வாக்கு, களப்பிரர் வருகை, ஆட்சி மாற்றம், வாழ்வியற் தோல்விகள், மரணம் போன்றவற்றின் வழி, சிந்தனை அல்லது கருத்தியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. நிலையாமை, துறவு, அறம் போன்றவற்றை வற்புறுத்திய சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்குகள் மிகுந்தன. காதல் வாழ்வும் இல்லறமும் கீழ்நிலை பெற, துறவே முதன்மைப்படுத்தப் பட்டது. அறநூல்களே மிகுதியும் தோன்றின. குறித்த காலகட்டத்தின் பின் மக்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. அருளாளர்களும் தோன்றினர், கலைநயம்மிகு பக்திப் பனுவல்களும் தோன்றின. பற்றுக்கோடற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற தமிழக மக்களை இறைவன் ஒருவன் உளன், அவனைப் பற்றுங்கள், துன்பங்கள் யாவும் மறைந்து இன்பமே எந்நாளும் என எடுத்துரைத்தனர். பேரின்பத்துக்குக் காதலும் இல்வாழ்வும் தடையாகா என்பதோடு அவை நல்வழி காட்டும் என்றனர். மனித வாழ்வும் அர்த்தமுடையதாக எடுத்துரைக்கப்பட்ட பக்தி இலக்கியத்தின் வழி சைவம் தழைத்தோங்கியது.

சங்க கால மக்களின் வாழ்வில் புறத்திணை இன்றியமையாததாய் விளங்கினும் அதுவும் பல சமயங்களில் அகத்தின் பாற்பட்டே வெளிப்பட்டது.

"சங்கவிலக்கியம் 1862 அகப்பாடல் உடைய காதலிலக்கியம். ஒவ்வொரு பாடலிலும் ஆண் பெண் உள்ளங்கள் உள்ளன. இப்பாடல்களைக் கற்பவர் 3724 காதல் உள்ளங்களைப் பற்றிய அறிவு பெறுவர்." எனக் கூறப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. புறப்பாடல்களைவிட அகப்பாடல்களே மிகுந்திருந்தமையையும் அறியமுடிகிறது. அகம் என்பது உள்ளத்தில் நிகழ்வது; உணர்வின் வழி அறிய முடியுமே அன்றி இஃது இவ்வாறு எனப் புறத்தே எடுத்துரைக்க முடியாதது; மனதினால் அறியும் சிறப்புப் பொருந்தியது என எடுத்தாளப்படுகின்றது. ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூடலின் வழி ஒருவர்க்கொருவர் தத்தமக்கு இவ்வாறு இருந்தது எனக் கூறமுடியாததாகவும், உள்ளத்துணர்வால் என்றும் நுகர்ந்து இன்புறும் ஒன்றாக இருப்பதும் அகம் எனப்படுகின்றது. காதலின்பத்தை வெளிப்படுத்தும் ஆகுபெயராக ஆய்வாளர் சிலர் இதனைச் சுட்டுகின்றனர். அகம், காதல், காமம் போன்றன ஆரம்பகால இலக்கியங்களில் ஒத்தபொருட் சொற்களாகவே பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளன.

காதல் வாழ்வின் அம்சங்களைத் தொல்காப்பியம் முதல், கரு, உரி எனும் முப்பிரிப்புக்களால் சுட்டி நிற்கின்றது. ஐவகை நிலங்களிலும் காணப்பட்ட காதல் சார்ந்த பண்புகளான களவியல், பிரிதல், காத்திருத்தல், ஊடல், ஏங்குதல், புணர்தல், காதல் துயர் என்பன உரிப் பொருள்களாகும். அவர்களின் வாழ்வியற் சூழலை எடுத்துக்காட்டும் மரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் தொழில்கள் போன்றன கருப்பொருட்களாகச் சுட்டப்பட்டன. காதல் வாழ்வின் பின்னணியாக விளங்கக்கூடிய நிலம், காலம் என்பன முதற் பொருட்களாகச் சுட்டப்பட்டன. இவ்வாறாக இயற்கையோடு ஒட்டியிருப்பினும் அக்காலக் காதற் பாடல்கள் கற்பனை சார்ந்தவையே என எடுத்தாளப்படுகின்றன. அது ஆய்வுக்குரியது.

சாதாரண மனித வாழ்வில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையில் ஏற்படுகின்ற அன்பு - அன்பின் பிணைப்பு அதன் ஆழ் தன்மை என்பவற்றை பக்தியாளர்கள் தத்தம் கடவுளர் மீது ஏற்றியுரைக்க முற்பட்டனர். அதன் வழி மானிடக் காதல் தெய்வீகக் காதலாயிற்று. நாயகனுக்கும் நாயகிக்கும் இடையில் ஏற்படுகின்ற காதலுணர்வு வழி வரும் கூடல், ஊடல், பிரிவு, காதற்றுயர், வருந்துதல், ஏங்குதல், கண்ணீர் விடுதல், அழுகை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் நாயக நாயகி பாவத்தினூடாக இறையான்ம உறவாக வெளிப்படத் தொடங்கின. இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவனை செய்து இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவின் ஞானநிலையை இப்பாடல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்தி நிற்கின்றன. தாங்கள் அனுபவித்த அகம்சார் இறையனுபவத்தை பக்தியாளர்கள் சமயவனுபவமாக வெளிப்படுத்திய பாடல்களாக இவ்வகப்பாடல்களை இனங்காண முடிகிறது. இறைவனை அப்பன், அம்மை, குரு, காதலன் எனப் பல்வேறுபட்ட உறவு முறைகளின் வழி புரிந்து கொள்ளவும் புரிந்து கொண்டதை வெளிப்படுத்தவும் இவர்கள் முற்பட்டனர். ஆயினும் நாயக நாயகிபாவம் நிறைந்த அகப்பாடல்களே இறையான்ம உறவைத் தெளிவுற எடுத்துரைக்க முற்பட்டன.

இறைவன் பதிப்பொருள் யாவும் கடந்த, யாவும் அறிந்த, ஆதியந்தமில்லாத, சுட்டியுணர முடியாத சொரூப இலக்கணத்தினன் பௌதிகவதீத வஸ்து, ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சற்றுக் கீழ் இறங்கி வந்த நிலையே தடத்த இலக்கணம்; இறைவன் உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகளாலான நிலையிது; பக்தியாளர் தத்தம் பக்தித் திறத்தால் அவனை இறுகப் பற்றி மேனிலையடைய முற்படுவர். அவ்வாறு இறைவனைப் பற்றிப் பிடித்த திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தம் இறையன்பினை - அனுபவத்தினை வெளிப்படுத்திய - புறநிலையில் அனைவரும் கற்றுணரத்தக்க வகையில் எடுத்துரைத்த பாடல்களே தேவாரங்களாகும். தம் பதியான சிவபெருமானின் மீது அவர்கள் கொண்ட காமம் சிவகாமமாக வெளிப்படுத்தப்பட்டது. கடவுள் மீது மானிடப் பெண்கள் நயந்த - தம்மைப் பெண்களாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு தேவார முதலிகள் பாடிய அப்பாடல்களைத் தேவார அகப்பாடல்களாகக் கருதலாம்.

**"காமப் பகுதி கடவுளும் வரையார் புலவர்**
**ஏனோர் பாங்கினும் என்மனார்"**

எனும் தொல்காப்பியவரிகள் இங்கு மனங்கொள்ளத் தக்கவையாகின்றன.

தமது அன்பின் அனுபவத்தை, இறைவனை நாடும் அகவெளிப்பாட்டை, துடிப்பை தேவாரமுதலிகள் தம்பாடல்களில் புலப்படுத்தியுள்ளனர். உலகியற்றளத்தில் வெளிப்படுத்தப்பட்ட இம்மரபை இறையுணர்வு சார்ந்து தெய்வீகத்தளத்தில் "பெண்ணில் நல்லாளொடு இருக்கும் சிவனைக்" காதல் கொள்ளும் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் திருஞானசம்பந்தர் பாடல்களில் 14 பதிகங்களும் ஒரு தனிப்பாடலும் அகப்பாடல்களாக அமைந்துள்ளன. அப்பர் பாடல்களில் 11 பதிகங்களும் சுந்தரர் பாடல்களில், இரு பதிகங்களும், ஒரு தனிப் பாடலும் அகத்துறை சார்ந்து பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தரின் அகத்துறைச் செய்யுட்களின் திருத்தோணிபுரத் திருப்பதிகமும் திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகமும் அப்பரின் அகத்துறைச் செய்யுட்களில் திருப்பழனத் திருப்பதிகமும் திருமருகற் திருப்பதிக நான்காம் பாடலும் சுந்தரரின் அகத்துறைச் செய்யுட்களில் திருவாரூர்த் திருப்பதிகமும் தூதுச் செய்யுட்களாக அமைந்துள்ளன. அப்பர் தேவாரத்தில் திருப்புறம்பயம் எனும் திருத்தாண்டகம் தலைவனுக்குத் தூதுவிட எண்ணிய தலைவி தன் தோழிக்குக் கூறுவதாய் அமைந்துள்ளதும் சுட்டத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்யுட்களுள் பூவைகள், வண்டுகள், குருகுகள், கிளிகள், பேடைகள், சேவல்கள், குயில், நாரை, நெய்தல், தென்றல், புறாக்கள், நாகணவாய்ப்புட்கள், அன்றில், தாரா போன்ற அஃறிணைகள் தூதனுப்பப்படுகின்றன. அகம் சார்ந்த இன்ப துன்பவுணர்வுகளை ஒருவனோ ஒருத்தியோ தம் தூதுப் பொருளிடம் கூறி நிற்றல் தம்முள்ளத்தை தாமே ஆற்றுப்படுத்தும் நிலையாகக் காணப்படுகின்றது. இதனை விரித்துரைக்கின் தம் உள்ளத்தே எழுகின்ற நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எட்டும் வெளிப்பட்டு விளங்க மனஅறிவு, பொறியறிவு ஆகிய இரண்டையும் வேறுபடுத்தி அஃறிணையில் ஒன்றையோ பலவற்றையோ விளித்துத் தம் நோயும் இன்பமும் புலப்படப் பேசுவர். அவ்வஃறிணைப் பொருள் ஒட்டிய உறுப்புடையது போல், உணர்வுடையது போல், மறுப்பதுரைப்பது போல் தம் நெஞ்சோடு பேசுவதும் உண்டு.

இறைவன் அநாதிப் பொருள் என்பது போல ஆன்மாவும் அநாதிப்பொருள். இவையிரண்டும் அறிவுடைப் பொருள்களாயினும் இறைவன் பேரறிவனன் - முற்றறிவின் ஆன்மா குறையறிவுடையதாகும். ஆன்மா அறிவிக்க அறிவது - உணர்த்த உணர்வது; சைவசித்தாந்தம் இறையான்ம உறவை தெய்வீகக் காதலூடு விளக்கி நிற்பது யாவரும் அறிந்ததே. தேவார முதலிகள் இறையான்ம உறவு நிலை பற்றிய கருத்தாடலைத் தூது விடும் அஃறிணைப் பொருட்களில் இருந்து ஆரம்பிக்கின்றனர். தாமரை மலரில் தேனினை உண்டு பெடையினோடு ஒண்டரங்க இசைபாடும் அளியரசே என்கின்றார் சம்பந்தர்.

தேனினை உண்டு பெடையோடு இணைந்து இன்புற்றிருக்கும் வண்டு பிரிவுத்துன்பம் பற்றியறியாது. அவ்வண்டினை அழைத்து அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவே ஆன்மாவின் நிலை, வண்டு தேனுண்டு களித்திருக்கும் தன்மையிலும் - பெடையோடு கூடிக் களித்திருப்பதனாலும் உண்மையை உணரார் உணர்த்தவே உணரும் தத்தம் கடமையை அவை செய்ய வேண்டும் என உணர்த்துகின்றாள் தலைவி. இவ்வாறு தன்னிணையுடன் கூடி மாயா பந்தத்திலுள் கட்டுண்டு கிடக்கும் சகலநிலையில் ஆன்மா, உணர்த்த உணர்தலின் உலகியல் நிலை விடுத்து ஆன்மிக நிலையை அடையப்பெறும். மாயாமலத்துள் ஆன்மா அகப்பட்டிருத்தலை வண்டு மது அருந்திய நிலைக்கு ஒப்பாகச் சுட்டுவர். தூதுப் பொருட்களை அழைக்க முற்பட்ட தேவாரமுதலிகள் மூவரும் அவற்றைப் புகழ்ந்து உரைத்துள்ளமை அவதானிக்கத்தக்கது.

**"வண்டரங்கப் புனற்கமல மது மாந்திப் பெடையினோடும்**
**ஒண்டரங்க இசைபாடும் அளியரசே"**
**"முன்றில் வாய் மடற் பெண்ணைக் குரம்பை வாழ்**
**முயங்குசிறை அன்றில்காள்"**
எனச் சம்பந்தரும்,
**"தேன் நலங் கொண்ட தேன் வண்டுகள்**
**கூடும் அன்னப் பெடைகள்"**
எனச் சுந்தரரும்,
**"துணையார முயங்கிப்போந்த துறை சேரி**
**மடநாராய்"**
என அப்பரும் பாடிநிற்பதனைச் சுட்டலாம்.

இறைவனை, இறையடியவரை வணங்கிப் பணி செய்தற்கும் இறையருள் வேண்டும். இறைவன் மீது தீராக் காதல் கொண்ட ஆன்மா, சிற்றறிவு கொண்ட பிற ஆன்மாக்களை இறையேவலால் அழைத்து இறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை கூறி அவற்றை இறைவனிடம் ஆற்றுப்படுத்துந் திறன் இங்கு நோக்கத்தக்கது.

தம் இணைகளுடன் கூடி இன்புற்றிருக்கும் இவை தன் தாபத்தைப் புரிந்து கொள்ளும், தான் பிரிவுத் துயராற்படும் வேதனையை இணையுடன் கூடியிருந்தால் இவையுணரா எனப் பலவாறு எண்ணித் தன் தனிமையைத் துயரை, விரகதாபத்தைப் பல வழிகளிலும் தலைவி வெளிப்படுத்துவதாக இப்பதிகங்கள் அமைந்துள்ளன. அகத்துறையில் தலைவி கூற்று, செவிலி கூற்று, தலைவன் கூற்று, நற்றாய்கூற்று, தோழி கூற்றெனப் பாடல்கள் அமைவது வழக்காகும். இத் தூதுப்பதிகங்கள் தலைவியின் கூற்றுக்களாக மட்டும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. தூது செல்லும் அஃறிணைப் பொருட்களை அவற்றின் சிறப்புக்கருதிப் பலவாறு அழைத்து, தலைவி - ஆன்மா தன்னிலையைத் தலைவனுக்கு - இறைவனுக்கு உணர்த்துமாறு பலஉணர்வு வெளிப்பாட்டுக்களினூடாக வேண்டிநிற்பதை அவதானிக்கலாம். அந்நிலையை பின்வருமாறு நோக்கலாம்.

1. தலைவனிடத்துத் தன் துயரத்தை, மெய்வேறுபாட்டை உணர்த்தித் தன் நிலையைத் தெரிவித்தல்.
2. தலைவனைத் தன்னிடத்தே ஒரு முறை வந்துபோக உரைத்தல்.
3. தலைவன் திருப்பெயரைச் சொல்லுதலும் கேட்டலும்.

தேவார அகத்துறைசார் இப்பாடல்கள் யாவும் தலைவி கூற்றாகவே அமைந்துள்ளன. தலைவி தனக்கு காதற் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தை முதற்கண் கூறுகின்றாள்.

**"என்நிலைமை பரிந்தொருகாற் பகராயே**
**என்னிலையை நிகழ்த்தாயே"**

எனும் சம்பந்தரின் வரிகளாலும்

**"முன்மாலை நகு திங்கள் முகில் விளங்கு**
**முடிசென்னிப்**
**பொன்மாலை மார்பன் என்**
**புதுநலமுண்டிகழ்வானோ"**

எனும் அப்பரின் வரிகளாலும் இதனை அறியலாம்.

இதன்வழி இறைவன் மீது காதல் வயப்பட்ட ஆன்மா பயலை எனும் பசலை நோய் பீடிக்கப்பட்டதாயிற்று. இப்பாடல்கள் இறைவனைப் பிரிந்திருக்க முடியாது தவிக்கும் ஆன்மாவின் நிலையை உணர்த்தி நிற்கின்றன.

**"என்பயலை வேதியர்க்கு விளம்பாயே"**
**"உறுபயலை - பண்பனுக்கென் பரிசுரைந்தாற்**
**பழியாயே"**
**"என்கூர் பயலை கூற்றே"**
**"மெய்ப்பயலை விளம்பாயே"**

என வரும் வரிகள் இதற்கு உதாரணங்களாகும்.

இவ்வகத்துறைப் பாடல்கள் கைக்கிளை வகையினவாகவே அதிகம் காணப்பட்டாலும் தன்னை ஆட்கொண்ட தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து போன - தன்னுடன் அழைத்துச் செல்லாத துயரத்தையே பதிவு செய்கின்றன. காணாதனவெல்லாம் காட்டி ஆன்மாக்களை ஆட்கொண்ட இறைவன் "பிரார்த்த கன்ம" அனுபவிப்புக்காக அவற்றை உலகினில் வாழவிடுவான். இறைவன் மீது தீராக்காதல் இருந்தும் அவன் தாள் சேர முடியாநிலையை எண்ணி ஆன்மா இரங்கி நிற்கும் நிலையே இப்பாடல்கள் வழி கூறப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்த கன்மமே இதற்குக் காரணம் என்பதனை "அருவினையேன்", "கடுவினை யேன்", "உள்ளுவார் வினை தீர்க்கும் என்றுரைப்பார்" எனப் பலவாறு இவர்கள் எடுத்தாண்டுள்ளமையை அவதானிக்கலாம்.

இவ்வாறு தன்னைக் கையறுநிலையாக விட்டுச் சென்ற இறைவனை நினைத்து நினைத்து ஆன்மா மறுகுகிறது. மறக்க முடியாமல் உறக்கமில்லாமல் அத்தன் ஆரூரனை, பருகுமாறும் பணிந்தேத்து மாறும் அவனை நினைத்து கசிந்துருகு மாறும் தவிக்கிறது. என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்லாது அக்கிரமங்கள் செய்கிறான் ஈசன் இப்பிரிவால் கைவளையல்கள் தாமாகவே கைகளில் நின்றும் கழன்று விழுகின்றன. கால்களோ சோர்கின்றன. கையிலுள்ள கனவளைகளோ கழல்கின்றன. முலைகளோ பீர் கொள்கின்றன. பால் நலம் உடைய இப்பணை முலைகள் பசலை படர்ந்து கிடக்கின்றன. கண்டவாறு காமத்தீ கனன்று எரிந்து என் மெய்யை உண்கிறது. நானோ உன்னைப் பரவியும் உருகியும் அடைய எண்ணுகிறேன். ஆனால் நீயோ என்னைச் சற்றேனும் திரும்பிப்பார்க்கிறாய் இல்லை யென ஆன்மா தவிக்கிறது. இவ்வாறு ஆன்மா இறைவன் மீது தீராக்காதல் கொள்ளினும் பிரார்த்த கன்மம் முடிவுறாமல் உரிய பக்குவத்தை அடையாமல் மலபரிபாக, இருவினையொப்பு எய்தும் நிலைபெறினும் சத்திநிபாதம் சித்திக்காததாய் இருத்தலை இது புலப்படுத்துகிறது.

தலைவி, பிரிவுத்துயரால் பசலை படர்ந்து, தன்னாமம் கெட்டு, மெய்யுணர்வழியும் நிலையில் உள்ள என்னைத் தலைவன் ஒரு முறையேனும் வந்து பார்த்துச் செல்ல வேண்டுமென ஆசைப்படுதலைக் கூறுகிறாள். அத்தோடு அவனை நினைத்துப் பல வாறு போற்றுகிறாள். என்தலைவன் சாதாரணன் அல்லன் அவன் மேலான பதியாவான் "பண்டரங்க வேடத்தான்பாட்டோவாப் பழனத்தான் கைம்மாவுரி போர்த்தான் பதியாவது இதுவென்று பலர்பாடும் பழனத்தான் மதிகங்கை சூடியவன் முன்மாலை நகு திங்கள் முகில் விளக்கு முடிசென்னியன் அலைகொள் சூலப்படை அடிகளார் ஒளி மதியத் துண்டரங்கப் பூண்மார்பர் புரிசடையெங் கார்மிகுந்த கறைக்கண்டத் திறையவன்" எனப் பலவாறு வர்ணித்து ஆன்மா இன்புறுகிறது. இத்தோற்றத்தை எண்ணி எண்ணி ஆன்மா தனது கரணங்களை, பொறி புலன்களை பூரண இறைசிந்தனைக்குரியதாக்குகிறது. மேலும் அவனது நாமங் கேட்டல் ஆன்மாவுக்குப் பேரின்பத்தை நல்குகிறது. சம்பந்தரின் "இளம்பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே" எனக் கிளியிடம் வேண்டும் வரி இறைநாமம் செப்புதலின் சிறப்பைத் தெளிவுறுத்துகிறது.

இன்புறும் நிலையும் பின் தலைவன் தன்னை மறந்து கைவிட்டு விடுவானோ என்ற ஏக்கமும் ஏற்பட ஆன்மா பலவாறு எண்ணிப் பிதற்றுதலையும் இப்பாடல்கள் பதிவு செய்கின்றன. பொன்மாலை அணிந்த மார்பன், என் புதுநலம் உண்டு இகழ்வானோ, என்னை ஆட்கொண்ட அந்த இனிய நாளை மறந்து விடுவானோ, என் காதலூடாக எனது உயிர் மீது திருவிளையாடல்கள் புரிகின்றானோ, கண்பொருந்தும் போதத்து அவனால் கைவிடப்படுவனோ, மணம் புரிய மறுப்பானோ, வஞ்சித்து என் வளை கவர்ந்த அவன் வாரானேயாயினும் அவன் காதலை எண்ணித் துன்பம் நீங்கி வாழ்வேன் என மறுகிக் காதலுறுதி பூண்டு நிற்கும் தன்மை எடுத்தாளப்படுகின்றது. அதேவேளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வராது விடினும் அவனை நினைவுறுத்தும் வகையில் "அவன் மார்பில் அணிந்திருக்கும் மணம் வீசும் கொன்றை மாலையை யாவது வாங்கி வரமாட்டாயா?" என ஏங்கி நிற்கிறது ஆன்மா.

அது மட்டுமல்லாது என் தலைவன் உள்ளுவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிந்து அவர்தம் குறைநீங்கும் இயல்பினன் என உலகோர் போற்றிப் பரவுகின்றனர். ஆனால் எனக்கு ஏற்பட்ட இத்துயரத்தை நீக்காது பிரிவில் நின்று என் கைவளையல் களை அல்லவா கவர்ந்து விட்டான். பொங்கோத மால்கடலின் புறம்புறம் எல்லாம் சென்று இரை தேர்கின்ற சிவந்த கால்களை யுடைய வெண்ணிற நாரையே என்ன செய்வதென்றறியாது திகைக்கும் எனக்கு தூது சென்று என்னிலை இறைவற்குத் தெரிவிப்பாயாக என ஏங்கி நிற்கும் நிலை முக்திக்கு அவாவிநிற்கும் ஆத்மனின் நிலையைத் தெளிவுறுத்துகிறது.

பற்றுமற்றின்மை, பாடுமற்றின்மை, உற்றுமற்றின்மை நிற்கும் ஆத்மன், பாடுமாறும் பணிந்து ஏத்துமாறும் ஊடிக் கூடுமாறும் இரங்கி நிற்கிறது. இறைவனை நித்தமாக நினைத்து, உள்ளம் ஏத்தித்தொழும் அத்தன் என எண்ணியுருகிக் கசிந்து நிற்கிறது. கொல்ல வந்த யானையை உரித்து ஆடையாக அணிந்தவன், மதியாதார் வேள்விதனை மதித்திட்டவன் மதி, கங்கை என்பவற்றை அருள் கூர்ந்து தன் அணிகலன்கள் ஆக்கியவன், இருவிசும்பின் கடி அரணம் பொடி செய்த இணையார மார்பன், மலைமகள் கோன் இவ்வாறாய் யாவர் அன்புக்கும் கட்டுண்டு அருள் செய்த பேராளன், என்னை மட்டும் கைவிட்டானே, என்னுயிர் மேல் விளையாடுதல், ஏங்க விடுதல், எத்தனை தூரம் சரியானது என வினவிக் கலங்கி நிற்குந்திறன் பக்குவமுற்ற ஆன்மா இறைவனோடு இணையத் தவிக்கும் தவிப்பின் குரலாய் அமைகின்றது.

சைவசித்தாந்தம் கூறும் முக்தி என்பது ஆன்மா மலவாசனையினின்று விடுபட்டு இறைவனை அடைதலாகும். தனது உண்மைத் தலைவனை - இறைவனை யாரென சிவஞானத்தால் இருவினையொப்பும் மல பரிபாகமும் வந்துற்ற நிலையில் உணரும். மலவாசனை நீங்கி உப்பு நீருடன் நன்னீர் கலந்து இரண்டற்ற நிலையை அடைவதை ஒத்ததாய் பேரானந்தத்தை அடையப் பெறும். அந்நிலையில் பரிபூரணனான சிவனைப் பொருந்துதலோடு அச்சிவமாகவே ஆன்மா நிற்றலே முக்தி என்பர்.

சதசத்தான ஆன்மா, சார்ந்ததன் வண்ணமாவது, தனது தலைவன் - அறிவுப் பொருள் - பதி என அதன்பாற்பட்டதன் வழி அறிகிறது. மலப்பீடிப்புக்குள்ளான ஆன்மா மாயாகாரியப் பிணிப்பை கைவிளக்காய்க் கொண்டு விடிவாமளவும் காத்திருக்குந் தன்னிலை உணரவுணர பாசஞானத்தின் னின்றும் பசுஞானமடைந்து பதிஞானத்தை எய்தப்பெறும். ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் காணாதனவெல்லாம் காட்டி ஆட்கொண்டு அருளுவான் என்பர். ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா பிரார்த்த கன்ம நீக்கத்துக்காய் உலகில் உழலும். அவ்வாறு உழலும் ஆன்மாவின் குரலாகவே தேவார முதலிகளின் அகத்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன. இவை துன்பம் துளியுமிலா பேரின்ப நிலையை அடைய அவாவி நிற்கும் ஆன்மாவின் குரல்களாகின்றன. அதனை மானிடக்காதலின் வழி காதல், பிரிவு, ஏக்கம், மெலிதல், பசலைபடர்தல், பிறவுயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இணையுடன் இருத்தலைக் கண்டு ஏற்படும் பரிதவிப்பு, தலைவனை அடையத் துடித்தல், அவனது ஒருபொருளையாவது வைத்திருக்க எண்ணும் மனவுளைச்சல், தீராக்காதல் என்பவற்றையும் காதல் வயப் பட்ட தலைவி, தலைவனின் அழகு, தோற் றம், பண்பு என்பவற்றை எண்ணியும் கூறியும் இன்புறலும் அதன்வழி தன் துயரை அறி விக்க அஃறிணைப் பொருட்களைத் தூதாக விட எண்ணி அவற்றைப் பலவாறு புகழ்ந்தும், கெஞ்சியும், அவையிணையுடன் இருத்த லைக் குறிப்பாலுணர்த்தியும் தன் தனிமை யைப் போக்கி தலைவனிடம் தன் காதலை உரைக்க வேண்டுதலும் எனத் தமிழ் அகத்துறைப் பண்பை தெய்வீகப் பண்பாக உரைத்து நிற்கும் திறன் நயக்கத்தக்க தாகும்.

சமண, பௌத்த சமயங்களின் செல்வாக் கும் துறவும், சூனியமும் பெண்கள் மாயப் பிசாசுகள் எனும் கருத்தியலும் முதன்மை பெற்றிருந்த சூழலில் தமிழக மக்களுக்கு புத்துணர்வு அளித்து அவர்தம் வாழ்வியலில் இறைவன் எனும் பற்றுக் கோட்டை முன்னி றுத்தியவர்கள் தேவார முதலிகளாவர். அவர்கள் சாதாரண - ஒழுக்கம் சார்ந்த உலகவாழ்வும், காதலும், இல்லறமும், இறை சிந்தையும் ஆன்மாவுக்கு விடுதலையை - முக்திப் பேற்றை அளிக்கவல்லன எனச் சமய தத்துவத்தளங்களில் நின்று எடுத் துரைத்தனர். இறைவனின் பெண்ணில் நல்லாளொடு இணைந்திருக்கும் தன்மை யைக் காட்சிப்படுத்தினர். மானிடக் காதலின் வழி பக்தி தெளிவுறுத்தப்பட்டது. அதற்குச் சிறந்த உபாயமாகப் பயன்பட்ட வடிவமே அகப்பொருளியல் வடிவமாகும். இவ்வடிவத்தினூடு இறைவன் மீது தீராபக்தி உடைய ஆன்மா அவனையடையத் துடிக் குந் தன்மையை மானிடக் காதலின் வழியும் எல்லாவுயிர்களும் இணையுடன் இருத்தலின் வழி ஆன்மாவின் உண்மைக் காதலன் இறைவன் என்பதையும் உய்த் துணர்த்த முயன்றனர்.

ஆக, பக்தி இலக்கிய அகவடிவம் மானிடக் காதலின் வழி ஆன்மா இறைவ னைப் பற்றுதலே அதன் உய்வுக்கான வழி என்பதைத் தெளிவுபடுத்துகிறது. யாவை யும் மறந்து இறைவன் ஒருவனே தனது இலக்கு எனவுணர்ந்த பேரன்பால் ஆட் கொள்ளப்பட்ட ஆன்மாவின் குரலாக, இத் தேவார அகப்பொருளியற் பாடல்கள் சைவசித்தாந்த இறையான்ம தொடர்பு பற்றிய கருத்தியலை உலகியலின் வழி தத்துவார்த்தத் தளத்தில் எடுத்துரைத் துள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. வரதராசன்.மு., 2000, தமிழ் இலக்கிய வரலாறு, பக். 27-64.
2. மாணிக்கம்.வ.சு.ப., 1977, தமிழ்க் காதல், ப.469.
3. தொல்.பொருள், நச்சினாக்கினியார், அகம். கு.1
4. அறிவுடைநம்பி.ம.சா., 1986, திருநாவுக்கர சர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், ப.89
5. வரதராசன்.மு., 2000, தமிழ் இலக்கிய வரலாறு, பக்.29,30.
6. The Religion and philosophy of Tevaram, Voi – iv, (1987), p. 1245.
7. தொல்., பொருள், புறத்திணையியல், -28
8. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:56, 60, 63, 73, 76, 254, 256, 303, 321, 353, 359, 362, 374, தனிப்பாடல், 242-7
9. திருநாவுக்கரசர் தேவாரம் - 4.81.6, 5.7.7-8,5.15.5-6,5.18.1,5.23.2- 5,5.25.5-8,5.26.1-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.5.39.1-2.5.64.4. 5.66.9.5.78.4. 5.81.310.. 5.88. 4-9. 6.2.9. 6.25

10. திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகம், திருவாரூர்த் திருப்பதிகம், திருவொற்றியூர்த் திருப்பதிகம், பா.491
11. தொல்., பொருளதிகாரம் - பொருளியல் - 2
12. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:60:1.
13. மேலது
14. மேலது.
15. மேலது, 1:60.7
16. சுந்தரர் தேவாரம், 7:32:7,10
17. திருநாவுக்கரசர் தேவாரம், 4:12:8
18. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:1:7
19. திருநாவுக்கரசர் தேவாரம்,4:12: 4
20. திருஞானசம்பந்தர் தேவாரம்,1:60:1.10
21. மேலது, 1:60:2
22. மேலது 1:60:3
23. திருநாவுக்கரசர் தேவாரம், 4:12:09
24. சுந்தரர் தேவாரம், 07:37:10
25. திருநாவுக்கரசர் தேவாரம்,4:12:2
26. மேலது, 4:12:3
27. மேலது.
28. மேலது, 4:12:01
29. சுந்தரர் தேவாரம், 7:37:5
30. திருஞானசம்பந்தர் தேவாரம்,1:60:01
31. மேலது
32. மேலது, 1:60:10
33. திருநாவுக்கரசர் தேவாரம், 4:26:6
34. மேலது.
35. சுந்தரர் தேவாரம், 7:37:11
36. திருநாவுக்கரசர் தேவாரம், 4:26:3
37. மேலது, 4:26:4
38. மேலது, 4:26:7
39. மேலது, 4:26:8
40. சிவநெறிப்பிரகாசம், பா.,208
41. திருவருட்பயன், குறள். 2 -7
42. சிவஞானபோதம்,4:2
43. திருவருட்பயன், குறள் 3:1

## அல்லல்கள் களைந்திடுவான் ஆறுமுகன்!

**பல்லவி**

அல்லல்கள் களைந்திடுவான் ஆறுமுகன்! - எங்கள்
'நல்லை'யில் குடி கொண்ட அழகுமுகன்!... (அல்)

**அநுபல்லவி**

வல்வினை போக்கிடுவான் வடிவேலன்! - என்றும்
வந்தெமைக் காத்திடுவான் உமை பாலன்!... (அல்)

**சரணம்**

'முருகா' என்றழைப்போர் முன்அவன் வருவான்! - அன்பு
முகங் காட்டி ஆதரித்தே அருள் புரிவான்!
வருந் துயர் தீர்த்திடும் நல் மருந்தாவான்! - என்றும்
வந்தருள் தந்தெம்மை வாழ வைப்பான்!... (அல்)

அவன் தலத்தில் மனம் அமைதி பெறும்! - அங்கு
அவன் திருப்புகழ்பாட அகங்களெலாம் குளிரும்!
சிவன் மகன் அருளாலே செகம் மகிழும்! - அந்தச்
செவ்வேளின் தலத்தில் பக்தி மணம் கமழும்!... (அல்)

**கீழ்கரவை.கி.குலசேகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதரும் திருப்புகழும்

சைவப்புலவர் செ.பரமநாதன்
தாவடி.

இந்துசமயக் கடவுள் சிவபெருமானின் ஆற்றல் வெளிப்பாடே முருகன் திருவுருவம். மன்மதனை தனது நெற்றிக் கண்ணால் அழித்தார். அதே கண்ணால் குமரனாகிய முருகனைத் தோற்றுவித்தார். இறைவனுடைய ஐந்து திருமுகங்கள் ஈசானம், தற்புருடம், அகோரம் வாமதேவம், சத்தியோ ஜாதம் என்பனவாகும் இவை முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்ற ஐந்து திசைகளை நோக்கியுள்ளன.

01. ஈசனம் : எல்லாவற்றையும் ஆளும் தன்மை உடையது.
02. தற்புருடம்: வேதபாரீரம் மானிட சாரீரம் ஆகியவற்றில் அதிட்டிடிட்டு நிற்பது
03. அகோரம் : சாந்தமாக விருப்பது
04. வாமதேவம்! அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு அருளவல்லது
05. சத்தியோ ஜாதம்: உயிர்களுக்கு உடல்களைத் தோன்றுவித்து உள் தோன்றி அருளவல்லது

இந்த முகங்களுடன் கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகத்துடன் முருகப் பெருமான் உயிர்கட்டுத் தனிப் பெருங் கருணை புரிகின்றார். இறைவனுக்கும் உமைக்கும் இடையிலே முருகப் பெருமான் வீற்றிருந்து அடியார்க்கு அருள் புரிகின்றார். அருளை தன்னிடத்தே அடக்கிக் கொண்ட சிவபெருமான் அதனை வெளிப்படுத்துகின்றார் அந்த அருளே உமை வடிவில் ஒளிர்கின்றது. அது பின்னும் விரிந்து குழந்தை வடிவில் பாய்கின்றது. அந்தக் குழந்தையே முருகன். அதுவே மரம் பூத்துக் கனி குலுங்க நிற்பது போலவே அருளின் பயனை அடையவைக்கும் திருக்கோலம் சோமஸ்கந்த மூர்த்தியாகும்.

தௌமாரம் என்ற சமயத்துக்குரிய கடவுள் குமரன் என்பதின் பொருளாகும். பிரமாவாய் உலகத்தைப்படைத்தும் விஷ்ணுவாய் உலகத்தைக் காத்தும், உருத்திரனாய் உலகத்தை அழித்தும் நிற்கின்ற பரஞ்சோதிப் பிழம்பே ஆறுமுகப் பெருமான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கையாகும், சிவரூபம், சத்திரூபம் ஆகிய இரண்டும் சேர்ந்து அமையப் பெற்றவன் சரவணபவனாகும். தெய்வத்தையும் அதன் சக்தியையும் பிரித்து உணரமுடியாதது. அக்கினியும் உஷ்ணமும் பிரிக்க முடியாதது போல சிவமும் சக்தியும் இணைப்பிரியாதவர்கள். காளிதாச மகாகவி குமார சம்பவத்தில் குமரக் கடவுளின் பெருமைகளைக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானை உபாசனா மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டு முத்தியடைந்தவர்களில் அருணகிரிநாதரும் ஒருவர். அருணகிரிநாதர் திருத்தலங்கள் தோறும் சென்று அருளிச் செய்த சந்தம் குதித்தோடும் பக்திரசம் ததும்பும் பாடல்களாகிய திருப்புகழோடு, கந்தர் அலங்காரம், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, வேல் விருத்தம், திரு எழு கூற்றிருக்கை ஆகியவற்றை அருளிச் செய்துள்ளார். முருகப்பெருமானின் பெருமைகளைப் போற்றி புகழ்ந்து பாடிய நூல் திருப்புகழ் தேவாரப் பாக்கள் போலவே இத் திருப்புகழ் பாடல்களும் பல்வேறு தலங்கள் மீது பாடப் பட்டவை. திருப்புகழ்ப் பாடல்கள் வேறெங்கணும் காண முடியாத சந்தச் சிறப்புத் தானச் சிறப்பு நிறைந்தவை.

அருணகிரிநாதர் என்னும் சிவபக்த சிகாமணியின் சரித்திரம் பலவகையான பழி பாவம் நிரம்பிய வரலாறுகளோடு பிணைக்கப்பட்டு உண்மைச் சரிதமென நடிப்புற்று இந்நாட்டினில் உலவி வருகின்றது. அருணகிரிநாதருடைய முற்பிறவியைப் பற்றி விபரீதமான செய்திகள் கூறப்படுகின்றன. அவருடைய பிறப்பு குலம் தாய் தந்தையர் பற்றிய செய்திகளும் விபரீதமாகவே கூறப்படுகின்றன. அருணகிரிநாதரின் காலத்தை நிச்சயிப்பதற்குச் சிறந்த சான்று இவர் பிரபுடதேவராயனது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தமையாகும். 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டாம் பிரபுட தேவராயன் என்னும் அரசன் ஆட்சி செய்தான். இவர் மிகவும் சிறந்த பக்தன், இவரது முன்னிலையிலேயே வில்லிபுத்தூரருடன் அருணகிரிநாதர் வாதிட்டார். அதுவுமின்றித் தாம் பாடிய திருப்புகழில் பல இடங்களில் பிரபுட ராயரைப் பாராட்டியுள்ளார். அதலிசேடனார் ஆட என்ற தலைப்புடைய திருப்புகழில்.

**'உதய தாம மார்பான பிரபுடதேவமகராஜன்**

**உளமு மாடவாழ் தேவர் பெருமாளே'**

என்ற தொடராற் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. அருணகிரிநாதர் அவதரித்த திருநாள் புரட்டாதி மாதம் உத்திர நட்சத்திரமும், செவ்வாய்கிழமையும் தனுலக்கணமும் கூடிய நன் நாள் என்றும் அவர் கிளியுருவம் பெற்று முருகவேள் தோள்மீது அமர்ந்து சாமீப பத முத்தி பெற்ற நாளும் அஃதேயென்றும் அருணகிரிநாதர் புராணம் கூறுகின்றது.

### உண்மை காண்பதற்குப் போதிய ஆதாரங்களில்லை

திருப்புகழ் என்பது திரு + புகழ் என்று இரு சொற்களாகிய ஒரு தொடர் திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம், எனவே அழகு என்பது பெறப்படும். புகழ் என்றது முருகப் பெருமானுடைய புகழைக் குறித்தது. திருப்புகழ் இவர் செய்த நூல்களில் முதன்மையானது. முருகன் திருப்புகழைப் பற்றிச் சொல்வதால் இப்பெயர் பெற்றதெனலாம் பெரியோர்கள் திருவாசக மென்னுந்தேன், "திருமுருகாற்றெனும் தேறல்" என்றார்கள் திருப்புகழைத் திருப்புகழ் அமுது என்றார்கள். அமிர்தம் எங்கனம் மிருத்துவை (இறப்பை) விலக்குமோ அங்கனம் திருப்புகழ் இறவாத இன்ப நிலையைத் தந்து உதவுமாதலின் அதை "அமுது" என்று ஆன்றோர் பலரும் பாராட்டியுள்ளனர்.

அருணகிரிநாதர் பெருஞ் சிறப்பிற்கு முக்கிய காரணமாயுள்ளது. அவர் தமிழில் புதிதாக ஏற்படுத்திய சந்தமேயாகும். இவருக்கு முன் தொல்காப்பியத்தின் கண்ணே கூறப்பட்ட நூறு வண்ணங்கள் பொருந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பாடல்கள் இருந்தனவேயன்றி, இவர் உண்டாக்கிய தத்த, தந்தன தய்யக்க முதலிய வண்ணங்கள் இருக்கவில்லை. அருணகிரிநாதரைப் போலப் பல சந்தங் களை அமைத்துப் பாடிய புலவர் ஒருவரு மில்லை எனக் கூறலாம். இதுவே இவருக் குரிய தனிச்சிறப்பாகும்.

**"வாக்கிற் கருணகிரி வாதவூராக்கனிவில்**
**தாக்கிற் றிநிஞான சம்பந்தர் - நோக்கிற்கு**
**நக்கீரதேவர் நயத்திற்குச் சுந்தரனார்**
**சொற்குறுதிக் கப்பரெனச் சொல்"**

என்ற பாடலில் அருணகிரிநாதரின் வாக்கின் பெருமை புகழப்படுவது நோக் கத்தக்கது. அருணகிரிநாதர் கல்வி கற்ற வரலாற்றைப் பற்றியும் இளம் பருவச் செயல் கள் பற்றியும் நமக்கு யாதும் தெரியவில்லை. ஆனால் அவர் அருளிச் செய்த நூல்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவர் செந் தமிழ்ப் புலமையோடு, வடமொழிப் புலமை யும் பெற்றவர் என்பது தெளிவாகத் தெரி கின்றது.

அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப் புகழ் பாடல்களில் இன்று எமக்குக் கிடைப் பவை 1361 பாடல்களாகும். இப்பாடல் களை நாம் ஆராய்ந்து வகைப்படுத்தி னால் அவை கீழ்வரும் ஐந்து தலைப்புக ளுள் அடங்கும். அவையாவன.

1. சிற்றின்பக் குறிப்பு ஒரு சிறிதுமில்லாது உள்ள பாடல்கள்
2. சிற்றின்பத்தில் ஆழ்ந்திருக்கும் நமக்கு அருள்புரிய வேண்டுமென்று விண்ணப் பிக்கும் பாடல்கள்
3. சிற்றின்பத்தில் ஆழ்ந்திருப்பினும் முருகவேளை மறக்கவில்லையெனக் கூறும் பாடல்கள்
4. தமக்குபதேசம் செய்தருள வேண்டு மென்று விண்ணப்பிக்கும் பாடல்கள்
5. தமக்கு உபதேசம் செய்தவகையை யும், பொருளையும் மகிழும் பாடல்கள்.

இப்பாகுபாட்டை கூர்ந்து நோக்கும் கால் அருணகிரிநாதர் விலைமாதர் உற வைப் பற்றியிருந்த காலத்திலேயே பல தலங்களுக்குச் சென்று பல பாடல்களைப் பாடியிருத்தல் வேண்டுமென்பதும் தாம் உபதேசம் பெற்றுக் கொள்வதற்கு முன்னமே பல பாடல்களைப் பாடினார் என்பதுவும் புலனாகும். அருணகிரிநாதரின் பாடல் களை பிரதானமாக ஐந்து தலைப்பு களுள் அடக்கி நோக்கினோம். இவ் ஒவ்வொரு தலைப்புக்கும் தனத்தனியாக சில உதா ரணங்களை எடுத்து நோக்குவது சாலவும் பொருத்தமான ஒன்றாகும். சிற்றின்பக் குறிப்பேனும் சரித்திரச் சான்றேதும் அமை யாத பாடல்களைத் தமது வாழ்க்கையில் எப்போது பாடினார் என்று துணிந்து கூறமுடியாது. அருணகிரிநாதர் சிற்றின்பக் குறிப்பு சிறிதுமில்லாத பாடல்களுக்கு உதாரணமாக திருப்புகழில் இடம்பெறும்.

**"அகரமு மாகி அதிபனு மாகி**
**அதிகமு மாகி அகமாகி**
**அயனெ வாகி அரியென வாகி**
**அரனெ வாகி அவர் மேலாய்"**

**"அகல நீளம் யாதாலும் ஒருவராலு மாராய**
**அரிய மோன மேகோயில் என மேவி**
**அசைய வேக்ரி யாபீட மிசைபுகாம காஞான**
**அறிவி னாத ராமோத மலர்தூவிச்"**

என்று பல்வேறு இடங்களிலே அருணகிரி நாதர் கூறுகின்றார். அவர் இறைவனிடம் வாழ்நாள் பயன்படவும் ஆறெழுத்தில் தியானம் பெறவும் அன்போடு நினைக்கவும் அடியார் இணக்கம் பெறவும் அடியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தொண்டு செய்யவும், நோய் நலியாதிருக்கவும் அவர் அடங்கவும் வேண்டத்தக்கதை அறியவும், இயம - பயம் நீங்கவும் இறுதிக் காலத்தில் இறை வனது நினைவைப் பெறவும் பிறவி அறவும் என்ற பல வேண்டுகோள்களை இறைவனி டம் விடுக்கின்றார்.

முருகன் அடியார்கள் எப்பொழுதும் தம் சிந்தனையில் முருகப் பெருமானையே காண்பர். ஓங்காரத்துட் பொருளான முருக னாகிய சிவத்தை தரிசித்து யம - பயமற்று அச்சிவத்தோடு ஏகனாய் நிற்பர். ஆனால் தினையளவு நேரமேனும் பிரணவத்தின் உள்ளொளிக்குள்ளே முருகக் கடவுளு டைய திருவுருவத்தைக் காண முடியாத வர்கள் இறுதிக் காலத்தில் ஏற்படும் யம பயத்திற்கு என்ன பரிகாரம் செய்து கொள் வர் என்று பின்வரும் பாடலில் கேட்கிறார் அருணகிரிநாதர்

**ஆங்காரமும் அடங்கார், ஒடுங்கார் பரம ஆனந்தத்தே**
**தேங்கார் நினைப்பும் மறுப்பும் அறார் தினைப்போது அளவும்**
**ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டும்**
**தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார் யம தூதருக்கே**
**- கந்தரலங்காரம்**

அருணகிரியார் ஆடுகின்ற மயிலைப் பார்க்கிறார்; "ஆண்டவனே இதுதான் ஓங் கார சொரூபம் என்பதை இத்தனை நாள் தெரிந்து கொள்ளவில்லையே" என்கிறார்.

அது மட்டுமா மிகுந்த வலிமையுடை யதும் எல்லோராலும் விருப்பப்படுகிறவரும் தேவர்கள் விரும்பும் பிரணவப் பொருளாய் இருப்பவரும், தேவர் உலகத்தை தாங்குப வரும் ஆகிய முருகப் பெருமான் தமக்கு உண்மைப் பொருளை அறிய உபதேசித்த சிறப்பையும் பின்வரும் கந்தரனுபூதிப் பாடலில் விளக்குகிறார்.

**"அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்**
**உரிதா உபதேசம் உணர்த்தியவா**
**விரிதாரண விக்ரமவேள்! இமையோர்**
**புரிதாரக நாத புரந்தரனே!**

சிவபெருமானுக்கு முருகன் 'ஓம்' என்னும் பிரணவத்தின் உட்பொருளை உபதேசித் தருளினார் என்பது கந்தப்புராணம். இத னையே அருணகிரிநாதசுவாமிகள் நயம் படச் சொல்கிறார். குருநாதனை உயர்ந்த இடத்திலே வைத்துக் கேட்கவேண்டும்.

அவனை வணங்கி மரியாதையோடு கேட்க வேண்டும். பரமேஸ்வரன் தன் குழந் தையாகிய முருகனை கையிலே தூக்கி உயர்ந்த நிலையிலே வைத்துக்கொண்டு "என் தலைவனே! குமாராய நம என்று கூறி எனக்குப் பிரணவ உபதேசம் செய் அப் பனே" என்று வேண்டினாராம்.

**"நாதாகுமரா நம என" அரனார்**
**ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்**
**வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்**
**பாதா குறமின் பத சேகரனே"**
**- கந்தரனுபூதி**

பிள்ளையாகிய முருகன் சிவனுக்கு குரு நாதனாகவிருக்கிறான். தனது ஒரு காதுக் குக்கிடைத்த இன்பம் மற்றைய காதுக்கும் கிடைக்க வேண்டும் என ஆண்டவன் தன் மறுகாதையும் திரும்பிக் கேட்டானாம்.

**"சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம் இரு**
**செவி மீதிலும் பகர் செய் குருநாதர்"**
**- திருப்புகழ்**

ஓங்காரம் என்பது ஒலியாகவும் ஒளிப் பிழம்பாகவும் நிற்கும் தண்மையது. அந்த ஒளிப்பிழம்புக்குள்ளே உள்ளொளியாய்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறார் முருகன். ஓங்காரத்துள் ளொளிக்குள் முருகன் உருவம் கண்டு" என்பது அருணகிரிநாதர் வாக்கு. ஓங்கார சப்பதமாகவும் ஒளியாகவிருப்பவன் சண் முகநாதன். அவன் திருவுருவத்தை உள் ளத்திலே தியானிக்கும் அன்பர்கள் அவனை ஓங்காரத்துள் உள்ளொளிக் குள்ளே காண்பார்கள். ஓதிய ஐந்து ஓங் காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளி யாய் ஐந்தொழிற்கும் நீங்காத பேருரு வாய் நின்றானே!

- கந்தர் கலிவெண்பா

ஓங்காரம் என்பது ஓர் அடையாளம் சண்முகநாதன் தன்னுடைய வாகனமான மயிலை அணைத்து நிற்கின்ற காட்சியை அப்படியே ஒருகோடு போட்டுப்பார்த்தால் அது பிரணவமாகத் தோன்றும். நாமும் ஓங் காரத்துள்ளொளிக்கும் முருகன் உருவத் தைக் கண்டு பயன்பெறுவோமாக!

## நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் | **1993** | திரு.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் | **1994** | பேராசிரியர் ப.கோபாகிருஷ்ணஐயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் | **1995** | பேராசிரியர் இ. குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் | **1996** | சிவஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் | **1997** | கலாநிதி எஸ்.சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் | **1998** | திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் | **1999** | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் | **2000** | கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் | **2001** | திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் | **2002** | கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் | **2003** | கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் | **2004** | திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் | **2005** | பேராசிரியர் அ.சண்முகதாஸ்<br>திரு.ஈ.குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் | **2006** | ஆய்வு செய்யப்படவில்லை |
| 15. | நல்லைக்குமரன் மலர் | **2007** | பேராசிரியர் எஸ்.இரகுநாதன் |
| 16. | நல்லைக்குமரன் மலர் | **2008** | திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) |
| 17. | நல்லைக்குமரன் மலர் | **2009** | பேராசிரியர் என்.ஞானக்குமரன் |
| 18. | நல்லைக்குமரன் மலர் | **2010** | பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் |
| 19. | நல்லைக்குமரன் மலர் | **2011** | கலாநிதி த.கலாமணி |
| 20. | நல்லைக்குமரன் மலர் | **2012** | பேராசிரியர் கி.விசாகரூபன் |
| 21. | நல்லைக்குமரன் மலர் | **2013** | கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் |
| 22. | நல்லைக்குமரன் மலர் | **2014** | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை |
| 23. | நல்லைக்குமரன் மலர் | **2015** | பேராசிரியர் தி.வேல்நம்பி |
| 24. | நல்லைக்குமரன் மலர் | **2016** | கலாநிதி செ.சேதுராஜா |
| 25. | நல்லைக்குமரன் மலர் | **2017** | பேராசிரியர் கு.மிகுந்தன் |
| 26. | நல்லைக்குமரன் மலர் | **2018** | கவிஞர் சோ.பத்மநாதன் |
| 27. | நல்லைக்குமரன் மலர் | **2019** | திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இடுக்கண் நீக்கும் மந்திரத் திருப்புகழ்"

கீர்த்தனா ஆறுமுகதாசன்
நுண்கலைமாணி

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"
"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே"

என்று மனிதப் பிறவியின் உயர்வை அருளாளர்கள் சிறப்பாகப் போற்றியுள்ளார்கள். காரணப் பிறவிகளின் தலையாயது மனிதப் பிறப்பே! படைப்பில் உயர்ந்து நிற்பவன் மனிதன். புல், பூண்டு, செடி, மரம், ஊர்வன, பறப்பன முதல் மிருகம் வரை இறைவனது படைப்பில் உள்ளவைகளுக்கெல்லாம் கிடைக்காத ஓர் அற்புதமான சிந்திக்கும் அறிவு மனிதனுக்கு மட்டுமே உள்ளது. எனவே சிந்திக்கத் தெரிந்த மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு தமது சிந்தனையின் மூலம் இறைவனை அடைவதும், இறையருளால் வாழ்வை அன்பு மயமாக ஆக்குவதும் பிறப்பின் பயனாகும். உலகில் மனிதன் துய்த்து இன்புற எத்தனையோ இன்பங்களை இறைவன் படைத்துள்ளார். அடியார்களின் கோரிக்கைகளை, வேண்டுதல்களை, பிரார்த்தனைகளை நிறைவேற்ற இறைவன் காத்திருக்கிறார். அறிவியலில் மக்கள் முன்னேறினாலும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளில் சிக்கி, வருந்தி, துன்புற்று, தளர்ந்து இறக்கின்றனர். வாழ்வின் இந்த சிரமங்களையும், சிக்கல்களையும், துன்பங்களையும், வருத்தங்களையும் நீக்க அருளாளர்கள் காலந்தோறும் தோன்றி நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளனர்.

சைவத்திருமுறைகள், திருமால் பெருமையை பேசும் திவ்யப்பிரபந்தம், அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலான பக்தி இலக்கியங்கள் மனித வாழ்வை செம்மைப்படுத்த வந்தவையே. எனவே காலந்தோறும் அவைகளைப் படித்த முன்னோர்கள் நம்முடைய தேவைக்குத்தக்க படியாகப் பிரார்த்தனை செய்து கொள்வதற்கு வசதியாக பக்தி இலக்கியங்களை அருமருந்து போல் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அம்முறையில் முருக வழிபாட்டிற்கு ஒரு பேரிலக்கியத்தைப் படைத்த அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழ்ப் பாடல்களில் மனிதனுக்குத் தேவையான வாழ்வியல் நெறிகள் அனைத்தும் உள்ளன. மனித வாழ்வில் பல்வேறு நிலைகளில் அவனுக்கு ஏற்படும் வாழ்க்கைப் பிரச்சினைகளில் திருப்புகழை ஓதி தலயாத்திரை செய்து பிரார்த்தனை செய்து முருகன் திருவருளைப் பெற்று இன்பமுடன் வாழ திருப்புகழ் எனும் மாமருந்து பயன்படுகிறது என்பது அனுபவ உண்மை.

மனிதனின் நிறைவான வாழ்க்கை என்பது பொருளைத் தேடிச் சேகரித்தலில் மட்டும் அமைவதில்லை. அதற்கு மேல் அவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு ஏற்படும் தேவைகள் பூர்த்தியாகி, பிரச்சினைகள் நீக்கி, நிம்மதியாக வாழ வழி தேடுவதே பூரணமான வாழ்க்கையாகும். நமது பிரார்த்தனைகள் நிறைவு பெற அதற்குரிய சில திருப்புகழ் பாடல்களினூடு தல வழிபாடு என்பவற்றை ஆராய்ந்து பாராயணம் செய்து பயன் பெறுவோம்.

மனிதன் தன் வாழ்நாளில் எத்தனை விதமான நோய்களுடன் போராட வேண்டியுள்ளது. ஒவ்வொருவருக்கும் விதம்வித மான நோய்கள். அதனால் ஏற்படும் உபாதைகள் வைத்தியரிடம் சென்று மருந்து பல உண்டாலும் நிரந்தரமாக இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண வழியைச் சொல்கிறார் அருணகிரிநாதர். பவரோக வைத்யனான முருகப்பெருமானிடம் செல்ல நம்மை அழைக்கிறார். மனிதனுக்குத் தொல்லைகள் பல தந்து உயிரையே போக்கும் இந்த நோய்களைப் பட்டியலிட்டு இனி எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் நோய்கள் தொடராமல் நிம்மதியாய் வாழ முருகனது திருவடிகளை வேண்டி நிற்கின்றார். மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் முருகப் பெருமானை வழிபட வேண்டும் என்று அறிவுறுத்தும் அருணகிரிநாதர், காயமாகிய உடலால் சென்று வழிபட வேண்டிய தலம் திருத்தணிகை என்கிறார். திருப்புகழை ஓதிக் கொண்டு திருத்தணிகை மலை ஏறிச் சென்று வழிபடுவோர்க்கு பிறவி என்னும் நோயே ஒழியும் என்கிறார்.

"பலகாலும் உனைத் தொழுவார்கள் மறவாமல் திருப்புகழ் கூறி படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே பதியான திருத்தணி வேவும் சிவலோகம் எனப் பரிவேறு பவரோக வயித்தியநாத பெருமாளே" என்று திருப்புகழில் பாடுகிறார்.

**"இருமல்உ ரோகம் முயல்கன் வாதம்**
**எரிகுண நாசி விடமேநீ**
**நிரிழிவுவி டாத தலைவலி சோகை**
**எழுகள மாலை இவையோடே**
**பெருவயி றீளை எரிகுலை சூலை**
**பெருவலி வேறும் உளநோய்கள் ...."**

என்று அருணகிரிநாதர் மனிதப் பிறவியிலே நோய் நீங்கி ஆரோக்யமுடன் வாழ வழி காட்டும் திருத்தணிகைத் திருப்புகழை தினமும் ஓதி பிறவி நோய் நீங்க அவன் அருளை நாடுவோம்.

மனிதனுக்கு வறுமை என்னும் நிலை வந்துவிட்டால் அவனது மானம், மரியாதை, குலப்பெருமை முதலிய அனைத்தும் நீங்கி இழிந்த நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்ற ஔவைப்பாட்டியின் வாக்கினைப் போல் இந்த கொடிய வறுமையிலிருந்து நீங்க அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் வீற்றிருந்தருளும் முருகப் பெருமானிடம் தமது வறுமை நோய் நீங்கி இன்புற்று வாழும் வழியை வேண்டுகிறார்.

**"சிவமா துடனே அநுபோ கமதாய்**
**சிவஞா னமுதே பசியாறித்**
**திகழ்வோ டிருவோர் ஒருரூ பமதாய்**
**திகைலோ கமெலாம் அநுபோகி: ..."**

எல்லா உலகங்களும் ஓலமிட, அசுரர்கள் அழிவுற, ஏழு கடல்களும், தூள்பட, மாதவர்கள் வாழ ஒளிவீசும் வேலைச் செலுத்தியவனே! வசீகரிக்கும் பூவின் நிறத்தையுடைய வள்ளியின் மீது அன்பை செலுத்துவது தமது ஒப்பற்ற கடமையாகும் என்று அவளை அன்புடன் அணைத்த மார்பனே! கடையவனாகிய என்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வறுமை ஒழியவும் நோய் நீங்கவும் அக்கினிப் பெருமலையாம் அண்ணா மலையில் வீற்றிருக்கும் பெருமாளே என்று தினமும் இத்திருப்புகழை ஓதி வாட்டும் வறுமையிலிருந்து முருகனின் அருளை நாடுவோம்.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ; வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று மாணிக்கவாசகர் வாக்கிற்கிணங்க இறை வன் அடியார்கள் வேண்டியவை அனைத் தும் அருளும் வள்ளல். முருகப் பெருமான் அடியார்க்கு எளியன், வேண்டும் அடியர் புலவர் வேண்ட அரிய பொருளை வேண்டும் அளவில் உதவும் பெருமான் அவன்; யார் வேண்டினாலும் கேட்ட பொருள் ஈயும் தியாகாங்கசீலம் போற்றி; வேலெடுத்த சமர்த்தை உரைப்பவர் ஏவர்க்கு மனதில் நினைப்பவை அருள்வோனே என்றெல் லாம் கந்தவேளின் பெருங்கருணையை வியந்து போற்றுவார். அழகு திருத்தணி யில் உறையும் முத்தமிழிற் பெரியோன் நினைத்தவை எல்லாம் தவறாமல் அருளும் பெருமாள்

**"நினைத்த தெத்தனையில் தவறாமல்**
**நிலைத்த புத்திதனைப் பிரியாமல்**
**கதைத்த தத்துவமுற் றழியாமல்**
**கதித்த நித்தியசித் தருள்வாயே"** என்று

எண்ணியதை அருளித்தரும் திருத்தணி முருகப்பெருமானை போற்றிப் பாடுவோம்.

மனிதப் பிறவியில் உடற்குறை என்னும் செவிடு, குருடு, அழகற்ற தோற்றம் போன் றவை தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி மனதை வருத்தும். இதற்கு முற்பிறவியின் வினைப்பயன் முக்கிய காரணமானாலும் இப்பிறவியில் இதனை நீங்க அழகிய வழியை காட்டுகிறார் அருணகிரிநாதர். முருகனை வழிபடுவோர் மனத்தாலும் உட லாலும் அவனைப் போன்றே அழகாக இருப் பர். முருகப் பெருமான் விரும்பி உறையும் மலைத்தலங்களில் புகழ் பெற்றது பழநி மலை. சிவபெருமானும் உமையம்மையும் பழம்நீ என முருகனை அழைத்ததால் இத் தலம் பழநி என்றும் இங்கு முருகன் ஞானப் பழமாக விளங்குகிறான் என்பதும் புராண வரலாறு. மண்ணுலகில் வாழ்வோருக்கு வேண்டியவை வேண்டியவாறு நல்கும் இறைவனும் உலகப் பொருள்களில் பற்று அற்றவனாக இருக்கின்றான் என்பதையே பழநியாண்டவரின் துறவுக்கோலம் காட்டு கிறது. திருவாவினன்குடி பழநித் தலத்தி ற்கு அருணகிரிநாதசுவாமிகள் பாடியுள்ள 100 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன. வாக் கால் திருப்பழநியை வழிபட வேண்டும் என்று வழிகாட்டுகிறார் ஓசைமுனிவர். உடற்குறை நீங்கி வறுமை அணுகாமல் தேவர்கள் வடிவுடன் அறிவு, நீதி, ஒழுக்க முடன் வாழ பழநிமுருகனை வேண்டிப் பரவும் அற்புதத் திருப்புகழ் இது.

**"திமிர உததி அனைய நரக**
**செனனம் அதனில் விடுவாயேல்**
**செவிடு குருடு வடிவு குறைவு**
**சிறிதும் மிடியும் அணுகாதே....."**

மனித வாழ்வில் மறக்க முடியாத நாள் அவனது திருமண நாள் ஆகும். இல்லற வாழ்வில் இன்பங்களை அனுபவிக்க, ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க திரு மணம் என்பது முக்கிய நிகழ்வாகும். முருகப் பெருமானை திருப்புகழால் போற்றி வழிபட்டு நல்ல கணவன் மனைவியாய் இனிய இல்லற வாழ்வினை அமைத்து வாழ அருணகிரியார் திருப்புகழ் பாடல்களின் ஊடு வழி சமைத்துள்ளார். அகப்பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் பரமாத்மாவாகிய இறைவனை அடைய ஜீவாத்மா பிரார்த்தனை செய்யும் திருப்பு கழை நோக்குவோம்.

**"நீலங்கொள் மேகத்தின் மயில் மீதே**
**நீவந்த வாழ்வை கண் டதனாலே**
**மால்கொண்ட பேதைக்குண் மணம் நாறும்**
**மார் தங்கு தாரைத் தந் தருள்வாயே..."**

திருச்செந்தூர் முருகனை நாமும் போற்றி நம் இடுக்கண் நீக்கும் மந்திரமாய் திருப்புகழைத் தினமும் ஓதுவோம்.

மனித வாழ்வில் சுகமும் சௌபாக்கிய மும் பெற்று வாழ்வது தான் நிறைவான நிம்மதியான வாழ்வு அதைப் பணத்தால் அல்லது பண்டமாற்று முறையால் பெற இயலாது. இறையருள் என்பது விலைக்கு வாங்கக் கூடியதல்ல. அதனை ஜெபத்தி னாலும் தியானத்தினாலும் பெற இயலும். முருகப் பெருமானுடைய ஆறெழுத்து மந் திரத்தை தியானம் செய்ய, மனம் ஒருமைப் பட்டு கந்தனே சிந்தையில் குடியமர்வான். சிந்தையில் வந்தமர்ந்த முருகக் கடவுளை அவனது புகழைப்பாடி மனித வாழ்வுக்கு தேவையான அனைத்து செல்வங்களை யும் பெற்று முருகன் அருள் வாக்குத் தர எழுந்த குருவாக்கு திருப்புகழ் எனப் பாடிப் பயன் பெறுவோம்.

**வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்**
**சீலம் ஏத்திய சித்த பிரசித்தரே**

## நல்லைநகர்க் கந்தனே!
## தொல்லை வினை தீர்ப்பவனே!!

### பல்லவி

நல்லை நகர்க் கந்தனே! நல்லருள் புரிவாய் ஐயா!
தொல்லை வினை தீர்ப்பவனே! தூயவனே வேலவனே!
- நல்லை

### அநுபல்லவி

கல்லையொத்த மனமும் கசிந்துருகக் காட்சிதரும்
கந்தனே சரவணனே! கார்த்திகைக் குமரனே! குகனே!
- நல்லை

### சரணம்

தில்லைச்சிவன் மைந்தனே! திருவருள் தருவாய் ஐயா!
தீராத நோய் தீர்க்கும் வீராதி வீரனே முருகா!
இல்லையெனாது வரமீந்தருளும் சண்முகனே! சரவணனே!
ஈசனவன் நெற்றியிலே வந்துதித்த வேலவனே!
- நல்லை

வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டாலே
வேதனை தீர்ந்துவிடும் வில்லங்கம் ஓடிவிடும்
நாதியற்ற நாங்கள் நம்பியே வந்துவிட்டோம்!
நீதியை நிலைநாட்டி நிம்மதியைத் தந்தருள்வாய்!
- நல்லை

**"தெய்வத்தமிழ்ச்சுடர்" இராசையா ஸ்ரீதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிக நல்வாழ்வும் சித்தர்களும்

மருத்துவர் தி.சுதர்மன்
BSMS, PG. Dip. in Food & Nutrition.
இலவச சித்த மருந்தகம், யாழ் மாநகர சபை.

தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமான் தனது தந்தையிடமிருந்து பெற்ற மருத்துவ முறைகள், பதினெண் சித்தர்களினூடு தமிழர்தம் வாழ்வியலோடு ஒட்டி நின்று ஆரோக்கியமாக, அறம் பொருள் இன்பம் வீடுபேறு என நல்லதொரு வாழ்வுக்கு வழி அமைத்திருந்திருக்கிறது. மருந்தென்பது உடல் உளத்துக்கு மட்டுமல்லாது சமூக, ஆன்மிக நலத்துக்குமானதே என சித்தர்கள் கூறியுள்ளனர்.

இதனை திருமூலர் பின்வருமாறு கூறியுள்ளார்.

**மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பதுள நோய் மருந்தெனல் சாலும்**
**மறுப்பதினி நோய் வராதிருக்க**
**மறுப்பது சாவை மருந்தெனலாமே.**

அதாவது உடல் உள நோய்களை நீக்கி, நோய்வராமல் இருக்கவும், சாவினை தடுப்பதும் மருந்தென்று கூறியுள்ளார். இங்கு சாவினைத் தடுப்பதென்பது பிறவாநிலை ஆகும். இதனை இராமலிங்க சித்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

**சுத்த வடிவுஞ் சுகவடிவாம் ஓங்கார**
**நித்த வடிவு நிறைந்தோங்கும் - சித்தெனுமோர்**
**ஞான வடிவுமிங்கே நான்பெற்றே னெங்கெங்கும்**
**தானவிளை யாட்டியற்றத் தான்.**

பெற்ற உடம்பு இது. சாகாத் திருவருட் சித்தியுற்று அருளாய், வெளியாய், ஞானவடிவாய்ச் சிவமாதலே. அதாவது மரணமில்லாப் பெருவாழ்வு அடைந்து முத்தியடைதல் ஆகும்.

முத்தியடைதல் எனும்போது எல்லோரும் காவியுடைதரித்து சந்நியாசியாக செல்வதென பலர் நினைக்கக்கூடும். அப்படியல்ல இறைவனை அடைய பலரும் பல வழிகளை தேர்ந்தெடுப்பர். சிலர் பிரம்மச்சாரியம் கொள்வர், சிலர் மணமுடித்து இல்லறவாழ்வு வாழ்ந்து பின்னர் கணவன் மனைவியாக காடுசெல்வர் (வனப்பிரஸ்தம்), சிலர் சந்நியாசம் கொள்வர்.

இவர்கள் யாவரும் தமக்கென ஒன்றுமில்லாமல் இறைசிந்தையுடன் இறை தொண்டு செய்து இறைவனை அடைவார்கள். மற்றவர்களுக்கும் வழிகாட்டுவார்கள். பலர் இல்லறத்தில் இருந்துகொண்டு இறை முக்தியை அடைவார்கள். அதனாலேயே திருமணம் செய்து வாழ்தலை இல் - அறம் என்பர். அறம் செய்து, அதற்கான பொருள் தேடி, மற்றவர்க்கு உதவுதல் மூலம் இன்புற்று வாழ்ந்து வீடுபேறு அடைதலாகும். ஆனால் இன்று திருமணமானவுடன், பெற்றோர்களை விலத்தி தனித்து வாழ்க்கை நடாத்துகிறார்கள். இதனை ஏதோ குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துகிறார்கள் எனலாமேயொழிய இல்லறம் நடாத்துகிறார்கள் என்று சொல்லமுடியாது. இவர்களுக்கு மோட்சமும் கிடைக்காது.

மருந்தென்பது பிறிதொன்றல்ல "உணவே மருந்து மருந்தே உணவு", "இலங்கனம் பரம ஔடதம் என நாம் உயிர்வாழ்வதற்காக உண்ணும் உணவே மருந்தாகும் என்று சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

ஆரோக்கியமான உடம்பினை பெற்றாலே இறைவனை அடையாலாம் என்பதனை உடலின் முக்கியத்துவத்தினை திருமூலர் பின்வருமாறு கூறியுள்ளார்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே**
**உடம்பை வளர்த்தார் உயிர் வளர்த்தாரே.**

உடலினை நோய்வராமல் காத்துக் கொள்ள வாழ்வியல் முறைகளை நாட்கடமை, பருவ கால வாழ்கைமுறைகள் என வகைப்படுத்தியுள்ளனர். உதாரணமாக, குளிக்கும் முறைகளை வகைப்படுத்தியுள்ளனர். அவற்றிற் சில.

01. குளிரும் சூடுமற்ற நீர் - உடற் சூட்டுடன் இசைந்த நீர்
02. வெந்நீர்க் குளிப்பு - பெண்கள், முதியவர்கள், பிரசவித்தவர்கள், மலபந்தம் உள்ளவர்கள், வாத, கப சம்மந்தமான நோய் உள்ளவர்கள்.
03. கடல்நீர்க் குளிப்பு - உடற்பலத்தை தரக்கூடியது, தோல்வியாதிகள் உள்ளவர்கள், கண்டக்கழலை நோயுள்ளவர்கள்
04. மஞ்சட் குளிப்பு - அதிக வியர்வை, வியர்வைநாற்றம், தோல் வியாதிகள் உள்ளவர்கள்
05. பஞ்சகற்பக் குளிப்பு (கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம்பருப்பு, கடுக்காய்த்தோல், நெல்லி, பால்) - நோய் அணுகாது.

இதேபோல் பருவகால உடைகள், உணவுகள் என பருவகாலங்களுக்கு ஏற்ப நோய்கள் ஏற்படாதிருக்க கூறப்பட்டுள்ளன.

நாம் உண்ணும் உணவே நமது பரம்பரை அலகுகளுக்கு அடுத்ததாக எமது ஆரோக்கியத்திலும், ஏற்படும் நோய்களிலும் செல்வாக்கை செலுத்துகின்றது. இதனைப்பின் வரும் சித்தர்பாடல் ஒன்று விளக்குகின்றது.

**நாடியும் நாளமும் நவில இள எலும்பும்**
**வெள்ளை நீரும் வெள்ளிய பற்களும்**
**தலைமயிர் நகமும் தந்தையின் கூறாம்.**

**சிறிய குடலும் சிவப்பு நீரும்**
**மருவிய கொழுப்பும் மன்னும் ஈரலும்**
**நுவல் நுரை ஈரலும் நோக்குமிதயமும்**
**தசையும் இதயமும் தாயின் கூறாம்.**

**அறிவும் ஆக்கமும் ஆழ்ந்த நோக்கமும்**
**இன்பமும் துன்பமும் இனிய வாழ்க்கையும்**
**உயிரின் குணமென உரைப்பார் நூல்வலோர்**

**உடலின் அமைப்பும் ஒள்ளிய நிறமும்**
**ஆடலும் ஆண்மையும் அமைந்த நிலையும்**
**நாணமும் மடமும் நாணற் கொள்கையும்**
**உணவின் சாரமென் றுரைத்தனர் நூலோர்.**

இங்கு பிறப்பால் தாய் தந்தையிடம் இருந்து உடல் அமைப்பு மட்டுமே கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளரீதியிலான இயல்புகள் ஆத்மாவினது ஆகின்றது. ஆனால் இவற்றிற்கு அடுத்து உடலையும் உள்ளத்தையும் செம்மைப் படுத்தும் பொருளாக உணவு அமைகின்றது.

இங்கு உணவின் சுவைகள், பஞ்சபூத சேர்க்கைகள், அசைவ, சைவ உணவுகள் அவற்றின் இரஜோ குணங்கள், தமோ குணங்கள், சத்வ குணங்களை குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே நல்ல உணவுகளை உண்டு உள உடல் ஆரோக்கியத்தை நிலைநிறுத்தல் அவசியமாகின்றது. அதேவேளை நல்ல உளஆரோக்கியத்தை பெற்றுக்கொள் வதும் அவசியமாகின்றது. மனதின் ஆரோக் கியத்தின் முக்கியத்துவத்தை அகத்தியர் பின்வருமாறு கூறுகின்றார்.

**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே.**

மந்திரம் சொல்லி மனம் நன்நிலை அடைந் தால் அதன் பின்னர் திரும்ப திரும்ப மந்திரம் சொல்லத்தேவையில்லை. அதேபோல் பிராணாயாமத்தினை செய்து மேலும் மனம் செம்மையானால் நீ மீள வாயுவை உயர்த்த தேவையில்லை. அதாவது தொடர்ந்து பிராணாயாம பயிற்சியில் ஈடுபடத்தேவை யில்லை. வாயு தானாகவே கட்டுப்படும். அதன் பின் மனதினை கட்டுப்படுத்தி வாசியை ஆறு ஆதாரங்களில் நிறுத்தப்பழகு. நிறுத்திய பின் அது தானாகவே ஆறு ஆதாரங்களி லும் நிலை கொண்டுவிடும். அதன் பிற்பாடு நீ சொல்லும் சொற்கள் எல்லாம் மந்திர மாகும் என்கிறார்.

இன்று மக்களின் மனம் போகிறபோக்கில் ....?

அகத்தியர் கூறியதை, திருமூலர் அட் டாங்க யோகங்களில் முதல் இரண்டு யோகங் களிலும் (இயமம், நியமம்) மனதை செம் மைப்படுத்தச் சொல்கின்றார். அதன் பிற் பாடே ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என்று முக்திநிலையை சொல்கின்றார். இல்லற வாழ்வில் அட்டாங்க யோகத்தில் முதல் இரண்டு நிலைகளே போதுமானதாக அமை கின்றது. அடுத்த இரண்டு நிலைகளான ஆசனம், பிராணாயாமம் செய்யின் சிறப்பு.

இயமம் என்பது திருமந்திரத்தில்,

**கொல்லான் பொய்கூறான் களவுஇலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம் உடையான் நடு செய்ய**
**வல்லான் பகுத்து உண்பான் மாசு இலான் கள் காமம்**
**இல்லான் இமயத்து இடை நின்றானே.**

ஒரு உயிரையும் கொல்லாதவன், பொய் சொல்லாதவன், களவு இல்லாதவன் ஆராய்ந்து பார்க்கக்கூடியவன், நல்ல பணிவுடையவன், நீதி நேர்மைகளில் இருந்து பிறழாதவன், தன் உடமை பொருட்களை இல்லாதோருக்கு பகிர்ந்தளிப்பவன், குற்றம், கள், காமம் இல் லாதவனே இயமத்தில் நிற்கக்கூடியவன்.

நியமம் என்பது திருமந்திரத்தில்,

**தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமம் களவு கொலையெனக் காண்பவை**
**நேமி யீரைந்து நியமத்தானாமே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமத்தில் நிற்கவேண்டியவனின் பத்து குணங்கள் தூய்மை, அருள், சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, உறுதியுடைமை என்ற நற்குணங்களை வளர்க்க வேண்டும். காமம், களவு, கொலை அவற்றை தவிர்க்க வேண்டும்.

**தவம் செபம் சந்தோடம் ஆத்திகாந் தானம்**
**சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
**மகஞ்சிவ பூசையொண்மதி சொல்லீர் ஐந்து**
**நிவம்பல செய்யின் நியமத்தனாமே.**

நியமத்தில் உள்ளவன் செய்யவேண்டியவை தவம், செபம், சந்தோசம், தெய்வ நம்பிக்கை, கொடைத்தன்மை, சிவவிரதம், சித்தாந்த ஆராய்ச்சி, வேள்வி செய்தல், சிவபூசை, பேரொளி தரிசனம் ஆகும்.

இயமம், நியமங்களின் மூலம் உள, சமூக, ஆன்மிக ஆரோக்கியத்தை வலியுறுத்திய சித்தர்கள் உடல் நலத்தைப் பேண ஆசனம், பிராணாயாமத்தை வழங்கியுள்ளார்கள்.

இன்று உள்ள ஆன்மிக அமைப்புக்கள் அனைத்தும் மேற்படி அட்டாங்க யோகங்களின் அடிப்படைகளையே தங்களுக்கேற்ற படி பயன்படுத்தி வருகின்றன. இதில் சிலர் எளிமைப்படுத்துகின்றோம் எனக்கூறி ஆன்மிக ஆரோக்கியத்துக்கு கேடுவிளைவிக்கும் முகமாக தம் அமைப்புக்களை முன்னிலைப்படுத்தியும் வருகின்றனர். இவை நம் ஒவ்வொருவராலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

நம்மை நாம் யாரென்று உணராமல் ஆன்மிக நலத்தை நாடிச்செல்லமுடியாது. இதனையே ஈழத்துச் சித்தரான செல்லப்பா சுவாமிகள் தனது சீடரான யோகர் சுவாமிகளுக்கு வலியுறுத்தும் விதமாக "ஆரடாநீ" என கேட்டுள்ளார். இதனை யோகர் சுவாமிகள் தனது அனுபவத்தில் இவ்வாறு கூறுகின்றார்.

**கருத்தில் நினைந்துருகி கைகூப்புந் தொண்டர்**
**வருத்தமெலாந்த தீர்க்கும் வடிவேல் -திருத்தலத்தில்**
**தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்**
**ஆரடாநீ என்றான் அவன்.**

இவ்வாறு சித்தர்கள், மனிதர்கள் முழு ஆரோக்கியம் பெற்றுவாழ்வதற்கு ஆன்மிக நலத்தின் முக்கியத்துவத்தினை அன்றே வலியுறுத்திச் சென்றுள்ளனர். அவற்றில் சிலவற்றையே இங்கு பகிர்ந்துள்ளேன். சித்தர்களின் பாடல்களை கற்றுணர்ந்து ஆரோக்கியமாக வாழ்ந்து, மாயப்பிறப்பறுத்து இறைவனடி சேர முயற்சிப்போம்.



சங்கிலிய மன்னனின் 400ஆவது ஆண்டு நினைவுதினம் நல்லூரில் அனுஷ்டிக்கப்பட்ட போது ...
- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைவேல் சுவாமிகள்

**ஆரணி விஜயகுமார்**
3ஆம் வருடம், கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வேலணை மேற்கில் சைவாசார அனுட்டானங்களிற் சிறந்த குடும்பங்கள் பல உண்டு. இக் குடும்பங்களில் சண்முகநாதன், தெய்வானைப்பிள்ளை என்பவர்களுக்கு பிள்ளையாக உதித்தவர் தான் குழந்தைவேல் சுவாமிகள். ஊரும் வேலணை, பெயரும் குழந்தைவேல். எல்லாம் முருகமயமே.

குழந்தைவேல் சுவாமிகள் வித்தியாரம்பம் பெற்று, சமய தீட்சையும் பெற்று சைவாசார அனுட்டான சீலராய் விளங்கினார். தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை உடையவராய் விளங்கினார். டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் தீவேழு கோயிற் பற்றுக்கும் ஏக முதலியாராகத் திகழ்ந்தார். வேலணையைச் சேர்ந்த இராசசேகர முதலியார் என்பவர் அவருடைய சந்ததியில் நான்காம் தலைமுறையில் உள்ளவர். இவர் முதலியாராக உத்தியோகப் பொறுப்பேற்று குழந்தைவேலர் இலங்கையின் பல பாகங்களிலுங் கடமை ஆற்றி வந்தார். உள்ளத்திலோ இறைசிந்தனை நிரம்பப் பெற்றவராக விளங்கினார். தாமரையிலைத் தண்ணீர் போல அவரது வாழ்க்கை அமைந்திருந்தது.

அநுராதபுரத்தில் முதலியாராக இருந்த போது கதிரேசன் கோயில் ஒன்று கட்டித் தெய்வத் திருப்பணி செய்தார். வெள்ளையர் பொதுவாக யாழ்ப்பாணத் தமிழர் அத்தனை பேரையும் குறித்து இழிவாகப் பேசினார். தன்மான உணர்வும் சுதந்திர உணர்வுங் கொண்ட குழந்தைவேலர் வெள்ளையரின் ஆதிக்க வெறியையும் குடியேற்ற நாட்டுச் சுதேசிகள் விடயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் அலட்சிய மனப்பான்மையையும் மிகக் கண்டித்துப் பேசினார். உடனே உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு வேலணை வந்தார். பின்னர் ஊர்காவற்றுறைச் சுங்க இலாகாவில் உத்தியோகம் பார்த்தார்.

ஒருநாள் கடையிற் சுவாமிகள் இவர் வேலை பார்த்துக் கொண்டிருந்த கட்டடத்தின் முன் வந்து நின்றார். இவரையே உற்று நோக்கினார். குழந்தைவேலர், சுவாமிகளுடைய பார்வையால் கவரப்பட்டார். எழுதிய பேனையோடு வெளியே வந்து சுவாமிகளைப் பார்த்துக் கொண்டு நின்றார். சுவாமிகள் வாய் திறந்து பேசவில்லை. குழந்தை வேலரும் வாய் திறக்கவில்லை. சுவாமிகள் குழந்தைவேலருடைய கையிலிருந்த பேனாவைப் பிடித்து இழுத்தார். சுவாமிகள் முன்னாகவும் குழந்தைவேலர் பின்னாகவும் செல்வதை கந்தோரில் உள்ளவர்கள் பார்த்தனர். யாருடனோ குழந்தைவேலர் போகிறார் சிறிது நேரத்தில் திரும்பி வந்து விடுவார் என்று தான் கந்தோரில் உள்ளவர்கள் கருதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர் உடல், பொருள் ஆவி மூன்றையும் குரு நாதருக்கே அர்ப்பணித்தார்.

பரமகுருசுவாமிகள் கீரிமலையில் வந் திருப்பதை உணர்ந்த கடையிற்சுவாமிகள் தமது சீடர் குழாத்துடன் சென்று சுவாமி களைத் தமது சீடருக்கு அறிமுகம் செய்து வைத்தார். குழந்தைவேற் சுவாமிகளின் பக்குவநிலை அறிந்து பரமசுவாமிகள் தமது திருக்கடாட்சத்தை அவர் மேல் பாலித்த ருளினார். குழந்தைவேல் சுவாமிகளுக்கு குருமார் இருவராயினர். இருவருக்கும் குழந் தைவேல் சுவாமிகள் மாறி மாறித் தொண்டு புரிந்தார்.

குழந்தைவேற் சுவாமிகளுக்குக் குருத் துவமளித்துச் சுமார் இரண்டு வருடங்களா யின. அப்போது கடையிற்சுவாமிகள் சமாதி கூடுங் காலமாயிற்று. அந்த நாட்களில் கடை யிற் சுவாமிகள் நீராவியடியிலே அதிகமாகத் தங்கி இருந்தார். குழந்தைவேல் சுவாமிகள் கடைசி காலத்திலே தமது குருநாதரைக் கணமேனும் பிரியாது பணி புரிந்தார். கடை யிற் குருநாதருடைய சமாதிக்குப் பின் மெய் யடியார் எல்லாம் குழந்தைவேற் சுவாமி களையே குருவாகக் கொண்டனர்.

**"குழந்தை வேலா தஞ்சம் வேறிலை யுனது சரணந்தானே"** என்ற அருளம்பல சுவாமிகளுடைய வாக்கு நினைவு கூரத்தக்கது.

பாவிலுப்பிள்ளை என்ற கிறிஸ்தவர் குழந்தை வேல் சுவாமிகளின் உத்தம சீடர்களுள் ஒரு வரானார். ஆத்மிகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு சாதி மத பேதம் எதுவும் இல்லை. எனவே சுவாமிகள் பாவிலுப்பிள் ளைக்குத் தீட்சையும் உபதேசமும் செய்தார்.

சுவாமிகள் வண்ணார்பண்ணையில் ஒன்றுவிட்ட சகோதரி இல்லத்தையே அமைதி யான இடமாகக் கருதி அங்கு வசித்தார். அடியார்கள் பலர் அங்கு வந்து அவ்வில் லத்தை ஒரு சாதனா நிலையமாக்கினர். சுவாமிகள் நடத்திய பூசைகள், பிரார்த் தனை, உபதேசம் ஆகியவற்றில் ஈடுபட்ட அடியார்கள் தம்மை மறந்து பேரின்பத்தில் திளைத்தனர்.

வண்ணார்பண்ணையில் இராமநாதர் அருளம்பலம் என்பவர் வசித்து வந்தார். மனிதன் மனிதனை வணங்கலாமா? என்பது அவருடைய நெடுநாளைய சந்தேகம். இதனால் குழந்தைவேல் சுவாமிகளையும் அவருடைய அடியார்களையும் அவர் அணுகு வதில்லை. கேலியும் செய்வார். ஆனால் அவருடைய உள்ளம் அவ ரையும் அறியாமல் குழந்தைவேல் சுவாமிகளையே நாடியது. குழந்தைவேல் சுவாமிகளிடம் போய் சேர வேண்டும் என்ற எண்ணம் எழும். ஆனால் வரட்டுக் கௌரவம் அதனைத் தடுத்து விடும். என்றாலும் பூசைகளை சற்றுத் தூரத்தில் நின்று கவனிக்கத் தவறுவதில்லை.

ஒருநாள் இரவு சபாபதி என்ற அன்பர் சுவாமிகள் முன்னிலையில் மனமுருகி திரு வாசகம் பாடினார். இந்த திருவாசக இசை யில் அருளம்பலத்தார் கவரப்பட்டார். "உடை யாளுன்றன் நடுவிருக்கும்" "என்ற அடி அருளம்பலத்தாரின் உள்ளத்தைத் தொட்டு விட்டது. ஓடி வந்து அடியற்ற மரம் போல சுவாமிகள் பாதத்தில் வீழ்ந்து தம்மைப் புனிதப்படுத்திக் கொண்டார். அருளம்பலத் தாரின் பரிபக்குவ நிலையை அறிந்த சுவாமி கள் தீட்சையும் உபதேசமும் அளித்து அருளம்பல சுவாமிகள் ஆக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளம்பலசுவாமிகள் தனது குருநாத ரைப் பற்றி குறிப்பிட்ட பாடல் வருமாறு

**'அன்றொரு நாள் ஆச்சிரமத்தடைந்த உன் மெய்**
**யடியவர் முன்னடி நாயேன் தன்னை முன்னா**
**நின்றிடலைத் தருள் விழி நோக் குறுத்தியோர் சொல்**
**நெஞ்சினிடை வைத்தியெனப் பணித் தீந் திட்டாய்**
**கன்றிடிக்கத் தாய் சுரக்கும் வழக்கைத் தள்ளிக்**
**கன்னெஞ்சற் கமுத மழை காட்டி விட்ட**
**தன்நிறமிங் கார றிவா குழந்தை வேலா**
**தஞ்சம் வேறிலையுனது சரணந் தானே"**

குருபூசை நடத்துவதற்கு சில நாட்களில் பொருள் தட்டுப்பாடு ஏற்படும். இதனால் அடி யார்கள் படாத பாடுபடுவர். இதனை அறிந்த குழந்தைவேல் சுவாமிகள் உள்ளே இருக் கும் பெட்டியைத் தூக்கிவா என்பார். சீடர் ஒருவர் தூக்கி வருவார். அதற்குள் என்ன இருக்கிறது என்று கேட்க, இரும்புத் துண்டு ஒன்றைச் சீடன் எடுத்துக் கொடுப்பான். அதனை கையால் சுவாமிகள் வாங்கி சீலை யால் சுற்றிக் கொடுப்பார். இதனைக் கொண்டு சென்று விற்று குருபூசைக்குரிய பொருட் களை வாங்கி வாருங்கள் என்பார். அங்கு போய் பார்க்கும் போது அது தங்கக் கட்டி யாக மாறி இருக்கும். அதனை விற்ற பணமும் பொருட்களை வாங்கும் பணமும் சரியாகத் தான் இருக்கும்.

கடையிற் சுவாமிகள் பின்பற்றிய முறை யையே அருளம்பல சுவாமிகளையும் தமக்குப் பின் தலைவராக இருக்கும் நிலையை அடியார்களுக்கு உணர்த்தினார். 1909 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 8ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரவு உத்தரட்டாதி நட்சத்திர வேளையில் சுவாமிகள் சமாதி அடைந்தார். சமாதி அடைந்த சுவாமிகளின் திருமேனி வண்ணார்பண்ணையில் இருந்து ஊர்வல மாகத் தாங்கிச் செல்லப்பட்டு கீரிமலையில் வைக்கப்பட்டது. சமாதி வைக்கப்பட்ட இடத்திலே சுவாமிகளின் அடியார்கள் ஆலயம் ஒன்றை அமைத்து அதேயாண்டு வைகாசி மாதம் மூன்றாம் திகதி ஞாயிற்றுக் கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் முறைப்படி பிரதிஷ்டை செய்தனர்.

குழந்தைவேல் சுவாமிகளின் சமாதி அமைந்த சிவாலயத்திற்கருகில் அருளம் பல சுவாமிகள் உட்பட 40 சித்தர்களின் சமாதிகள் அமையப் பெற்றுள்ளமை யாழ் மண்ணிற்கும் சைவத் தமிழ் உலகிற்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். வரலாற்றுப் பெருமை மிகு கீரிமலை மண்ணில் ஈழத்துச் சித்தர் பரம்பரை முன்னோடிகளில் ஒருவ ரான குழந்தை வேல் சுவாமிகளின் சமாதி சிவாலயம், மூன்று தசாப்தங்களுக்குப் பின் னர் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு செந் தமிழ் ஓத திருக்குடமுழுக்குச் சிறப்பாக இடம்பெற்றது.

## சங்கிலிய மன்னனின் 400ஆவது ஆண்டு நினைவு

நல்லூர் இராசதானியில் இருந்து ஆட்சி செய்த தமிழ் மன்னன் சங்கிலியனின் 400ஆவது ஆண்டு நிறைவு தினம் 26.05.2019 அன்று நல்லூரிலும் தொடர்ந்து கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் தலைமையிலான ஏற்பாட்டுக் குழு செய்திருந்தது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடி அரிசித் தொண்டினால் பெருங்கோயில் அமைத்த இணுவில் சாத்திரம்மா

இணுவையூர் கலாபூஷணம்
மூ.சிவலிங்கம்



சைவமும் தமிழும் ஆயகலைகளும் ஏழிசையும் வாழ்ந்திடும் இணுவில் திருவூர் பல சித்தர்களையும் அருளாளர்களையும் அறப்பணியாளர்களையும் தன்னகத்தே கொண்டது. இங்கு வாழும் பெண்கள் இறை பக்தி மிக்கவர்கள். இணுவில் கிராமத்தின் ஒரே தாய்த் தெய்வமான சிவகாமி அம்பாள் இணுவில் கிழக்கில் அருள் பாலிக்கிறார். அன்று முதல் ஆண்களிலும் பார்க்க கூடுத லான பெண்கள் இறைபணியாற்றி இன்புறு கின்றனர்.

அன்று சிறப்புடன் துலங்கிய சிவகாமி அம்பாளின் ஆலயம் அந்நியராட்சியில் சிதை வடைந்து வழிபாடும் அருகியது. பிற்காலத் தில் சின்னத்தம்பிப்புலவரின் தூண்டுதலால் சிறுகுடிசையில் அமைந்து பூசிக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாலயத்தின் வடபால் வாழ்ந்த கற்பகம் என்னும் மூதாட்டியால் வளரத்தொடங் கியது. மூதாட்டியின் இறைபணியை நோக் கிய சிவகாமி அம்பாள் அவருக்கு அருள் புரிந்து திருவாக்குரைக்குமாறு கனவில் தெரிவித்தார். அன்னை சிவகாமியின் பேரரு ளால் திருவாக்குரைத்த பயனாகத் திருப் பணி நிதி சிறிது சிறிதாகச் சேரவும் ஆலயத் திருப்பணியை மேற்கொண்டார். கற்பகம் அம்மையார் முதுமையில் சிவபதமடைந் தார்.

## சாத்திரம்மா

சிவகாமி அம்பாள், கற்பகம் அம்மை யாரின் இரண்டாவது மகளும் குடும்பப் பெண் ணுமான சிவகாமசுந்தரி என்ற இயற்பெயர் கொண்ட பேரிளம் பெண்ணின் கனவிற் தோன்றினார். தாயார் செய்த பணியைத் தொடருமாறு கூறி அருள் ஞானத்தையும் வழங்கி மறைந்தருளினார். நூறு வருடங் களுக்கு முன் இவ்வூரில் பாடசாலைகள் ஏதுமில்லாததால் ஏட்டுக்கல்வியறிவில்லாத போதும் சிவகாமசுந்தரி மிகுந்த இறை பக்தி யும் கேள்விஞானமும், நுண்மதியும், நற்பண் பும் சிறப்பான ஆற்றலும் மிக்கவரானார். தமது குலதெய்வம் இட்டபணியைச் செய்ய அவரின் கணவர் பூரண ஆதரவு தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாக்குரைத்தல்

நாளாந்தம் அதிகாலையில் எழுந்து தமது இல்லறப்பணியை நிறைவு செய்த ததும் ஆசாரசீலராகச் சிவகாமி அம்பாளின் பிரார்த்தனையை நிறைவு செய்வார். இவ் வாலயத்தின் பின் வீதியில் பத்திரகாளி உடன் உறையும் மாணிக்க வைரவர் கோயில் வாச லில் அமர்ந்து தம்மை நாடி வருவோருக்குத் திருவாக்குரைப்பார். அக்காலத்தில் அம் பாளின் திருப்பணிக்காகவே வாக்குரைப் பதால் பழம், பாக்கு வெற்றிலையுடன் கிரய மாக ஒரு பணம் (ஆறு சதம்) மட்டும் பெற்று வந்தார். சிவகாமி அம்பாளின் பேரருளால் இவரின் திருவாக்கு நற்பலன் தரவும் பிர பலமடைந்தது. இதனால் இவ்வூரவர் மட்டு மல்ல அயற்கிராமத்தவரும் வந்து கேட்டுப் பயனடைந்தனர்.

சிவகாமி அம்பாளின் சித்தமும் அம்மை யாரின் இறைபக்தியும் குடிசையாயிருந்த ஆலயத்தைக் கருங்கல்லினால் நிறுவ இறையருள் பாலித்தது. இதனால் பெரு முதல் தேவையென அம்பாள் இவரின் கன விற் தோன்றி, இல்லங்கள் தோறுஞ் சென்று பிடியரிசி எடுத்து வந்து கட்டடப்பணியை சிறப்பாகச் செய்யுமாறு கூறி மறைந்தருளி னார். இவர் திருவாக்குரைப்பதைச் சாத் திரஞ் சொல்வதாகக் கருதிய எம்மவர் இவ ரைச் சாத்திரம்மா என்றே அழைத்தனர்.

## பிடியரிசி எடுத்தல்

சாத்திரம்மா தமது இயல்பான அன்பு வார்த்தைகள் பேசி இல்லங்கள் தோறும் இல்லத்தரசிகளிடம் சிவகாமி அம்பாளின் திருப்பணிக்காகப் பிடியரிசி தருமாறு கேட் டார். இறையருள் கைகூடவும் அறப்பணிக்கு மதிப்பளித்த இவ்வூர் அன்னையர் யாவரும் நாளாந்தம் உலையில் இடும் அரிசியில் ஒருகைப்பிடி அரிசியை வேறாக முதலில் எடுத்து, சிவகாமி அம்பாளை வணங்கி ஒரு பாத்திரத்தில் இட்டுச் சேமித்து வந்தனர். சாத்திரம்மா தமது வசதி போல வரும் போது சேர்த்து வைத்த பிடியரிசியையும் தந்து தம்மாலான சிறுதொகைப்பணத்தையும் உள்ளன்போடு வழங்கினர். சாத்திரம்மாவின் பணி ஏறத்தாழ 1940 வரையில் ஆரம்பித்தது. இறையருட் சித்தப்படி அகவை நாற்பது காணாத சாத்திரம்மா தமது இறுதிக்காலம் வரை அருந்தொண்டாற்றினார்.

வழமையாகத் தமது குடும்பப் பணியின் பின் வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் திருவாக் குரைப்பார். முடிந்ததும் இல்லங் களில் சேர்ந்த பிடியரிசியை எடுத்துவர புதிய கடகம் பெட்டிகளுடன் புறப்படுவார். ஒவ் வொரு வீட்டிலும் தெய்வீகப்பணி யாற்றும் மாதரசிக்கு பெருமதிப்பும் உபசாரமும் தந்து அன்னையர் தம் சைவப் பாரம்பரியத் தமிழ் மரபை நிலை நிறுத்தினர். சாத்திரம்மா குறிப்பிட்ட வெவ்வேறு இன அரிசிகளை வேறாகக் கடகங்களிற் சேர்த்து வந்தார். கடகம் நிறைந்ததும் பாரம் கூடிய கடகங் களை இவ்வூரின் அன்றைய வாலிபர்கள் தாமே தலையிற் சுமந்து கொண்டு சாத்திரம் மாவின் வீட்டிற் சேர்ப்பார். அவர்களுக்குச் சாத்திரம்மா ஆசி கூறி அனுப்புவார். அவ் வாறு ஆசி பெற்ற பலர் தாம் உயர் நிலையில் வாழச் சாத்திரம்மாவின் ஆசியே உதவிய தென இன்று முதுமையிலும் பெருமைப்படு கின்றனர்.

## ஆலயத்திருப்பணி ஆரம்பம்

நாளாந்தம் சேரும் அரிசியை குறிப்பிட்ட வகைப்படி ஒன்று சேர்த்துப் பெரிய பத் தாயத்தில் வைத்துப் பூட்டிக் கொள்வார். மாதமொரு முறை அயலில் வாழும் பெரியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் முன்னிலையில் அரிசியை அளந்து கணக்கிட்டுப் பதிந்து கொண்டார். பின் குறிப்பிட்ட அரிசியை விற்றுப் பணத்தையும் பாதுகாத்தார். காலங்கள் செல்லவும் பெரு நிதி சேர்ந்தது. சைவாகம விதிப்படி ஆலயக் கட்டுமான வரைபடம் எடுத்து அதனை நிறைவு செய்யும் பணியை நாடினார். இறை யருட்சித்தப்படி அராலியைச் சேர்ந்த நாக முத்து என்னும் ஆசாரி கருங்கல் பொளிந்து ஆலயக்கட்டுமானப் பணியையும் பொறுப் பேற்றார். அவர் கூறிய அளவுப் பிரமாணப்படி வவுனியாவிலிருந்து கருங்கற்களைத் தருவித்தார். நாகமுத்துவின் பணியாட்கள் பலர் கூடித் திருப்பணியில் இணைந்தனர்.

**கருவறை முதலான கட்டடக் கருங்கற் பணி நிறைவு**

இறைபணி தொடர்கிறது. சாத்திரம் மாவும் நாள் தவறாது திருத்தொண்டில் இன் புற்றார். கற்கள் தேவைப்படி பொளிந்ததும் கட்டுமானப்பணியும் தொடர்ந்தது. முதலில் கருவறை அமைத்து நிறைவு கண்டபின் அர்த்த மண்டபம், மகாமண்டபம் யாவும் வளரவும் நீடியகாலஞ் சென்றது. யாவும் நிறைவு கண்டதும் ஆலயக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவும் நடைபெற்றது.

மேற்குறிப்பிட்ட கருவறை முதலான கட்டடத் தொகுதிக்கான கருங்கற்கள் யாவும் தேவைக்கேற்பப் பகுதியாகத் தரு வித்தும் அதனைக் கட்டுமான அமைவிற் காகப் பொளிந்து செப்பனிடவும், அக்கற்கள் மூலம் குறிப்பிட்ட கட்டட அமைப்பை நிறைவு செய்ய ஏறத்தாழ இருபது வருடங்கள் நீடித்தன. இக்காலத்தில் இளமை மாறாத சாத்திரம்மா வீடு வீடாகச் சென்று பிடியரி சியை ஏற்று வந்து அதனை விற்றுக் கட்ட டப்பணியை நாளாந்தம் இடையறாது தொடர வைத்தமை சிவகாமி அம்பாளின் திருவிளை யாடலேயாகும்.

**பஞ்சதள இராசகோபுரப்பணி**

கருவறை முதலான முதலாவது கட்டடத் தொகுதி சிறப்பான கருங்கற்பணியாக அமைந்ததால் யாவரும் அன்னை சிவகாமி யின் பேரருளை எண்ணி சாத்திரம்மா தனி ஒருத்தியாக நின்று தூயபணி செய்ததை வியந்தனர். பிடியரிசி வழங்கிய அன்னையர் மட்டுமன்றி இறையருளால் நல்லெண்ணம் படைத்த பலர் சாத்திரம் மாவை உற்சாகப் படுத்தினர். அம்பாளின் சித்தமும் சாத்திரம் மாவின் இராசகோபுரம் அமைக் கும் ஆவலும் மேலிட்டது. பஞ்சதள இராசகோபுரம் வெள் ளைக்கல், செங்கல், சீமெந்து ஆகியவற் றால் அமைக்க இறையருள் பாலித்தது. இத் திருக்கோபுரப்பணியையும் நாகமுத்து ஆசாரியே பொறுப்பேற்று அமைக்கத் தொடங்கினார்.

**திருக்கோபுரப்பணிக்கான முதலீடு**

இத்திருப்பணியை நடாத்துபவர் சிவ காமி அம்பாள். சாத்திரம்மா வழமைபோல பிடியரிசியை வீடுகளிற் சேர்த்துத்தலையிற் சுமந்து வந்து விற்றுத்தேறும் சிறுதுளி பெரு வெள்ளமாகக் கிடைத்ததே பிரதான மூல தனமாகும். இறைபக்தி மிகுந்தோர் தம் மாலியன்றதை வழங்கி வந்தனர். இறை யருட் சித்தமாக கட்டட அமைப்பு வேலை கள் தொய்வின்றி நடைபெற்றன. சிவகாமி அம்பாள் நிறுவும் திருக்கோபுர வேலைக்கு தம்மை ஒரு அடியவளாக நினைந்து இடை யறாது உளத்தூய்மையுடன் சேவை செய் தார். இவ்வூர் பொது மக்கள் பலர் உடல் உழைப்பாகவும் உதவு தொகையாகவும் உள்ளத் தூய்மையுடனும் தம்மை அர்ப் பணித்தனர். நான்கு வருடகாலத்தில் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளும் நிறைவடைந்தன. சிவகாமி அம்பாளின் பஞ்சதள இராசகோபுரம் அழகாகக் காட்சி தந்தது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என அறியும்படி சிவகாமி அம்பாளின் இராசகோபுரத் திருப்பணி 1974 இல் நிறைவடைந்து குடமுழுக்கு நன்னீராட்டு விழாவும் நடை பெற்றது. தாய்த் தெய்வத்தின் தெய்வீகப் பணிகளை இருகட்டமாக நிறைவு செய்த சாத்திரம்மா முதுமை அடைந்த போதும் உள்ளம் சோரவில்லை. தெய்வீகப் பணிக்காக மீண்டும் பிடியரிசி சேர்க்கக் கடகத்துடன் புறப்பட்டார். மூன்றாம் கட்டடப்பணியான கோபுரவாசலில் அழகிய மணிமண்டபத்தை அமைக்கச் சித்தங் கொண்டார். இவ்வாலயத்தில் அமையவிருந்த மணிமண்டபத்தில் 12 கருங்கற்தூண்களை நிறுவி அதன்மீது வளைவான சீமெந்துக் கலவையினால் கூரை வேயப்பட்டு உள்ளும் புறமும் அழகிய சித்திர வடிவமைப்புடன் நிறைவு செய்ய யாவரும் உதவினர். 1984 இல் அழகிய மணி மண்டபம் நிறுவியதும் சாத்திரம்மா சுறுசுறுப்புடன் இயங்க முடியாது ஓய்வு பெற்றார்.

**சாத்திரம்மாவின் இதர பணிகள்**

இணுவில் திருவூர் மக்கள் நாவலர் பெருமானின் கந்தபுராண கலாசாரத்தில் மூழ்கியவர்கள். இதனால் ஈர்க்கப்பெற்ற சாத்திரம்மா தமது ஆன்மிகச் சிந்தனையை யாவரும் நுகரவேண்டுமெனவும் ஆர்வங் கொண்டார். அன்று இவ்வூர் மக்கள் தம்பணி நிறைவில், மாலை வேளையில் ஆலய தரிசனைக்கு வருபவர்கள் யாவரும் கேட்டின்புறும் வண்ணம் புராணக் கதைகளைப் படித்து இன்புறவைக்க எண்ணினார். இச் சூழலில் வாழ்ந்த புராணபடனஞ் செய்வோருடன் தொடர்பு கொண்டார். புராண வசனங்களைப் படித்தால் யாவரும் விரும்பிக் கேட்பர் என அறிந்தார். இதன் பேரில் கந்தபுராணம், பெரியபுராணம், மகாபாரதம், இராமாயணம் போன்ற வசனநடை நூல்களைத் தாமே வாங்கினார். மேலும் புராண நூல்களை வைத்துப் படிக்கும் பலகையுஞ் செய்வித்தார்.

தாம் திருவாக்குச் சொல்லும் வைரவர் கோயில் வாசலில் இரவு ஏழு மணி முதல் புராணப்படிப்பிற்கு வேண்டியன செய்தார். அக்காலத்தில் மின் இணைப்பு இல்லாததால் பெரிய மண்ணெண்ணெய் லாம்பு வெளிச்சத்தில் புராணபடிப்பை ஆரம்பித்தார். படிப்பவர்கள் சிறந்த உச்சரிப்பில் படித்து யாவரையும் இன்புற வைத்தனர். படிப்பு இரவு ஒன்பது மணிக்கு மேல் நீடிப்பதால் அருகேயுள்ள தமது வீட்டில் தேநீர் தயாரித்துத் தாமே யாவருக்கும் பரிமாறித் தமது உபசாரப்பணியில் இன்பங்கண்டார். இப்புராணப் படிப்பு முப்பது வருடங்களுக்கு மேல் நீடித்தது.

தினமும் முன்னிரவு வேளை புராணப் படிப்பைக் கேட்ட யாவரும் புராண வரலாற்றைத் தாமே கதைகதையாகச் சொல்லும் ஆற்றலால் ஆன்மிக நெறிக்கு வலுவூட்டினர். பிற்காலத்திலமைந்த நாட்டுச் சூழலால் படிப்பு நிறுத்தப்பட்டது. சாத்திரம்மாவின் தெய்வீகப் பணியால் எம்மக்களிடையே ஆன்மிகச் சிந்தனை நிலை கொண்டது.

சாத்திரம்மா தெய்வீக மகளிரானதால் தாய்க்குலத்தின் பண்பாக பொது மக்களிடையே சாந்தியும் சமாதானம் வளரவும் இல்லத்தரசிகள் தமது இல்லறத்தை நல்லறமாகப் பேணவும் ஆலயப்பணி, சமூகப்பணி ஆகிய நற்கருமங்களில் யாவரையும் இணைத்தார். சிவகாமி அம்பாளின் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசையாக இருந்த காலத்தில் உள் வீதியைப் பெண்கள் பலர் முன்வந்து சிறப்பிக்கத் தாமும் ஒருத்தியாகத் தொண்டு செய்தார். இதனால் ஆலய உள்வீதியைத் தினமும் கூட்டிப்பெருக்கிபுனிதமாகப்பேண வைத்தார்.

வெளிவீதியில் புல்பூண்டுகள் அடிக்கடி வளர்ந்து வழிபடுவோரை வருத்தியது. இதனால் அயலில் உள்ள மாணவர்களை அழைத்து சிரமதானப் பணிமூலம் காலத்துக்குக்காலம் சிறக்க வைத்தார். மேலும் மாணவர் சமூகம் சமயநெறி பேண வேண்டுமென்பதால் மாணவர்களுக்கான சமயக் கல்வி போதிக்கும் அறநெறிப்பாடசாலையை இணுவில் சைவத் திருநெறிக் கழக மூலம் நிறுவ வைத்து அதன் வளர்ச் சிக்கும் உதவி செய்து ஊக்குவித்தார். இணுவில் கிழக்கில் சிவகாமி அம்பாளின் ஆலயத் திருத்தொண்டை ஏற்ற சாத்திரம்மா தொடர்ந்து 45 வருடங்கள் அரும்பணியாற்றி இறையருள் பெற்றார். இவரின் தூயபணி (அவர் மறைந்தாலும்) யாவராலும் இன்றுவரைபோற்றப்படுகிறது.

சாத்திரம்மாவின் தூயபணியைச் சிறப்பித்து சிவகாமி அம்பாளின் கீர்த்தனை மாலையில் பின்வரும் பாடல் இடம்பெற்றது. இப்பாடல்கள் இறுவெட்டு மூலம் 2004 இல் வெளியிடப்பட்டது. இப்பாடல் அமைந்த கீர்த்தனை மாலையைப் பாடியவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.ந.வீரமணிஐயர். இப்பாடல் இன்றுவரை இல்லங்கள் தோறும் பக்திச்சுவையில் வலம் வருகின்றது.

**இராகம் - ஸிம்ஹேந்திர மத்தியமம்**

**தாளம் - ஆதி**

**பல்லவி**

**பிடி அரிசி எடுத்தே பெருங்கோயில் தனை அமைத்த**
**பிராட்டி சாத்திரம்மாவுக்கே - பேறுதந்தாள் சிவகாமி**

**அனுபல்லவி**

**அடியவளாக உண்மை அன்பு கொண்டு பூசித்தாள்**
**நெடிய கோபுரக் கோயில் இணுவையிலே அமைத்தாள்**

**சரணம்**

**கருவறைமுதல் வாசல் கோபுரம் எழுப்பினாள்**
**பெருமணிமண்டபம் பொளி கல்லினால் சமைத்தாள்**

**திருப்பொலியும் குடமுழுக்கதும் ஆட்டினாள்**
**திருப்பணிச் சாத்திரம்மா சிவகாம சுந்தரிக்கே.**

இணுவில் தெய்வீக மகள் சாத்திரம்மாவின் புனிதமான பிடியரிசித் தொண்டின் மகிமையைப் பாரெல்லாம் பரவ வைத்த இறையருட் சிறப்பு மேலோங்கியது. சாத்திரம்மாவின் தூயபணியை எமது சமூகம் பின்பற்றினால் மதிய உணவின் பின் வீணாகிச் செல்லும் உணவு சிக்கனமாகும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்காலம். அறப்பணி, ஆலயப் பணி, பொதுப்பணி சிறக்கும். சமூகத்தில் ஆன்மீக நெறி ஓங்க இல்லங்களில் சாந்தியும் சமாதானமும் மனநிறைவும் மலரும். இம்மண்ணில் தெய்வீக ஒளி வீசும்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

## சுவர்ண சபா மண்டபம்

**நல்லூர் முருகன் ஆலயத்தில் தங்கத்தினால் அமைக்கப்பட்ட சுவர்ண சபா மண்டபம் 02.09.2018 இல் (கார்த்திகை உற்சவம்) குடமுழுக்குச் செய்து வைக்கப்பட்டது. கிரியைகளை நடாத்தி வைக்க இந்தியாவில் இருந்து அந்தணச் சிவாச்சாரியர்கள் வருகை தந்திருந்தனர்.**

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனடக்கம்

கு.சிவபாலராஜா
ஒய்வுநிலை பொ. சு. பரிசோதகர்
நல்லூர்.

யோகம் என்றால் சேருதல் என்று பொருள். எதனோடு சேருதல் என்னும் கேள்வி இங்கு இயல்பாகவே எழுகின்றது. நாம் மாயையின் வலையில் சிக்கிக் கொண்டிருப்பதால் அதிலிருந்து விடுபட நாம் கடவுளோடு சேர்தல் வேண்டும் என்னும் விடை இங்கு கிடைக்கின்றது. துளியான ஜீவன், கடலான கடவுளோடு கலந்து இருப்பதற்கே இந்தச் சேர்க்கை நாட்டம் என்பது உண்மையே. "உன்னை நீ அறிந்து கொள்" என்பது பெரியவர்கள் கூற்றாகும். எம்மை அறிய யோகம் செய்ய வேண்டும். உலகியல் வாழ்க்கைக்கு நேர் எதிர்ப் பக்கத்தில் இருப்பது யோக வாழ்க்கையாகும். யோக வாழ்க்கை வேண்டுமெனில் சம்சார வாழ்க்கையை விடத்தான் வேண்டும். யோகம் என்பது மனிதனை மாற்றியமைக்கவல்லது. பண்டைய கால பாரத ரிஷிகள் பகுத்தறிந்து வகுத்துக் கொடுத்த பாதையே யோகம் ஆகும். சித்தத்தை அடக்குவதே யோகம். எந்தெந்த வழிகளில் நாம் இன்பத்தை நாடுகிறோம். கண்களால், காதுகளால் நாவால், மூக்கால், தோலால் நாம் இன்பத்தை நாடுகிறோம். எல்லாம் இறைவனிடமிருந்தே வருகின்றது. சிவனிடமிருந்தே என்ற கருத்தே கூறப்பட்டுள்ளது. சிவனே எல்லா மதங்களுக்கும் முழுமுதற் கடவுள் என்பதே உண்மை. புலன்களைக் கட்டுப்படுத்துவதும் மனத்தை ஒருமைப்படுத்துவதும் தியான சமாதிகளைப் பழக்குவதும் "இராஜயோகம்" ஆகும்.

எனவே கடவுளுடன் சேர்வதற்கு யோகம் செய்ய வேண்டும். யோகம் செய்வதற்கு நமது புலனடக்கம் தேவை . புலன்களை அடக்குவது முடியாத காரியமானாலும் அவற்றை வழி மாற்றல் முடியும். இதற்காக வகுக்கப்பட்டனவே கோயில் வழிபாடும் தடத்த லட்சணமும் ஆகும். அட்டாங்க யோகம் இதன் முறைகள் பல நமது புலனடக்க வழி முறைகளாகும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவை எட்டுமாம், இவற்றுள் இயமம், நியமம் இரண்டும் நமது புலனடக்கம் தேவையான குணம், குறிகள் உள்ள மனிதர்களின் இயல்பைக் குறித்து நிற்க; ஏனைய ஆறும் புலனடக்கத் தொழிற்பாட்டிற்கு இன்றியமையாதன.

உடலுக்குப் பயிற்சியாக ஆசனம் (ஆதனம்) வருகின்றது. ஆசனம் மட்டும் யோகம் ஆவது இல்லை. யோகாசனங்கள் உடலை சூடு, குளிர் போன்ற பிற துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள வலு அளிக்கின்றது. உடல் நோய் தடையாகின்றது. அவற்றைக் கட்டுப்படுத்திக்கொள்ள ஆசனம் வழி சமைக்கின்றது. நெடு நேரம் அமர்ந்திருக்கவும் உடலை நேராக வைத்திருக்கவும் ஆதனம் உதவுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சி மிக முக்கிய யோக நுணுக்கமாகும். உள்ளே இழுத்து வெளியே விடும் மூச்சை சீர்ப்படுத்தி, கால ஒழுங்குடன் சம அள வாகச் செய்துகொண்டு பிறகு உள்ளேயோ வெளியேயோ நிறுத்தி அடக்குகின்றோம். மன வேகம் நிதானப்படுகின்றது. உடலில் உயிர்ச்சக்தி, காந்த சக்தி சேமிக்கப்பட்டு நாடிகளும் இரத்தமும் தூய்மையடைகின் றது. அதன் பின்புலன்கள் புறப் பொருள் களில் மேய்வது அடக்கப்பட்டு உள்ளே இழுத்துக் கொள்ளப்படுகின்றன. இதனால்; மனம் ஒரு பொருளில் நிலைக்கும் 'மன ஒருமை' நமக்கு வாய்க்கின்றது. அது நிலைக்கும் கால அளவு அதிகப்படவே அது 'தியானம்' ஆகின்றது. தியானம் நன்கு அமைந்துவிடும் போது, தியானப் பொரு ளின் உண்மை மனத்திற்குப் பிடிபடுகின்ற நேரடி அனுபவம் நிகழ்கின்றது. இது 'சமாதி' நிலை எனப்படும். சமாதியே யோகத்தின் எல்லை நிலம் அல்லது அதுவே நாடிய குறிக்கோள். பிராணன் என்பது காற்று அல்லது மூச்சு, வளி.

**ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்**
**ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்**
**மாறுதலொன்றின்கண் வஞ்சகமாமே**

**- திருமந்திரம் 568**

பதினாறு மாத்திரை அளவு காற்று உள் இழுத்தல், நான்கு முறையால் பெருக்கி அதை அறுபத்து நான்கு மாத்திரையளவு உள்ளே கும்பகப்படுத்தல் வேண்டும், ரேசகம் - முப்பத்திரண்டு மாத்திரை அளவு வெளி விடுதல், இட நாசி வழி உள் எடுத்து, வல நாசிவழி வெளி விடுதல் வேண்டும். மாறுபடில் அது வஞ்சனையாகும். பிழை விடக்கூடாது. பிராணாயாமம் செய்யும் முறை இதுவாகும்.

**அஞ்சும் அடக்கு அடக்கு என்பார் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை**
**அஞ்சும் அடக்கில் அசேதனம் ஆம் என்று**
**அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே.**

**- திருமந்திரம் 2033**

உலகமும், உடலும் பஞ்சபூதச் சேர்க்கை; ஒன்றுடன் ஒன்று தொடர்புடன் தான் இருக் கும்.

புலன்கள் அறிதலுக்கென்றே பூதங்களு டன் பொருத்தப்பட்டுள்ளன

| பூதங்கள் | பூத மூலம் குணங்கள் | பொறிகள் | புலன்கள் |
|---|---|---|---|
| நிலம் - | - நாற்றம் - | மூக்கு நுனி- | மணத்தல் |
| நீர் - | - சுவை - | - நாக்குநுனி - | சுவைத்தல் |
| தீ - | - ஒளி - | - கண்மணி - | பார்த்தல் |
| காற்று - | - பரிசம் - | - தோல் புரை - | பரிசித்தல் |
| ஆகாயம்- | - ஒலி - | காதுப்பறை - | கேட்டல் |

பூத மறைப்பு நீங்கச் சிவம் பிரகாசிக்கும்

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்துள் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்**

**- திருமந்திரம் 2290**

யானை வாகனத்தைப் பார்க்கும் போது யானையின் அழகே தெரியும், அன்றி அது என்ன மரத்தினால் செய்யப் பெற்றது என்பதுபற்றி நாம் சிந்திப்பதில்லை. எனவே இங்கே மரம் மறைந்தது. யானை வெளிப் பட்டது, பின்னர்தான் இந்தயானை என்ன மரத்தால் செய்யப்பெற்றது என்பதை தெரிந்துகொள்ள முற்படுவோம். இங்கு யானை மறைந்துவிட மரம் வெளிப்பட்டது. இது போல் பூதங்கள் ஐந்தும் பரமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை மறைத்து நிற்கிறது. இப்பூதங்களின் மறைப்பு நீங்கவும் இறைவன் வெளிப்பட்டு பூதங்களை மறைத்து தன்னை வெளிக்காட்டுவார். எனவே சிவம் பிரகாசிக்கும்.

எனவே பஞ்ச பூதங்களின் மறைப்பினால் இறைவனை நாம் காண முடிவதில்லை. புலன்களின் வழி நாம் அனுபவிக்கும் போது இறைவன் தெரியமாட்டான். புலன்கள் அடங்கினால் இறைவன் தெரிவான். புலன் வழிமாற்றல் வேண்டும். கோவில் வழிபாட்டின் போது புலன்கள் வேறு பாதைகளில் சென்று 'வழி மாற்றல்' அடைகின்றன. இதை நாம் வழிபாடு செய்யும் வேளைகளில் உணர முடியும்.

நிலத்திலிருந்து வரும் நாற்றத்தை மூக்கு என்ற உறுப்பினால் நாம் உணர்கிறோம். நீரைச் சுவைத்துப் பார்க்கின்றோம். சுவைப்பதற்கு நாக்கை பயன்படுத்துகிறோம். நீர் சுவையுடையது அற்றது என இருவகையாக உணர்கின்றோம். கண் மணியால் ஒளியைப் பார்க்கின்றோம். ஒளியானது தீ (நெருப்பு)யிலி ருந்து வருகிறது. பரிசித்தல் தோல் மூலம் காற்று வீசும் போது உணர்கிறோம் நமது செவிப்பறைகள் கேட்டல் சக்தியை நமக்கு அளிக்கிறது. ஆகாய - ஒலி - முழக்கம் இவற்றின் உதாரணங்களாகும்.

அப்பர் பெருமானார் தமது திருமுறையிலே அருமையாகச் சொல்லியுள்ளார்.

"கண்காள் காண்மிங்களோ" புறக் காட்சிகளைக் கண்களால் பார்க்காது அகத்தில் இறைவனைக் காணல் வேண்டும். சிரம் தாழ்த்தி இறைவனை வழிபடுதல் வேண்டி" தலையே நீ வணங்காய்" எனவும் குறிப்பிட்டார். அகச் செவியில் இறை நாமங்களைக் கேட்டல் வேண்டும். நமது நெஞ்சில் இறைவனைக் குடி அமர்த்தல் வேண்டும், நெஞ்சத்து நினைவுகள் அவனைப் பற்றியதாகவே இருத்தல் வேண்டும். மூக்கானது இறைவனின் வாசனையை நுகர்தல் நம் கடமையாகக் கொள்ள வேண்டும். கைகள் இறைவனைக் கூப்பித் தொழுதல் வேண்டும். இறைவரை வாயார வாழ்த்தல் வேண்டும், நான் தேடியவை இவைதாம் இவற்றை இன்று யான் கண்டு கொண்ட பெரும் பேறு பெற்றேன். இச் செயல்களால் நமது புலன்கள் வழிமாற்றம் பெறுகின்றன.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" - என்பதுவும் இங்கு நோக்கற்பாலது.

**பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ப் பொழியுமே.**

**திருமந்திரம் -2883**

ஐந்து புலன்கள் நம்மிடம் உண்டு. அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது தவிக்கின்றோம், நாம் அவை தம் இஷ்டம் போல் வெறி கொண்டு அலைகின்றன. அவற்றை நாம் கட்டுப்படுத்தினால் (மேய்ப்பன் இருப்பின்) அத்தோடு அலையும் வெறியையும் அடக்கி வைத்தோமானால் அந்த ஐம் புலன்களும் நமக்கு பால் சொரிவது போல் இறை சக்தியை நமக்கு அளித்து புலனடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திற்கு இடம் கொடுத்து வாய்ப்பளிக் கின்றது.

வெளிச் செல்லும் உள்ளத்தை உள்ளே நிறுத்திப் பழகுதல் புலன் அடக்கத்தில் முக்கியம். இது "பிரத்தியாகாரம்" எனப் படும், இது அட யோகம், இலய யோகம், நிய மம், ஆசனம், இலம்பியா யோகம், மந்திர யோகம், இராஜயோகம், சிவயோகம் என வகைப்படும், மனத்தை மந்திரத்தால் உள் இழுத்தல் வேண்டும். மனத்தை உள் ஒளியில் நிறுத்தினால் நற்பலன் அடைய லாம்.

**புறப்பட்ட வாயுப் புக விடா வண்ணம்**
**திறப்பட்டு நிச்சயம் சேர்ந்து உடன் நின்றால்**
**உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே**
**புறப்பட்டுப் போகான் பெருந்தகையோனே**
**- திருமந்திரம் 586**

இதனால் சிவனை மறக்கும் நிலையுண் டாகாது, பயன் தராது வெளியேறுகின்ற பிராணவாயு, பிராணாயாமத்தில் பூரகத் தில் உள்ளே புகுதலும் அது முன் போலப் போய் விடாதவாறு கும்பகம் செய்தால், அவ் வாயு அவரோடு ஒத்துப் போய் மனமும் அடங்கி, அவனுடன் அவனால் அடையப் பட்ட பொருளாய் அவன் வழிப்பட்டு நின்ற தேயானால், இறைவனும் அவனது உள் ளத்தினின்றும் புறம் போகான், தங்கி விடு வான் சிவன்.

திருமூலர் கூறியவாறு ஐந்து புலன் களையும் தீய வழியில் செலுத்தாமல் தூய வழியில் செலத்துவதையே புலனடக்கம் என்கிறோம். அதுவே புலனடக்கமாகும். இவ்வுண்மையைக் கடைப்பிடிப்பவரே திரு வருளில் திருவடி இன்பம் பெறுவர். தன் னைச் சிவபெருமானின் திருவடிக்கே ஒப்பு வித்து மீளா அடிமையாய் வாழ்தல் புலன டக்கமாகும்.

**"புலன்களின் இன்பத்தை பெரிதென நினைத்தால்**
**புலனாகான் பரமன் புலனாகான்**
**புலன்களை அடக்காமல் அடக்கிய அன்பர்க்குப்**
**புலனாவான் பரமன் புலனாவான்"**

**"புனித குணம் கொண்ட புனித மனிதனுக்குப்**
**புலனாவான் பரமன் புலனாவான்**
**புனிதம் இல்லா பாவ செயல் செய்யும் மனிதனுக்குப்**
**புலனாகான் பரமன் புலனாகான்**

புலன்களைச் செயல் அறச் செய்தலே அடக்குதல் என்று கூறுவர். நல்லதைச் செய்யும் போது புலன்களை அடக்காமல் கெடுதல்களாகிய தீமைகளைச் செய்யா மல் புலன்களை அடக்கி விடுதல் வேண் டும்.

## சுவர்ண சபா மண்டபம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஷண்முகப்பெருமான்
வீற்றிருக்கும் சுவர்ண சபா மண்டபத் தூபி
தங்கத்தினால் அமைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற
இப்பணியினை இந்திய சிற்பாச்சாரியர்கள் மேற்கொண்டனர்.
இதற்குத் தேவையான தங்கத்தினை முருகன் அடியார்கள்
மனமுவந்து வழங்கியிருந்தனர்.

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் எதிரியை விரட்ட மனதை ஒரு நிலைப்படுத்துவோம்

**மலர் சின்னையா**
(செம்பியின் செல்வி)
ஓய்வுநிலை அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

மனம் என்பது மகத்தானது மனிதனுக்குள் இருக்கும் மனம் விசித்திரமானது. மனம் உயிரோடு இணைந்திருப்பது. உயிரை இயக்கி உடலைச் செயல்பட வைப்பது. இச்செயற்பாட்டினை ஒரு வாகனத்தின் செயற்பாட்டிற்கு ஒப்பிடலாம். வாகனத்தின் முழுமைத் தோற்றம் மனிதனின் முழுமைத் தோற்றத்திற்கும் அதன் இயந்திரம் மனிதனின் உயிருக்கும் அதன் சாரதி மனிதனின் மனத்திற்கும் ஒப்பிடலாம்.

மனம் என்னும் சாரதி ஒருவரை சரியான வழியில் வழிநடத்திச் செல்லுமேயானால் அவரின் உயிருக்கோ உடலுக்கோ எந்த வித முட்டுக்கட்டைகளும் (தீங்குகளும்) ஏற்படாது. ஆனால் இந்த மனம் ஸ்திரத் தன்மையற்றது. இதனை மும்மலங்களாகிய ஆணவம், கர்மம், மாயை என்பவை இறுகப் பற்றிநிற்கின்றது. மும்மலங்களின் பிடியிலிருந்து விடுதலை பெற மனம் தன் அறியாமையைப் போக்க வேண்டும். அறியாமைக்குள் சிக்கியிருக்கிறேன் என்பதை மனம் ஏற்றுக் கொண்டு விடுதலைக்கு முயற்சிக்குமேயானால் மனம் ஆன்மாவை விடுவிக்க தன்னை அறிய முயற்சிக்கும்.

மாயை வழி தன் மனம் அலைவதை மனம் கண்டுகொள்ளுமேயானால் தன் மனதில் தோன்றும் நான் எனது என்கின்ற அகங்காரத் தன்மையை அடக்கிக் கொள்ளும். ஆசை வழி செயல்படும் மனதை கட்டுப்படுத்தும். இவற்றை கட்டுப்படுத்த முடியாநிலையில் ஆசை வழி, மாயை இழுக்குமேயானால் சாரதியாகிய மனம் நிலை தளர்ந்து ஆன்மாவை நல்வழியில் செயற்படுத்த முடியாமல் போய்விடும்.

இந்த மும்மலங்களின் செயற்பாடுகள் ஆளுக்காள் வேறுபட்டும் ஒருமைப்பட்டும் இருக்கும். அவர் அவர் முற்பிறப்பில் செய்த நன்னியபுண்ணிய செயற்பாடுக்கேற்ப அவை நிர்ணயிக்கப்படுகின்றன.

நாம் ஒவ்வொருவரும் தாயின் வயிற்றிலிருந்து பிறந்து வரும் போது அந்நேரத்தில் ஒன்பது கிரகங்களும் எந்த எந்த வீட்டில் நிற்கின்றதோ அவற்றின் பார்வைகள் எப்படி எப்படி பார்க்கப்படுகின்றதோ அதற்கேற்பவே ஒருவரின் வாழ்நாள் முழுவதற்குமான பலன்கள் நிர்ணயிக்கப்பட்டு செயல்படுகின்றன எனப்படுகின்றது. இதனை இந்துசமயத்தவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இதன்படி நோக்கும் போது ஒருவர் முற்பிறப்பில் செய்த கர்மவினைகளுக் கேற்ற நிலைகளில் கிரகங்கள் பிரவேசம் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நேரத்தில் ஒருவரின் பிறப்பு நிகழ்கி றது. இதனால் தான் "எல்லாமே எப்போதே நிர்ணயிக்கப்பட்டது" என்று யோகர் சுவாமி கள் கூறியதும் எல்லாமே விதிப்படியே நடக்கும் என்று கூறுவதும் இதற்குச் சான்று பகர்கிறது.

திருமணப் பொருத்தங்களும் இருவரின தும் கிரகநிலைகளின் உடன்பாட்டுக் கேற்ற விதத்தில் திருமணம் நிர்ணயிக்கப் படுவது இந்துக்களின் வழமையாகவுள் ளது. இப்பொருத்தப்பாட்டின் உண்மைத் தன் மைகளை ஏற்றுக் கொள்ளுபவர்க ளாக பலர் காணப்படுகின்றனர். ஒருவரின் வாழ்க்கையில் நல்ல தீய, கஷ்ட நிலைமை களுக்கான காரணங்கள் கிரகப் பெயர்ச் சியை வைத்து வான சாஸ்திரிகள் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதில் உண்மையிருப்பதையும் உணர முடிகிறது.

இவற்றை நோக்கும் போது மனிதனின் (உயிர்களின்) உருவாக்கம், பிறப்பு, வாழ்க்கை, மரணம், அதற்குப் பின்னரும் அவன் அறிய முடியாத ஒன்றாகவே அவ னது வாழ்கைப் பயணம் அமைந்துள்ளது. "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்ற பாடல் வரிகள் இந்நிலைக்குப் பொருத்தமானது. நான் முன்பு எங்கிருந் தேன் எப்படி தாயின் வயிற்றுக்குள் உயி ராகி உருப்பெற்றுப் பிறந்தேன் என்ப தெல்லாம் பரம இரகசியமாகவே உள்ளது. "வாழ்ந்து கொண்டிருக்கும் போது இன்பம் துன்பம், வெற்றி தோல்வி, போட்டி பொறாமை, நோய் இயலாமை, சந்ததி களைப் பெற்றெடுத்தல், இளமை முதுமை, உடல் இயலாமை, மரணத் தருவாய் போன்ற இவையெல்லாம் ஏன் எதற்காக எப்படி? முதுமைத்தளர்வு அதன் கொடு மைகள், உயிர்பிரிய விருப்பின்மை, மோச் சத்தைச் சென்றடையும் விருப்பு, இறுதி யில் எங்கே போவோம் என்று தெரியாமல் உடலை விட்டு உயிர் பிரிதல். அதன் பின் னர் உடல் ஆரோ உயிராரோ? என்கின்ற நிலையில் நிகழ்காலம் தெரிந்தவனாக மனிதன் வாழ்ந்து முடிக்கின்றான்.

இத்தகைய அறியா துன்ப நிலையி லிருந்து ஆன்மாவை விடுவிக்கவே இந்து மதம் (உயிர்களை நித்திய வாழ்வு பெற) வழிப்படுத்துகின்றது. முற்பிறப்பு மறுபிறப்பு இரண்டையும் நிகழ் பிறப்பில் போதித்து ஆத்மா ஈடேற்றத்திற்கு வழிகாட்டி நிற்கி றது.

செய்யத் தகுந்தன செய்யத்தகாதன என்பனவற்றைச் சொல்லி அறம் பொருள் இன்பம் வீடு என்கின்ற மனித வாழ்க்கை யின் சிறப்புக்களைக் காட்டி இவற்றின் மூலம் வீடுபேற்றுக்கு உயிர்களை வழி நடத்திச் செல்வது இந்து மதத்திற்கே உரிய உயரிய சிறப்பாகும்.

இருப்பினும் இவற்றின் உண்மைகளை மனிதர்களில் எல்லோரும் பின்பற்றுவ தில்லை. மேற்குறிப்பிட்ட நல்வழிப்படுத்தல் களை அறிய முடியாமை, அறிந்தும் மினக் கெட முடியா நிலை இவற்றிற்குச் செல வழிக்கும் நேரத்தை வீண் என நினைத்தல் தமது தொழில் மற்றும் ஆசை வழித் தேடல்களின் திருத்திப்படுத்தல் போன்ற காரணிகளால் வீடுபேறு பற்றி சிந்திக் காமல் அன்றி மறுபிறப்புப் பற்றிச் கருசனை கொள்ளாமல் வாழ்கிறார்கள். சமயத்தை இலகுவாக அறியக்கூடிய போதனை முறை களும் அதனோடு இணைந்த செயற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அனைவரையும் அதன்பால் ஈர்க்கக் கூடியதாக அமையப் பெறாமையும் ஒரு காரணமாகக் கூறலாம்.

இந்துமதம் கூறும் பதி பசு பாசம் என்கின்ற முப்பொருளும் என்றும் அழியாதது என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதில் பதி என்பது இறைவனையும் பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது மும்மலங்களையும் (ஆணவம், கன்மம், மாயை) குறித்து நிற்கும்.

பசுவாகிய ஆன்மா பதிக்கும் பாசத்திற்கும் நடுவில் நிற்பது (பதி → பசு ← பாசம்) பசு பதியை அடைவதற்கே பிறப்பெடுத்தது. ஆனால் பாசம் பசுவிற்குள் பசுவிற்கே தெரியாமல் பசுவிற்குள் ஒளித்திருந்து பதியை பசு அறியாத வண்ணம் தடுத்து நிற்கிறது.

இந்த ஆன்மா பிறவி எடுத்தது முற்பிறப்பில் செய்த கன்ம வினைகளை நீக்குவதற்கே. இப்பிறப்பில் கெட்ட செயல்களை நீக்கி நற்செயல்களைச் செய்து இறைவனைப் பிரியாது வணங்கி உலகப் பற்றை நீக்கி, மறு பிறப்பில் இறைவனுடன் சேர்ந்து இன்புற்று இருப்பதற்கே. அதாவது பிறப்பற்ற வீடுபேற்றை அடைவதற்கே.

இத்தகைய வாழ்வியல் முறைமைகளைப் பூரணமாக அறிய முடியாத நிலைமைக்குள்ளாக்கிய ஆன்மாவை ஆணவம் இறுகப் பற்றி நிற்கிறது. அதனால் ஆன்மாவின் அறிவு நிலையை மறைத்து நிற்கின்றது.

தான் தான் இறைவனை அடையும் வழிகளைக் காணவிடாமல் தடைகளை விதிப்பவன் என்பதை ஆன்மா கண்டு கொள்ளாதபடி ஆன்மாற்குள் ஒளித்து நின்று ஆன்மாவிற்கு கெடுதி செய்கின்றது. ஆன்மாவை அண்டியிருந்து கெடுப்பதே ஆணவம்.

இருப்பினும் பகுத்தறிவு கொண்ட மனித மனம் தன்னைத்தான் அறியக்கூடியது. தன் மன எண்ணங்களை, அதன் வழி செயல்களை தன் ஆசையின் நிமிர்த்தம் ஏற்பட்டமையை அறிந்து சரி பிழைகளை அலைசி நிவர்த்திக்கக் கூடியது.

இந்த ஆன்மா மீது ஆணவம் செலுத்தும் ஆதிக்கத்தை பின்வருமாறு கூறலாம்.

1. நல்லறிவை மயக்குவது (மோகம்)
2. உலக இன்பங்களைச் சொர்க்க மெனக் காட்டுவது (மதம்) உலக இன்பங்களில் ஆசையைத் தூண்டுவது (ராகம்)
3. அனுபவித்த இன்பம் பின்பு கிடைக்காதபோது வருந்த வைப்பது (விவாதம்)
4. பாசமுள்ளவர்களிடமிருந்து விலக நேரிடும் போது வருந்தி அதனால் மெலியச் செய்வது (சோஷம்)
5. தன்னிலுள்ள குற்றங்களை நியாயப் படுத்தி கடவுளிடம் சொல்லி வியந்து கொள்வது (வைசித்தரியம்)
6. உலக இன்பங்களை அனுபவிக்கும் போது தனக்கொரு குறையும் இல்லை என நினைக்கச் செய்வது (அரிசம்)

போன்ற நினைவுச் செயற்பாடுகளை நினைக்க ஆன்மாவைத் தூண்டி இறைவனைச் சிந்திக்க விடாமல் ஆன்மாவிற்குத் தொல்லை கொடுக்கிறது ஆணவம்.

இந்த ஆணவத்தின் செயற்பாட்டை மனிதர்கள் தக்கமுறையில் அறிந்து கொள்ளவும் ஆணவம் விடுவதில்லை. கோபம் குரோதம் பழிக்குப் பழி போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கிலேகங்களை மனத்துக்குள் ஏவி தீய செயல்களைச் செய்யத் தூண்டுகின் றது. கொலை, களவு போன்ற செயல்க ளைத் தூண்டி செயல்பட வைக்கிறது. வாழ்க்கையில் தொல்லைகளைக் கொடு த்து அத்தொல்லைகளிலிருந்து விடுபட நீதி தேடி அநீதிகளை உடைக்க பாதிக் கப்பட்ட மனிதனை அலைக்களிக்கிறது.

மேற்குறிப்பிட்ட ஒவ்வா நடத்தைகளைச் செய்வதற்கு மனிதனுக்குள் மறைந்திருக் கும் ஆணவத்தின் குணங்களான நான் எனது என்கின்ற அகங்காரக் குணங்கள் தூண்டுதலாய் அமைந்துள்ளது.

நான் தான் எல்லோரிலும் முதன்மை யானவன். என் சொல்லையே அனைவரும் கேட்க வேண்டும். நானும் எனது குடும்பம் எனது சாதி, சமயம் இனம் மேலானது என இறுமாப்புக் கொள்ள வைத்து தன் மன தைக் கிளறி கொடூரப்படுத்தி மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களுக்கு அநீதி இழைத்து மற்றவர்களின் அமைதியை உடைப்பதும் ஆணவத்தின் குணமே.

மனம் பட்டுத் தெளிந்த பின் தான் விட்ட தவறுகளை நினைத்து வருந்து வதைக் காண்கின்றோம். "கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு" என்று தன்னைத் தான் கேட்பதும் உண்டு.

ஆணவத்தின் மிடுக்கை ஒருவன் வீராப் புக் கொண்டு பேசும் போதும், தன் எதிரி களுடன் அதீத வீரியம் கொண்டு சண்டை யிடும் போதும் காணலாம். இவர்கள் அதீத சக்தி மிக்கவர்களாகக் காணப்படுபவர். இவர்கள் பழிக்கு அஞ்சாதவர்கள். பழிக் குப் பழிசெய்ய அலைந்து திரிவர். நீதி நியாயத்திற்கு இடம் கொடாதவர்கள்.

ஆணவத்தின் சக்தியினை முழுமை யாகக் கையாண்டு பல்லாயிரக் கணக் கான உயிர்களைக் கொடூரக் கொலை செய்தவன் உலகச் சர்வாதிகாரி கிட்லர்.

இன்றும் உயிர்களின் அழிவு குடும்பம், அயல், ஊர், நாடு எனவும் இனம், சாதி, சம யம், வல்லாதிக்கம், போட்டி பொறாமை, பனிப்போர் போன்ற போர்கள் நேரடியாக வும் மறைமுகமாகவும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

தரை கடல் வானம் அத்தனை இடங் களிலும் மனிதர்களை இலக்குவைத்து குழந்தைகள் முதியோர் பெண்கள் போர் புரியாதோர் மீதும் தாக்குதல்கள் நடத் துவதைக் காண்கின்றோம்.

தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், தாரத்தை இழந்த ஆண் பெண், பிள் ளையை இழந்த பெற்றோர் சகோதரர்கள் மற்றும் உறவுகளை இழந்து தவிப்பவர் களின் எதிர்கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்காத சண்டை அழிவுகள் பகுத்தறிவு மிக்க மனித சமுதாயத்தின் கண்களை மறைத்து சிந்தனைகளை அழித்து நிற் பதற்கு காரணகர்த்தா ஆணவத்தின் நான் எனது என்கின்ற அகங்காரமே.

இத்தகைய தன் இழிகுண செயலை மனிதன் ஏன் புரிந்து கொள்ளவில்லை? "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாட மடி" என்னும் பாடல் வரிகள் வாழ்வை புகட்டியிருந்தும் எத்தனையோ போர்களி னால் பாரிய இழப்புக்கள் மனத் தாக்கங் கள் ஏற்பட்டு இருந்தும் ஆணவம் பீடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் தன் மனதை மனிதன் ஏன் கண்டு கொள்ளவில்லை? கண்டும் அவனின் வர்ம உணர்வுகள் நிறுத்த முடியா நிலைக்குக் காரணம் என்ன?

ஆய்வுகள் பற்பல நிலைகளில் மனங் களைச் செப்பனிடும் மார்க்கங்களைக் கண்டுபிடிக்கப்படல் வேண்டும். அவை உயிர்களின் மகிமையையும் அவற்றில் ஈடில்லா பெறுமதியையும் எடுத்துரைத்து மனிதம் பேணவேண்டும். இதற்குரிய சிறந்த வழி சமயங்களின் போதனைகள் இலகு தன்மை கொண்டும் ஒன்றே தெய்வம் என்ற நிலைப்பாட்டிலும் போதிக்கப்படல் வேண் டும். சிறந்த வணக்க முறைகள் கையாளும் நிலைமை (கள்) உருவக்கப்பட வேண்டும். அதனால் அதீத மதப் பற்றினால் அல்லல் படுத்தும் ஆணவத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும். கல்விக்குள் இவை உட்புகுத்தி கற்பிக்கப்படல் வேண்டும்.

இதனை அறிவு சார்ந்த பெரியோர்கள் எடுத்தியம்பினும் பக்குவப்பாடாத மனித மனங்கள் தம் ஆணவத்தின் செயலை ஏற் றுக் கொள்ள நம்பிக்கையற்றிருக்கின்றனர்.

ஒருவர் செய்யும் தீவினைகள் அப்பிறப் பிலேயே அவர் தண்டனை பெறுவர் என்றும் அப்பிறவியில் தண்டனை பெறாவிடில் மறு பிறவியில் அதற்குரிய தண்டனையைப் பெறுபவர் என்றும் புண்ணியம் செய்தோர் அப்பிறவியில் மகிழ்ச்சியாக வாழ்வர். மறு பிறவியிலும் மகிழ்ச்சியாக வாழ்வர் என் றும் கன்மம் கூறுகின்றது.

இதன் உண்மையை நாம் சீர் தூக்கிப் பார்க்கின்ற போது நல்ல தாய் தந்தையர் களுக்கும், நல்ல சகோதரர்களுடனும் பிறந்தவர்களும் நன்கு கற்றுத் தேர்ந்த வர்களும் சமயத்தில் புலமை சார்ந்தவர் களும் பதவிபட்டங்களில் தன் நிறைவு பெற்றவர்களுக்கும் இப்பிறவியில் தீங்கு கள் வருவதைக் காண்கின்றோம். அதற் கான தண்டனை பெறுவதையும் காண்கின் றோம். நல்வினை இப்பிறவியில் பலர் செய்து வருகிறார்கள். அவர்களை அவர் குடும்பத்தினரும் அயலாரும் சமூகமும் மதிப்பதையும் காண்கின்றோம். அவர்கள் எக்குறையும் இல்லாமலும் வாழ்கின்றனர்.

அவர்கள் முற்பிறப்பில் புண்ணியம் செய் திருக்கிறார்கள் என்றும் அவர்களின் மனம் போல் நிறைவாக வாழ்கிறார்கள் என்று சமூகம் பேசுவதையும் கேட்கின்றோம்.

இவற்றிலிருந்து நோக்கும் போது ஒரு வர் செய்யும் நல்வினை தீவினைகள் பிறவி கள் தோறும் தொடரும் என்பதைச் சிந் திக்கக் கூடியதாக இருக்கிறது.

மனிதன் வாழும் போது அவனைப்பற்றி நின்று செயல்பட வைப்பதில் மாயை முக் கிய இடத்தை வகிக்கின்றது. உலக இன் பங்களைக் காட்டி அவற்றை அடையச் செய்ய ஊக்குவிப்பது மாயை. இன்பங்கள் ஐம்பொறிகளாகிய கண், காது, மூக்கு, வாய், மெய் என்பவை மூலம் ஈர்க்கப்பட்டு வாழ வைப்பது. இவற்றின் வழிதோன்றும் ஆசைகளை நெறிப்படுத்த மனத்தால் முடி யும். மண்ணாசை பொன்னாசை, பெண் னாசைகள் அத்துமீறும் போது ஆண வத்தின் செயல் மேலோங்கும். இம்மாயை மனதை ஊக்குவிக்கும் விதத்தை மூவ கையாக வகுக்கலாம். சுத்தமாயை, சுத்தா மாயை, அசுத்த மாயை என்பவையே அவை. இதில் சுத்த மாயை ஒருவருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தைக் கொடுப்பது நேர் வழியில் காமத்தை, பணத்தை பொருட்களை, காணி, பூமி, பட்டம் பதவி போன்றவற்றைப் பெற்று திருப்தியாக வாழவைக்கும், இவர்கள் அமைதியாகவும் எல்லோருடனும் இசைந்து, விட்டுக் கொடுத்து வாழ்பவர்களாகவும் சமுதாயத்தில் மதிக்கப்பட்டு அச்சமின்றி வாழ்பவர்களாகவும் காணப்படுவர்.

சுத்தா சுத்த மாயையானது இன்பத்தையும் துன்பத்தையும் கொடுப்பது. இவர்கள் கஷ்டப்பட்டே சகல தேவைகளையும் பெறுவர்.

கஷ்டத்தின் மத்தியில் இவர்கள் பெறும் பேறுகள் நன்மை பயப்பதாகவும் இன்பத்தைக் கொடுப்பதாகவும் அமையும். இவர்களை நல்வழிப்படுத்துவது சுலபம்.

அசுத்த மாயை துன்பத்தையே கொடுப்பதாக இருக்கும். இவர்கள் குணம் நேர் வழியில் தம் விருப்பங்களைத் தேடுவதிலும் தவறுதலான வழிகளில் தேடுவதையே விரும்பும். களவு, கொலை, தட்டிப்பறித்தல் பொறாமைப்படுதல், அத்துமீறல்கள் போன்ற வழிகளில் தமது விருப்பங்களை நிறைவு செய்வர்.

இவர்களின் சிந்தனைகள் எப்போதும் மற்றவர்களைப் பற்றியதாகவே இருக்கும். நல்லவர்களாகவும் கீழ்ப்படிந்தவர்களாகவும் நடித்து வாழ்வர். இவர்களை அண்டியவர்களையும் தன் செயற்பாடுகளுக்குள்ளும் இணைத்துக் கொள்வர். தன் தவறான வழிகளில் பெற்றுக் கொண்ட பெறுகைகளைத் தம் திறமையால் பெறப்பட்டவை என்பதை தமக்குள் எடுத்தியம்பி மகிழ்வர். ஆடம்பர வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பர். எதையும் அர்த்தமில்லாமல் இடாம்பியமாகச் செய்வர். தம் இஸ்டத்திற்கு இசையாதோர் மீது ஆதிகம் செலுத்தி அட்டூழியம் செய்வர். பழிக்குப் பழி தீர்ப்பதில் இலட்சிய வெற்றியீட்டி மகிழ்வர். எவரையும் தமக்குக் கீழ் அடக்கியாள தமது கொடூர செயல்களைக் கையாள்வர்.

இத்தகையவர்கள் என்றைக்கும் பிரச்சினைகளைப் பொழுதுபோக்காகத் தூண்டி தம்மை முன்னிலைப்படுத்தி செயல்படுவர். அதனால் சமூகத்தைச் சஞ்சலப்படுத்தி மகிழ்வர். அதனால் சமூகம் நிம்மதியற்று அல்லல்படுத்தப்படும். இவர்களை நல் வழிப்படுத்து வதில் சிரமங்கள் ஏற்படும். இருப்பினும் இவர்களை நல்வழிப்படுத்துவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

இத்தகைய குண இயல்புகள் ஆதி காலக் கல்வி அறிவு அற்ற மக்களிடம் காணப்பட்டது. அவர்களிடம் கோபம் குரோதம் போன்ற குணங்கள் மேலோங்கிக் காணப்பட்டன. அதனால் சண்டைகள் சச்சரவுகள் தோன்றி சமூகம் நிம்மதியற்றும் சஞ்சலத்துடனும் வாழ்ந்தனர்.

இக்கால கட்டங்களில் பற்பல தீர்க்க தரிசிகள் காலத்துக்குக்காலம் தோன்றினர். சைவசமய அடியார்கள் என்றும், புத்த பகவான் யேசுபிரான் நபிகள் நாயகம் என்றும் திருவள்ளுவர், யோகர் சுவாமிகள், சீரடிபாபா, சாயி பாபா, சுவாமி விவேகானந்தர், விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்றோர் பற்பல வழிகளைக் கையாண்டு மக்களின் சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தப் பாடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் சின்மயா மிஷன், பிரமகுமாரிகள் போன்ற பற்பல சைவசமய சபைகளும் பற்பல கத்தோலிக்க மத சபைகளும் தோன்றி அப்பணிகளைச் செய்து வரு கின்றன.

இவர்களின் முயற்சிகளால் கல்வி அறிவு மக்கள் மத்தியில் வேரூன்றி பயனளிக் கத் தொடங்கியது. அதனால் மக்களின் கிரகிக்கும் ஆற்றல் வளரத் தொடங்கி இறைநம்பிக்கை உருவானது. இதன் பேறாக அதன் எடுத்துக்காட்டாக பண் டைய மன்னர்கள் தொட்டு இன்றைய பாமர மக்கள் வரை ஆலயங்கள் பற்பல கட்டப் பட்டும் புதிய ஆலயங்கள் உருவாகியும் வருகின்றன. இத்தகைய நிலை சகல மதங்கள் மத்தியிலும் வியாபித்திருப்ப தைக் காண்கின்றோம்.

இருப்பினும் ஆதிகாலத்தில் சாம்ராட் சிய யுத்தங்களும் சிலுவையுத்தம், ஏழாண்டு யுத்தம் போன்ற மதம் சார்ந்த யுத்தங் களும் நடைபெற்றன. இன்றும் கூட மதங் களுக்கிடையிலான யுத்தங்களும் நாடு களுக்கிடையிலான யுத்தங்களும் உள் ளூர்களுக்கான யுத்தங்களும் இனம் சாதி சமய யுத்தங்களும் உறவுகளுக்கிடையி லான யுத்தங்களும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

அத்துடன் தனிநபர் பதவி பட்டம் பொருள் சொத்து வாணிப வர்த்தகம் சம்பந்தமான சண்டையில்லாச் சண்டை களும் நடைபெற்று வருவதைக் காண்கி றோம். இச்சண்டைகளின் மறுவடிவங் களே இன்றைய குடும்பச் சண்டைகள், கோஷ்டிச் சண்டைகள், இனச் சண்டை கள், கொலை, கொள்ளை, அத்துமீறல், வடிவங்களாக இடம்பெற்று வருகின்றன.

இன்றைய நிலையில் சமயத்தையும் கல்வியையும் அரசுகள் பொறுப்பேற்று தனிநபர் வளர்ச்சிக்கு உதவிய போதும், சமய நிறுவனங்கள் தனிநபர் ஆச்சிரமங் கள் வளர்ந்துள்ள நிலையிலும் நாட்டிலும் மக்கள் மத்தியிலும் அமைதியோ சமா தானமோ நிலவுவதாகத் தெரியவில்லை.

ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளி கள் இடித்து நொருக்கப்படுகின்றன. மதத் தின் பெயரால் இனத்தின் பெயரால் சண்டை யிடுவதும் தம்மதமில்லாதோரைச் சாக் காட்டுவது தர்மம் என்கின்ற மன உணர் வும் தீவிர மத ஆணவ செயற்பாட்டாளர் களால் ஏற்படுத்தப்படுகின்றது.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே முரண்பாடுகள், குருவை மதிக்காத போக்கு, பெண்களை சிறுவர்களைக் கொடுமைப் படுத்தும் நிகழ்வுகள், காணிச் சண்டைகள், எல்லைச் சண்டை, களவெடுத்தல், தட்டிப் பறித்தல் போன்ற செயல்கள் தாண்டவ மாடிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலைமைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கை குழப்பியடிக்கப்படுகின்றன. ஏக்கத்துடனும் சஞ்சலத்துடனும் வாழும் சூழலுக்குள் மக்கள் தள்ளப்பட்டுக் கொண் டிருக்கின்றனர்.

இங்கு தான் நாம் சிந்திக்க வேண்டும். கால வளர்ச்சியோடு இணைந்ததாக கல்வியும் சமயமும் வளர்ந்து சென்று கொண்டிருக்கிறது. கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது. அதனால் மக்கள் வாழ்க்கை இலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டுள்ளமை வரவேற்கக் கூடியதே இருப்பினும் மனிதனை அழிக்கும் யுத்தக கருவிகளின் உற்பத்தியும் அவற்றைப் பயன்படுத்தி குறிப்பாக மனிதனை மனிதனே அழிக்க கல்வி அறிவைப் பயன்படுத்தியதுமே மனவருத்தத்திற்குரிய விடயம்.

மதத்தின் போதனைகள், அதற்கான செலவுகள் அதிகரித்த போதும் நிம்மதியற்ற மக்களே அதிகரித்து வருகின்றனர். அதற்கு வித்திட்ட காரணி என்ன? என்பதை மனிதன் சிந்தித்துக் கண்டறியும் காட்டாயும் தற்காலத்தில் ஏற்பட்டுள்ளது.

அத்தனைக்கும் மனித மனமே மூல காரணி. மனிதமனம் சீர்படுத்தியமைக்க அறிவு உலகம் உதவ வேண்டும். மத போதனைகள் அதீத பற்றுக் கொண்ட வெறியை ஊட்டாமல் மனிதத்தைப் பேணும் நடைமுறைகளை அதற்குள் உட்புகுத்த வேண்டும். சமய வழிமுறைகளோடு இணைத்து மனிதம் செயற்பட வேண்டும். இறை சக்தியை மனிதனுக்குள் காணும் வலுவை போதனைகள் ஊட்ட வேண்டும். அதற்கான ஒரு செயல் வடிவமே மனதை ஒரு நிலைப்படுத்தல்.

**மனதை ஒருநிலைப்படுத்துவோம்**

மனதை ஒரு நிலைப்படுத்துவதில் பற்பல வழிகள் உண்டு. தனித்தும் பலர் சேர்ந்தும் வழிபாடுகளை மேற்கொள்ளல். கண்ணை மூடி தன்னையிழந்த நிலையில் தியானத்தில் இருத்தல் "ஓம் நமசிவாய நாமத்தை உச்சரிக்கும் வழமையை தினம்தோறும் மேற்கொள்ளல்" தனித்திருந்தும் கூட்டாகச் சேர்ந்தும் தேவாரம் மற்றும் பஞ்சபுராணங்கள், கந்தசஷ்டிக் கவசம் போன்றவற்றை இசையோடு பாடுதல், இறை செயற்பாடுகள், இறை அற்புதங்கள் போன்றவற்றை தாமே ஓதுதல் மற்றவர் ஓதக் கேட்டல்.

இறைவனுடன் பேசுதல் இறைவனைத் தந்தையாகத் தாயாக சகோதரன் சகோதரியாக, உற்ற நண்பனாக தனக்குள் இருப்பவராக, தன் முன் இருப்பவராக நினைத்து அன்பு கனியப் பேசுதல்.

**மன நினைவுகள்**

என் வியக்கத்தக்க இறைவா! எனக்குள் இருக்கும் என் மனதை நீ அறிவாய் என் மனம் கோபப்படுகின்றது. பொறாமைப் படுகின்றது. மற்றவர் மீது கெட்ட வசனங்கள் பேசத் தூண்டுகிறது. மற்றவர் உயர்வை அவர்களின் செயல் உயர்வைக் கண்டு பொறாமை கொள்கின்றது. "மற்றவர் எனக்குச் செய்பவை வெறுப்பை ஏற்படுத்துகின்றது. அதனால் அவர்கள் மீது பழிக்குப்பழி தீர்க்க விரும்புகின்றது. பொருள் பண்டங்கள், சொத்துச் சுகங்களை அனுபவிக்க ஆசைப்படுகின்றது. அழகிய ஆண்/ பெண்ணைக் கண்டால் ஆசை மேலோங்குகின்றது. கஷ்டம் வரும் போது என்னை நானே வெறுக்கின்றேன். என் உயிரையும் விலக்கித் தப்பிக்கலாம் என்றும் நினைக்கின்றது.

ஏதும் தப்புச் செய்யு முன் செய்யக் கூடாது என மனம் நினைத்திருந்தால், செய்திருக்க மாட்டேன் என்று நினைத்துக் கவலைப்படுகின்றது. மீண்டும் அதே நிலை வந்தால் கட்டுப்படுத்துகின்றேன். ஆனால் மானம் அதைக் கேட்காமல் என்னைத் தட்டித் தூண்டி நிற்கின்றது. என் தவறான மனச் சிந்தனைகளை இறைவா கட்டுப்படுத்தும் ஆற்றலை எனக்குத் தரவேண்டும். எவரிடத்திலும் வேற்றுமை காணா அன்பை நான் காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நல்லவனாக வல்லவனாக உன்னிடம் அன்பு செலுத்தி உழைத்து வாழ வேண்டும். என் மனமே எனக்கு உற்சாகத்தையும் மனப் பலத்தையும் தர வேண்டும்.

கெட்ட எண்ணங்கள் என் மனதினினுள் தோன்றாவண்ணம் என்னைக் காப்பாற்ற வேண்டும். உன்னை நான் காண வேண்டும் அதற்கு நீ வரம் தரவேண்டும்.

இவ்வாறு எம் மனதை இறைவன் மீது ஒரு நிலைப்படுத்தும் போதும் நினைக்கும் போதும் கோபம் குரோத நினைவுகள் எம்மை நெருங்காது. நல்லதையே சிந்தித்து நல்லதையே பார்த்து, நல்லதை பேசி, நல்லதையே கேட்டு, நல்லதையே செய்ய எம்மை எம் மனதை நாமே நல்வழிப்படுத்திக் கொள்ளவேண்டும் அதனால் நாம் மட்டுமல்ல நாடே அமைதியடையும் எல்லோருமே இறைவனோடு ஒன்றித்து வாழும் போது மனிதப்பிறப்பு மகிமை பெறும்.

**இறைவா!**

நிலையற்ற உடலைக் கொண்ட என் உடல் அழிவது நிச்சயம். உடல் அழிந்த பின் நான் யார்? குறிப்பிட்ட கால எல்லைக்குள் என் உடலுக்குள் வாழும் என் உயிரை நான் நிம்மதியாக சொர்க்கத்திற்கு வழியனுப்ப வேண்டும் அதற்காக மனதிற்கு சாந்தியையும் சமாதானத்தையும் தந்தருள வேண்டுகின்றேன்.

# நல்லைக்குமரன் மலர்

நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்களை அனுப்பி வைப்பவர்கள் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் இதற்கு முன் வெளிவந்த நல்லைக்குமரன் மலரில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே வெளிவந்த கட்டுரைகள், ஆக்கங்களிலிருந்து புதிதான ஆய்வுப் பார்வையில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
3. தயாரிக்கப்படும் ஆக்கங்களை கணனியில் தட்டச்சு செய்து அதனை ஒப்புநோக்கி இறுவட்டிலும், பிரதிகளாகவும் அனுப்பி வைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.
4. ஆக்கங்களைத் தயாரிக்கும் போது அதற்கு உதவிய ஏனைய கட்டுரைகள், நூல்களின் பெயர் விபரங்களை உங்கள் ஆக்கத்தின் கீழ் குறிப்பிடுவது பொருத்துடையது.
5. ஆக்கங்களை அனுப்புகின்றவர்கள் தங்களின் தபால் முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தவறாது குறிப்பிடுவதன் மூலம் கட்டுரைகள் தொடர்பில் ஏற்படும் ஐயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும்.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக்கலை உணர்த்திநிற்கும் வாழ்வியற் கூறுகள்

ஸ்ரீ.நதிபரன்
(யோகா போதனாசிரியர்)

இந்துமதத்தின் ஊற்றுக்கண்களாகவும் மனித வாழ்வியலை வளம்படுத்துகின்றனவாகவும் விளங்கும் இந்தியப் பெருங் கலைவடிவங்களுள் ஒன்றாகத் திகழும் யோகக்கலைக்கு காத்திரமான பங்குண்டு. மனிதப்பிறவியெடுத்த நாம், சாதாரண மனித நிலையில் வாழ முற்படாது கடை நிலையான விலங்கு நிலையிலே வாழ்ந்து வருகிறோம். இவ்விரு நிலைகளையும் தாண்டி உயர்ந்த நிலையாகிய தெய்வீக நிலைக்குயர்த்தும் புனிதத்தன்மைவாய்ந்த கலையாக யோகக்கலை மிளிர்கின்றது. மனிதர்களிடத்தில் இயல்பாகவே உள்ள மனித குணங்களுடன் கீழான மிருகக்குணங்களும் மேலான தெய்வீக குணங்களும் இரண்டறக் கலந்துள்ளன. ஒருவனிடத்தில் மனித குணங்களுடன் மிருக குணங்கள் மிகுகையில் அவன் அசுரத்தனமாக, மிருகங்கள் போல் நடந்து கொள்கிறான். அதேசமயம் தெய்வீக குணங்கள் அதிகமாகும் போது அவன் புனிதனாக உயர்ந்த வாழ்க்கையை வாழத்தலைப்படுகிறான். இக்கருத்தை வலியுறுத்துவதாகவே மனிதனுக்குள் இருக்கக்கூடியதான முக்குணங்கள் பற்றி (ராஜசம் - மிருககுணம், தாமசம் - மனிதகுணம், சத்துவம் - தெய்வீககுணம்) இந்துமதம் எடுத்தியம்புகின்றது. மனிதன் இயற்கையின் அங்கம் என்பதால், இயற்கைகூட முக்குணங்களாலானதும் ஆளப்படுவதுமாகும். மேற்கூறப்பட்ட முக்குணங்கள் மனிதனுக்கிருக்கும் குணங்களை மட்டும் குறிப்பதல்ல. அதற்குமப்பால் பிரபஞ்சத்தின் பன்முகப்பட்டபடைப்புகள் தோன்றுவதற்கும் நிலைபெறுவதற்கும் அடிப்படையானவையாகும். இவற்றாலேயே சூர்ப்பும் நடைபெறுகிறது. சூர்ப்பு என்பது படைப்பும் அதுசார்ந்த தொடர்ச்சியான விருத்திநிலைகளும் ஆளுமையும் உடல், மனம், பிராணன் என்பவற்றின் சேர்க்கையுமாகும். இவற்றுக்கிடையிலான ஒருங்கிசைவற்ற தன்மைகள் ஏற்படுகையில், மனிதன் முக்குணங்களின் பிடியில் சிக்கி அல்லலுறுவதுடன் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் நோய்களுக்கும் முகங்கொடுக்கின்றான். யோக சாதனையே இவற்றின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்கும் கருவியாக அமைகின்றது. எனவேதான் உயர்தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு உயர்தரமான கருவியொன்று தேவை. அதுவே யோகம் என்பதாக அமைகின்றது. இதன் பின்னணியிருந்துதான் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியங்களும் பொதுமைப்பாடுடைய நடத்தை சார் வாழ்வியல் விழுமியங்களும் எழுச்சி பெற்றன எனக் கொள்ளலாம்.

கால, தேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் இக்கலையின் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கூறுகள் பற்றி நோக்கு முன், யோகம் என்ற விடயப்பரப்புப்பற்றி பூர்வாங்கமாக நோக்குவோம். பொதுவாக யோகமானது ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. "யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின், 'இணைத்தல்' அல்லது 'ஒன்றுசேர்த்தல்' என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற்கலையாக விளங்குகிறது. இதனை இன்னொருவிதமாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை - வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிசமான இக்கலையைச் சூத்திர வடிவில் முதலில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார்.

சித்தத்தை செம்மைப்படுத்தும்போதே வாழ்க்கையானது சிறக்கின்றது. பூரணத்துவமடைகின்றது. வாழ்க்கை மேம்பாடடைவதற்கு இடைவிடாத யோகப் பயிற்சிகளே பெரிதும் உதவுகின்றன என இந்து சமய நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. "சித்தமலம் அறுவித்து சிவமாக்கியெனையாண்ட அத்தன்..." என்ற திருவாசக அடிகள் மூலம் மாணிக்கவாசகர், சித்தத்தை செம்மைப்படுத்தும் போது சிவப்பேற்றை அடையமுடியும் என்கிறார். மேலும் "சித்த விருத்தி நிரோதக..." என்பது யோகத்தின் அடிப்படைக் கருத்தியல். இதனை யோகக்கலையின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி மாமுனிவர்கூட தனது யோக சூத்திரத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். யோகம் சித்தவிருத்திகளை அழிக்கும் தன்மைவாய்ந்தது. அதாவது சித்தம் என்பது எண்ணங்களின்/சிந்தனைகளின் ஒட்டுமொத்த இருப்பிடமாகும். இது பல நிலைகளில் பலவாறு செயற்படும் தன்மையது. நான் - எனது எனும் அகங்கார, மமகாரங்களும் சேர்ந்தியங்கும் முனைப்புறு தன்மையே சித்தமாகும். இதுவே மனிதவாழ்வைச் சீர்ப்படுத்தவும் சீரழிக்கவும் காரணமாகிறது. துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையான விளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலிய பல விரும்பப்படுகின்ற சம்பவங்களுக்கெல்லாம் காரணம் மனமாகும். எனவே முதலில் ஐம்புலன்களிடமிருந்தும் மனதை பிரித்தெடுத்து எதுவும் நிலையற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது? பொய்யெது? என்றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங்களற்றதாக்குவது மிக எளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் முழுத்தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும். அவற்றை மனதினின்றும் அழித்தலே சித்த விருத்தி நிரோதக... என்பதன் பொருள் விளக்கமாகும். இதிலிருந்து யோகக்கலையானது சித்தத்தை செம்மைப்படுத்துவதற்கான பல்வேறு வாழ்வியல் அம்சங்களையும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதெனலாம்.

யோகமானது, கோட்பாட்டு ரீதியில் - பிரயோக அடிப்படையில் நான்கு பெரும் பகுதிகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவையாவன கர்மயோகம், பக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம், ஞானயோகம், இராஜயோகம் என்பனவாகும். இவற்றைப் பிரயோகிக்கும் வழிமுறைகள் வெவ்வேறானவையாகினும் அவற்றின் இறுதி இலக்கு ஒன்றே. அதாவது உண்மைத்தன்மையை - பூரணத்துவத்தை அறிந்துகொள்வதே யாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்திய யோகத்தை இராஜயோக முறைக்குள்ளடக்கப்படுகிறது. யோகக் கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்தி ரங்களும் இராஜ யோகமுறைக்குள்ளேயே வருகின்றது. பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப்பிடித்த யோகமுறையானது பதஞ்சலி மாமுனிவ ரால் யாக்கப்பெற்ற இராஜ யோக முறையை அடியொற்றியதாகும். இஃது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றி ணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது, ஆன்மா விடுதலையடைந்து பேரின்ப நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆத்மிக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையை யடைதலீறான வாழ்வியற் கோட்பாடு களைப் படிமுறையாக விளக்குகின்றது.

இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக் கிய விடயப்பரப்பாகிய அட்டாங்கயோகம் எனும் எட்டுவகையான வாழ்வியற் படி முறைகள் காணப்படுகிறன. இது பற்றிய விளக்கத்தை மிகச் சுருக்கமாக நோக் கும்போது.

01. இயமம் - தீயவற்றைவிட்டொழித்தல். (கொல்லாமை, பொய் கூறாமை, களவு செய்யாமை, காமமின்மை)
02. நியமம் - நன்றாற்றல். (பிறருக்கு உதவு தல், பரோபகாரம், தூய்மையுடைமை, வாய்மை, தவம் புரிதல்)
03. ஆசனம் - இருக்கைநிலை. (உடல் நன் னிலையடைதலுக்கான உடல்சார்ந்த பயிற்சிமுறைகளைச் செய்தல்)
04. பிராணாயாமம் - சுவாசத்தை சீராக்கம் செய்தல் (பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)
05. பிரத்தியாகாரம் - ஐம்புலன்களையும் புறவுலகப் பொருட்களிலிருந்து விடு வித்து அகமுகமாகத் திருப்புதல்
06. தாரணை - மனதை ஒருநிலைப்படுத் தல்.
07. தியானம் - மனதை கட்டுப்படுத்தி எடுத் துக்கொண்ட பொருள் மீதான உண் மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித் தல், தெளிதல் நிலைதிரியா மனதி னைப் பெறல்.
08. சமாதி - உணர்வொடுங்கிய நிலை. அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச) நிலை என்பதாக யோகத் தின் எட்டுவிதமான படிமுறைகளும் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற் பாலது.

மனித வாழ்வியலின் பன்முகத்தளத் தில் ஒப்புயர்வாக விளங்கும் இக் கலையின் மகத்துவத்தை தற்காலத்தில் சர்வதேசம் நன்குணர்ந்திருக்கின்றது என் பதனை நிதர்சனமாக்குவதாக உலக மக்களால் இன, மத, பேதம் கடந்து அனு சரிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச யோகா தினத்தைத் குறிப்பிடலாம். சமகாலத்தில் மேலைத்தேய நாடுகளைப் பொறுத்த வரையில் யோகக்கலையானது பரவலாக் கம் பெற்றுவருகின்றமையைக் காணலாம். ஆரம்பக்கல்வி நிறுவனங்களிலிருந்து உயர் பல்கலைக்கழகங்கள் வரை இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கு உயரிய கௌரவம் வழங்கப் பட்டிருப்பது - வழங்கப்பட்டுவருவது இக் கலையின் பயனுறுதித்தன்மையை - சிறப் பினைப் பறைசாற்றிநிற்கிறது. தற்காலத் தில் உலகளாவிய ரீதியாக யோகப் பயிற்சி வழங்கும் நிலையங்களின் எண் ணிக்கையும் பெருகிவருகின்றமையும் அதனை கற்றுக் கொள்வதற்கான மக்கள் காட்டும் அதீத ஈடுபாடுகளும் ஆர்வங் களும் அதிகரித்து வருகின்றமையும் இக் கலை மீதான மக்களின் பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றது. காலமாற்றத்தால் மக்களின் நாளாந்த வாழ்வியல் கூறுகளி லும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்ற நிலை யில், இம்மாற்றங்களின் விளைவினால் அவர்களின் உடல், உள, சமூக, ஆன்மிக ரீதியிலான நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்களும் முனைப்புற்று விளங்குகின் றன. நவீன மருத்துவ விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்து உச்சம் தொட்டுநின் றாலும் அதற்கு ஈடுகொடுக்க முடியாதள விற்கும் மனித ஆரோக்கியத்திற்கு வேட்டு வைக்கும் அளவிற்கு உடல், உள ரீதியி லான நோய்களின் தாக்கங்களும் பல்வேறு வடிவங்களில் வேகமெடுத்து வரு வதனையும் காணலாம். இவற்றுக்கான ஒட்டுமொத்த அணுகுமுறையாக - தீர் வாக நமது அன்றாட வாழ்வியல் நடவடிக் கைகளில் ஒன்றாக, யோகப்பயிற்சி முறை களைக் கைக்கொண்டால், எமது எதிர் கால வாழ்வு பிரகாசமானதாக மாறும் என் பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே இத் தகு மகத்துவம் மிக்க, மிகப்புராதன காலத்துக் கலையான யோகக் கலை யினை இயன்றளவிலும் புனிதங்கெடாமல் பாதுகாத்து எதிர்கால தலைமுறைக்கும் கொண்டு செல்லவேண்டிய வரலாற்றுக் கடமையும் பொறுப்பும் நமக்கிருக்கின்றது என்பதனை நாம் நன்குணர்ந்து செயற்பட வேண்டும். இதனை நாம் செய்யத்தவறு வோமேயாக இருந்தால், மிகப்பெரும் வர லாற்றுத்தவறை இழைத்தவர்களாவோம் என்பது சர்வநிச்சயம்.



சங்கிலிய மன்னனின் 400ஆவது ஆண்டு நினைவுதினம் நல்லூரில் அனுஷ்டிக்கப்பட்ட போது யாழ் மாநகர முதல்வர் கௌரவ இ.ஆனால்ட் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் யாழ் இந்திய துணைத்தூதர் எஸ்.பாலச்சந்திரன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், சிவசேனை (யாழ்) தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரமுகர்களை படங்களில் காணலாம்.

– பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டில் கிடைக்கும் உளவளத்துணை

சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் )
இணுவில்

மனிதர் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு ஆலயங்கள் வழிகாட்டுகின்றன. ஆலய வழிபாடு மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற வாசகங்கள் மனித வாழ்வில் ஆத்மீக ரீதியான செயற்பாடுகளுக்குரிய முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. எவ்வளவு வேலைகள் இருந்தாலும் நாம் ஆலய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்றால் அது எமது உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மை தருகிறது என்றே கருத வேண்டும்.

ஆலய வழிபாட்டில் நாம் ஆலயத்துக்குச் சென்று ஆலயத்தை வழிபடல், வலம் வருதல், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் தோப்புக்கரணம் போடுதல், தலையில் குட்டி வழிபடுதல் என்பன எமது உடலுக் குச் சிறந்த பயிற்சியாகவும் உடல் ஆரோக்கியத்தைப் பேணக் கூடியதாகவும் அமைந்துள்ளது. சிறிய வயது முதல் இவ்வாறான நல்ல பழக்கங்களைப் பழகினால் வளர்ந்து வரும் போது அவை வழக்கங்களாகி எம்மை அதில் இயல்பாகவே ஈடுபடச் செய்கிறது. நன்மையும் கிடைக்கிறது.

உடலுக்கு நன்மை தருவதை விட எம் உள்ளத்துக்குத் துணையாக உளவளத் துணையாக ஆலய வழிபாடு அமைவது மிகவும் நன்றாக அமைந்துள்ளது. ஆலயத்துக்குச் சென்று வழிபட்டால் மனதில் திருப்தி, நிறைவு, அமைதி ஏற்படுகிறது. நாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறோம். நாளாந்த வேலைகளில் பிரச்சினை, வேலை கூடவாக இருந்தால் மனக் கஷ்டம் தேவைகள் முடிக்கபடாவிட்டால் மனச் சோர்வு, கவலை என்பன எமக்கு ஏற்படும் வேளைகளில் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு அமைதியை ஏற்படுத்துகிறோம்.

